வெளியீடு : 29-12-2020 Issued: 29-12-2020

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினைந்தாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(FIFTEENTH ASSEMBLY)

வியாழக்கிழமை, ஜனவரி 9, 2020—தொகுதி 70—எண் 2

Thursday, the 9th January 2020—Volume 70—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ.3.00] **[Price Rs.3.00**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

TRUTH ALONE TRIUMPHS

9–1–2020

உள்ளடக்கம்

		பக்கங்கள்
1.	**இரங்கற்குறிப்பு—**	
	முன்னாள் உறுப்பினர் திரு. வெ. கருணாமூர்த்தி அவர்கள் மறைவு	179-180
2.	**வினாக்கள்—விடைகள்—**	180-461
	(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	180-221
	(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 3 வரை)	222-461
3.	**தகவல் கோரல்—**	461-472
	(அ) குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்	461-462
	திரு. துரைமுருகன்	461-462
	(ஆ) கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி, காவல் துறை வாகனம் மோதி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்	463-465
	**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்*	463-464
	மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	464-465
	(இ) ஆத்தூர் தொகுதி, தெத்துப்பட்டி, யானை தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம்	465
	மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	465

பக்கங்கள்

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஈ) காஞ்சிபுரம் மாவட்டம், மாரிமங்கலம் ஆட்டோவில் கடத்தப்பட்டவரைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்த திரு. ஏகேஷ் மற்றும் சில இளைஞர்களுக்கு நிவாரணம் 465-467

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 465-467

(உ) கன்னியாகுமரி, களியக்காவிளை சோதனைச் சாவடியில் பணியிலிருந்தபோது சுடப்பட்டு உயிரிழந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வில்சன் குடும்பத்திற்கு நிவாரணம் 467-468

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 467-468

(ஊ) துறைமுகம் தொகுதி, சென்னை நதிகள் பாதுகாப்புத் திட்டம், கூவம் நதிக் கரையோரம் வசிக்கும் மக்களை மறுகுடியமர்வு செய்தல் 468-472

திரு. பி.கே. சேகர்பாபு 469-470

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 470-472

4. அறிவிப்புகள்— 473-474, 495-500

(அ) “காகிதமில்லா சட்டமன்றம்” என்னும் இலக்கினை எய்தும் வகையில் உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள், பட்டியல்கள், குழுக்களின் அறிக்கைகள், பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள் / ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கைகள், ஏனைய தாள்கள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான திருத்தங்கள் ஆகியவை உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பெறுதல் 473-474

பக்கங்கள்

4. அறிவிப்புகள்— *தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019-2020, முன்மொழிதல் (ஆ.செ.) — *495*

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.) — 500

5. அறிக்கைகள் அளித்தல் — 474-476

(அ) பொதுக் கணக்குக் குழு — 474

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 474-475

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — 475

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு — 475

(உ) மனுக்கள் குழு — 476

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 476,501

(அ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 — 476-477

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் — 476-477

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 — 477-478

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 477-478

திரு. எஸ்.ஆர். இராஜா — 477

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வுடிவு, 2020 — 478-479

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி — 478-479

திரு. பி.கே. சேகர்பாபு — 478

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 479-480

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 479-480

திரு. மா. சுப்பிரமணியன் 479

(உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 480-481

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 480-481

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 481-482

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 481-482

திரு. ஏ.பி. நந்தகுமார் 481

(எ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக(திருத்தச்)சட்டமுன்வடிவு, 2020 482-483

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 482-483

திரு. எஸ். சுதர்சனம் 482

(ஏ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்ட முன்வடிவு, 2020 483-484

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 483-484

திரு. சிவகுமார் என்கிற தாயகம் கவி 483

(ஐ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக(திருத்தச்)சட்டமுன்வடிவு, 2020 484-485

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் 484-485

		பக்கங்கள்
6.	**அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— *தொடர்ச்சி*	
	(ஓ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	485-486
	மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி	485-486
	திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்	485
	(ஓ) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020	486-487
	**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்*	486-487
	திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்	486
	(ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020	501
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	501
7.	**இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை, 2019-2020, அளித்தல்**—	487-494
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	487-495
8.	**அரசினர் தீர்மானங்கள்**—	494-495, 675-676, 760-761
	(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்	494-495
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	494-495

		பக்கங்கள்
8.	**அரசினர் தீர்மானங்கள்**—*தொடர்ச்சி*	
	(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்	675-676
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	675-676
	(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்	760-761
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	761
9.	**அரசினர் தனித் தீர்மானம்**—	747-760
	நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்து ஆறாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368—வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரை (d) பகுதியின் வரம்பெல்லைக்குள் வரும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல்	747-760
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	747, 755-759
	திரு. துரைமுருகன்	748-752
	திருமதி எஸ். விஜயதரணி	752-753
	திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்	754
	**டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ்*	755
10.	**கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019-2020, வாக்கெடுப்பு**—	495-500
	மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்	496

பக்கங்கள்

11. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்-விவாதத்திற்கான பதிலுரை— 501-675, 677-678

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி 627-664, 668-669, 672-674, 677-678

திரு. துரைமுருகன் 654-655, 664-668, 672, 677

திரு. எ.வ. வேலு 656

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 666-667, 673

திருமதி எஸ். விஜயதரணி 670

திரு. சே. கருணாஸ் 670-671

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் 671

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— 678-747

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020 678-679

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 678,679

(ஆ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 680-681

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 680,681

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020 682- 687

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* 682-687

திரு. மு. திராவிடமணி 682-683

	பக்கங்கள்
12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*	
(ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	687-694
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	687, 691-693
திரு. எஸ்.ஆர். இராஜா	688-690
**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்*	690
(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வுடிவு, 2020	694-707
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	694, 697, 701-707
திரு. பி.கே. சேகர்பாபு	694-696
திருமதி எஸ். விஜயதரணி	696-698
திரு. மா. சுப்பிரமணியன்	698-701
மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	699,701
(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	707-709
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	707-708
(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	709-712
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	709
திருமதி எஸ். விஜயதரணி	709-710
(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	712-717

	பக்கங்கள்
12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*	
மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	712-716,
திரு. ஏ.பி. நந்தகுமார்	713
திரு. துரைமுருகன்	715
(ஐ) தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	717-721
மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்	717,719-721
திரு. உ. மதிவாணன்	717-719
(ஒ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக(திருத்தச்)சட்டமுன்வடிவு, 2020	721-725
**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்*	722-725
திரு. எஸ். சுதர்சனம்	722-723
(ஓ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்ட முன்வடிவு, 2020	726-730
**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்*	726-730
திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி	726-727
(ஔ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	730-734
மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்	730-734
திரு. சிவ.வீ. மெய்யநாதன்	731-732

பக்கங்கள்

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*

(அஅ)தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020	734-738
**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு*	735-738
திரு. கு. பிச்சாண்டி	735
(அஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020	739-743
மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி	739,741,742
திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்	739-740
(அஇ) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020	743-747
மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்	743-747
திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்	743-744
13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—	761-765

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, மார்கழி 24, திருவள்ளுவர் ஆண்டு—2050

2020 ஜனவரி 9, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.”

ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்று எண்ணி, எண்ணியபடி செயல் ஆற்றுவதில் உறுதியுடன் இருப்பாரானால், அவர் எண்ணியபடியே செயலில் வெற்றி அடைவார்.

1. இரங்கற்குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. வெ. கருணாமூர்த்தி அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. வெ. கருணாமூர்த்தி அவர்கள் 5–1–2020 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. வெ. கருணாமூர்த்தி அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

16—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***56984—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, ஆற்றூர் பேரூராட்சி, தோட்டவாரம் பகுதியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2016 *முதல்* 2019 *ஆம் ஆண்டு வரையில்* 295 *ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. பத்மநாபபுரம் தொகுதி, ஆற்றூர் பேரூராட்சி, தோட்டவாரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அப்பள்ளி அரசின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததால், அப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் கிராமத்தில், நான் பிறந்த ஊரில், நான் படித்த பள்ளி அங்குள்ளது. 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று திருவண்ணாமலையில் நாங்கள் 6 ஆம் வகுப்பு படித்த அந்தப் பள்ளியை, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில், எங்கள் அய்யா, ஆற்றல்மிக்க எங்கள் மாவட்டச் செயலாளர் திரு.எ.வ.வேலு அவர்கள் அதைநடுநிலைப்பள்ளியாகத்தரமுயர்த்தித் தந்தார்கள். நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றது முதல், என்னுடைய கன்னிப் பேச்சிலிருந்து இன்று வரையில் தொடர்ந்து அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினரான நான் படித்த, என் பள்ளிக்கு 6 கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்துதான் இன்னமும் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டாவது, உங்கள் பரிந்துரையோடு அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், தான் படித்த நடுநிலைப் பள்ளி என்று குறிப்பிட்டுள்ளார். உறுப்பினர் குறிப்பிடுகின்ற செங்கம் தொகுதியில் உள்ள பள்ளியைப் பொறுத்தவரையிலும் உயர்நிலைப் பள்ளியாக்குவதற்கு 50 மாணவர்கள் படிக்க வேண்டுமென்று அரசு நிர்ணயித்திருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட வேண்டும். குறைந்தது மூன்று ஏக்கர் நிலங்கள் தேவை. ஆகவே, அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்த ஆண்டு அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.*

[2020 ஜனவரி 9

திரு. கே.எஸ். தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை சிறப்பாக வழிநடத்துகின்ற நல்லாட்சி நாயகன்; குடிமராமத்து நாயகன்; மழை ராசி நாயகன்; மாண்புமிகு அண்ணன் முதல்வர் அவர்களையும், ஜல்லிக்கட்டு நாயகன்; மனித நேய பண்பாளர் அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு இன்றைக்கு பிறந்த நாள் என்பதால், வாழும் காமராஜராக இருந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், என்னுடைய அரசியல் வழிகாட்டி, அண்ணன் திரு. கே.ஏ.எஸ். அவர்களுக்கு என்னுடைய பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–05

ஈரோடு, பெரிய வலசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்டுவதற்கு முன்பு அனுமதி வழங்கப்பட்டது. இப்பொழுது நூலகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. 'ஒரு நூலகத்தைத் திறந்தால் 10 சிறைச்சாலைகளை மூடுவதற்கு சமம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்தவகையில் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நூலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவதற்கு முன்பு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு பிறந்தநாள் விழாவில்தான் நூலகத்தைக் கேட்டிருந்தேன். அனுமதி கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். இன்னும் அதற்கு அரசாணை வழங்கவில்லை. அரசாணை வழங்குவாரா என்று கேட்டுக்கொண்டு, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் குறிப்பிடுகிறபொழுது உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதையும் இந்த அரசு இந்த ஆண்டு பரிசீலிக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல, 'நூலகத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதி வழங்குகிறேன், அதற்கு அனுமதி அளிக்க வேண்டும்' என்று கேட்டார்கள். அந்த அனுமதியும் மிக விரைவிலேயே உங்களுக்கு பெற்றுத் தரப்படும். நீங்கள் அழகான முறையில் நூலகத்தைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே* Indian Institute of Technology *என்று சொல்லப்படும்* IIT *நிறுவனம் இயங்கி வருகிறது. இது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தாலும்* IIT *நிருவாகம் எடுத்த ஒரு நடவடிக்கை, வேளச்சேரி மக்கள் பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால் அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவிக்க வேண்டியது சட்டமன்ற உறுப்பினராகிய எனது கடமை எனக் கருதுகிறேன்.*

1964 *ஆம் ஆண்டு* IIT, Madras *நிறுவனம், வேளச்சேரி காந்தி சாலையையொட்டியுள்ள பெரும்பாலான நிலங்களை விவசாயிகளிடமிருந்து வாங்கி உருவாக்கப்பட்டது. அப்போது, பகுதி மக்களின் நலன்களிலும், வளர்ச்சியிலும்* IIT *நிறுவனம் பெரிதும் உதவும் என்று மக்களிடம் உறுதி அளித்திருந்தது.* IIT *வளாகத்திற்கு பிரதான வாயில் தவிர* 3 *பகுதிகளில்* 3 *சிறிய* gates *உள்ளன. அதில் ஒன்று, வேளச்சேரி தொகுதியில்* 179–*வது* ward, *காந்தி சாலையில் அமைந்துள்ளது.* 50 *ஆண்டுகளுக்கு மேலாக அதை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த* gate–*ஐ திடீரென்று* 24–12–2019 *அன்று எடுத்துவிட்டு, சுவர் எழுப்பி*

மூடிவிட்டார்கள். இதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள், உதவித் தொகை மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு 3 கி.மீ. சுற்றி உள்ளே வர வேண்டியுள்ளது. மேலும் IIT வளாகத்தின் உள்ளே Vanavani, KV-IIT என இரண்டு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இவை எல்லாவற்றையும்விட மக்களிடம் இப்பிரச்சினை sensitive feelings-ஐ உருவாக்கியுள்ளது. காரணம், அப்பகுதி முழுக்க வாழும் மக்கள் ஆதி திராவிடர்களாவார்கள். தங்களுக்கு மட்டுமே இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது என அவர்கள் மனம் புண்படக்கூடிய வகையில், வேதனைமிக்க உணர்வாக இதனைக் கருதுகிறார்கள். எனவே, மீண்டும் காந்தி சாலையில் உள்ள gate-ஐத் திறந்து, மக்களின் சமூகம் சார்ந்த வேதனை தரும் தடுப்புச் சுவரை அகற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய துறைக்கு வருகின்ற கேள்வி அல்ல. இருந்தாலும்கூட, IIT என்ற முறையில், வேளச்சேரியில் இருக்கக்கூடிய மக்கள், அதுவும் ஆதி திராவிட மக்கள் வரும் வழியில் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது, அங்கே ஒரு வழி இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சரும், நானும் அவர்களோடு பேசி, மத்திய அரசிடமிருந்து அதை உடனடியாகத் திறப்பதற்கான உத்தரவை பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

பகுதிநேர நியாய விலைக் கடை

***52675—முனைவர் க. பொன்முடி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2020 ஜனவரி 9]

திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட சென்னகுணம் மற்றும் மணம்பூண்டி நியாய விலைக் கடைகளைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஆ. கூடலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் புரவடை பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 1,010 குடும்ப அட்டைகளுடன் சென்னகுணம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மணம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை 1 கி.மீ. சுற்றளவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1,291 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை புதியதாக அமைக்க வேண்டுமெனில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், தாய்க் கடைக்கும், புதியதாக துவங்கக் கோரும் பகுதிநேர நியாயவிலைக் கடைக்கும் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், இவ்விரண்டு இடங்களிலும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட திருநெடுங்குளம் ஊராட்சியில், கீழமாங்காவனம், மேலமாங்காவனம் என்ற இரண்டு சிறிய கிராமங்கள் இருக்கின்றன. கீழமாங்காவனத்தில் ஒட்டுமொத்தமாக 167 கார்டுகளும், மேலமாங்காவனத்தில் 75 கார்டுகளும், ஆகஏறத்தாழ 242 கார்டுகள் இருக்கின்றன. திருநெடுங்குளம் கிராமத்துடன் இந்தக் கார்டுகளையெல்லாம் இணைத்ததால் இங்கிருக்கின்ற மக்கள் 3 கி.மீ. தூரம் நடந்து சென்றுதான் பொருட்களை வாங்க*

வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்கின்றபோது அங்கிருக்கின்ற மக்களுடன் வாய்த்தகராறு ஏற்படுதல் போன்ற சூழ்நிலை நிலவுகிறது. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் பேசும்போது, சிறப்பு நேர்வுகளில் பகுதிநேர நியாய விலைக் கடை கண்டிப்பாக அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் மக்கள் railway gate–ஐக் கடந்தும், ஒரு ஆற்றுப் பாலத்தைக் கடந்தும் அங்கு செல்ல வேண்டிய சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே, 167 கார்டுகள் இருக்கின்ற கீழமாங்காவனத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தந்தால், மேலமாங்காவனம் கிராம மக்களும் அங்கு வந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். ஏனென்றால், அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள், குறிப்பாக, பெண்கள் வைக்கின்ற முக்கியமான கோரிக்கையே இதுவாகத்தான் இருக்கிறது. ஆகவே, தயவுகூர்ந்து இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கோரியிருக்கின்ற அந்தக் கடையை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்பு இனமாக, அந்தக் கடையை அமைப்பதற்காக துறை ரீதியாக அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு பெரியபலமலை என்ற இடத்தில் 57 கார்டுகள் உள்ள நிலையில், கிராம மக்களுக்கு மாதந்தோறும் இரண்டு முறை சென்று பொருட்களைக் கொடுக்கிறார்கள். அதேபோன்று, சின்னபலமலை என்ற கிராமத்தில் 157 கார்டுகள்தான் இருக்கின்றன. அங்கும் கொண்டு போய்க் கொடுக்கிறார்கள். ஆக, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பாரபட்சமற்ற முறையில், இதுபோன்ற சிரமங்கள் உள்ள பகுதிகளில், சிறப்பு இனமாகக் கருதி, நகரும் நியாய விலைக் கடைகளைக் கொடுப்பதற்கோ அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கோ வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே,*

2020 ஜனவரி 9]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மூலமாக நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறாய் வாழும் எங்கள் தலைவரை வணங்குகிறேன். செய்யூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அடிப்படை வசதிகள் அனைத்தும் சரிவர கிடைக்காத ஒரு தொகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில், கூவத்தூரை உள்ளடக்கிய நாவக்கல் பகுதியில், பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். வெள்ளன்கொண்டாபுரம் பகுதியில், இந்தலூர், வன்னிநல்லூர் பழைய காலனி, சிறுமயிலூர் மற்றும் விடால் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகள் மிகவும் சிதிலமடைந்து, பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாததாலும், பல்வேறு நிலைகளில் மக்கள் அவதிப்படுகின்ற நிலையில் உள்ளதாலும், மேற்கண்ட பகுதிகளில் சிதிலமடைந்த நியாய விலைக் கடைகளைப் புதுப்பித்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பகுதிநேர நியாய விலைக் கடைகளை துறை ரீதியாகவோ, சங்கங்கள் மூலமாகவோ பராமரிப்பது என்பது இயலாத காரியம். ஏனென்றால், அந்தப் பகுதி மக்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற* condition*-உடன்தான் அந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று, பழுதடைந்த கடைகள் இருப்பின், அதற்கான மாற்று இடத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பார்த்துக் கொடுப்பாரேயானால், அந்த இடத்தில் கடையை அமைத்துக் கொள்ளலாம். பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியபட்சத்தில், கிராமப்புறமாக இருந்தால் 1½ கி.மீ. தூரமும் 150 கார்டுகளும், சில பகுதிகளில்* 500 *கார்டுகளும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இதை சிறப்பினமாகக் கருதி, நடவடிக்கை*

எடுக்க வேண்டும். இதுபோன்று நிறைய மாமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள்; இதுபோன்ற இடங்களில் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

துறை ரீதியாக என்ன சொல்கிறார்களென்றால், சட்ட விதிமுறைகளின்படி 150 கார்டுகள் இருக்க வேண்டும்; 500 கார்டுகள் இருக்க வேண்டும்; 800 கார்டுகள் இருக்க வேண்டும்; நகரப் பகுதியாக இருந்தால் 1,000 கார்டுகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு விதிவிலக்கு அளித்து, இதுபோன்ற கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து நானும், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறோம். அந்தச் சந்திப்பு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற நல்ல முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

புதிய மின்மாற்றி

***47337—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கத்தக்குறிச்சி ஊராட்சி, கண்ணியாப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2020 ஜனவரி 9]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கத்தக்குறிச்சி ஊராட்சியில் 110/22 துணை மின் நிலையத்திலிருந்து போதிய அளவிற்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் மூன்று மின்மாற்றிகள் உள்ளன. மின் பளுவும் குறைவாகத்தான் இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற பகுதி 11 கி.மீ. தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால், அவர் கோரியபடி, புதிதாக ஒரு 63 KVA மின்மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.*

திரு. சிவ. வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கத்தக்குறிச்சி ஊராட்சி, கண்ணியாப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றேன். அதோடுமட்டுமல்ல, கைக்குறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த கூடலூர், முள்ளங்குறிச்சி பகுதிகள்* remote villages *ஆக உள்ளன. இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் செல்லாததால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதியிலும் ஒரு புதிய மின்மாற்றி அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதோடு, ஆலங்குடி தொகுதியின் மேற்குப் பகுதியான வல்லத்திராக்கோட்டை, வெண்ணவால்குடி, கொத்தக்கோட்டை, திருவரங்குளம் உள்ளிட்ட 20–க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் சீரான மின்சாரம் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள், வணிகர்கள், படிக்கின்ற மாணவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனைக் கருத்தில்கொண்டு அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென இதே அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைக்கும் பணியை நிறைவேற்றித் தருவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, இன்றைக்கு வம்பன் பகுதியிலே தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான 4*

ஏக்கர் இடத்தை மின் வாரியத்திற்கு ஒப்படைத்திருக்கின்றோம். அப்பகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, வம்பன் பகுதியில் விரைவில் 110/22 KV துணை மின் நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மின்னழுத்தம் குறைவாக இருக்கிறது. அதிக தூரம் இருக்கின்ற காரணத்தினால்தான் மின் தடை ஏற்படுகிறது. அதற்காகத்தான் நாங்கள் அந்தந்தப் பகுதிகளில் அதிகப் பளு உள்ள மின்மாற்றிகளை அமைக்க ஏற்பாடு செய்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான 4 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருப்பதாக இப்போது சொல்லியிருக்கிறார்கள். இடம் வழங்கப்பட்டு, எங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், அதிகாரிகளுடன் அதுகுறித்து ஆய்வு செய்து, துணை மின் நிலையம் அமைத்தாக வேண்டும். ஏனெனில், அந்தப் பகுதி முழுவதும் விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், மின் பளு குறைவாக இருக்கின்ற காரணத்தால் விவசாய மின் மோட்டார்களுக்கு பழுது ஏற்படுகிறது என்ற புகார்களெல்லாம் வந்திருக்கின்றன. எனவே, அதனை ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

திரு. சிவ. வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியில் மின்சார வாரியத்தின் சார்பாக புதிய கோட்ட அலுவலகம் அமைக்கப்பட்டது. அந்தப் புதிய கோட்ட அலுவலகத்திற்கு இதுவரை புதிய கட்டடம் கட்டித் தரப்படாத காரணத்தால், அங்கிருக்கின்ற அலுவலகம் பாச்சிக்கோட்டையிலே ஒரு remote பகுதியிலே இயங்குகிறது. அங்கு internet வசதி சரியாகக் கிடைக்காததால், பயனாளிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆலங்குடி நகரப் பகுதியிலேயே வேளாண்மைத் துறைக்குச்

2020 ஜனவரி 9]

சொந்தமான கட்டடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் கட்டடங்களில் மின்வாரிய கோட்ட அலுவலகம் இயங்குவதற்கு வழிவகை செய்வதோடு, ஆலங்குடியில் மின் வாரிய கோட்ட அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் சொல்கின்ற பகுதியில் அதற்கான இடம் இருக்கின்றதா என்று தெரியவில்லை. ஆனால், அதற்குண்டான இடம் மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பின், வருகின்ற நிதியாண்டிலேயே கட்டடம் கட்டுவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும்.*

மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பழைய கட்டடங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அவை அரசு கட்டடங்களா அல்லது தனியார் கட்டடங்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வாரேயானால், அதுவும் ஆய்வு செய்யப்படும். தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் அலுவலகத்திற்கு வேறு இடத்தில் கட்டடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது தனியார் கட்டடமா அல்லது அரசு கட்டடமா என்பதைச் சொன்னால், அதுவும் பரிசீலிக்கப்படும். மின்சார வாரியத்திடம் இடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் வருகின்ற நிதியாண்டிலேயே SE Office கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய வேலூர் தொகுதியில் சித்திரை மாதம் புஷ்ப பல்லக்கு அமைக்கப்படும். வேலூர் மாநகரம் Smart City ஆகியிருக்கிறது. எனவே, CMC road, தோட்டப்பாளையம், மண்டித் தெரு, காந்தி ரோடு, மூங்கில் மண்டித் தெரு, Officers Line, அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் cables-ஐ எல்லாம் underground cables ஆக அமைத்துக்கொடுத்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால்,*

smart city ஆக வந்திருக்கின்ற காரணத்தால், மின்சார வாரிய staff-ஐ வைத்து, L&T போன்ற தனியார் நிறுவனத்திற்கு contract கொடுத்து செய்தால் சிறப்பாக இருக்கும். ஏனெனில், சித்ரா பௌர்ணமி அன்று இரவு 10 மணிக்கு மின் supply-ஐ off செய்தார்களென்றால், காலை 7, 8 மணி வரை மின் supply இருப்பதில்லை. அந்தப் பகுதியில் CMC மருத்துவமனை இருக்கிறது. பொதுமக்களும் வாழ்கிறார்கள். தற்போது Smart City ஆக வந்திருக்கிற காரணத்தாலும், மாநகராட்சியாக இருக்கின்ற காரணத்தாலும் underground cables-ஐ அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இது மாநகராட்சிகளில் செய்ய வேண்டிய பணிதான். படிப்படியாக மாநகராட்சிகளில் underground cables போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தற்போது Smart City ஆக வருகின்ற காரணத்தினால் உள்ளாட்சித் துறை அதற்குண்டான நிதியை ஒதுக்குவார்கள் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால், Smart City Mission-ல் அந்தத்திட்டம் இருக்கின்றது. அந்தத்திட்டத்திற்குண்டான நிதியை ஒதுக்குகின்றபோது மின்சார வாரியத்திற்கும் கொஞ்சம் கடன் சுமை குறையும். அதனால் உள்ளாட்சித் துறையோடு நாங்கள் பேசுகின்றோம். இல்லையென்றாலும்கூட, பொதுவாக கார்ப்பரேஷன் பகுதிகளில் படிப்படியாக U.G. cables-ஐக் கொண்டு வருவதுதான் அரசினுடைய திட்டம். அந்தத் திட்டத்தைப்பற்றி அரசு அதிகாரிகளோடு ஆய்வு செய்து உள்ளாட்சித் துறை அதற்குத் தயாராக இருக்கிறதென்றால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் படிப்படியாக உங்களுடைய வேலூர் மாநகராட்சிக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு நகராட்சி

2020 ஜனவரி 9]

நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***18491—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், காட்டானந்தல் ஊராட்சியில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், காட்டானந்தல் ஊராட்சியில் ஏற்கெனவே, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் பயன்பாட்டில் உள்ள நிலையில், கூடுதலாக ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும், இவர்போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்’ என்ற பாடலுக்கு இலக்கணமாக வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கடந்த வருடம் நேற்றைய நாளானது கள்ளக்குறிச்சி மாவட்ட மக்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்திய நாள். ஆம். கள்ளக்குறிச்சியை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய மாவட்டத்தை*

உருவாக்கித் தந்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இதற்குக் காரணம். ஓராண்டு முடிந்து அடுத்த ஆண்டு முதல் நாளில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்திலே எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருப்பதற்கு உறுதுணையாக இருக்கின்ற நமது துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த மாவட்டம் உருவாவதற்கு முழுமுதல் காரணமாக இருந்த எனது மாவட்டத்தின் அமைச்சர் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி தொகுதி, காட்டானந்தல் ஊராட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT ஒன்றும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT இரண்டும் இருக்கின்றன. ஆனால், இந்த 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட OHT காட்டானந்தல் ஊராட்சியிலும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு OHT–கள் hamlet–லும் இருக்கின்றன. அந்த ஊராட்சியிலே சுமார் 2,945 மக்கள் இருக்கும் காரணத்தினால், அந்த 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட tank போதுமானதாக இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் ஒரு OHT–ஐ அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் வாய்ப்பு வேண்டுமென்றால் கையை மட்டும்தான் தூக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் என்று அழைக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: காட்டானந்தல் ஊராட்சியிலே உள்ள மக்கள் தொகை 2,994 ஆகும். நான் குறிப்பிட்டவாறு 60,000 லிட்டரும், 30,000 லிட்டரும் கொள்ளளவு

2020 ஜனவரி 9]

கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. அதேபோல, 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 13 சிறு மின்விசைப் பம்புகளும் மற்றும் 13 கைப்பம்புகளும் உள்ளன. இவற்றின்மூலம் நீர்த்தேக்கத் தொட்டிகளில் காலை மற்றும் மாலை என இரண்டு வேளைகளிலும் நீரேற்றம் செய்யப்பட்டு, சராசரியாக தனி நபர் ஒருவருக்கு 82 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. 2017–2018 ஆம் ஆண்டில் பொது நிதியின்மூலம் ரூ.4.51 இலட்சம் மதிப்பீட்டில் திறந்தவெளிக் கிணறு ஆழப்படுத்தும் பணியும், 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்துளைக்குழாய் மற்றும் குடிநீர்க் குழாய் பணியும் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திறந்தவெளிக் கிணறு ஆழப்படுத்தும் பணி 14–வது நிதிக் குழு திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றின் காரணமாக போதுமான நீராதாரம் உருவாக்கப்பட்டுள்ளதால், காட்டானந்தல் ஊராட்சிப் பகுதியில் தனி நபருக்கு வழங்கப்பட வேண்டிய சராசரி குடிநீர் அளவைவிட தற்போது கூடுதலாக வழங்கப்படுகிறது. அதனால்தான் காட்டானந்தல் ஊராட்சியிலே தேவை எழவில்லையென்று சொன்னேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு அவசியமாக குடிநீர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆகவே, கண்டிப்பாக, அவசியமிருப்பின் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் சுமார் 52,507 மக்கள் வசிக்கின்றார்கள். இந்தப் பகுதியில் மொத்தம் 6 OHT இருக்கின்றன. வளர்ந்து வரும் நகரமான கள்ளக்குறிச்சி நகரத்திற்கு 10–வது வார்டிலும், 21–வது வார்டிலும் OHT தேவைப்படுகிறது. காரணம் என்னவென்றால், 4–வது வார்டிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, தற்போது ஒரு திறந்தவெளிக் கிணறானது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிணற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு சுமார் 10 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. அந்தத்

தண்ணீரானது நான்கு வார்டுகளுக்கு போதுமான அளவிற்கு இருக்கிறது. எனவே, அந்த நீரை சேமித்து மக்களுக்கு விநியோகம் செய்யும் அளவிற்கு 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு OHT அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், வளர்ந்து வரும் கள்ளக்குறிச்சி நகராட்சி, தற்போது மாவட்டமாக ஆகியிருக்கிறது. இந்த நகராட்சிப் பகுதியில் இன்னொரு OHT அமைத்துத் தந்தால் இன்னும் நன்றாக இருக்குமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள மூன்று வார்டுகளைக் குறிப்பிட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அங்கே திறந்தவெளிக் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தந்தால் அங்கிருக்கக்கூடிய பகுதிகளுக்கு சரியான அளவில் distribution செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும். அதேபோல, 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர்த் தொட்டி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவர் சொன்ன அளவுக்கு, தேவைப்படாது என்று நினைக்கிறேன். சுமார் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உடையதாக இருந்தால் போதுமானதாக இருக்கும். ஆகவே, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அங்கே அவசியம் இருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம், 1972 ஆம் ஆண்டில்

2020 ஜனவரி 9]

திரு. செ. கந்தப்பன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கப்பட்டது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, மாண்புமிகு அம்மையார் முதலமைச்சராக இருந்தபோதும், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகளைக் கட்டி, மக்களுக்குத் தண்ணீர் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டு வந்தது. இந்த வாரியம், 1972 ஆம் ஆண்டிற்கு முன்னால் உள்ளாட்சித் துறையின்கீழ் இருந்தது. எங்களுடைய வடக்கு பகுதியில் இருக்கிற மாவட்டங்களில் உள்ளவர்களெல்லாம் நரம்பு சிலந்தி வியாதியின் மூலமாகப் பாதிக்கப்பட்டபோதுதான் குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டது. இப்போது தொடர்ச்சியாக, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் வரப்பெற்ற நிலையில், வாரியத்தில் போதிய நிதி இல்லாத சூழ்நிலையிலும், ஆங்காங்கே குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகப் பாதுகாக்கப்பட்ட தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. சமீப காலமாக, உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியம் ஒரு பராமரிப்புத் துறையாகத்தான் இருக்கிறதேயொழிய, புதியதாக பாதுகாக்கப்பட்ட தொட்டிகளெல்லாம் கட்டப்பட முடியாத நிலையில் இருக்கிறது. பொதுவாக, கோட்டப் பொறியாளர்களை அழைத்துப் பேசினால், 'எங்களுக்கு பணமே ஒதுக்குவதில்லை, நாங்கள் கட்ட முடியாது, நீங்கள் உள்ளாட்சித் துறையிடம் சொல்லுங்கள்' என்றுதான் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து கலந்து பேச வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் கட்டப்பட வேண்டுமென்று சொன்னால், பெரும்பான்மையாக இருக்கின்ற 234 சட்டமன்ற உறுப்பினர்களும், எங்களுடைய கோரிக்கைகளை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகக் கொடுப்பதன் மூலமாகத்தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் கிராமப் பகுதிகளுக்கு வர வாய்ப்பு இருக்கின்றது. இப்போது உள்ளாட்சித் துறையிடம் இருக்கின்ற நிதியை வைத்துக்கொண்டு, அவற்றைக் கட்ட முடிவதில்லை. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள்; அதிகாரிகளும், 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுங்கள் நாங்கள் கட்டித் தருகிறோம்' என்று சொல்கிறார்கள். ஆனால், இரண்டு கோடி ரூபாய் பணத்தைக் கொண்டு, நான்கு tanks *தான் கட்டமுடியுமேயொழிய, (குறுக்கீடு) 2½ கோடி ரூபாயில் கட்டுவதற்கு வாய்ப்பில்லை. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி,*

நிதியை கூடுதலாக ஒதுக்கினால், (குறுக்கீடு) நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் சேர்த்துதான் பேசுகிறேன். கொஞ்சம் கூடுதலாக நிதியை நீங்கள் ஒதுக்கிறபோது, குடிநீர் வடிகால் வாரியம் மீண்டும் புத்துயிர் பெற்று, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற வகையில் செயல்பட முடியும். குடிநீர் வடிகால் வாரியம் மீண்டும் புத்துணர்ச்சி பெறுமா, அதற்கு அதிகமான பணத்தை இந்த முறை நிதிநிலை அறிக்கையில் நீங்கள் ஒதுக்குவீர்களா, மீண்டும் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகத் தொட்டிகள் கட்டப்படுமா என்பதை தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் சொன்ன கருத்துகள்கூட, நல்ல கருத்துகள்தான். இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. அவர் சொல்வதுபோன்று, சில schemes-ஐப் பார்த்தீர்களென்றால், மாநகராட்சிமூலம் நிறைவேற்றப்படுகின்றன. அதில் மாற்றுக் கருத்தெல்லாம் இல்லை. இப்போது சுமார் 603 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் உள்ள பணிகளை TWAD Board-தான் செய்கிறது. அதேபோல, மதுரை மாநகராட்சியில், சுமார் 50 ஆண்டுக் காலத்திற்கு குடிநீர்ப் பிரச்சினை இல்லாத அளவிற்கு புதிதாக Scheme எடுக்கப்பட்டிருக்கிறது. அது Smart city என்பதால், AMRUT திட்டத்தின்கீழ்எடுக்கப்பட்டிருக்கிறது.மதுரைமாநகராட்சியின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சார்பாக கடந்த எட்டு ஆண்டுகளிலே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, 11,140 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ.842 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன. நமக்கு அதிகமான schemes வரும்போது, பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை முழுமையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகச் செய்கிறோம்.

முற்பகல் 10–30

அதேபோல, சில மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டி அவற்றையும் அவர்களிடத்தில் ஒப்படைத்துவிடுகிறோம்.

2020 ஜனவரி 9]

இப்பொழுது ஊரக வளர்ச்சித் துறைமூலம் சின்னச் சின்ன தொட்டிகளை அதாவது அறுபதாயிரம் லிட்டர், அதிகபட்சம் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டிகளைத்தான் கட்டுகிறார்கள். அதற்குத்தான் அந்த நிதி போதுமானதாக இருக்கிறது. அந்த நிதியில் அவ்வளவுதான் கொடுக்க முடியும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவது கிடையாது. சில ஊர்களில் பொதுமக்கள் கேட்கிறபொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பெயரைப் போட்டு கட்ட வேண்டுமென்று சொல்லி, கட்டிக்கொடுக்கிறார்கள். பெரிய பெரிய schemes *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக கடந்த 8 ஆண்டு ஆட்சிக் காலத்தில் நகராட்சி நிருவாகம் சார்பாக 414, சென்னை குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 43, பேரூராட்சிமூலம் 688, ஊராட்சிகள் மூலமாக 13,149, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 11,140 என மொத்தம் 25,434 குடிநீர்த் தொட்டிகள் 1,845 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. கண்டிப்பாக* TWAD Board *மூலமாகக் கட்டவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று, இன்னும் கூடுதலாகத் தேவைப்படும் இடங்களில் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***52752—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2020 ஜனவரி 9

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் துவங்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் வாயிலாகத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மறைந்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சுற்றிவரும் பகை என்னும் சூறாவளியை சுக்குநூறாக்கி, எதிர்படும் இன்னல்களையும், இடையூறுகளையும் இடது காலால் இடறி விட்டுவிட்டு, ஏறுகொண்ட வேங்கை என வீறுநடைபோட்டு, இதய தெய்வம் அம்மாவின் ஆட்சியை அலுங்காமல், குலுங்காமல் சிறிதும் சேதாரம் ஏற்படாமல் அம்மாவின் கனவு Vision 2023–படி தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அம்மாவின் வழியில் செல்லும் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், 2020–லேயே தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலம் என்ற பெருமை சேர்த்த ஆற்றல் மறவர் மேன்மைக்குரிய அண்ணன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். பொழுதும் புன்னகை மாறாமல், ஏற்றுக்கொண்ட பொறுப்பிலிருந்து ஒரு சிறிதும் மாறாமல், ஆட்சியும் கட்சியும் வீறுநடை போட்டு வெற்றிப் பாதையில் பயணிக்க, தூய உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு துணை நிற்கும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். இப்பக்கமும் அப்பக்கமும் என எப்பக்கமும் சாயாமல் நடுநிலையோடு அவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய கலசப்பாக்கம் தொகுதி மக்களில் பெரும்பாலானவர்களும், சுமார் 7,000–க்கும் மேற்பட்ட அரசு

2020 ஜனவரி 9]

ஊழியர்களும், ஆசிரியர்களும் கைத்தறி ஆடைகளையே விரும்பி அணிகிறார்கள். எனவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக மறுபரிசீலனை செய்து நடப்பு நிதியாண்டிலேயே கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் நவீன விற்பனை நிலையத்தைத் துவங்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதியில் இருக்கின்ற 7,000–க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், மாணவர்கள் அனைவருமே கைத்தறி ஆடைகளை அணிய விரும்புகிறார்கள் என்று சொல்லியிருக்கிற நற்செய்திக்கு நான் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையிலும், ஆரணியிலும் 2 கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகிற கலசப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனை வளாகங்களை* exhibition *என்ற முறையிலே மேற்கொண்டு, அங்கே இருக்கிற கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், பெரிய பள்ளிகள் அனைத்திலும் தொடர்ந்து விற்பனை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஒரு விற்பனை நிலையத்தைப் புதிதாக துவங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு கட்டடம் அவசியப்படுகிறது. அதுவும் விற்பனைக்கு உகந்த கடை வீதியில், மக்கள் போக்குவரத்து மிகுந்த இடத்தில் தேவைப்படுகிறது. வாடகைக்கு இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுக்குச் சொந்தமான இடம் கடை வீதியில், விற்பனைக்கு உகந்த இடத்தில் கிடைக்கும் என்று சொல்வாரானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதியிலுள்ள தெற்கு கோபுரம் அருகிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடை மிகப் பழமையானதாக உள்ளது. அதைத் தரமுயர்த்த வேண்டுமென்று உங்கள் வாயிலாக மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற விற்பனை நிலையங்களில், கிட்டத்தட்ட 108 விற்பனை நிலையங்கள் தமிழகத்திலும், 49 விற்பனை நிலையங்கள் வெளி மாநிலங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பெரிய அளவில் இலாபத்தை ஈட்டவில்லை என்றாலும், ஓரளவு இலாபத்தில் இயங்குகிற ஒரு நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்பொழுது நன்றாகத் தெரியும். தனியார் விற்பனை நிலையங்களில் தற்போது மிகப் பெரிய அளவில்* Mall *என்று சொல்லக்கூடிய அளவிற்கு கவர்ச்சிகரமான கட்டடங்களையும் கட்டி, ஒன்று வாங்கினால் இரண்டு இலவசம், ஒன்று வாங்கினால் மூன்று இலவசம் என்றெல்லாம் சொல்லி நுகர்வோரை ஈர்க்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் போட்டியாக, அதற்கு இணையாக, நாமும் இன்றைக்கு விற்பனையை குறையாமல் கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதனாலும், கையிருப்பில் இருக்கக்கூடிய நிதி வசதியின் காரணமாகவும், எல்லா கடைகளையும் இப்பொழுது மாற்றியமைக்கமுடியாதஒருநிலைஇருக்கிறது.எனினும், தற்போது பல கடைகளை தனியார் கடைகளுக்கு இணையாக, நுகர்வோருடைய கவனத்தை ஈர்க்கிற வகையில், மாற்றியமைத்துக் கொண்டு வருகிறோம். அந்த வரிசையில், மாண்புமிகு உறுப்பினர்*

2020 ஜனவரி 9]

அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கடையையும் மிக விரைவில் மாற்றியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

மருந்தகத்தை தரம் உயர்த்துதல்

***52579—திரு. ப. கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்தில் இயங்கி வரும் மருந்தகத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்தில் இயங்கி வரக்கூடிய அரசு மருந்தகத்திற்கு அருகிலேயே 30 படுக்கைகள் வசதி கொண்ட சந்திராபுரம் மேம்படுத்தப்பட்ட வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற காரணத்தால், மலையடிபாளையத்தில் இயங்கி வரும் மருந்தகத்தை தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.*

[*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி) தலைமை*]

[2020 ஜனவரி 9

திரு. ப. கந்தசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆசியோடு, ‘மக்களால் நான், மக்களுக்காக நான்’ என்று வாழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, எல்லா துறைகளிலும் கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் அனுபவம் பெற்று, இன்று இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கி, மக்கள் நலம் பெற செயலாற்றிக் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்கி, அவருக்கு உறுதுணையாக இருந்து தமிழகத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் தமிழக துணை முதலமைச்சர் அவர்களை வணங்கி, கொங்கு மண்டலத்தில் ஐம்பது ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியை ஐந்தே ஆண்டுகளில் நிறைவேற்றிக்காட்டி, நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 90% வெற்றியை கொங்கு மண்டலத்திற்குப் பெற்றுத் தந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், கண் இமை மூடுகிற நேரத்திற்குள் இத்துறையில் நல்ல பல செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றார்.

சூலூர் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டை ஒன்றியத்திலுள்ள மலையடிபாளையத்தில் 6 கிராமங்கள் இருக்கின்றன. தினமும் கிட்டத்தட்ட 10,000 பேர் அந்தப் பகுதிக்கு வந்து செல்கின்றார்கள். எனவே, 30 படுக்கைகள் வசதி கொண்டதாக இல்லாவிட்டாலும்கூட, அந்த மருந்தகத்தைத் தரமுயர்த்தி, தினமும் 4 டாக்டர்கள் வருவதற்கான ஏற்பாடுகளை நீங்கள் செய்து தர வேண்டும். ஏனென்றால், மலையடிபாளையம், தற்போது வளர்ச்சி பெற்ற ஊராகும். 10 கிராமங்களை உள்ளடக்கிய அவ்வூருக்கு கிட்டத்தட்ட 10,000 பேர் தினமும் வருகிறார்கள். அந்தப் பகுதியிலே ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அந்த அற்புதமான கோயிலுக்கு தினமும் சுமார் 1,000 பக்தர்கள் வருகிறார்கள். அந்தப் பகுதியில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்கு 1,500 குழந்தைகள் படிக்கிறார்கள். பெரிய வாரச் சந்தை அந்தப் பகுதியில் இருக்கிறது. தினந்தோறும் நடைபெறும் மார்க்கெட் அந்தப் பகுதியில் இருக்கிறது. 10,000–க்கு மேற்பட்ட மக்கள் தினமும் வந்து செல்லக்கூடிய அந்தப் பகுதி தற்போது வளர்ச்சி பெற்றுள்ளது. நீங்கள் சொல்கின்ற சந்திராபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கிருந்து கிட்டத்தட்ட 8 கி.மீ.–க்கு அப்பால் உள்ளது. எனவே, அந்த மருத்துவமனைக்குச் சென்று, அந்த மருத்துவமனையில் பயன்பெறக்கூடிய வாய்ப்பு

2020 ஜனவரி 9]

குறைவாக இருக்கிறது என்பதை தாழ்மையோடு மக்களின் சார்பில் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–40

எனவே, மலையடிபாளையத்தில் இருக்கின்ற அந்த மருத்துவமனையை நீங்கள் தரம் உயர்த்திக் கொடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறையில் எப்படிப் பல விருதுகளைப் பெற்றீர்களோ, அதுபோல சூலூர் மக்களுடைய நல்லாதரவோடு நீங்கள் அதை கண்டிப்பாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக நான் வைக்கின்றேன். அந்தக் கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் மருத்துவ வசதிக்கு பொள்ளாச்சிக்குத்தான் செல்ல வேண்டும். சந்தானபுரத்திற்குப் போய், அங்கிருந்து செல்வதற்கெல்லாம் போதிய வசதிகள் இல்லை. அவர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்த மக்கள். நீங்களும் கிராமப்புறத்திலிருந்து வளர்ந்து வந்தவர்கள். கிராம மக்களோடு பணியாற்றுவதில், நீங்கள் பயிற்சி பெற்றவர்கள். நம்முடைய முதல்வர் அவர்களும் கிராமப் பகுதியில், விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அங்கிருக்கின்ற விவசாயப் பெருமக்களுடனும் அங்கிருக்கின்ற தொழிலாளர்களுடனும், அங்கிருக்கின்ற மக்களுடனும் நேரடி தொடர்பு வைத்திருக்கக்கூடிய துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை. எனவே, நீங்கள், சூலூரில் இருக்கின்ற சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட மலையடிபாளையத்தில் உள்ள மருத்துவமனையை மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக கண்டிப்பாகத் தரம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சூலூர் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய சூலூர் தொகுதி மக்கள் சார்பாக பிறந்த நாள் வாழ்த்துகளைக் கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. ரவி): *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய சூலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பு சகோதரர் திரு. கந்தசாமி அவர்கள் பேசிய அந்த வார்த்தைகள், எனக்கு இல்லையென்று சொல்வதற்கு மனமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தளவுக்கு அவர் வார்த்தைகளை, உணர்வுகளை*

மக்களுடைய பிரதிநிதியாக, சூலூர் தொகுதி மக்களுடைய உணர்வுகளை இந்த மாமன்றத்திலே பிரதிபலித்திருக்கிறார். ஆகையினால், அவருக்கு இல்லை என்று சொல்வதற்கு மனமில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சட்டத்திலே இடமில்லை என்றாலும்கூட, அவருடைய அந்தக் கோரிக்கைகளுக்கு மனதிலே இடம் வைத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். நீங்களே ஒரு compromise–க்கு வந்திருக்கிறீர்கள். மலையடிபாளையத்தில் இருக்கின்ற மருத்துவமனையை 30 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தாவிட்டாலுங்கூட தேவையான மற்ற வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று அவர் கோரிக்கை வைத்திருக்கிறார். ஆக, அந்த compromise–க்கு நானும் தயாராக இருக்கின்றேன். அரசும் தயாராக இருக்கிறது. அவர் விரும்புகின்ற அளவுக்கு, மலையடிபாளையத்தில் இருக்கக்கூடிய அந்த மருந்தகத்திற்கு—ஏனென்றால், அது ஒரு காலத்தில் Union Dispensary ஆக இருந்தது. இப்போது ஒரு மருத்துவரோடு இயங்கிக் கொண்டிருக்கிறது—அந்த மக்களுக்கு மேலும் வசதிகளை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு, நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, சட்டமன்ற உறுப்பினரின் விருப்பத்திற்கேற்ப தேவையான அனைத்து வசதிகளும் இந்த ஆண்டு செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில், செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில், தலைக் காயத்திற்கு தனி சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாகவே அதை நான் வலியுறுத்திக்கொண்டு வந்திருக்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதி தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்திருப்பதால் அடிக்கடி விபத்துகள் அதிகமாக நடைபெறுகின்றன. மற்ற விபத்துகளாக

2020 ஜனவரி 9]

இருந்தால் காயமடைந்தவர்களை எப்படியும் காப்பாற்றிவிடுவோம். ஆனால், தலைக் காயத்திற்கு உடனடியாக அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கிறது. அதனால், அந்த வசதி இங்கு இல்லையென்று சென்னைக்கு refer *செய்கிறார்கள். வாகன நெரிசலில் சென்னைக்கு சென்று சேர்வதற்குள் நோயாளிகளுக்கு அதிக உயிரிழப்பு ஏற்படுகிறது. அதை மனதில் கொண்டு, இந்த வருடமாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைக்காயப் பிரிவை எங்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு ஒரு நூலகம் வேண்டுமென்று என்னை தனிப்பட்ட முறையில் கேட்டிருந்தார்கள். அது பெரிய பட்ஜெட்டாக வருமென்று நினைக்கிறேன். அதையும் அரசு செய்து தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஏற்புடைய கருத்து. அது ஏற்கெனவே அரசினுடைய சாதகமான பரிசீலனையில் இருக்கிறது. தாங்கள் சொன்னதுபோல, கூட்ட நெரிசலையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் செங்கல்பட்டுக்கும் சென்னைக்கும் நடுவில், தாம்பரம் பக்கத்தில் உள்ள குரோம்பேட்டை மருத்துவமனை பெரிய விபத்து காய சிகிச்சை மையமாக,* Nodal Centre *ஆக, 10 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நேற்றுகூட சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது சொன்னேன். அதை விரைவில் திறக்கவிருக்கின்றோம். செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தாங்கள் கேட்ட தலைக் காய சிகிச்சைப் பிரிவு,* Neuro Surgery *பிரிவை விரைவிலே துவங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் செய்தாகிவிட்டதென்ற நல்ல தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

நெற்களம்

***46305—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

முற்பகல் 10–45

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதியில் இருக்கின்ற நெற்குன்றம் ஊராட்சியில், ஏறக்குறைய 1,000 ஏக்கர் அளவிற்கு நெற்பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் அறுவடை செய்யும்போது களம் இல்லாத காரணத்தினால் அந்தத் தாள்களையெல்லாம் ரோட்டிலே போட்டு போக்குவரத்து பாதிக்கப்படுகின்ற அளவிலே அறுவடை நடைபெறுகிறது. ஆகவே, செக்கஞ்சேரி பகுதியில் சர்வே நம்பர் 43–லிருக்கின்ற சுமார் 30 சென்ட் நிலத்திலே இந்த அரசாங்கம் நெற்களம் அமைத்துத் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு இந்த நெல்லை, கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு சென்று விற்பதற்கான வசதியில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவசாயம் தொடர்பில்லாத வேறு துறையாக இருந்தாலும், நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்துத்*

2020 ஜனவரி 9]

தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 27 உலர் களங்கள் கட்டப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. இருப்பினும், மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி, மாந்தோப்பு பகுதியில் நெற்களம் அமைக்க சம்பந்தப்பட்ட ஊராட்சி மூலமாக போதுமான நிலம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், விற்பனைக் குழு நிதியின்மூலம் நெற்களம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தில், குறிப்பாக மாதவரம் தொகுதியிலே, விவசாயப் பொறியியல் துறையின் மூலமாக மானியத்திலே வழங்கப்படுகின்ற டிராக்டர்கள் வாங்க இன்னும் அதிகமான விவசாயிகள், காத்திருப்போர் பட்டியலிலே இருக்கின்றார்கள். கடந்த ஆறு மாத காலமாக அவர்களுக்கு டிராக்டர் மற்றும் விவசாயப் பொருட்களெல்லாம் வழங்கப்படவில்லை. அதேபோன்று, சென்ற வருடம் ஒரு இலட்சம் ரூபாய் மானியம் கொடுக்கும்போது, அந்த மானியத்தை கழித்துக் கொண்டு விவசாயிகள் பணம் கட்டுவதற்கான ஏற்பாடு ஆகியிருந்தது.ஆனால்,இப்போதுஒவ்வொருடிராக்டருக்கும்7-லிருந்து 8 இலட்சம் ரூபாய் வரை விவசாயிகள் முதலில் கட்டி, மானியத்தை பிறகு பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற நிலைமை இருக்கின்றது. 7, 8 இலட்சம் ரூபாய் புரட்டுகின்ற அளவிற்கு அங்கிருக்கின்ற விவசாயிகள் வசதி படைத்தவர்களாக இல்லை. ஆகவே, அதைக் குறைத்துத் தர வேண்டும். மானியத்தை விலையிலே* adjust *செய்து, மானியம் போக மீதி விலையை உடனடியாகக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதேநேரத்தில், அங்கிருக்கின்ற விவசாயிகளுக்கு போதுமான விவசாயப்*

பொருட்கள் மானியத்தில் வழங்கப்படவில்லை. சாதாரண சிறு டிராக்டர்கள்8–லிருந்து 20 வரை உள்ள டிராக்டர்கள், பூச்சி மருந்து அடிக்கின்ற ஸ்பிரேயர்கள், களை எடுக்கின்ற மெஷின்களெல்லாம் மானியத்திலே வழங்கப்படவில்லை. அதேநேரத்திலே விவசாயிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் கேள்வி கேளுங்கள். நீங்கள் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. எஸ். சுதர்சனம்: மன்னிக்க வேண்டும். ஆகவே, இவற்றையெல்லாம் தயவுசெய்து செய்து கொடுத்து, திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு அதிகமாக fund ஒதுக்கி, மானியத்தில் அதிகமான பொருட்களை, விவசாயத் துறை வழங்குமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை, தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் வேளாண்மைத் துறைக்கென்று அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, விவசாயிகளுக்கு வேண்டிய அத்தனை உபகரணங்களையும் மானியத்தில் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். முறைகேடு நடைபெறாமல் இருப்பதற்காக, இன்று விவசாயிகள் online மூலம் பதிவு செய்து, அவர்களுக்கு முறையாக வழங்கப்பட்டு, அவர்களுக்குரிய மானியம், பின்னேற்பு மானியமாக, அவர்கள் கொள்முதல் செய்த அந்த உபகரணங்களுக்கு பின்னாளில் உடனடியாக மானியங்களை அந்தந்தத் துறை அதிகாரிகள் வழங்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு தேவைப்படுகின்ற பூச்சி மருந்தாகட்டும், விதையாகட்டும் எதுவாக இருந்தாலும் அத்தனையையும் உடனுக்குடன் தேவையறிந்து விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

2020 ஜனவரி 9]

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடவூர் ஒன்றியத்தில், தரங்கம்பட்டி ஊராட்சி பகுதியில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் Marketing committee-யின் DPC மூலமாக நெல் கொள்முதல் செய்து கொண்டிருக்கின்றோம். நேரடி நெல் கொள்முதல் நிலையம்-DPC என்பது உணவுத் துறையின் மூலமாகச் செயல்படுகிறது. ஆகவே, முறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் நானும் தெரிவித்து, நீங்களும் தெரிவித்து, அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை

***53923—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமப் பகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கட்டும் பணிகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–50

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, செட்டிப்பாளையம் கிராமத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

செயல்பட கட்டடம் கட்டும் பணி மத்திய பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மருத்துவமனை/ மருந்தகம் கட்டடம் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பெயரிலேயே பதிவு செய்யப்படுகிறது. கட்டடம் கட்டும் செலவினம் முழுவதும் மேற்படி கழகத்தையே சாரும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமே புதிய கட்டடங்களைக் கட்டுகிறது. மாநில அரசின் வேலை, மருத்துவ சேவை அளிப்பது மட்டுமே. இருப்பினும், மேற்படி கட்டடம் கட்டும் பணியினைத் துரிதப்படுத்த தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு வலியுறுத்தி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமல் மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி, தமிழகம் பல்வேறு துறைகளில் முதன்மை இடத்தைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். தமிழகம் 'சிறந்த செயல்திறன் மிக்க மாநிலமாக' உருவாவதற்கு மாண்புமிகு முதல்வருக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இனிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவால், கடந்த 2015 ஆம் ஆண்டு திருப்பூர் மாவட்டத் தொழிலாளர்களின் நலனுக்காக, கிட்டத்தட்ட 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ESI மருத்துவமனைகட்டுவதற்காக7ஏக்கர்50சென்ட்நிலம்வழங்கப்பட்டது. மேற்படி நிலத்தில் புதிய மருத்துவமனையைக் கட்ட சில ஆண்டுகளுக்கு முன்புதான் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த இடத்தில் ESI மருத்துவமனையை அமைப்பதற்கு, அந்த இடத்தை

2020 ஜனவரி 9]

possession *எடுத்து,* compound wall*-ம் அமைக்கப்பட்டுவிட்டது. மேலும், திருப்பூர் மாநகராட்சியிலே, திருப்பூர் மாவட்டத்திற்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து 10 இலட்சம் தொழிலாளர்கள் வரை வருகின்றார்கள். அந்தத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, அந்த இடத்திலே* ESI *மருத்துவமனை கட்டுவதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு செட்டிப்பாளையம் கிராமத்தில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான நிலம் தேர்வு செய்யப்பட்டு, 10–2–2019 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மருத்துவமனைக்கு கட்டடம் கட்டும் பணி மத்திய பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அம்மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட மண் பரிசோதனை செய்யவும் மற்றும் அஸ்திவாரம் போடவும் ரூபாய் 2 இலட்சத்து 39 ஆயிரத்திற்கான முதல்நிலை மதிப்பீடு கோயம்புத்தூரிலுள்ள மத்திய பொதுப் பணித் துறையால் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனை/மருந்தகம் கட்டடம் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் பெயரிலேயே பதிவு செய்வதாலும், கட்டடம் கட்டும் செலவினம் முழுவதையும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்தான் வழங்க வேண்டும். மேற்கண்ட மருத்துவமனைக்கு கட்டடம் கட்டும் பணியினை துரிதப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தை வலியுறுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

[2020 ஜனவரி 9

முற்பகல் 10–55

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், திருப்பூர் மாவட்டம் என்பது மாநிலத்திலேயே கிட்டத்தட்ட 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற மாவட்டமாகும். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களின் நலன்களைக் கருதி மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என் சார்பாகவும், பொது மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை பணியாளர் குடியிருப்பு இருக்கிறது. அந்தக் குடியிருப்பு ஏறத்தாழ 25 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டது. அந்தக் குடியிருப்பின் 'A' block–ல் 8 கட்டடங்களும், 'B' block–ல் 4 கட்டடங்களும் என மொத்தம் ஒவ்வொரு கட்டடத்திலும் 16 வீடுகள் வீதம் 192 வீடுகள் அங்கே இருக்கின்றன. அந்தக் குடியிருப்புப் பகுதியில் அடிக்கடி கழிவுநீர் பிரச்சினை ஏற்பட்டு, அங்கே வசிக்கின்ற மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி வருகின்றார்கள். மேலும், 25 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட கட்டடம் என்பதால், அங்குள்ள வீடுகளின் மேற்கூரைகள் அடிக்கடி இடிந்து விழுகின்றன. அதேபோல, பால்கனிகளும் இடிந்து விழுகின்றன. இது மத்திய அரசாங்கத்தின் தொடர்புடைய பணிகள் என்று சொன்னாலும்கூட, அந்தக் குடியிருப்பில் வசிக்கின்ற பணியாளர்களின் நலன் கருதி, மாநில அரசாங்கம், மத்திய அரசு அதிகாரிகளை வலியுறுத்தி, அந்தக் கட்டடத்தை இடித்து விட்டு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் சரியில்லை என்று கூறியிருக்கின்றார். அதில் ஏதாவது பிரச்சினை இருந்தால், துறையின் சார்பாக அதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பேருந்து வசதி

***50862—திரு. க.சு. சரவணக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்திலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய புதிய விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 160 A/C *சென்னையிலிருந்து பெரியகுளம் வழியாக தேனிக்கு தலா ஒரு பேருந்து வீதம் இரண்டு பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், தடம் எண் 163* ASS *படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து, சென்னையிலிருந்து பெரியகுளம் மற்றும் தேனி வழியாக போடிக்கு தலா ஒருபேருந்துவீதம்இரண்டுபேருந்துகள்இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், மேற்படி பேருந்துகளுக்கு இணையதளம் மூலமாக முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பெரியகுளம் பயணிகள் மேற்கூறிய*

[2020 ஜனவரி 9

பேருந்து வசதியினைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார் அவர்கள்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். உள்ளாட்சியில், நல்லாட்சி கண்ட கழகத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் வழியாகச் செல்லும் அரசுப் பேருந்துகள் பாதிக்குமேல் புதிய பேருந்து நிலையம் செல்லாமல் வெளிச் சாலையில் செல்கின்றன. பொதுமக்கள் பயன்பெறும் வகையில், அனைத்துப் பேருந்துகளும் புதிய பேருந்து நிலையம் செல்ல ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மருகால்பட்டியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் விவசாய கூலித்தொழிலாளர்களின் குழந்தைகள் ஆவர். அவர்களுக்கு உரிய நேரத்தில் பேருந்து வசதி இல்லை. எனவே, அவர்களுக்கு ஆண்டிப்பட்டியிலிருந்து மருகால்பட்டி வழியாக வாடிப்பட்டிக்கு செல்லும் வகையில் காலை 8 மணிக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தொகுதி மக்கள் அனைவரும் மாவட்ட அரசு அலுவலகங்களுக்குச் செல்லும் வகையிலும், மாவட்ட அரசு மருத்துவமனைக்கு எளிதாகச் சென்று வரும் வகையிலும் ஜி.கல்லுப்பட்டியிலிருந்து தேவதானப்பட்டி, ஜெயமங்களம் மாவட்ட அரசு மருத்துவமனை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், கேள்வியைக் கேளுங்கள். படித்துக்கொண்டே இருந்தால் எப்படி? சரி, படியுங்கள். நீங்கள் புதிய உறுப்பினர், அதனால்தான் இதைச் சொல்கிறேன்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், அரசு மருத்துவமனை மற்றும் அரசு அலுவலகம் வழியாக அனைத்து ஊர்களிலிருந்தும் தேனி நகரம் செல்வதற்கு வசதியாக*

2020 ஜனவரி 9]

பேருந்து வசதி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சென்னையிலிருந்து பெரியகுளத்திற்கு பேருந்து வேண்டுமென்று கேட்டிருந்தார். அத்துடன் அவர் 3–4 கோரிக்கைகளை வைத்துள்ளார். அவற்றினை எழுத்துபூர்வமாக அவர் என்னிடத்தில் கொடுத்தால், அது சம்பந்தமாக துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, தேவையான பேருந்து வசதிகளைச் செய்து கொடுக்க அரசு பரிசீலிக்கும் என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இன்னும் ஒரு கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி நகரில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார், இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று உங்களுக்கே தெரிகிறது. அப்படியானால் அதனை எதற்கு கேட்கின்றீர்கள்?*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் போக்குவரத்துத் துறையைச் சார்ந்ததுதான். அந்தப் பகுதியில் இரயில்வே மேம்பாலத்தை மூன்று இடங்களில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

[2020 ஜனவரி 9

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். கடந்த 3 வருடங்களாக யானைக்கவுனி பாலம் பழுதடைந்துள்ள காரணத்தினால் 159A, 159B, 59, 37, 37G ஆகிய பேருந்துகள் பேசின்பிரிட்ஜ், புளியந்தோப்பு வழியாகச் சென்றுகொண்டிருக்கின்றன. அப்படி இயக்கக்கூடிய பேருந்துகளை புளியந்தோப்பு மின்சார வாரிய அலுவலகத்தில் நிறுத்தம் செய்தால் அங்கிருந்து கோயம்பேடு செல்லக்கூடிய கூலித் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் பெருமளவு பயன் பெறுவார்கள். அந்தப் பேருந்துகள் நடராஜா தியேட்டர் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்படுவதால் பயணிகள் ஏறக்குறைய 1 கிலோ மீட்டருக்குமேல் நடந்து சென்று, அடுத்தப் பேருந்தை பிடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதேபோல், தியாகராய நகரிலிருந்து இயக்கக்கூடிய 9 ஆம் எண் பேருந்து சேத்துப்பட்டு, எழும்பூர் மருத்துவமனை, எழும்பூர் இரயில்வே நிலையம், சென்ட்ரல் இரயில்வே நிலையம் வழியாக பாரிமுனை நோக்கி இயங்கிக்கொண்டிருந்தது. மெட்ரோ இரயில் பணி நடைபெற்ற காரணத்தினால், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டது. இப்போது மெட்ரோ இரயில் பணிகள் முடிவடைந்துவிட்டதால், மேற்கூறிய 9 ஆம் எண் வழித்தடப் பேருந்தையும், 17 ஆம் எண் வழித்தடப் பேருந்தையும் மேற்குறிப்பிட்ட இடங்களில் நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இரண்டு வழித்தடங்களும் பாலம் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்றதால், மாற்று வழித்தடத்தில் இயக்கப்பட்டன. இப்போது பணிகள் முடிந்துவிட்டதால் அந்தப் பேருந்துகளை பழைய வழித் தடங்களில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

சமுதாயக் கூடம்

***13778—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கொத்தாக விருதுகளை, கெத்தாகப் பெற்று வந்து, தமிழகத்தின் பெருமையைத் தலை நிமிரச் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைப் பதிவு செய்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, போதுமான இடம் மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு தன்னிறைவுத் திட்டம் என்னும் மகத்தான திட்டம் தந்த, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவராலும் 'எங்கள் வீட்டுப் பிள்ளை', 'மதுரை வீரன்' என்று அன்போடு இன்றும் அழைக்கப்படுகின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர்*

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்து, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி, பல துறைகளில் இந்தியாவிலேயே தமிழகத்திற்கு முதல் இடத்தைப் பெற்றுத் தந்து, சிறந்த நிருவாக ஆளுமைக்கு தமிழகம் முதலிடம் என்பதை உருவாக்கிய பெருமைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர், குடிமராமத்து நாயகன் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். இம்மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களையும் வணங்குகின்றேன். இம்மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிட குடியிருப்புப் பகுதிகளில் கிட்டத்தட்ட 150-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதை ஒட்டியுள்ள புதுப்பாளையம், ராமம்பாளையம், வேலம்பட்டி ஆகிய கிராமங்களிலும் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அந்தப் பகுதியில் வசித்து வருகின்றவர்களின் அனைத்து வீடுகளும் சிறிய, சிறிய அளவிலேதான் உள்ளன. அவர்கள் தங்களுடைய இல்லங்களில் ஏதாவது விசேஷம் என்றாலும்கூட, அந்த விசேஷத்தை நடத்துவதற்கு முடியாமல், அங்கிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள நகரத்தை நாடிச் சென்று, திருமண மண்டபத்தைப் பிடித்துத்தான் அந்த விசேஷங்களை நடத்த வேண்டியுள்ளது. அந்தத் திருமண மண்டபத்திற்கும் தொகை அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளதால், அந்தத் தொகையைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் இல்லாத காரணத்தால். . .

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விசேஷங்களை நடத்துவதற்கு அவர்கள் சிரமப்படுகிறார்கள்.

2020 ஜனவரி 9]

வேலம்பட்டி புதூர் பகுதியிலே வசிக்கக்கூடிய ஆதி திராவிட மக்களுக்கு ஒரு சமுதாயக் கூடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971–72 கால கட்டத்திலிருந்து சமுதாயக் கூடங்கள் கட்டடப்பட்டு வருகின்றன. 2012 ஆம் ஆண்டு தொடங்கி 2019 ஆம் ஆண்டு வரை சுமார் 62 சமுதாயக் கூடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. அதன் பிறகு பெறப்படும் கருத்துருக்கள் மீது தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வடக்கு அவினாசிபாளையம் ஊராட்சி, வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் 50 குடும்பங்களைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் அருந்ததியின மக்கள் சுமார் 180 நபர்கள் வசித்து வருகிறார்கள். வேலம்பட்டி புதூர் ஆதி திராவிடர் குடியிருப்புக்கு அருகில் சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் புதுப்பாளையம் என்ற இடத்திலும், கிருஷ்ணாபுரம் என்ற இடத்திலும் ஊரக வளர்ச்சித் துறையினால் சுமார் 3 செண்ட் அளவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடம், புதிய கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதியோடு நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவையின் அடிப்படையில், முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, வேலம்பட்டி புதூர் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

[2020 ஜனவரி 9

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 முதல் 3 வரை)@

பட்டியல் 1

1—

வேகத்தடை அமைத்தல்

வினா எண் 26049—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, பட்டரை பெரும்புதூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகளைத் தடுக்க வேகத்தடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டரை பெரும்புதூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையானது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பின்கீழ் உள்ளது. மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் சுற்றறிக்கையின்படி தேசிய நெடுஞ்சாலைகளில் வேகத்தடைகள் அமைப்பதற்கு அனுமதி இல்லை.

2—

காலியிடங்களை பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

வினா எண் 25178—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2020 ஜனவரி 9]

வேளச்சேரி தொகுதி, 181-வது வட்டம், திருவான்மியூர் குப்பம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அருகில் உள்ள இடத்தை மீனவர் கட்டுப்பாட்டிலிருந்து மீட்டு பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

வேளச்சேரி தொகுதி, 181-வது வட்டம், திருவான்மியூர் குப்பம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அருகில் உள்ள இடங்கள் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமானது அல்ல. எனவே, திருவான்மியூர் குப்பத்தில் உள்ள நிலங்களை வீட்டு வசதி வாரியம்மூலம் பொதுப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர இயலாத நிலை உள்ளது.

3—

வங்கிகள்மூலம் கடனுதவி

வினா எண் 34827—டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதியில் ஏழை மக்கள் வீடுகட்டும் வகையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

தமிழ்நாடு தொலைநோக்குத்திட்டம் 2023-ன்கீழ் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மைய அரசின் மானியம் மற்றும் அரசின் நிதி ஆதாரத்தினைக் கொண்டு நகர குடிசைப்பகுதிவாழ் மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு 300 சதுர அடிக்குக் குறையாமல் கான்கிரீட் தள வீடுகள் கட்டிக்கொள்ள குடும்பம் ஒன்றிற்கு அரசு மானியம் ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சியில் 3,222 வீடுகள் ரூ.6,766.20 இலட்சம் செலவில் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் வழங்கப்படும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிதியுதவியினைக் கொண்டு பேரூராட்சிகள் இயக்குநரகத்தால் மானியம் குடும்பம் ஒன்றிற்கு ரூ.2.10 இலட்சம் வீதம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது முன்னேற்றத்தில் உள்ளன.

4—

தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35332—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்றும் வாரியத்தின் மூலமாக தொகுப்பு வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன்கீழ் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மைய அரசின் மானியம் மற்றும் அரசின் நிதி ஆதாரத்தினைக் கொண்டு நகர குடிசைப்பகுதிவாழ் மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு 300 சதுர அடிக்குக் குறையாமல் தரைபரப்பு கொண்ட கான்கிரீட் தள வீடுகள் கட்டிக்கொள்ள குடும்பம் ஒன்றிற்கு அரசு மானியம் ரூ.2.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 7,901 வீடுகள் ரூ.23,189.10 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகரில் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெற்று, பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் விரைவில் முடிவுறும்.

மேலும், நாகர்கோவில் நகராட்சி, வடசேரி மேற்குப் பகுதியில் 120 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,247.00 இலட்சம் செலவில் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

2020 ஜனவரி 9]

5—

புதர்களை அகற்றுதல்

வினா எண் 46785—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் டாக்டர் மூர்த்தி ரோட்டில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியுருப்புப் பகுதியின் பின்புறம் உள்ள புதர்களை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, டாட்கர் மூர்த்தி ரோட்டில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியின் பின்புறம் உள்ள பூங்கா மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் பகுதி 16-5-1994 அன்று கும்பகோணம் நகராட்சி வசம் தொடர் பராமரிப்பிற்காக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் அமைந்துள்ள புதர்களை அகற்ற கும்பகோணம் நகராட்சிதான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

6—

வன உரிமைச் சட்டம் அமல்படுத்துதல்

வினா எண் 983—திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கூடலூர்தொகுதிக்குட்பட்ட பகுதியில்நடைமுறைப்படுத்தாமல் உள்ள 2006, வன உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

கூடலூர் கோட்டத்திற்குட்பட்ட கூடலூர் தெகுதியில் பழங்குடியினர் மற்றும் மரபு வழி வன வாழ்வினர் (வன உரிமைகள்

அங்கீகரித்தல்) சட்டம், 2006 நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சட்டத்தின்படி, நாளது தேதி வரை 88.43996 எக்டர் வன நிலத்தில் 208 தனி நபர்களுக்கு விவசாயம் மற்றும் விடுகள் கட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் சாலை வசதி ஆகியவை மேற்கொள்ள 9 இனங்களுக்கு 1.14896 எக்டர் வன நிலம் வழங்கப்பட்டுள்ளது.

7—

இலவச சைக்கிள் வழங்குதல்

வினா எண் 41668—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் 2016-2017 ஆம் ஆண்டில் எத்தனை மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

2016-2017 ஆம் கல்வியாண்டில் கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்ட விவரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

வ. எண்	தொகுதி, கல்வி மாவட்டம்	**2016-2017**-ல் கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் கல்வி மாவட்டத்தில் விலையில்லா மிதிவண்டிகள் பெற்று வழங்கப்பட்ட விவரம்		
		ஆண்	பெண்	மொத்தம்
1	கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் கல்வி மாவட்டம்	***1,977***	***2,736***	***4,713***
	மொத்தம்	***1,977***	***2,736***	***4,713***

2020 ஜனவரி 9]

8—

ஆங்கில வழி கல்வி பாடப்பிரிவு துவக்குதல்

வினா எண் 43067—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழி கல்வி பயின்ற மாணவர்கள் தொடர்ந்து படிக்க 11 ஆம் வகுப்புக்கு ஆங்கில வழி கல்வி பாடப்பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

1993-1994 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கில வழியில் கல்வி கற்பதற்கு ஏதுவாக ஆங்கில வழி பாடப்பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கி, அரசாணை (நிலை) எண் 601, பள்ளிக் கல்வித் (டி1) துறை, நாள் 21-6-1993-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 180, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள் 17-7-2012-ன்படி 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் வகையில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்பில் தலா இரண்டு ஆங்கில வழி இணைப் பிரிவுகள் தொடங்கப்பட்டு, படிப்படியாக 12 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழிப் பிரிவுகள் நடத்தப்படும் என ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், 2012-2013 முதல் 2017-2018 ஆம் கல்வியாண்டு வரை 4,308 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதேபோல் 2018—2019 ஆம் கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் ஆங்கில வழி பாடப் பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கி அரசாணை (நிலை) எண் 148, பள்ளிக் கல்வித் [பக6(1)] துறை, நாள் 20-7-2018-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(2) 10 ஆம் வகுப்பு வரை ஆங்கில வழியில் கல்வி பயின்ற மாணவர்கள் தொடர்ந்து 11 ஆம் வகுப்பிலும் ஆங்கில வழியில் கல்வி பயிலும் வாய்ப்பினை ஏற்படுத்தும் பொருட்டு மேற்காண் அரசாணைகளின்கீழ் அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆங்கில வழி பாடப் பிரிவுகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுவருகிறது.

9—

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 43655—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, மேலக்காவிரி காமராசர், பானார்துறை, என்.வி.என்.கே.வி. வடக்கு, ஏ.ஆர்.ஆர். மற்றும் கருப்பூர் சாலையிலுள்ள நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சியில் உள்ள மேலக்காவிரி காமராசர், பானார்துறை, என்.வி.என்.கே.வி. வடக்கு, ஏ.ஆர்.ஆர். மற்றும் கருப்பூர் சாலையிலுள்ள நகராட்சித் தொடக்கப் பள்ளிகளுக்குப் போதுமான வகுப்பறைகள் உள்ளதால், அப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

10—

நூலகத்திற்கு கூடுதல் கட்டடம், புத்தகங்கள் வழங்குதல்

வினா எண் 46258—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள நூலகத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டவும், பொறியியல் மாணவர்கள் பயன்பாடு கருதி கூடுதல் புத்தகங்களை வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் கிளை நூலகம்நகராட்சிக்குச்சொந்தமான700சதுர அடி பரப்பளவுகொண்ட வாடகையில்லா இலவசக் கட்டடத்தில், குடிமைப்பணிப் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு, நாளிதழ்/பருவ இதழ் பிரிவு, நூல்கள் வாசிப்புப் பிரிவு, மகளிர்/சிறுவர் பிரிவு மற்றும் கணிப்பொறிப் பிரிவு போன்ற வசதிகளுடன் போதுமான இடவசதியுடன் செயல்பட்டுவருகிறது. எனவே. இக்கிளை நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை. மேலும், இந்நூலகத்தில் 54,119 நூல்கள் இருப்பு உள்ளன. அதில், பொறியியல் சம்பந்தமாக 225 நூல்கள் உள்ளன. தற்போது, பொறியியல் மாணவர்களின் பயன்பாட்டிற்காக கூடுதலாக 200 பொறியியல் நூல்கள் வாங்கி வாசகர்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்டுள்ளன.

11—

உட்கட்டமைப்பு வசதிகள் செய்தல்

வினா எண் 47421—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் தெற்கு தொகுதியில் உள்ள சீலநாயக்கன்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளி மற்றும் மணியனூரில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் தெற்கு தொகுதியில் உள்ள சீலநாயக்கன்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 205

மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் உள்ளன. இப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் குடிநீர் வசதி மற்றும் பள்ளியைச் சுற்றி முழுமையாக 200 மீட்டர் அளவில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு தொகுதியில், மணியனூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 349 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 14 வகுப்பறைகளும் 1 ஆய்வகமும் உள்ளன. இப்பள்ளியில் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் குடிநீர் வசதி மற்றும் பள்ளியைச் சுற்றி முழுமையாக சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பள்ளிகளுக்குப் போதுமான அளவு உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளதால், அப்பள்ளிகளுக்கு கூடுதலாக உட்கட்டமைப்பு வசதிகள் செய்ய அவசியம் எழவில்லை.

12—

வேலைவாய்ப்பு பயிற்சி வழங்குதல்

வினா எண் 47556—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் பள்ளிப் பாடங்களில் வேலைவாய்ப்பு குறித்த பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ஆம். தமிழகத்தில் பள்ளிப் பாடங்களில் வேலைவாய்ப்பு குறித்த பயிற்சி, தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு அருகில் உள்ள தொழிற்சாலைகள் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சியாக வழங்கப்பட்டு வருகிறது. பொதுக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், பல்துறை வல்லுநர்களைக் கொண்டு வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, மேம்படுத்தப்பட்ட புதிய பாடப் புத்தகங்களில் தனித்திறன் மேம்படும் வகையிலும், சுய வேலைவாய்ப்புக்கு வழி ஏற்படுத்தும் வகையிலும் கருத்துகள்

2020 ஜனவரி 9]

வழங்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் தனியார் துறையில் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற வேலைவாய்ப்பு வழிகாட்டிமூலம் ஆலோசனைகள் இப்பாடப் புத்தகங்களில் வழங்கப்பட்டுள்ளன.

13—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 47734—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கூடலூரில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 77 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு தஞ்சாவூர் வட்டார வளர்ச்சி அலுவலரால் சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

14—

கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 47949—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பத்தூரில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 513 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஒன்பது வகுப்பறைகள் மற்றும் இரண்டு ஆய்வகங்கள் உள்ளன. மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மாணவ/மாணவியர்களுக்கு என தனித்தனியாக 8 கழிவறைகள் உள்ளன. மேற்படி பள்ளியில் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான அளவு வகுப்பறைகள் உள்ளதால், புதிய வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

15—

நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 50295—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி, அணைக்குடியில் உள்ள நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பெரமூர் ஊராட்சி, அணைக்குடி ஊர்ப்புற நூலகம் ஊராட்சிக்குச் சொந்தமான 1,500 சதுர அடி பரப்பளவு கொண்ட இலவசக் கட்டடத்தில் போதுமான இடவசதியுடன் செயல்படுத்தப்பட்டு வருவதால், தற்போது இந்நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

2020 ஜனவரி 9]

16—

நியாயவிலைக் கடைகளை மாற்றியமைத்தல்

வினா எண் 46439—திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சைதாப்பேட்டை தொகுதி, மண்டலம் எண் 10, வார்டு எண் 139, அண்ணாமலை நகர் 1, 2, 3-வது தெருக்களில் இயங்கிய கடை எண் 8, 10 TUCS *கடைகளை முருகன் தெருவிலிருந்து மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றி அங்கு புதிய இடத்தில் இயங்கச் செய்ய அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, மண்டலம் எண் 10, வார்டு எண் 139-ல் டி.யு.சி.எஸ். நிறுவனத்தின்கீழ் சைதாப்பேட்டை-8 முழுநேர நியாயவிலைக் கடை 1103 குடும்ப அட்டைகளுடனும், சைதாப்பேட்டை-10 முழுநேர நியாயவிலைக் கடை 1215 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இரண்டு நியாயவிலைக் கடைகளும் கடந்த 7 வருடங்களுக்கு முன்பு அண்ணாமலை நகர்-1, சென்னை 600 033 என்ற பழைய முகவரியில் பழுதடைந்தகட்டடத்தில்இயங்கிவந்தன.தற்போதுமுருகன்தெருவில் இயங்கிவரும் மேற்படி இரண்டு நியாயவிலைக் கடைகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. மேலும், குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர். எனவே, சைதாப்பேட்டை தொகுதி, மண்டலம் எண் 10, வார்டு எண் 139, அண்ணாமலை நகர் 1, 2, 3-வது தெருக்களில் இயங்கிய கடை சைதாப்பேட்டை-8 முழுநேர நியாயவிலைக் கடை மற்றும் சைதாப்பேட்டை-10 முழுநேர நியாயவிலைக் கடை முருகன் தெருவிலிருந்து மீண்டும் பழைய இடத்திற்கே மாற்றி, அங்கு புதிய இடத்தில் இயங்கச் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

குளங்களை தூர்வாரி வடிகால் வசதி செய்தல்

வினா எண் 158—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரத்திலுள்ள அனைத்து குளங்களையும் தூர்வாரி ஆக்கிரமிப்புகளை அகற்றி, வடிகால் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மன்னார்குடி நகராட்சி பகுதியில் மொத்தம் 92 குளங்கள் உள்ளன. நகராட்சிக்கு சொந்தமான குளங்கள் 43, இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான குளங்கள் 7, வருவாய் துறைக்கு சொந்தமான குளங்கள் 35, மீன்வளத் துறைக்கு சொந்தமான குளங்கள் 7, ஆக மொத்தம் 92 குளங்கள். அதில், இந்நகராட்சிக்கு சொந்தமான 43 குளங்களில் சென்ற ஆண்டு 7 குளங்களை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 2017-2018 ஆம் ஆண்டின் குடிமராமத்து பணிகளின்கீழ் 13 குளங்கள் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 23 குளங்களில் தற்போது மேற்கண்ட குடிமராமத்து திட்டத்தின்கீழ் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

18—

நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு கட்டடங்கள், பாடப் பிரிவுகள்

வினா எண் 181—திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடங்கள், புதிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

மன்னார்குடி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தற்போது உள்ள கட்டடங்கள் நல்ல நிலையில் போதுமானதாகவும், அடிப்படை

2020 ஜனவரி 9]

வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேலும், புதிய பாடப் பிரிவுகள் துவங்குவது குறித்து கல்வித் துறையின்மூலம் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

19—

குளத்தை தூர்வாரி, பூங்கா, படகு குழாம் அமைத்தல்

வினா எண் 407—திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவண்ணாமலை நகரம், தாமரைக் குளத்தை தூர்வாரவும், பூங்கா மற்றும் படகு குழாம் அமைக்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை நகராட்சி, தண்டராம்பட்டு சாலையில் சர்வே எண் 1749-ல் சுமார் 3611.0 சதுர மீட்டர் அளவில் வருவாய்த் துறையை சார்ந்த தாமரைக் குளத்தின் தெற்கு பகுதியில் தன்னிறைவு திட்டம் 2018-2019-ல் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், மேற்கண்ட தாமரைக் குளத்தினை தூர்வாரிடவும், படகு குழாம் அமைக்கவும் ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20—

குளத்தை தூர்வாரி, பூங்கா அமைத்தல்

வினா எண் 697—திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியிலுள்ள வின்ன குளத்தை தூர்வாரி பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

*ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வின்ன குளம் இல்லை. ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கென நகரின் மத்தியில் புல எண் 234/1-ல் சுமார் 11.63.0 ஹெக்டேர் பரப்பளவில் நகராட்சிக்கு சொந்தமான சின்னக்குளம் அமைந்துள்ளது. மேற்படி சின்னக்குளம் நீர்பிடிப்பு பகுதியில் உள்ள நீரினை வெளியேற்றி தூர்வாரப்படும் நிலையில் இதனை சார்ந்துள்ள விவசாய நிலங்கள் மற்றும் நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் நகராட்சி ஆழ்துளை கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது. மேலும், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொதுமக்கள் பயன்படுத்தும்வகையில் சுற்றுலா மையங்கள் மற்றும் பூங்காக்கள் ஏதும் இல்லாத நிலையில் மேற்படி குளத்தில் மேற்கு பகுதியில் மேட்டுப் பகுதியாகவும், சமதளப் பகுதியாகவும் உள்ளதால் நீர்தேக்கம் ஏற்பட வழிவகை இல்லாத நிலையில், மேற்படி சின்னக்குளத்தினை பொதுமக்கள் பயன்படுத்தும்வகையில் குழந்தைகள் விளையாடுமிடம், செயற்கை நீருற்று விளக்கு வசதிகளுடன் கொண்ட பூங்கா அமைத்திடவும், மேற்படி குளத்தில் கழிவு நீர் சேராத வகையில் (*Interruption and diversion*) சுத்திகரிப்பு நிலையம் அமைத்து வடிகால் அமைத்திடவும் மற்றும் குளத்தினை தூர்வாரி மழை நீரை சேகரம் செய்திடவும், குளத்தினை சுற்றிலும் நடைபாதை பூங்கா அலங்கார மின் விளக்குகளுடன் அமைக்கவும், சுற்றுச்சுவர்களை மேம்படுத்திடவும் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 82, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ2) துறை, நாள் 23-8-2018-ன்படி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (*IUDM*) *2018-2019-ன்கீழ் ரூ.350.00 இலட்சமும் மற்றும் 2019-2020-ன்கீழ் ரூ.350.00 இலட்சமும் மொத்தம் ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி பணிக்காக 13-2-2019-ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படும்.*

21—

நீர்த்தேக்கம் ஆழப்படுத்துதல்

வினா எண் 1888—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2020 ஜனவரி 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி வட்டம், பழனி நகரத்தின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு கொடைக்கானல் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தி, விரிவுப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

பழனி நகராட்சியில், ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் (KfW) ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 72, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறைமூலம் அனுமதியளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 26-2-2019-ல் (இரண்டாவது அழைப்பாக) கோரப்பட்டு பெறப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்பட்டு டிசம்பர் 2020-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

சூரிய ஒளி மின்சக்தி

வினா எண் 3951—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி அலுவலக வளாக மேல்தளத்தில் சூரிய ஒளி மின் சக்தி அமைப்பு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பாக்கம் நகராட்சி அலுவலக வளாகத்தின் மேல் தளத்தில் 4 (KVA) கேவிஏ கொள்திறன் கொண்ட சூரிய ஒளி மின் சக்தி அமைப்பு ஏற்படுத்த ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில்

17-6-2016 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 24-6-2016-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

23—

தளவாடப் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 3967—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி அலுவலகத்திற்கு இரும்பு அலமாரிகள் போன்ற தளவாடப் பொருட்கள் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பாக்கம் நகராட்சியின் அலுவலகப் பயன்பாட்டிற்கு தேவையான 10 எண்ணிக்கை இரும்பிலான அலமாரிகள் மற்றும் 4 எண்ணிக்கை ரேக்குகள் ரூ.97,585/-மதிப்பீட்டில் டான்சி நிறுவனத்திடமிருந்து 24-10-2016-ல் நகராட்சி வருவாய் நிதியின்கீழ் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவை அனைத்தும் செம்பாக்கம் நகராட்சிக்கு போதுமானதாக உள்ளது.

24—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 6709—திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கோட்டை நகராட்சியில் முத்துசாமி பூங்கா பகுதிகளில் கூடுதலாக மின் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி, முத்துசாமி பூங்காவில் தற்போது 12 மின் விளக்குகள் நல்ல நிலையில் இயங்கி வருவதனால், செங்கோட்டை நகராட்சியில் முத்துசாமி பூங்கா பகுதிகளில் கூடுதலாக மின் விளக்குகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மேம்படுத்துதல்

வினா எண் 7735—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 33-வது வார்டு தேவநேசன் பூங்கா, 38-வது வார்டு, முல்லை நகர் மற்றும் சேலையூர் பாரதி நகர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் மின் வேதியியல் முறையில் மேன்மைப்படுத்துதல் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம், வார்டு எண் 33-ல் உள்ள தேவநேசன் பூங்கா மற்றும் 38-வது வார்டு, முல்லை நகர் பகுதியில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டி வரும் பிரதான குடிநீர் குழாய் முத்துரங்கம் பூங்காவில் உள்ள எலக்ட்ரோ குளோரினேட்டர் இயந்திரம்மூலம் குளோரினேஷன் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால், மேற்படி நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மின் வேதியியல் முறையில் மேன்மைப்படுத்துதல் (Electro Chlorination) இயந்திரம் அமைக்க

அவசியம் ஏற்படவில்லை. மேலும், கிழக்கு தாம்பரம், சேலையூர் பாரதி நகர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் மின் வேதியியல் முறையில் மேன்மைபடுத்துதல் (Electro Chlorination) இயந்திரம் பொருத்தப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

26—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மேம்படுத்துதல்

வினா எண் 7777—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 19-வது வார்டு, கணேஷ் நகர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் மின் வேதியியல் முறையில் மேன்மைபடுத்துதல் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண் 19-ல் கணேஷ் நகர் பூங்கா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் மின் வேதியியல் முறையில் மேன்மைபடுத்துதல் (Electro Chlorination) இயந்திரம் பொருத்தப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

27—

குட்டை மேம்பாட்டுப் பணியை முடித்தல்

வினா எண் 9172—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, 1-வது வார்டு, பவநந்தியார் தெரு பூங்காவில் நீர்பிடிப்பு பகுதியில் நிலுவையிலுள்ள குட்டை மேம்பாட்டுப் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பாக்கம் நகராட்சியில் 1-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள பவநந்தியார் தெரு பூங்கா மேம்பாட்டு பணியினை 2011-2012 ஆம் நிதியாண்டில் பொது நிதியின்கீழ் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதியில் ஆக்கிரமிப்புகள் உள்ளதால், அப்பகுதியினை வருவாய்த் துறைமூலம் நில அளவை பணி செய்து தர கோரப்பட்டுள்ளது. நில அளவை பணி நிறைவடைந்தவுடன் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

28—

நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம்

வினா எண் 20479—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, மாதளம்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதளம்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளி கட்டடத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக தற்காலிக ஏற்பாடாக என்.வி.என். நகராட்சி தொடக்கப் பள்ளியில்

செயல்பட்டு வருகிறது. ஆகையால், கும்பகோணம் நகராட்சியில், மாதளம்பேட்டை நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

தூண்டில் வளைவு சீரமைத்தல்

வினா எண் 37618—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, இனையம்புத்தன்துறை ஊராட்சி, ராமன்துறை கிராமத்தில் சேதமடைந்த தூண்டில் வளைவை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, இனையம்புத்தன்துறை ஊராட்சி, ராமன்துறை கிராமத்தில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட நேர்கல் சுவற்றினை ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் மறு சீரமைப்பு செய்திட அரசால் ஒகி புயல் பேரழிவு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 18-4-2018-ல் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, மேற்படி ஆணையின்படி ராமன்துறை கிராமத்தில் குறுகிய நேர்கல் சுவர் மறு சீரமைத்திடும் பணிகள் முடிக்கப்பட்டன.

30—

குவாரிகளுக்கு சுற்றுச்சுவர்

வினா எண் 34030—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

திருவெறும்பூர் தொகுதி, துவாக்குடி நகராட்சி, வடக்கு மலை மற்றும் தெற்கு மலையில் உள்ள குவாரிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட துவாக்குடி நகராட்சிக்குட்பட்டு செயல்பட்டுவரும் குவாரிகளுக்கு அருகே வீடு கட்டி குடியிருந்து வரும் குடியிருப்புவாசிகள் மற்றும் அவர்களது வாரிசுகள் நலன் கருதி சுற்றுச்சுவர் கட்டப்படாத பகுதிகளுக்கு சுவர் கட்டும் பணிகள் மேற்கொள்வதற்கு விரிவான மதிப்பீடு செய்து அறிக்கை அனுப்புமாறு துவாக்குடி நகராட்சி ஆணையரை மாவட்ட ஆட்சியர், திருச்சி அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அதன் அடிப்படையில், அரசு நிதி பெற்று, சுவர் கட்டும் பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31—

காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 41337—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் கிளைச் சிறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1) புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி மற்றும் மாவட்ட சிறையின் கட்டுப்பாட்டிலுள்ள கும்பகோணம் கிளைச் சிறையில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் உதவி சிறை அலுவலர், இரண்டு முதல் தலைமைக் காவலர், இரண்டு முதல்நிலைக் காவலர், ஆறு

இரண்டாம்நிலைக் காவலர், ஒரு துப்புரவுப் பணியாளர் மற்றும் ஒரு சமையலர் பணியிடம் ஆகிய பணியிடங்கள் உள்ளன. தற்போது காலியாகவுள்ள மூன்று இரண்டாம்நிலைக் காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) மேலும், சமையலர் மற்றும் துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் செய்தித்தாள் விளம்பரம்மூலம் நிரப்பிட உரிய தொடர் நடவடிக்கை மேற்கொண்டு, மூன்று மாத காலத்திற்குள் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

32—

கல்குவாரியை தடை செய்தல்

வினா எண் 49595—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், முருகம்பாக்கம் கிராமத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கல்குவாரியை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், முருகம்பாக்கத்தில் இயங்கிவரும் கல் குவாரிக்கு 29-9-2014 முதல் 28-9-2019 வரை குத்தகை காலம் உள்ளது. மேற்படி குத்தகையானது வட்டாட்சியர், வருவாய் கோட்ட அலுவலர், மதுராந்தகம் ஆகியோரின் விசாரணை அறிக்கை மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்று ஆகியவற்றின் அடிப்படையில் முறையாக உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது தொடர்பாக, தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959-ன்கீழ் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2020 ஜனவரி 9]

33—

மாணவர் சேர்க்கையை முழுமையாக நிரப்புதல்

வினா எண் 34071—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை முழுமையாக நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இணையவழி கலந்தாய்வுமூலம் பொறியியல் கல்வி பயில அதிக மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். பொறியியல் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகள் துவங்க தனியார் சுயநிதி கல்லூரிகள் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. புதிய வேலைவாய்ப்புகள் குறித்து மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.வேலைவாய்ப்புபெறுவதற்கான வழிவகைகளை அதிகப்படுத்தி தொழில் நிறுவனங்களுடன் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

34—

சத்துணவு சமையற்கூடம் அமைத்தல்

வினா எண் 20766—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், மருதாநல்லூர் ஊராட்சியிலுள்ள அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமையற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மருதாநல்லூர் ஊராட்சியில் இயங்கும் அரசு உதவிபெறும்தொடக்கப்பள்ளியில்135மாணவர்கள்புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் உணவருந்தி வருகின்றனர். மேற்படி பள்ளியில் சத்துணவு மைய சமையல்கூடம் கட்டுவதற்குரிய செலவினத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 40 சதவிகிதம் செலவினத்தை பள்ளி நிருவாகம் பங்குத் தொகையாக செலுத்தினால் மட்டுமே எஞ்சிய 60 சதவிகித செலவினத்தை அரசு மேற்கொண்டு சத்துணவு சமையல் கூடம் கட்டுவதற்கு விதிமுறைகள் உள்ளது. மேற்காணும் பள்ளியின் நிருவாகம் 40 சதவிகித பங்குத் தொகையை ஏற்க விருப்பமில்லை என தெரிவித்துள்ளதால் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், மருதாநல்லூர் ஊராட்சியில் இயங்கும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்கு சத்துணவு மைய சமையல்கூடம் கட்ட இயலாத நிலையுள்ளது.

35—

குழந்தைகள் காப்பகத்திற்கு கட்டடம்

வினா எண் 21070—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி—வேலூர் தொகுதி, பொத்தனூர் பேரூராட்சி, 15-வது வார்டு, அரசங்காட்டு தெருவில் உள்ள குழந்தைகள் காப்பகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

பரமத்தி—வேலூர் தொகுதி, பொத்தனூர் பேரூராட்சி, 15-வது வார்டு, அரசங்காட்டு தெருவில் அங்கன்வாடி மையம் ஏதும் செயல்படவில்லை. ஆனால், அதே பகுதியில் ½ கி.மீ

2020 ஜனவரி 9]

தொலைவில் பொத்தனூர் வடக்கு தெருவில் அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. பொத்தனூர், அரசங்காட்டு தெருவில் உள்ள பயனாளிகள் பொத்தனூர் வடக்கு தெருவில் செயல்படும் அங்கன்வாடி மையம்மூலம் பயனடைந்து வருகின்றனர். தற்போது இம்மையம் செயல்படும் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், இம்மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

36—

சிமெண்ட் தரைத்தளமாக மாற்றியமைத்தல்

வினா எண் 23564—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சாத்தங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலுள்ள சத்துணவு சமையல் கூடத்தின் தரைத் தளத்தை சிமெண்ட் தரைத் தளமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் 1592 சத்துணவு மையங்களில், 97 மையங்கள் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. கும்பகோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த 70 மாணவர்கள் பயின்றுவரும் சாத்தங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் உள்ள சமையல் கூடத்தின் பழுதடைந்த தரைதளம் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் முற்றிலும் சிமெண்ட் தளமாக மாற்றி 25-12-2018 அன்று பணிகள் முடிக்கப்பட்டன.

[2020 ஜனவரி 9

37—

சிறார் வன்கொடுமையைத் தடுத்தல்

வினா எண் 46200—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிறார் வன்கொடுமையை தடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

2005 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாணையமானது சிறார்கள் மீதான வன்முறையின்மீது உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரை செய்கிறது. ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் சிறார் மீதான வன்முறை புகார்கள் மீது தானாக முன்வந்து விசாரணை மற்றும் உரிய நடவடிக்கை மேற்கொள்கிறது. மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் சிறார்கள் மீதான வன்முறைகள் ஏதும் நிகழாத வண்ணம் பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி சிறார்கள் மீதான வன்முறையினை தவிர்ப்பதற்கு ஆவன செய்கிறது. சிறார்கள் மீதான வன்முறைகளைத் தவிர்க்கும்பொருட்டு அரசு/அரசு சாரா நிறுவனங்களின் அலுவலர்களுக்கு குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தை பாதுகாப்பு தொடர்பான புத்தாக்க பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. குழந்தைகளின் வன்முறை மற்றும் குழந்தைகளின் உரிமைகளை மறுக்கும் செயல் சார்ந்தவைகளைத் தவிர்க்கும்பொருட்டு, குழந்தை நலன் சார்ந்த கொள்கைகளை வடிவமைக்கிறது. மேலும், மாநில அரசு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வட்டார மற்றும் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்களில் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான கருத்துகள் விவாதிக்கப்படுகின்றன. இக்குழுக்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கி சிறார் வன்முறை நிகழாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 ஜனவரி 9]

38—

மாசுக் கட்டுப்பாடு

வினா எண் 44481—திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி பழையபாளையம் கிராமத்தில் உள்ள ONGC *நிறுவனத்தில் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாட்டிற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்து தெரிவிக்க அரசு ஆவன செய்யுமா ?*

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

பழையபாளையத்தில் இயங்கிவரும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கிணறுகளிலிருந்து வரும் கலவை சேகரிக்கப்பட்டு, அவற்றிலிருந்து இயற்கை எரிவாயு மட்டும் தனியாக பிரித்தெடுக்கப்பட்டு, அவற்றினை தகுந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்ல குழாய் வசதி இல்லாததால் தற்சமயம் 18 மீட்டர் உயரத்திற்குள்ளாகவே எரிக்கப்படுகிறது. மீதமுள்ள நீருடன் உள்ள கச்சா எண்ணெய் தி/ள் எண்ணெய் மற்றும் எரிவாயுக் கழகத்தின் நாகப்பட்டினம் தாலுகா, நரிமணத்தில் உள்ள செயலாக்க வசதிக்கு லாரிகள்மூலம் அனுப்பப்பட்டு நீரும், கச்சா எண்ணெயும் தனித்தனியாக பிரித்தெடுக்கப்படுகிறது. பிரித்தெடுக்கப்படும் நீரானது நரிமணத்தில் அமைந்துள்ள வளமில்லா எரிவாயு கிணறுகளில் உள் செலுத்தப்படுகிறது. இம்முறையால் எவ்வித நீர் மற்றும் காற்று மாசு ஏற்பட காரணிகள் இல்லை.

39—

நச்சு புகையினை கட்டுப்படுத்துதல்

வினா எண் 46285—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, புழல் ஒன்றியம், கிராண்ட்லைன் கிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள வி.ஆர். பிரதர்ஸ் (எ) ரோஹினி பிளாஸ்டிக்

கம்பெனியிலிருந்து வெளியேறும் நச்சு புகையினை கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

மாதவரம் சட்டமன்ற தொகுதி, புழல் ஒன்றியம், கிருஷ்ணா நகர் பகுதியில் இயங்கிவரும் வி.ஆர். பிரதர்ஸ் (எ) ரோஹினி பிரியா டிரேடர்ஸ் பிளாஸ்டிக் கம்பெனி மீது மாதவரம் சட்டமன்ற உறுப்பினர்மூலம் பெறப்பட்ட புகார் தொடர்பாக இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (க), சென்னை அவர்கள் தலைமையில் 24-9-2018 அன்று கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் அந்நிறுவனத்தின் செயல்பாடுகளை நிறுத்தவும் மற்றும் வேறு இடத்திற்கு மாற்றவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன. இதன்படி இந்நிறுவனம் 10-12-2018 நாளிட்ட தனது கடிதத்தில் 10-1-2019 முதல் தங்கள் தொழிற்சாலையின் இயக்கத்தை நிரந்தரமாக மூடுவதாக தெரிவித்துள்ளது. தற்போது 31-5-2019 ஆய்வின்போது இந்நிறுவனம் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது.

40—

அமுதம் அங்காடி துவக்குதல்

வினா எண் 24195—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சி, சேதுராயர் தெருவில் புதியதாக அமுதம் அங்காடி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சிக்குட்பட்ட முழு நேர நியாயவிலைக் கடை எண் 19FP060PY, 635 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு

2020 ஜனவரி 9]

வருகிறது. இந்த நியாயவிலைக் கடையில், புதிய நியாயவிலைக் கடை அமைக்கக் கோரப்படும் சேதுராயர் தெரு பகுதியைச் சேர்ந்த 185 குடும்ப அட்டைகளும் அடங்கும். தற்போதுள்ள விதிமுறைகளின்படி, புதிய நியாயவிலைக் கடை அமைக்க இருக்க வேண்டிய குறைந்தபட்ச குடும்ப அட்டைகள் குறித்த நிபந்தனை பூர்த்தியாகாததன் காரணமாக ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சி, சேதுராயர் தெருவில் புதியதாக நியாயவிலைக் கடை அமைக்க தற்போது வழிவகையில்லை.

41—

அமுதம் அங்காடி கட்டடம் சீரமைத்தல்

வினா எண் 33970—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், அசூர் ஊராட்சியில் உள்ள அமுதம் அங்காடி கட்டடத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அசூரில் உள்ள முழு நேர நியாயவிலைக் கடை எண் 19DD049PN அமைந்துள்ள கட்டடம், கடந்த 2005-2006 ஆம் நிதியாண்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் கட்டப்பட்டு, நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, இவ்வினா எழ வாய்ப்பில்லை.

42—

நியாயவிலைக் கடைக்கு கட்டடம்

வினா எண் 37672—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, குளப்புறம் ஊராட்சி, கீழதோட்டம் பகுதியில் உள்ள அரசு நிலத்தில் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், குளப்புறம் ஊராட்சிக்குட்பட்ட நல்லதங்காடு பகுதிநேர நியாயவிலைக் கடை எண் 28DA032P1, 494 *குடும்ப அட்டைகளுடன் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. குளப்புறம் ஊராட்சி, பிராகோடு பகுதியில் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வந்த குளப்புறம் அமுதம் நியாயவிலைக் கடையானது சுமார் 5 வருடங்களுக்கு முன் அடைக்காகுழி ஊராட்சிக்குட்பட்ட வண்டிக்காரவிளை பகுதியில் அரசு கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, தற்போது 1,285 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. குளப்புறம் ஊராட்சியில், கீழத்தோட்டம் பகுதியில் புதிய நியாயவிலைக் கடை அமைக்கக் கோரியுள்ள இடம் கால்வாய் புறம்போக்கு நிலமாகும். தற்போதுள்ள அரசு விதிகளின்படி நீர்நிலை புறம்போக்கில் அரசு கட்டடம் கட்டுவதற்கு வழிவகையில்லை.*

43—

அமுதம் நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 45155—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாண்டி ஊராட்சி, சென்னை சாலை, ஆட்டோ நகரில் அமைந்துள்ள அமுதம் நியாயவிலைக் கடைக்கு மருதமுத்து நகரில் உள்ள ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாண்டி ஊராட்சியில், பெரும்பாண்டி-1 முழு நேர நியாயவிலைக் கடை எண் 19DD074PN *கூட்டுறவுத் துறையின்கீழ், 918 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய நியாயவிலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ள இடம், பொதுப் பயன்பாட்டின்கீழ் பூங்கா அமைத்திட ஒதுக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைக்கு கட்டடம் அமைக்கக் கோரியுள்ள மருதமுத்து நகரில் தற்போது 200 குடும்ப அட்டைதாரர்கள் வசித்து வருகின்றனர். தற்போது நியாயவிலைக் கடை அமைந்துள்ள இடத்திற்கும், நியாயவிலைக் கடைக்கு கட்டடம் அமைக்கக் கோரியுள்ள இடத்திற்கும் இடையே உள்ள தூரம் அரை கிலோ மீட்டருக்கும் குறைவாகவே உள்ளது. குடும்ப அட்டைதாரர்கள் வசிக்கும் பகுதியின் அருகிலேயே நியாயவிலைக் கடை அமைக்கப்பட்டு, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எவ்வித சிரமமுமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மருதமுத்து நகரில் உள்ள ஊராட்சிக்கு சொந்தமான இடம் கிடைக்கப் பெறாததால், அவ்விடத்தில் முழு நேர நியாயவிலைக் கடை எண்* 19DD074PN-*க்கு புதிய கட்டடம் கட்ட வழிவகையில்லை.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

44—

கூடுதலாக சாக்குகள் இருப்பில் வைத்தல்

வினா எண் 46141—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலுள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் கூடுதலாக சாக்குகள் இருப்பில் வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் மண்டலங்களில் நேரடி நெல் கொள்முதல் செய்யும்போது, ஒவ்வொரு நெல் கொள்முதல் நிலையத்திலும் எவ்வளவு நெல் கொள்முதல் செய்ய ஏதுவாகும் என உத்தேசமாக அறிந்து, அந்த அளவிற்கான சாக்குகளை அந்த நெல் கொள்முதல் நிலையங்களில் இருப்பு வைத்தும், நெல் கொள்முதல் செய்யப்படும்போது சாக்குகள் பற்றாக்குறை ஏற்படாவண்ணம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறும், விவசாயிகள் நலன் கருதியும், நெல் கொள்முதலுக்கு தேவையான சாக்குகளை கிடங்கிலிருந்து நெல் கொள்முதல் நிலையங்களுக்கு இயக்கம் செய்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு கும்பகோணம் நெல் கொள்முதல் நிலையத்தில் எவ்வளவு நெல் கொள்முதல் செய்ய ஏதுவாகும் என உத்தேசித்து அந்த அளவிற்கு ஏற்றவாறு சாக்குகள் கொள்முதல் செய்யப்பட்டு இருப்பு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) புதிய சாக்குகள் தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

45—

நியாயவிலைக் கடையில் பொருட்களை சீராக வழங்குதல்

வினா எண் 46440—திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சைதாப்பேட்டை தொகுதி, 139-வது வட்டத்தில் உள்ள ஜாபர்கான்பேட்டை, ராகவன் தெருவில் உள்ள நியாயவிலைக் கடையில் பொருட்களை சீராக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

சைதாப்பேட்டை தொகுதி, 139-வது வட்டத்தில் ஜாபர்கான்பேட்டை, ராகவன் தெருவில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின்கீழ், நியாயவிலைக் கடை எண் 02LC059SC *மற்றும் நியாயவிலைக் கடை எண்* 02LC086SC *ஆகிய இரண்டு நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. மேற்கூறிய இரு நியாயவிலைக் கடைகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்யப்பட்டு, எவ்வித புகாருக்கும் இடமின்றி குடும்ப அட்டைதாரர்களுக்கு சீரான முறையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*

46—

உலர் தீவன விற்பனை மையம் அமைத்தல்

வினா எண் 47396—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் (தெற்கு) தொகுதியில் கால்நடை உலர் தீவன விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பருவ மழை பொய்த்து வறட்சி நிலவும் காலங்களில் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் தீவன தட்டுப்பாடுஏற்படும்நிலையில்வறட்சிபாதித்தமாவட்டங்களையோ அல்லது மாநிலம் முழுமையுமோ வறட்சி பாதித்ததாக அரசு அறிவிக்கும்பட்சத்தில் அரசின் அனுமதி பெற்று தமிழகம் முழுவதும் உள்ள பாதிக்கப்பட்ட இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின்மூலம் உலர் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு

பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு உலர் தீவனங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்போது உலர் தீவனக் கிடங்குகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

47—

கோழி வளர்ப்போருக்கு மானியம்

வினா எண் 47567—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் கோழி வளர்ப்போர்க்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

2018-2019 ஆம் நிதி ஆண்டில் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும்விதமாக சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் 77,000 கிராமப்புற ஏழைப் பெண் பயனாளிகளுக்கு, தலா ஒரு பயனாளிக்கு 50 "விலையில்லா" நான்கு வார வயதுடைய அசில் இன நாட்டுக் கோழிகள் 100% மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில், குறைந்த உள்ளீடு தொழில்நுட்ப கோழிகள் வாங்கவும், அதற்கான கொட்டகைகள் அமைக்கவும் தலா 200 பயனாளிகள் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு பயனாளிக்கும் 400 எண்ணம் 4 வார கோழிக் குஞ்சுகள் 2 தொகுப்புகளாக (2 Batches*) ஒன்றரை வருட இடைவெளியில் வளர்க்க 100% மானியம் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுமையான கோழி உற்பத்தித் திட்டத்தில் கறிக்கோழிகள் வாங்கவும், கொட்டகைகள் நிறுவவும் திருவண்ணாமலை மாவட்டத்தில் 200 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு பயனாளிக்கும் மொத்தம் 600 எண்ணம் கோழிக் குஞ்சுகள் வீதம் வாங்கவும், கொட்டகை அமைக்கவும் 100% மானியம் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

2020 ஜனவரி 9]

48—

நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி

வினா எண் 50355—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, அருந்ததிபாளையம் கிராமத்தில் நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில், 7 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடை மருத்துவ கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. எனவே, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி அருந்ததிபாளையம் கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

பெண் மருத்துவர்கள் தங்கும் விடுதி

வினா எண் 6801—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, அரசு கண் மருத்துவமனையில் முதுகலை பட்டப் படிப்பு படிக்கும் பெண் மருத்துவர்கள் தங்கும் விடுதியை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2020 ஜனவரி 9

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை எழும்பூர், அரசு கண் மருத்துவமனையில் 72 எண்ணிக்கையில் முதுகலை பட்டப் படிப்பு இடங்கள் உள்ளன. இதில் 9 எண்ணிக்கையில் முதுகலை பட்டப் படிப்பு படிக்கும் ஆண் மருத்துவர்களும், 61 எண்ணிக்கையில் முதுகலை பட்டப் படிப்பு படிக்கும் பெண் மருத்துவர்களும் உள்ளனர். 2 முதுகலை பட்டப் படிப்பு காலியிடமாக உள்ளது. முதுகலை பட்டப் படிப்பு படிக்கும் பெண் மருத்துவர்கள் மருத்துவமனையின் புதிய கட்டடத்தின் முதல் மாடியில் உள்ள அறைகளில் தங்கி பயின்று வருகின்றனர். எனவே, சென்னை அரசு கண் மருத்துவமனையின் பெண் மருத்துவர்கள் தங்கும் விடுதியை புதுப்பிக்க அவசியம் தற்போது எழவில்லை.

50—

அமரர் அறைக்கு குளிர்சாதன வசதி

வினா எண் 8073—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் அரசு மருத்துவமனையில் அமரர் அறைக்கு குளிர்சாதன வசதி செய்யவும், மருந்துகளை வைக்க குளிர்சாதன பெட்டி வழங்கவும், மருத்துவர்கள் அறையை புதுப்பிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மருந்துகளை வைப்பதற்கு குளிர்சாதன பெட்டி வசதியுள்ளது. மேலும், இந்த நிதியாண்டில் ரூபாய் 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு

2020 ஜனவரி 9]

செய்யப்பட்டு மருத்துவர்களின் அறை உட்பட கட்டடப் பழுதுகள் சரி செய்யப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 2 முதல் 4 பிரேதங்கள் மட்டுமே பரிசோதனைக்கு வருவதால் உடனுக்குடன் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு, உரிய நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. எனவே, அமரர் அறைக்கு குளிர்சாதன வசதி செய்ய தற்சமயம் அவசியம் எழவில்லை.

51—

மண் பரிசோதனை

வினா எண் 45103—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், காரை, சின்னபொன்னம்பூண்டி, பாதன்தாங்கல் மற்றும் ஆலம்பூண்டி ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	*25,401*	*25,401*	*1,35,000*
2016-2017	*66,211*	*66,211*	*4,53,631*
2017-2018	*35,720*	*35,720*	*2,89,539*

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண்மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

52—

மண் பரிசோதனை

வினா எண் 45107—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கடப்பனந்தல் கன்னலம், கப்பாம்பாடி மற்றும் கரடிக்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன:-

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண்மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

53—

மண் பரிசோதனை

வினா எண் 45111—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், பணயந்தாங்கல், பெருவளூர், பெரியநொளம்பை மற்றும் சங்கிலிக்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

2020 ஜனவரி 9]

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	*25,401*	*25,401*	*1,35,000*
2016-2017	*66,211*	*66,211*	*4,53,631*
2017-2018	*35,720*	*35,720*	*2,89,539*

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண்மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

54—

மண் பரிசோதனை

வினா எண் 45119—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், குந்தலம்பட்டு, மரக்கோணம், மானந்தல், மேலருங்குணம் மற்றும் மேல்மலையனூர் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	**25,401**	**25,401**	**1,35,000**
2016-2017	**66,211**	**66,211**	**4,53,631**
2017-2018	**35,720**	**35,720**	**2,89,539**

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

2020 ஜனவரி 9]

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

55—

மண் பரிசோதனை

வினா எண் 45124—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி, வடபாலை, வடவெட்டி, வடுகப்பூண்டி, மேலச்சேரி மற்றும் மேல்புதுப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015—2016	25,401	25,401	1,35,000
2016—2017	66,211	66,211	4,53,631
2017—2018	35,720	35,720	2,89,539

நடப்பு 2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

56—

மண் பரிசோதனை

வினா எண் 45130—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், மேல்நெமிலி, மேல்செவலாம்பாடி, நாரணமங்கலம், நொச்சலூர் மற்றும் பருதிபுரம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட

2020 ஜனவரி 9]

சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	***25,401***	***25,401***	***1,35,000***
2016-2017	***66,211***	***66,211***	***4,53,631***
2017-2018	***35,720***	***35,720***	***2,89,539***

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

57—

மண் பரிசோதனை

வினா எண் 45135—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், தாண்டவசமுத்திரம், பரையம்பட்டு மற்றும் தச்சம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன:

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2020 ஜனவரி 9]

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

58—

மண் பரிசோதனை செய்ய மண்வள அட்டை

வினா எண் 46163—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதியில் மண் பரிசோதனை செய்ய மண்வள அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை இயக்கம், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் 2015-2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இரு வருட சுழற்சியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, (2015-2016 முதல் 2016-2017 வரை) தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 2,89,742 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இதன் இரண்டாம் கட்டமாக, 2017-2018 முதல் 2018-2019 ஆம் ஆண்டு காலத்தில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,46,205 மண்வள அட்டைகளும், 2018-2019 ஆம் வருடத்தில் 1,38,334 மண்வள

அட்டைகளும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2017-2018 ஆம் ஆண்டில் 1,46,205 மண்வள அட்டைகளும், 2018-2019 ஆம் ஆண்டில் இதுவரை, 1,32,384 மண்வள அட்டைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் வட்டாரத்தில், 2017-2018 ஆம் ஆண்டில் 9250 மண்வள அட்டைகளும், 2018-2019 ஆம் ஆண்டில் 7883 மண்வள அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

59—

திருப்பூர் குமரனுக்கு சிலை

வினா எண் 54325—திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் குமரனுக்கு சென்னையின் மையப் பகுதியில் சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் இரயில் நிலையம் எதிரில் சுதந்திர போராட்டத் தியாகி திருப்பூர் குமரன் அவர்களுக்கு நினைவகம் அமைக்கப்பட்டு அன்னாரின் சிலை அந்நினைவகத்தில் நிறுவப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுவரும் நிலையிலும், திருப்பூர் குமரனின் பிறந்த நாள், அரசு விழாவாக கொண்டாடப்பட்டுவரும் நிலையிலும், சென்னையின் மையப் பகுதியில் திருப்பூர் குமரனுக்கு சிலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

60—

கிராம நிருவாக அலுவலகம்

வினா எண் 9681—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல்*

2020 ஜனவரி 9]

தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, உள்ளகரத்தில் தனியாக கிராம நிருவாக அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், உள்ளகரம் மற்றும் மடிப்பாக்கம்-2 ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து மடிப்பாக்கம் 2-ல் உள்ளடக்கிய சுண்ணாம்பு கொளத்தூர் என்ற இடத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, தனியே கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

உதவித்தொகை

வினா எண் 22401—திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவொற்றியூர் தொகுதியிலுள்ள முதியவர்கள், விதவைகள், மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உதவித்தொகையை விரைந்து வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டத்தில், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தற்போது வரை 9,428 பயனாளிகள் உதவித்தொகை பெற்று வருகின்றனர். அதில், 9,128 பயனாளிகளுக்கு வங்கி முகவர்கள்மூலம் பணம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 80 வயதிற்கு மேற்பட்ட உதவித்தொகை பெறும் 300 பயனாளிகளுக்கு

தபால் துறைமூலம் நேரடியாக பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. கடந்த 6 மாத காலத்தில் 811 பயனாளிகளுக்கு புதியதாக ஓய்வூதியம் வழங்க ஆணை வழங்கப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

மேலும், ஏற்கெனவே உதவித்தொகை பெற்று இடையில் நிறுத்தம் செய்யப்பட்ட 371 பயனாளிகளிடமிருந்து உரிய ஆவணங்கள் பெற்று அவர்களுக்கு மீண்டும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. புதிய உதவித்தொகை கோரி வரப்பெறும் மனுக்கள் அனைத்தும் பெறப்பட்ட உடன் உரிய மேல் நடவடிக்கைக்காக வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டு, உரிய விசாரணைக்குப் பின் தகுதியான பயனாளிகளுக்கு தாமதம் ஏதுமின்றி விரைந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

62—

உதவித்தொகையை விரைந்து வழங்குதல்

வினா எண் 32321—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்தில் விதவை உதவித்தொகையினை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி மற்றும் வட்டத்தில், அரசு விதிகளுக்கு உட்பட்டு விதவை உதவித்தொகை ரூ.1000/- வழங்கப்பட்டு வருகிறது. இந்திரா காந்தி தேசிய விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ் பொதுப்பிரிவில் 2,507 பெண்களும் மற்றும் சிறப்புப் பிரிவில் 136 பெண்களும், மொத்தம் 2643 பெண்கள் உதவித்தொகை பெற்று வருகின்றனர். விதவை உதவித்தொகை திட்டத்தின்கீழ் பொதுப் பிரிவில் 1,648 பெண்களும் மற்றும் சிறப்புப் பிரிவில் 583 பெண்களும் உதவித்தொகை பெற்று வருகின்றனர்.

மேலும், விதவை உதவித்தொகை வேண்டி பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள், கும்பகோணம்

2020 ஜனவரி 9]

வட்ட அலுவலகத்தில் பெறப்படும் மனுக்கள் மற்றும் அம்மா திட்டம், மக்கள் நேர்காணல் முகாம்களில் பெறப்படும் மனுக்கள் ஆகியவை தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. அதிக தகுதியான மனுக்கள் வரப்பெறின் அரசுக்கு பணப்பயன்கள் கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, பணப்பயன்கள் பெற வழிவகை செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறே, இவ்வினத்தில், சிறப்பினமாக கும்பகோணம் தொகுதி மற்றும் வட்டத்தில் இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை திட்டங்களின்கீழ் முறையே பொதுப் பிரிவில் 5 நபர்களுக்கும், சிறப்புப் பிரிவில் 2 நபர்களுக்கும், ஆக கூடுதல் 7 நபர்களுக்கும் மற்றும் சிறப்புப் பிரிவில் 2 நபர்களுக்கும் நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, நிதி ஒதுக்கீடு வரப்பெற்று 1-2-2019 முதல் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

63—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 40167—திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டிவனம் தொகுதி, வருவாய் குறு வட்டங்களில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, வருவாய் குறு வட்டங்களில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

[2020 ஜனவரி 9

64—

காத்திருப்போர் அறை, பொது சுகாதார வளாகம், சுற்றுச்சுவர்

வினா எண் 42298—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு காத்திருப்போர் அறை, பொது சுகாதார வளாகம் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் காத்திருப்போர் அறை, பொது சுகாதார வளாகம் மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

65—

நில அளவையர் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு

வினா எண் 47533—திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் யு.புளியம்பட்டி, அரசூர் மற்றும் முத்தியாலத்தூர் ஆகிய உள்வட்ட நில அளவையர் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 358, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (நி.அ.2(2)) துறை, நாள் 26-9-2018-ன்படி, 2018-2019 ஆம் ஆண்டில் 100 குறு வட்டங்களில் குறுவட்ட அளவருக்கான குடியிருப்புடன்கூடிய அலுவலகம் கட்டுவதற்கு, ஒரு கட்டடத்திற்கு ரூ.17,26,000/- வீதம் ரூ.17.26 கோடிக்கு நிருவாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்க ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரசூர் மற்றும் பவானிசாகர் ஆகிய இரு இடங்களில் குறுவட்ட அளவருக்கான குடியிருப்புடன்கூடிய அலுவலகம் கட்டுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

66—

அலுவலர்களுக்கு குடியிருப்புகள்

வினா எண் 49765—திருமதி ப. சத்யா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 343, வருவாய்த் துறை, நாள் 30-1-2017-ன்படி பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில், வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்ட ரூ.23.81 இலட்சம் மதிப்பீட்டில், 89.80 சதுர மீட்டர் (966.60 சதுர அடி) பரப்பளவில் பொதுப் பணித் துறையால் கட்டடம் கட்டப்பட்டு, வருவாய்த் துறை வசம் 18-2-2019 அன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

67—

மானியத்துடன் தொழில் கடன்

வினா எண் 52203—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு மானியத்துடன்கூடிய தொழில் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும்வண்ணம் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின்மூலம் செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாட்டில் படித்த வேலையில்லாத இளைஞர்கள் தொழில் தொடங்க, அனைத்து மாவட்டத் தொழில் மையங்களின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கீழ்க்காணும் திட்டங்களின்மூலம் மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் பெற்று தொழில் தொடங்க தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

- *வயது 18 முதல் 45 வரை*
- *கல்வித் தகுதி: குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்*
- *திட்ட மதிப்பீடு: வியாபார நிறுவனம் துவங்க – 5 இலட்சம் ரூபாய் வரை, சேவை நிறுவனம் துவங்க-5 இலட்சம் ரூபாய் வரை மற்றும் உற்பத்தி நிறுவனம் துவங்க-10 இலட்சம் ரூபாய் வரை (மானியம் திட்ட மதிப்பில் 25%) அதிகபட்ச மானியம் ரூ.1.25 இலட்சம் வரை.*

2020 ஜனவரி 9]

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் கடந்த 2011-2012 முதல் 2018-2019 வரை 37,880 *பயனாளிகளுக்கு ரூ.18,698.14 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.*

*2. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (*NEEDS*)*

- *வயது 21 முதல் 35 வரை (பொது பிரிவு)*
- *21 வயது முதல் 45 வரை (சிறப்பு பிரிவு மற்றும் பெண்கள்)*
- *கல்வித் தகுதி: 1) முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருத்தல் வேண்டும்.*

*2) பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழில்நுட்ப பயிற்சி (ஐடிஐ) தொழில் பயிற்சி (*Vocational Training*) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.*

- *திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் முதல் ரூ.5 கோடி வரை. திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25% தனிநபர் முதலீட்டு மானியம் (ரூ.30 இலட்சத்திற்கு மிகாமல்) வங்கி கடனுக்கான வட்டியில் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியம். இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் கடந்த 2012-2013 முதல் 2018-2019 வரை 2967 பயனாளிகளுக்கு ரூ.305.49 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.*

*3. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (*PMEGP*) (மத்திய அரசு திட்டம்)*

- *வயது 18 முதல் உச்ச வரம்பு இல்லை.*
- *கல்வித் தகுதி: 8 ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தேர்ச்சி பெறாதவர்களும்*

திட்ட மதிப்பீடு: *சேவைத் தொழில்களுக்கு 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்-ரூ.10 இலட்சம் வரை, கல்வி பெறாதவர்கள்-ரூ.5 இலட்சம் வரை, உற்பத்தி தொழில்களுக்கு-8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்-ரூ.25 இலட்சம் வரை, கல்வி பெறாதவர்கள்-ரூ.10 இலட்சம் வரை.*

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தில் கடந்த 2011-2012 முதல் 2018-2019 வரை 12,320 பயனாளிகளுக்கு ரூ.26,678.39 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதர மானிய திட்டங்கள்:

மேலும், நேரடி வங்கிக் கடன் அல்லது சுயமுதலீட்டில் தொடங்கப்படும் உற்பத்தி குறுந்தொழில்களுக்கு ஏற்கெனவே அரசு அறிவித்துள்ள கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்.

- *முதலீட்டு மானியம் (25 விழுக்காடு)*
- *குறைந்தழுத்த மின் மானியம் (20 விழுக்காடு முதல் மூன்று ஆண்டுகளுக்கு)*
- *மின்னாக்கி மானியம் (25 விழுக்காடு)*

மேற்கண்ட மானியங்கள் புதிய தொழில் தொடங்கிய பின்னர் பெறலாம்.

இவ்வாறாக, தமிழகத்தில் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் பெற்று தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

68—

மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு

வினா எண் 35873—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வேட்டைகாரன்புதூர் வருவாய் கிராமம், பழைய சர்க்கார்பதி மற்றும் சேத்துமடை, தம்மம்பதி பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி II, IV *மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு*

2020 ஜனவரி 9]

வாரியம் ஆகியவற்றின் தேர்வுகளுக்கு 2018 ஆம் ஆண்டு வால்பாறையில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, இதில் 115 வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். பொள்ளாச்சி மற்றும் வால்பாறை ஆகிய பகுதிகளில் 4-5-2018 மற்றும் 6-7-2019 ஆகிய தேதிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்காகதனியார்துறைசிறப்புவேலைவாய்ப்புமுகாம்கள் நடைபெற்றன. இதில் 87 வேலையளிப்போர் பங்கேற்றனர். முகாமில் கலந்துகொண்ட 1146 மனுதாரர்களில், 449 மனுதாரர்கள் தனியார் துறையில் பணி நியமனம் பெற்றுள்ளனர். மேலும், ஆனைமலையில் 25-9-2018 அன்று திறன் பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 8 திறன் பயிற்சி அளிப்போர் பங்கேற்றனர். முகாமில் கலந்து கொண்ட 109 மனுதாரர்களில், 91 நபர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், வால்பாறை தொகுதி, பொள்ளாச்சி வட்டம், வேட்டைகாரன்புதூர் வருவாய் கிராமம், பழைய சர்க்கார்பதி மற்றும் சேத்துமடை, தம்மம்பதி பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் வேலைவாய்ப்பினை பெற உதவும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு/ வழிகாட்டும் மையம் ஆகியவற்றின் மூலமும் பல்வேறு நடவடிக்கைகள் அரசளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

69—

தொழிற்கல்வி பயிற்சி மையம்

வினா எண் 37469—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காஞ்சிபுரம் தொகுதியில் படித்த பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தொழிற்கல்வி பயிற்சி மையம் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டில் செயல்பட்டு வரும் 1 அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 20 தனியார் தொழிற்பயிற்சி

நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 4361 இருக்கைகளில், மொத்தம் 1642 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இக்காலியிடங்களில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி, பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் 9 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான 318 இருக்கைகளில் 236 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 82 இருக்கைகளும் அடங்கும். இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், காஞ்சிபுரம் தொகுதியில் புதியதாக அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

70—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 39710—திரு. பி. முருகன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி கிராமத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒசூரில் செயல்பட்டு வரும் 1 அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் இம்மாவட்டத்தில் 6 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 1786 இருக்கைகளில், மொத்தம் 699 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ், மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 64 இடங்களில் 47 இருக்கைகள்

2020 ஜனவரி 9]

பூர்த்தி செய்யப்பட்டு, 17 காலியிடங்கள் உள்ளன. இவ்விடங்களே இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளதால், வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி கிராமத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

71—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 42985—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் (ITI) துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 5554 இருக்கைகளில், மொத்தம் 2050 இருக்கைகள் நிரப்பப்படாமல்கா லியாக உள்ளன. இக்காலியிடங்களில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படும் இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 56 இருக்கைகளில் 40 இருக்கைகள் நிரப்பப்பட்டு, காலியாக உள்ள 16 இருக்கைகளும் அடங்கும். இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

72—

தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதிகள்

வினா எண் 49745—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், மதுராந்தகத்தில் வெளியூர் தொழிலாளர்கள் தங்கி பணிபுரிய தங்கும் விடுதிகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 12-8-2014 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்படி,

1. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள தையூர்-B கிராமத்தில் 1000 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கும் வகையில் தங்கும் விடுதிகள் (Dormitories) கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 5-4-2018 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2. காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், கண்டிகை முதல் பாலூரர் சாலை, மதுவந்தாங்கல், எழிச்சூர் கிராமத்தில் 1000 கட்டுமானத் தொழிலாளர்கள் தங்கும் வகையில் தங்கும் விடுதிகள் (Dormitories) கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 4-3-2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மதுராந்தகம், எழுச்சூர் மற்றும் தையூர் கிராமங்களில் கட்டப்பட்டுள்ள துயில் கூடங்களுக்கு அருகில் இருப்பதால் மதுராந்தகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களும் தங்கி கொள்ளலாம். எனவே, மதுராந்தகத்தில் புதியதாக தங்கும் விடுதிகள் கட்டுவது தொடர்பான தேவை எழவில்லை.

2020 ஜனவரி 9]

73—

ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்தை தடுத்து நிறுத்திடல்

வினா எண் 51604—திரு. செ. சண்முகையா: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கம் செய்து வரும் பணியினை தடுத்து நிறுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தூத்துக்குடியில் உள்ள வேதாந்தா லிமிடெட், ஸ்டெர்லைட் காப்பர் பிளாண்ட், காப்பர் உருக்கும் ஆலை, 1996 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு, தற்போது ஆண்டொன்றிற்கு 4 இலட்சம் டன் காப்பர் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இத்தொழிற்சாலையில் காப்பர் தகடுகள் மற்றும் காப்பர் கம்பிகள் தயாரிக்கப்பட்டு வந்தது. ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேஷியாவில் இந்நிறுவனத்திற்கு சொந்தமாக உள்ள காப்பர் சுரங்கத்திலிருந்து காப்பர் தாது கப்பல் மூலமாக தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டு, சாலை வழியாக தொழிற்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தது.

இத்தொழிற்சாலையில் 862 கம்பெனி தொழிலாளர்களும், சுமார் 3500 ஒப்பந்தத் தொழிலாளர்களும் பணிபுரிந்து வந்தனர்.

தொழிற்சாலை நிருவாகம் கூடுதலாக 4 இலட்சம் டன் காப்பர் உற்பத்தி விரிவாக்கப் பணிகளை 2017 ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யத் துவங்கியதை எதிர்த்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தூத்துக்குடி பகுதி பொதுமக்கள், 2018 மார்ச் மாதம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஸ்டெர்லைட் காப்பர் பிளாண்ட் தொழிற்சாலையின் உற்பத்தியை முற்றிலுமாக தடை செய்து அரசாணை எண் 72, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 28-5-2018 மூலம் தொழிற்சாலையை மூட ஆணையிட்டது.

தொழிற்சாலையில் உற்பத்தி பணி ஏதும் மேற்கொள்ளாமல் மூடப்பட்டதை தொடர்ந்து மேற்படி தொழிற்சாலையினை மீண்டும்

தொடர்ந்து இயக்க வேண்டும் என நிருவாகம் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடர்ந்த வழக்கில் தேசிய பசுமை தீர்ப்பாயம் தொழிற்சாலையினை மீண்டும் தொடர்ந்து இயக்க வேண்டும் என்று வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதன்மீது வழங்கப்பட்ட தீர்ப்பில் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்பிற்கு தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்போது நிருவாகத்தின் தரப்பில் ஆலையினை திறக்க அனுமதி கோரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்க பணியினை தடுத்து நிறுத்த இவ்வியக்ககத்தால் நடவடிக்கை எடுக்க சட்டத்தில் வழிவகை இல்லை.

74—

தெருச்சுமை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை

வினா எண் 52405—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலும், வெளி மாநிலங்களிலும் வியாபாரம் செய்வதற்காக செல்லும் தெருச்சுமை வியாபாரிகளுக்கு தமிழக அரசு சார்பாக அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982 ஆம் ஆண்டின்கீழ் இணைக்கப்பட்ட தொழில் இனங்களில் தெருச்சுமை வியாபாரிகளும் அடங்கியுள்ளதால் அவர்களுக்கென தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற

2020 ஜனவரி 9]

பெயரில் தனியாக நல வாரியம் 29-1-2010 அன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட தெருச்சுமை வியாபாரிகள் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

75—

தெருச்சுமை வியாபாரிகளுக்கு நல வாரியம்

வினா எண் 52406—திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தெரு (தலை) சுமை சிறு வியாபாரிகளுக்கு தமிழக அரசின் சார்பாக தனி நல வாரியம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982 ஆம் ஆண்டின்கீழ் இணைக்கப்பட்ட தொழில் இனங்களில் தெருச் சுமை வியாபாரிகளும் அடங்கியுள்ளதால் அவர்களுக்கென தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் 29-1-2010 அன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட தெருச்சுமை வியாபாரிகள் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விபத்து மரணம், விபத்து ஊனம், இயற்கை மரணம், ஈமச்சடங்கு, திருமணம், மகப்பேறு, கல்வி, கண் கண்ணாடி மற்றும் ஓய்வூதியம் ஆகிய நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 31-7-2019 வரை 9,27,445 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 6,29,215 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவித்தொகையாக ரூ.185,02,13,484/- வழங்கப்பட்டுள்ளது.

76—

சிற்றுந்து வசதி

வினா எண் 20774—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு சிற்றுந்து வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதியில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனையிலிருந்து 20 நகரப் பேருந்துகளும், ஊத்துக்கோட்டை பணிமனையிலிருந்து 25 நகரப் பேருந்துகளும் திருவள்ளூர் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு தேவையான நடைகள் (Trip) *பொதுமக்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருவதால், சிற்றுந்தின் பயன்பாடு எழாது.*

77—

பேருந்துகளில் தானியங்கி கதவுகள்

வினா எண் 47229—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு பேருந்துகளில் தானியங்கி கதவுகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் தற்போது இயக்கப்பட்டுள்ள புதிய பேருந்துகள் அனைத்திலும்

CMVR மற்றும் ARAI Bus Body Code AIS:052-ன்படி பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஏறும் வழி மற்றும் இறங்கும் வழியில் தானியங்கி கதவு பொருத்தப்பட்டு இயக்கப்படுகிறது. மேலும், தற்போது புதியதாக வடிவமைக்கப்பட்டு கட்டப்படும் புதிய பேருந்துகளிலும் மேற்கூறிய குறியீடின்படி தானியங்கி கதவுகள் பொருத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

78—

பேருந்து நேரத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 48020—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஒன்றியம், நயப்பாக்கம் கிராமத்திற்கு இயக்கப்படும் பேருந்து நேரத்தை மாற்றி 8-00 மணிக்கு வந்து 8-30 மணிக்கு செல்லும் வகையில் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, நயப்பாக்கம் கிராமத்திற்கு இயக்கப்படும் பேருந்து தடம் எண் T17G காலை 8-00 மணிக்கு வந்து 8-30 மணிக்கு செல்லும்படி மாற்றி இயக்கப்படுகிறது.

79—

பேருந்துகளை இயக்குதல்

வினா எண் 48026—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் தொகுதி, பேரம்பாக்கத்திலிருந்து இயங்கிக் கொண்டிருந்த தடம் எண் 591, 591B, 583 ஆகிய பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகர போக்குவரத்து கழக தடம் எண் 591-ல் 2 பேருந்துகள் பேரம்பாக்கத்திலிருந்து பூந்தமல்லிக்கு பயணிகள் நலன் கருதி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநகர போக்குவரத்துக் கழக தடம் எண் 153P-ல் 2 பேருந்துகளை பேரம்பாக்கத்திலிருந்து சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு பயணிகள் நலன் கருதி இயக்கப்படுகின்றன.

தடம் எண் 591B-ல் ஒரு பேருந்து வடபழனியிலிருந்து பேரம்பாக்கம் வரை ஏற்கெனவே மாநகர போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டது. இப்பேருந்தில் பயணிகளின் பயன்பாடு குறைவாக இருந்ததால் இவ்வழித்தட பேருந்து கடந்த 10-5-2018 அன்று முதல் இயக்கத்திலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. பயணிகள் அதிக அளவில் பயன்பெறும்வகையில், தடம் எண் 591-ல் 2 பேருந்துகள் அதிக பயண நடைகளுடன் இயக்கும்பொருட்டு, பூந்தமல்லி—பேரம்பாக்கம் இடையே தற்போது மாநகர போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

தடம் எண் 583-ல் 20 பேருந்துகள் தாம்பரத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை பயணிகள் பயன்பாட்டிற்கு ஏற்ப மாநகர போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

80—

பேருந்து இயக்குதல்

வினா எண் 49283—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி-வேலூர் தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், திடுமல் ஊராட்சி, திடுமல் நகப்பாளையத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருச்செங்கோடு பேருந்து நிலையத்திலிருந்து திடுமல் வழியாக வேலூர் வரை ஒரு புறநகர் பேருந்துமூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகிறது. தடம் எண் 5A நகரப் பேருந்துமூலம் திருச்செங்கோட்டிலிருந்து திடுமல் வழியாக நகப்பாளையம் வரை தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

81—

பேருந்து இயக்குதல்

வினா எண் 49284—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பரமத்தி-வேலூர் தொகுதி, எலச்சிபாளையம் ஒன்றியம், இளநகர் ஊராட்சி, கட்டிப்பாளையத்தில் அரசு பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

நாமக்கல்-ஈரோடு வழித்தடத்தில் இயக்கப்படும் அனைத்து புறநகர் பேருந்துகளும் கட்டிப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்கின்றன. மேலும், அவ்வழித்தட அனைத்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும் கட்டிப்பாளையம் பேருந்து நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றி இறக்கி செல்ல, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

82—

பேருந்து இயக்குதல்

வினா எண் 49285—திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2020 ஜனவரி 9

பரமத்தி-வேலூர் தொகுதி, எலச்சிபாளையம் ஒன்றியம், மானத்தி ஊராட்சி, மானத்தியில் உள்ள செலமகவுண்டம் பாளையத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

செலமகவுண்டம்பாளையம், மானத்தி அருகில் உள்ள காட்டுப்பாளையம் முக்கு ரோட்டிலிருந்து சுமார் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நாமக்கல்-2 கிளையை சார்ந்த தடம் எண் 11C *என்ற நகரப் பேருந்துமூலம் நாமக்கல்லிலிருந்து மானத்தி, காட்டுப்பாளையம் வழியாக கந்தம்பாளையம் வரை தினசரி 4 நடைகளும், தடம் எண்* V5 *என்ற நகரப் பேருந்துமூலம் வேலூரிலிருந்து காட்டுப்பாளையம், மானத்தி வழியாக வேலகவுண்டம்பட்டி வரை தினசரி 10 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பேருந்தை வழித்தடம் மாற்றி செலமகவுண்டம்பாளையத்திற்கு இயக்கினால், இப்பேருந்தினால் ஏற்கெனவே பயனடைந்து வரும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிப்படைவார்கள். எனவே, தற்போது இயக்கப்படும் இயக்கங்களே போதுமானதாக கருதப்படுகிறது. மேலும், தற்போது செலமகவுண்டம்பாளையத்திற்கு பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

83—

பேருந்து நிறுத்தம்

வினா எண் 49686—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மன்னார்சமுத்திரம் ஊராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக சினிமா கொட்டகை அருகே பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மன்னார்சமுத்திரம் சினிமா கொட்டகை அருகே உள்ள பேருந்து நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் மண்டல பேருந்துகள்மூலம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் பள்ளி மாணவ/மாணவிகளை ஏற்றி, இறக்கி செல்கின்றன. மேலும், ஓட்டுநர், நடத்துநருக்கு சுற்றறிக்கை வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

84—

பேருந்து இயக்குதல்

வினா எண் 49838—திருமதி ப. சத்யா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், கடலூர் மண்டலம், பண்ருட்டி பணிமனையிலிருந்து ஆனத்தூர், ஏரிப்பாளையம் கிராமங்களுக்கு இயக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி பணிமனைமூலம் ஆனத்தூர், ஏரிப்பாளையம் கிராமங்களுக்கு இயக்கப்பட்ட நகர தடங்கள் தடம் எண் T10, T13, T15 மீண்டும் ஆனத்தூர், ஏரிப்பாளையம் வழியாக 1-4-2019 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

85—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 50710—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, முனியன்தாங்கள் கிராமத்திற்கு புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி, முனியன்தாங்கள் கிராமத்திற்கு போதிய பேருந்து வசதி உள்ளது. மதுராந்தகம்-எலப்பாக்கம் வழித்தடத்தில் மாத்தூரிலிருந்து முனியன்தாங்கள் சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மதுராந்தகத்திலிருந்து எலப்பாக்கத்திற்கு, மொறப்பாக்கம், கூடலூர், முனியந்தாங்கள், மாத்தூர், அகலி வழியாக 1 நகரப் பேருந்துமூலம் தினசரி 4 நடைகளும், பயணிகளின் பயன்பாடு 50 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளபோதிலும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தேவைக்காக இயக்கப்படுகிறது.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T13	நகரம்	மதுராந்தகம்-எலப்பாக்கம்	மொறப்பாக்கம்-முனியன்தாங்கள்-மாத்தூர்-அகலி-அச்சரப்பாக்கம்-திருமுக்காடு	4	40.11

2020 ஜனவரி 9]

எனவே, தற்போது இயக்கப்படும் இவ்வியக்கங்களே போதுமானதெனக் கருதப்படுகிறது.

86—

திருக்கோயில்களுக்கு காவலர் நியமனம்

வினா எண் 32433—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், சோழபுரம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு பைரவர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு காவலரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், சோழபுரம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு பைரவேஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் மெய்க்காவலர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். இம்மெய்க்காவலரே பகல்நேர காவலராகவும் பணியாற்றி வருகிறார். மேலும், திருக்கோயில் பாதுகாப்பு படைமூலம் இரவுக் காவலராக இராணுவ வீரர் ஒருவர் பணிபுரிந்து வருகிறார்.

87—

திருக்கோயில் குளங்களை தூர்வாருதல்

வினா எண் 33887—திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

துறைமுகம் தொகுதி, 56-வது வட்டம், லிங்கி தெருவில் உள்ள அருள்மிகு மல்லிகேஸ்வரர் திருக்கோயில் குளம் மற்றும் பவளக்காரர் தெரு, கிருஷ்ணன்கோயில் குளம் ஆகிய குளங்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

சென்னை, லிங்கி செட்டித் தெரு, அருள்மிகு மல்லிகேஸ்வரர் திருக்கோயில் மற்றும் சென்னை, பவளக்கார தெரு அருள்மிகு வேணுகோபால கிருட்டிணசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் திருக்குளங்கள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

88—

காலிப்பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 41686—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை பதவி உயர்வு, அயற் பணியில் பிற துறைகளிலிருந்து பணியமர்த்துதல் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய நேரடி நியமனம் ஆகியவற்றின்மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

89—

திருக்கோயில் குளம் தூர்வாருதல்

வினா எண் 44494—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்தில் உள்ள அருள்மிகு வீரராகவர் பெருமாள் கோயில் குளத்தினை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்தில் அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயில் எனும் பெயரில் திருக்கோயில் ஏதும் இல்லை. மேலும், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்தில் ஆதிவராகப் பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான வராக குளம் 2014-2015 ஆம் ஆண்டு தன்னிறைவு திட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை நிதி, திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் உபய நிதி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பொது நல நிதிமூலம் முழுமையாக சீரமைக்கப்பட்டு, தற்போது திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது.

90—

திருக்கோயிலுக்கு மலைப் பாதை

வினா எண் 47412—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் கரியபெருமாள்கரடு மேலே உள்ள அருள்மிகு ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு மலைப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், நெத்திமேடு, கரியபெருமாள்கரடு மேலே உள்ள அருள்மிகு

ஞானதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லை. எனவே, மலைப் பாதை அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது. உபயதாரர்கள் எவரேனும் நிதியுதவி அளிக்க முன்வரும்பட்சத்தில் மலைப் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

திருக்கோயிலுக்கு திருமண மண்டபம்

வினா எண் 47416—திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், கோட்டை அருள்மிகு அழகிரிநாத சுவாமி திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம் மற்றும் நகர், கோட்டை அருள்மிகு அழகிரிநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக டி.எஸ். எண் 7, 8 மற்றும் 16-ல் முறையே 3306, 2439 மற்றும் 3236 சதுர அடி நிலம் உள்ளது. மேற்படி இடத்தில் திருக்கோயிலுக்கு வருகை புரியும் பக்தர்களுக்கு குளியலறை, கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டும் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடமாகவும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. போதிய இட வசதியின்மையால் இத்திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

திருக்கோயிலுக்கு திருமண மண்டபம்

வினா எண் 47610—திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வக்கோட்டை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, தெம்மாவூரில் உள்ள

2020 ஜனவரி 9]

அருள்மிகு மாரியம்மன் கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தொகுதி, குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், தெம்மாவூர் ஊராட்சி, தெம்மாவூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமாக நன்செய் நிலங்கள் 20.26 ஏக்கரும், புன்செய் நிலங்கள் 27.40 ஏக்கர் நிலங்களும் உள்ளன. ஆனால், மேற்படி நிலங்களில் விளைச்சல் எதுவும் இல்லாததால் வரவினங்கள் மற்றும் தேவையான நிதி வசதியும் இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட இயலாத நிலை உள்ளது.

93—

விடுதியை மேம்படுத்துதல்

வினா எண் 18359—திரு. அ. பிரபு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், தியாகதுருகம் பேரூராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதியில் எரிவாயு உருளை, மோட்டார் பம்பு வசதிகளுடன், விடுதியின் முன்புறம் சிமெண்ட் தரை தளம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி மட்டுமே செயல்பட்டு வருகிறது.

இவ்விடுதிக்கு எரிவாயு உருளை, மோட்டார் பம்பு வசதி, விடுதியின் முன்புறம் சிமெண்ட் தரை தளம் அமைப்பது போன்ற பணிகளுககு 2018-2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

94—

விடுதியை மேம்படுத்துதல்

வினா எண் 28792—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி நுழைவாயிலில் இரும்பு கதவு, ஜன்னல் அமைக்கவும், தரைப் பகுதியில் டைல்ஸ் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி நுழைவாயிலில் இரும்பு கதவு, ஜன்னல் மற்றும் தரைப் பகுதியில் டைல்ஸ் அமைப்பது போன்ற பணிகளுக்கு 2018-2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

95—

மின் இணைப்பு பழுதுபார்த்தல்

வினா எண் 28796—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டை மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்

2020 ஜனவரி 9]

விடுதியில் மின் இணைப்பை பழுது பார்க்கவும், மாடியில் கிரில் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டை மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு மாடியில் கிரில் அமைப்பது மற்றும் இதர பராமரிப்புப் பணிகளுக்கு 2018-2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டன.

96—

சுற்றுச்சுவர் உயரத்தை அதிகரித்தல்

வினா எண் 28798—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் சுற்றுச்சுவரின் உயரத்தை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சியில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதியின் சுற்றுச்சுவரை உயர்த்த 2018-2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணி முடிக்கப்பட்டுள்ளது.

97—

விடுதியை மேம்படுத்துதல்

வினா எண் 28800—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதியில் புதிய ஆழ்துளை கிணறு, மின் மோட்டார் அமைக்கவும், மின் இணைப்புகளை பழுது பார்க்கவும், தரைப் பகுதியில் டைல்ஸ் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதியில் புதிய ஆழ்துளை கிணறு, மின் மோட்டார் அமைப்பது மற்றும் தரைப் பகுதியில் டைல்ஸ் அமைப்பது ஆகிய பணிகளுக்கு 2018-2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

98—

விடுதிகளில் நூலகம்

வினா எண் 36553—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பள்ளி/கல்லூரி விடுதிகளில் பயிலும் மாணவ/மாணவியரின் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளிலும் தேவைக்கேற்ப நூலகங்கள் செயல்பட்டு வருவதால் தனியாக பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளில் நூலகங்கள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

99—

விடுதிகளுக்கு சுற்றுச்சுவர்

வினா எண் 40900—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதிக்குட்பட்ட அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டவும், குடிநீர் வசதி செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இத்துறையின் விடுதிகள் ஏதும் இயங்கவில்லை. எனவே, இவ்வினா எழாது.

100—

மாணவியர் விடுதிக்கு குடிநீர் வசதி

வினா எண் 47238—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் சீர்மரபினர் மாணவியர் விடுதிக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதியின் ஆழ்துளை கிணறு பழுதுபார்க்கப்பட்டு, மாணவியருக்கு போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

பட்டியல் 2

1—

வீடு வழங்குதல்

வினா எண் 33388—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் வீடு இல்லாமல் வாழும் மக்கள் 31-12-2016 வரை எத்தனைபேர் உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு வீடு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாட்டில் 31-3-2018 வரை நகரப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்கள் மற்றும் ஏழை குடும்பங்களுக்கான வீட்டு வசதி தேவை 13.92 இலட்சம் என கண்டறியப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள நகரப் பகுதிகளை குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த அனைத்து குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கும் வீட்டு வசதி வழங்க தொலைநோக்குத் திட்டம் 2023-ன்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 13.92 இலட்சம் குடும்பங்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள்/தனி வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு முதற்கட்டமாக 5.01 இலட்சம் குடியிருப்புகள்/வீடுகள் கட்ட மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

2—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 49628—திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் வட்டம், துலுக்கன்பட்டி கிராமத்தில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் நகர்ப்புற பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.

3—

மாற்றுப் பாதை

வினா எண் 4615—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மலைப் பகுதியிலிருந்து சமவெளிப் பகுதிக்கு வர மாற்றுப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியிலிருந்து சமவெளிப் பகுதிக்கு வரும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு, நல்ல நிலையில் உள்ளது. வால்பாறை பகுதியானது புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட உள்மண்டலப் பகுதியாகும். எனவே, தேசிய புலிகள் பாதுகாப்பு அமைப்பின் வழிகாட்டுதலின்படி கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மலைப் பகுதியிலிருந்து சமவெளிப் பகுதிக்கு வர மாற்றுப் பாதை அமைக்க வழிவகை எதுவும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2020 ஜனவரி 9]

4—

நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டல்

வினா எண் 39027—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறைக்குச் சொந்தமான வன நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர்மூலம் மாதந்தோறும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதனடிப்படையில், ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளரால் விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வன நில ஆக்கிரமிப்புகள் தொடர்பாக மொத்தம் 49 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. வழக்குகளில் தீர்ப்பாணை கிடைக்கப்பெற்றபின் அதனடிப்படையில், ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நீதிமன்ற வழக்குகளில் இல்லாத இதர ஆக்கிரமிப்புகளை அகற்ற விதிமுறைகளுக்குட்பட்டு வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5—

குரங்குகளைப் பிடித்தல்

வினா எண் 47305—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருபுவனம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள குரங்குகளைப் பிடித்து வனப் பகுதிக்குள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, திருபுவனம் மற்றும் சோழாபுரம் பகுதிகளிலுள்ள குரங்குகளைப் பிடித்து அடர்ந்த வனப் பகுதிகளில் பாதுகாப்பாக விடப்பட்டன.

6—

மரக்கன்றுகள் நடுதல்

வினா எண் 47330—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை பகுதியில் கஜா புயலால் வீழ்ந்த மரங்களுக்கு மாற்றாக வனத் துறையால் புதிய மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கஜா புயலால் பாதிக்கப்பட்ட பட்டுக்கோட்டை பகுதியில் மரக்கன்றுகள் நட வனத் துறைமூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் கோட்டம், பட்டுக்கோட்டையில் தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ், 2018-2019 ஆம் ஆண்டில் பட்டுக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட பகுதியில் 1,00,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

7—

தேக்கு மரங்களை ஏலம் விடுதல்

வினா எண் 47331—திரு. C.V. சேகர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் வளர்க்கப்பட்ட தேக்கு மரங்களை அதே இடத்தில் இருப்பு வைத்து பின்னர் ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை வனச் சரகத்திற்குட்பட்ட பகுதியில் தேக்கு மரங்களைப் பாதுகாக்க அரசு மத்திய மரக் கிடங்கு ஏதும் இல்லை. எனவே, அப்பகுதிகளில் வளர்க்கப்பட்ட தேக்கு மரங்கள் தஞ்சாவூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட மத்திய மரக் கிடங்கில் வைத்து பாதுகாக்கப்பட்டு பொது ஏலம் விடப்பட்டு வருகின்றது.

8—

படகு வசதி, லைப் ஜாக்கெட் வழங்குதல்

வினா எண் 39066—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆந்திர மாநிலம், இருக்கம் தீவிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், சுண்ணாம்புகுளம் மற்றும் ஆரப்பாளையம் பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு மேற்கூரையுடன்கூடிய படகு வசதியும், லைப் ஜாக்கெட்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆந்திர மாநிலம், இருக்கம் தீவிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி கல்வி மாவட்டத்திற்குட்பட்ட கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திலுள்ள கடற்கரையை ஒட்டியுள்ள சுண்ணாம்புகுளம், ஒபசமுத்திரம் மற்றும் ஆரம்பாக்கம் தொடக்க, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயில்வதற்கு

படகுமூலம் பள்ளிக்கு வருகைதரும் 138 மாணவர்களுக்கான லைப் ஜாக்கெட்களை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் கொள்முதல் செய்யப்பட்டு, படகு வசதியுடன் லைப் ஜாக்கெட்கள் வழங்கப்பட்டுள்ளன.

9—

மருத்துவ பரிசோதனை

வினா எண் 44499—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வருடத்திற்கு இருமுறை மருத்துவ பரிசோதனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறைமூலம் (Rashtriya Bal Swasthya Karyakram (RBSK)) *திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குச் சென்று உடல் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, தேவையின் அடிப்படையில் ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கையின்மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.*

10—

கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்

வினா எண் 47420—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஜாரி கொண்டலாம் பட்டியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 770 மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 35 வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் மாணவிகளுக்குப் பயன்படும் வகையில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், பள்ளிக்கு முழுமையான சுற்றுச் சுவர் உள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அரசுப் பள்ளியைத் தேர்வு செய்து அனைத்து கட்டமைப்பு வசதிகள் உடைய முன்மாதிரிப் பள்ளியாக உருவாக்க அறிவிப்பினை வெளியிட்டதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 222, பள்ளிக் கல்வித் (அகஇ1) துறை, நாள் 24-10-2018-ன்படி இப்பள்ளிக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன கட்டமைப்பு வசதிகளை உடைய மாதிரி பள்ளியாக இப்பள்ளியை உருவாக்க தெரிவு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளியில் மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகள் உள்ளமையால் கூடுதலாக வகுப்பறைகள், கட்டடங்கள் கட்ட அவசியம் எழவில்லை.

11—

நியாய விலைக் கடையை மாற்றியமைத்தல்

வினா எண் 19380—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) எழும்பூர் தொகுதி, 76-வது வட்டம், குட்பட்பள்ளம் நியாய விலைக் கடை (எண் MB 015)-யை 78-வது வார்டில் உள்ள சச்சிதானந்தா தெருவில் மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 76-வது வட்டம், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கட்டுப்பாட்டில் குட்பட்பள்ளம் நியாய விலைக் கடை 692 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையானது 76-வது வார்டு குட்பட்பள்ளம், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கி வருகிறது. இடம் மாற்றம் செய்ய வேண்டி கோரிய இடம் 78-வது வார்டு, சச்சிதானந்தா 2-வது தெரு சூளையாகும். இதனை நேரில் சென்று ஆய்வு செய்தபோது இக்கட்டடத்தில் ஏற்கெனவே, சென்னை மாநகராட்சி மருந்தகம் இருந்து செயல்படாமல் கட்டடம் பாழடைந்த நிலையில் உள்ளது. மேலும், மாற்றம் செய்யக் கோரும் இடம் உதவி ஆணையர், ஆயிரம் விளக்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியாகும். எனவே, மேற்படி நியாய விலைக் கடையினை வேறு ஒரு உதவி ஆணையர் மண்டலப் பகுதிக்கு மாற்றம் செய்ய அரசு விதிகளில் இடமில்லை. எனவே, குட்பட்பள்ளம் நியாய விலைக் கடையை (MB 015) 78-வது வார்டில் உள்ள சச்சிதானந்தா தெருவிற்கு மாற்றியமைக்க வாய்ப்பில்லை.

12—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 29357—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், எய்யில் மற்றும் அவலூர்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எய்யில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம்மூலம் நிதியுதவி பெற்று சுற்றுச் சுவர் கட்டப்படும்.

2020 ஜனவரி 9]

மேல்வைலாமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்பெறும் அவலூர்பேட்டை நியாய விலைக் கடை, சுற்றுச் சுவருடன்கூடிய மேல்வைலாமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க வளாகத்திலேயே செயல்பட்டு வருவதால், நியாய விலைக் கடை கட்டடத்திற்கு தனியே சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 29359—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், எதப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேல்வைலாமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்பெறும் எதப்பட்டு நியாய விலைக் கடைக்கு போதிய இட வசதி இல்லாத காரணத்தால் சுற்றுச் சுவர் கட்ட சாத்தியக்கூறு இல்லை.

14—

குறுகிய காலக் கடன்

வினா எண் 43180—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, கோணை, பெருவளூர், கணக்கன்குப்பம், மழவந்தாங்கல், ஆலம்பூண்டி மற்றும் தேவதானம்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின்மூலம் விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் செயல் எல்லைக்குட்பட்ட செஞ்சி தொகுதியைச் சேர்ந்த கோணை, பெருவளூர், கணக்கன்குப்பம், மழவந்தாங்கல், ஆலம்பூண்டி மற்றும் தேவதானம்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின்மூலம் விவசாயிகளுக்கு குறுகிய கால பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இச்சங்கத்தின்மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் (பொது+நகை) வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்	தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம்	2013-2014	2014-2015	2015-2016	2016-2017	2017-2018	மொத்தம்
1.	கோணை	293.01	294.74	351.09	197.71	357.36	1493.91
2.	பெருவளூர்	161.76	204.58	209.62	157.75	317.09	1050.80
3.	கணக்கன்குப்பம்	308.66	333.71	329.87	188.03	292.94	1453.21
4.	மழவந்தாங்கல்	102.54	115.80	159.33	78.97	154.24	610.88
5.	ஆலம்பூண்டி	260.74	284.21	294.55	143.19	322.46	1305.15
6.	தேவதானம்பேட்டை	153.14	156.61	175.73	82.09	148.25	715.82

விவசாயிகள் பயிர்க் கடன் கோரும்போதெல்லாம் தகுதியான விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

15—

நீண்ட காலக் கடன்

வினா எண் 43203—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) செஞ்சி தொகுதி, ஆலம்பூண்டி, வடபாலை, கலத்தம்பட்டு, தென்புதுப்பட்டு, சாத்தம்பாடி, அனந்தபுரம், வளத்தி மற்றும் கீழ்மலை ஆகிய பகுதிகளிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின்மூலம் நீண்ட காலக் கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில், குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பில், கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும், மாவட்ட அளவில் மத்திய கூட்டுறவு வங்கிகளும், மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு நிறுவனங்கள் 5 ஆண்டுகள் தவணைக் காலம் வரை உள்ள பயிர்க் கடன், மத்திய கால முதலீட்டுக் கடன் மற்றும் பண்ணைசாரா கடன்களை வழக்கமாக வழங்கி வருகின்றன.

விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கியின் செயல் எல்லைக்குட்பட்ட செஞ்சி தொகுதியில் ஆலம்பூண்டி, வடபாலை, கலத்தம்பட்டு, தென்புதுப்பட்டு, சாத்தம்பாடி, அனந்தபுரம், வளத்தி மற்றும் கீழ்மலை ஆகிய பகுதிகளை செயல் எல்லைகளாகக் கொண்டு செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் குறுகிய காலக்கடன், மத்திய கால முதலீட்டுக்கடன், பண்ணைசாரா கடன்களை வழங்கி வருகின்றன. இச்சங்கங்கள்மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்க வழிவகை இல்லை.

16—

நியாய விலைக் கடைக்கு கட்டடம்

வினா எண் 46311—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, மண்டலம் II, வார்டு 19, சின்னமாத்தூர் பகுதியில் செயல்பட்டுவரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, மண்டலம் II, வார்டு 19, வடசென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில் செயல்படும் சின்னமாத்தூர் பகுதியிலுள்ள மணலி-6 முழுநேர நியாய விலைக் கடை 1,210 குடும்ப அட்டைகளுடன் மகளிர் சுய உதவிக் குழுவிற்காக கட்டப்பட்ட கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. எனவே, சின்னமாத்தூர் பகுதியிலுள்ள மணலி-6 முழுநேர நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

நியாய விலைக் கடைக்கு கட்டடம்

வினா எண் 46312—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், ஆலத்தூர் ஊராட்சி, சைதாப்பேட்டை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஆலத்தூர் முழுநேர நியாய விலைக் கடை 613 குடும்ப அட்டைகளுடன் ஆலத்தூர் ஊராட்சிக்கு சொந்தமான மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தில் வாடகை இல்லாமல் இலவசமாக செயல்பட்டு வருவதால், ஆலத்தூர் முழுநேர நியாய விலைக் கடைக்கென தனியாக புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

18—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 48997—திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், நாச்சியார்பட்டி கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், நாச்சியார்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதன் சொந்த நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

19—

சுற்றுச் சுவர், கொட்டகை அமைத்தல்

வினா எண் 49660—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரி நியாய விலைக் கடைக்கு சுற்றுச் சுவர் மற்றும் கொட்டகை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், நடுக்காவேரி ஊராட்சி பகுதியில், நடுக்காவேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் நடுக்காவேரி-1 முழுநேர நியாய விலைக் கடை 742 குடும்ப அட்டைகளுடன் கண்டியூர்-திருக்காட்டுப்பள்ளி சாலையில் உள்ள பேருந்து நிறுத்தத்தின் அருகில், சாலையோரத்தில் கட்டப்பட்டுள்ள அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி நியாய விலைக் கடைக்கு சுற்றுச் சுவர் மற்றும் கொட்டகை அமைத்தால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, நடுக்காவேரி-1 முழுநேர நியாய விலைக் கடைக்கு சுற்றுச் சுவர் மற்றும் கொட்டகை அமைப்பதற்கு அவசியம் எழவில்லை.

[2020 ஜனவரி 9

20—

கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 49679—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், இந்தலூர் ஊராட்சியில் இயங்கிவந்த கூட்டுறவு வங்கியை மீண்டும் இந்தலூரில் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இந்தலூர் கிராமத்தில் இயங்கிவந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாததாலும், தொடர்ந்து 3 ஆண்டுகளாக தொடர் நட்டத்தில் செயல்பட்டு, செயல்பாடின்றி முடங்கியதாலும், பிப்ரவரி 2004 இல் இச்சங்கம் கலைக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் அருகிலுள்ள மாரனேரி கடம்பங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்துடன் இணைக்கப்பட்டு கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

எனவே, இந்தலூர் ஊராட்சியில் இயங்கிவந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தினை புத்துயிரூட்ட வேண்டிய நேர்வு எழவில்லை.

21—

கூட்டுறவு வங்கியை மாற்றியமைத்தல்

வினா எண் 50171—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பன்பேட்டை ஊராட்சியில் இயங்கிவந்த கூட்டுறவு

2020 ஜனவரி 9]

வங்கியை பூதலூர் வங்கியோடு இணைத்துள்ளதை மீண்டும் செல்லப்பன்பேட்டையில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செல்லப்பன்பேட்டையில் இயங்கிவந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை திரும்ப செலுத்த முடியாததாலும், தொடர்ந்து 3 ஆண்டுகளாக செயல்பாடின்றி முடங்கியதாலும், பிப்ரவரி 2004 இல் சங்கம் கலைக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் அருகிலுள்ள பூதலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்துடன் இணைக்கப்பட்டு கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

எனவே, பூதலூர் ஊராட்சி, செல்லப்பன்பேட்டையில் இயங்கிவந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தினை புத்துயிரூட்ட வேண்டிய நேர்வு எழவில்லை.

22—

கூட்டுறவு வங்கியை மீண்டும் இயக்குதல்

வினா எண் 50358—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஒன்றியம், முன்னையம்பட்டி ஊராட்சி, குருவாடிப்பட்டியிலுள்ள கூட்டுறவு வங்கியை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தஞ்சாவூர் ஒன்றியம், முன்னையம்பட்டி

ஊராட்சி, குருவாடிப்பட்டியில் இதற்குமுன் கூட்டுறவு கடன் சங்கம் ஏதும் பதிவு செய்யப்பட்டு செயல்பாட்டில் இல்லை. குருவாடிப்பட்டியை சேர்ந்தவர்கள் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கல்விராயன்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

மேலும், அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006 இல் புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை துவக்க தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில், புதிதாக தொடங்கப்படும் சங்க எல்லைக்குள் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் அல்லது 4,950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். ஆனால், குருவாடிப்பட்டியில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 500 ஹெக்டேர் மட்டுமே உள்ள நிலையில், மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனை பூர்த்தியாகாத காரணத்தினால், முன்னையம்பட்டி ஊராட்சி, குருவாடிப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

23—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 50360—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், முன்னையம்பட்டி ஊராட்சி, குருவாடிப்பட்டியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கல்விராயன்பேட்டை ஊராட்சி, கல்விராயன்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்

2020 ஜனவரி 9]

கட்டுப்பாட்டில் குருவாடிப்பட்டி முழுநேர நியாய விலைக் கடை 638 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. குருவாடிப்பட்டி பகுதியில் ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டுவரும் நிலையில் அங்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

24—

நியாய விலைக் கடையை மீண்டும் இயக்குதல்

வினா எண் 50361—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சி, பருத்திக்குடி, வார்டு எண் 1-ல் இயங்கிவந்த நியாய விலைக் கடையை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் திருவையாறு தொடக்கவேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் திருவையாறு-1 முழுநேர நியாய விலைக் கடை 975 குடும்ப அட்டைகளுடன் பருத்திக்குடி பகுதியில் இருந்த பழைய பள்ளிக்கூட கட்டடத்தில் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. திருவையாறு-1 முழுநேர நியாய விலைக் கடைக்கு திருவையாறு, ஒத்த தெரு பகுதியில் அரசு கட்டடம் கட்டப்பட்டு தற்போது அக்கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில் பருத்திக்குடி கிராமத்தைச் சேர்ந்த 122 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, பருத்திக்குடி, வார்டு எண் 1-ல் பள்ளிக்கூட கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கிவந்த திருவையாறு-1 முழுநேர நியாய விலைக் கடை தற்போது அதற்கென கட்டப்பட்ட அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் மேற்படி நியாய விலைக் கடையை மீண்டும் பருத்திக்குடியில் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2020 ஜனவரி 9

25—

பகுதிநேர நியாய விலைக் கடை

வினா எண் 50365—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஒன்றியம், கல்யாணபுரம் 1-ம் சேத்தி ஊராட்சியில் முகமது பந்தரில் இயங்கும் நியாய விலைக் கடையிலிருந்து சின்னகண்டியூர், மனுநீதிபேட்டை கிராம குடும்ப அட்டைகளை பிரித்து மனுநீதிபேட்டையில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், கல்யாணபுரம்-1-ம் சேத்தி ஊராட்சியில் கல்யாணபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கல்யாணபுரம்-2 முழுநேர நியாய விலைக் கடை 835 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மனுநீதிபேட்டை பகுதியைச் சேர்ந்த 205 (மனுநீதிபேட்டை 85+ சின்னகண்டியூர் 120) குடும்ப அட்டைகளும் இதில் அடங்கும். கல்யாணபுரம்-2 முழுநேர நியாய விலைக் கடைக்கும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மனுநீதிபேட்டை பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. ஆகும். அரசு வழிகாட்டு நெறிகளின்படி, தாய்க் கடைக்கும், உத்தேச பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் இடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் அரசு கட்டடம்/பஞ்சாயத்து கட்டடம் இருக்க வேண்டும். தாய்க் கடைக்கும், புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மனுநீதிபேட்டை பகுதிக்கும் இடையே 1.0 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளது. மேலும், பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் மனுநீதிபேட்டை பகுதியில் அரசு கட்டடம்/ பஞ்சாயத்து கட்டடம் ஏதுமில்லை. எனவே, அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் மனுநீதிபேட்டை பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2020 ஜனவரி 9]

26—

மின்சார உற்பத்தி

வினா எண் 41715—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருமண்டக்குடி தனியார் சர்க்கரை ஆலை 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளில் கரும்பு சக்கையிலிருந்து மின்சாரம் எவ்வளவு உற்பத்தி செய்துள்ளது என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருமண்டக்குடி தனியார் சர்க்கரை ஆலையில் கரும்பு சக்கையிலிருந்து கீழ்க்கண்ட அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:

(1) 2017-2018-3.466 மில்லியன் யூனிட்

(2) 2018-2019 (ஜனவரி 2019 வரை)-7.30 மில்லியன் யூனிட்

27—

மின்னிணைப்பு

வினா எண் 49577—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் ஊராட்சி விவசாயிகள் மின் இணைப்புக்காக நீண்ட காலமாக காத்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு மின் இணைப்பு எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 31-3-2019 அன்றுள்ளபடி, 20,095 விவசாய விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் தேவை மற்றும் உற்பத்தி, நிதிச் சுமை, கட்டமைப்பு இதர நுகர்வோருக்கு மின்னிணைப்பு வழங்குவது, விவசாய மின்னிணைப்பு வழங்க ஆகும் செலவு மற்றும் விவசாய மின் இணைப்பிற்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, புதிய விவசாய மின் இணைப்புகள் அளிக்க அரசிடமிருந்து இலக்கீட்டு அனுமதி கோரப்படுகிறது. அரசால் ஒப்புதல் அளிக்கப்படும் குறியீட்டின் அடிப்படையில் மின் பகிர்மான வட்ட வாரியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் புதிய விவசாய மின் இணைப்புகள் கோட்ட அளவிலான விண்ணப்பப் பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 2018-2019 ஆம் நிதியாண்டில் 893 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

28—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 210—திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளுக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை முழுமையாகச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி, ஓசூர் நகராட்சி (தற்போது மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது) 6 பேரூராட்சிகள்

2020 ஜனவரி 9]

மற்றும் 4,394 ஊரகக் குடியிருப்புகளுக்கு (9 குடியிருப்புகள் தவிர) தற்போது நாளொன்றுக்கு சராசரியாக 69 மில்லியன் லிட்டர் ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த 9 குடியிருப்புகளுக்கு வனப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் அமைக்க உச்ச நீதிமன்ற வழக்கு எண் 202/95-ன்படி வனத் துறையின்மூலம் அனுமதி வழங்க இயலாத காரணத்தால், இத்திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க இயலவில்லை. தற்போது, இந்த 9 குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீர் ஆதாரங்கள்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

29—

பூங்கா

வினா எண் 20478—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவை பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகரில் அம்ருத் திட்டத்தின்கீழ், செந்தில்நாதன் நகர், பூங்கா அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, 31-10-2018 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள பூங்காக்களின் பணிகள் முடிவுற்ற பின்னர் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2020 ஜனவரி 9

30—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அம்மா பூங்கா

வினா எண் 23845—திரு. அ. பிரபு: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சி, கருணாபுரம் ஆதி திராவிட குடியிருப்பு பகுதி பொது கிணறு அருகில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் அம்மா பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சி, வார்டு எண் 9, கருணாபுரம் பகுதி குடியிருப்பு பகுதி பொது கிணற்றுக்கு அருகில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கும், அம்மா பூங்கா அமைப்பதற்கும் பொது கிணற்றுக்கு அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதுமில்லை என்பதால், கள்ளக்குறிச்சி நகராட்சி, வார்டு எண் 9, கருணாபுரம் பகுதி குடியிருப்பு பகுதி பொது கிணற்றுக்கு அருகில் புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கும், அம்மா பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

பூங்கா அமைத்தல் மற்றும் குடிநீர் வழங்குதல்

வினா எண் 32633—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி 13-வது வார்டில் விளையாட்டு பூங்கா அமைக்கவும், குட்டியான் தெருவில் முறையாக குடிநீர் வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி 13-வது வார்டில் விளையாட்டு அரங்கம் அமைக்க போதிய இட வசதி இல்லை. ஆதலால், இப்பகுதியில் விளையாட்டு அரங்கம் அமைக்க இயலாது. தற்பொழுது குட்டியான் தெருவில் தினமும் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

32—

பூங்கா அமைத்தல், பழைய கழிவறை கட்டடம் அகற்றுதல்

வினா எண் 40127—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 38-வது வார்டில் சத்யம் நகரில் பூங்கா அமைக்கும் பணியினை விரைந்து முடித்திடவும் மற்றும் துவரங்குறிச்சியில் பழைய கழிவறை கட்டடத்தினை அகற்றிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி வார்டு எண் 38, சத்யம் நகரில் அம்ரூத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பூங்கா அமைக்கும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. துவரங்குறிச்சியில் பழுதடைந்த பழைய கழிவறை கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது.

33—

பூங்கா அமைத்தல்

வினா எண் 41344—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் கலைநயத்துடன்கூடிய சிலைகளை அமைத்து, நவீன பூங்காவை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான தேப்பெருமாநல்லூர் கரிக்குளம் உரக்கிடங்கு பகுதியில் 20 வருடங்களாக சேகரமாகியிருந்த குப்பைகள் முழுவதும் அகற்றப்பட்டு நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் நவீன பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய விளையாட்டு கருவிகள், கலைநயம்மிக்க சிலைகள், சாலை, கழிவறை போன்ற அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பூங்கா அமைக்க ரூ.548.00 இலட்சத்திற்கு கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு பெற்று நடப்பு ஆண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

34—

பூங்கா பராமரிப்பு

வினா எண் 42992—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பூங்காக்களையும் நவீன முறையில் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நகராட்சி பராமரிப்பில் உள்ள கும்பேஸ்வரன் பூங்கா, காந்தி பூங்கா, குழந்தைகள் நினைவக பூங்கா, ஸ்ரீநகர் காலனி பூங்கா, செந்தில்நாதன் நகர் பூங்கா ஆகியவை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அம்ருத் திட்டத்தின்கீழ் நகராட்சியில் 12 பூங்கா பணிகள் முடிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர தயார் நிலையில் உள்ளன. மற்ற பூங்காக்களை மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

35—

குடிநீர்க் குழாய் இணைப்பு, கழிவு நீர் வாய்க்கால் மற்றும் குளம் சீரமைப்பு

வினா எண் 43012—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி 35-வது வார்டு ராமச்சந்திரபுரம் தெருவில் உள்ள ஓலைப்பட்டிணம் கழிவு நீர் வாய்க்காலை சீரமைத்து இருபுறமும் சிமெண்ட் தரை அமைக்க 8-வது வார்டு புதுத் தெருவில் பொதுக் குடிநீர்க் குழாய் இணைப்பு மற்றும் 13-வது வார்டு குட்டியான் தெருவில் முறையாக குடிநீர் வழங்கிட ஆயிக் குளத்தினை சீரமைக்க, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சியில் கடந்த மகாமகம் 2016-ன்பொழுது நகராட்சி எல்லைக்குள் செல்லும் ஓலைப்பட்டிணம் வாய்க்கால் தூர் வாரப்பட்டு தொடர்ந்து

நகராட்சி பணியாளர்களால் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு நீர் தடையின்றி செல்ல தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கழிவுநீர் செல்லும் வாய்க்காலின் அகலத்தைக் குறைத்து, இரு கரைகளிலும் சிமென்ட் தளம் அமைக்க இயலாது. 18-வது வார்டு புதுத் தெரு மற்றும் 13-வது வார்டு குட்டியான் தெருவில் குடிநீர் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

36—

குளங்கள் தூர்வாருதல்

வினா எண் 44792—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி கும்பகோணம் நகரத்தில் உள்ள சேயிக்குளம், ஆயிக்குளம் சூரிய புஷ்கரணி குளம் மற்றும் சரஸ்வதி பாடசாலைக்கு அருகில் உள்ள குளத்தினை தூர்வாரி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி சேயிக்குளம் மற்றும் சரஸ்வதி பாடசாலைக்கு அருகில் உள்ள பாணாதுறை குளம் ஆகியவை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆயிக்குளம் தூர்வாரப்படுகிறது. சூரிய புஷ்கரணி குளம் இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி குளத்தினை தூர்வாரி சீரமைக்குமாறு இணை இயக்குநர், இந்து சமயம் (ம) அறநிலைய ஆட்சித் துறை, மயிலாடுதுறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

37—

நகராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 46025—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள்*

2020 ஜனவரி 9]

செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி அலுவலகம் அனைத்து அரசு அலுவலகங்களுக்கு அருகில் உள்ளதால் தற்போது உள்ள இடத்திலேயே புதிய நகராட்சி அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கும்பகோணம் நகராட்சியில் தற்போதுள்ள அலுவலக கட்டடம், அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்க போதுமானதாக இல்லாத காரணத்தினால், நகர் மன்ற வார்டு எண் 24, நகராட்சி காமராஜர் ஆய்வு மாளிகை உள்ள இடத்தில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நவீன அலுவலக கட்டடம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் (Infrastructure Gap Filling Fund) *திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நகராட்சி நிருவாக ஆணையரால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 29-5-2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.*

38—

எரிவாயு தகன மேடை அமைத்தல், வாய்க்கால்கள் சீரமைப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல்

வினா எண் 46031—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி எரிவாயு தகன மேடை, வாய்க்கால்கள் சீரமைக்கவும், கடைத்தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி எரிவாயு தகன மேடையினை சீர்செய்து நடைமுறைக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சி பராமரிப்பில் உள்ள அனைத்து வாய்க்கால்களும் கடந்த 2016 ஆம் ஆண்டு மகாமகத்தினை முன்னிட்டு தூர்வாரப்பட்டன. அதனைத் தொடர்ந்து நகராட்சி பணியாளர்களால் வாய்க்கால்களில் நீர் தேங்காவண்ணம் கழிவுகள் தொடர்ச்சியாக அகற்றப்பட்டு வருகின்றன. கடைத்தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன.

39—

பூங்கா சீரமைப்பு

வினா எண் 46938—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி 32-வது வார்டு கும்பேஸ்வரர் கோயில் நகராட்சி பூங்காவை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி 32-வது வார்டு கும்பேஸ்வரன் நகராட்சி பூங்கா நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பூங்காவில் உள்ள சிறு, சிறு பழுதுகளை சீரமைக்கும் பணி வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

40—

மீன் விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 6026—திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொச்சிக்குப்பம், பட்டினப்பாக்கம், டொம்மிங்குப்பம் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு மீன் விற்பனைக்கூடம் (Fish Market) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நொச்சிக்குப்பத்தில் மீன் விற்பனைக்கூடம் அமைக்க, எண்ணூரில் எண்ணெய் கசிவு ஏற்பட காரணமாக இருந்த எண்ணெய் கப்பல் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிலையில் மீன் விற்பனைக் கூடம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வருவதால் அவ்விடத்தில் மீன் விற்பனைக் கூடம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. டொம்மிங்குப்பத்தில் மீன் அங்காடி அமைக்க போதிய இடவசதியின்மையால் மீன் அங்காடி அமைக்க சாத்தியக்கூறு இல்லை. பட்டினப்பாக்கத்தில் தனியார் தொண்டு நிறுவனத்தால் மீன் விற்பனைக் கூடம் அமைக்கப்பட்டுள்ளதால் அரசின்மூலம் மீன் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

வலைகளை பாதுகாக்க கட்டடம்

வினா எண் 37572—திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, 196—வது வட்டம், ஈஞ்சம்பாக்கம் மீனவர்கள் பயன்பெறும் வகையில் வலைகளை பாதுகாக்கவும், உலர வைக்கவும் கடற்கரையோரங்களில் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழிங்கநல்லூர் தொகுதி, 196—வது வட்டம், ஈஞ்சம்பாக்கம் மீனவ கிராமத்தில் கடற்பகுதி மிக குறுகியதாக இருப்பதால், அப்பகுதியில் மீனவர்களின் வலைகளை பாதுகாக்கவும், உலர வைக்கவும் கட்டடம் கட்டுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லாததால், புதியதாக வலைகளை பாதுகாக்கவும், உலர வைக்கவும் கட்டடம் கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

மீன் விற்பனை கூடம் அமைத்தல்

வினா எண் 41768—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர், கலிப்பாக்கம், கூவத்தூர்,கடப்பாக்கம்,எல்லையம்மன்கோயில்,வெண்ணாங்குபட்டு, சூணாம்பேடு, சித்தாமூர், பவுஞ்சூர், திருக்கழுக்குன்றம் ஆகிய பகுதிகளில் மீன் விற்பனை கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் மற்றும் கடப்பாக்கம் பேரூராட்சியில் மட்டும் மீன் விற்பனைக்கூடம்

2020 ஜனவரி 9]

அமைக்கப்பட்டு, தினசரி மீன் விற்பனை நடைபெற்று வருகிறது. திருக்கழுக்குன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் அங்காடியிலிருந்து செய்யூர், கலிப்பாக்கம், கூவத்தூர், கடப்பாக்கம், எல்லையம்மன் கோயில், வெண்ணாங்குபட்டு, சூணாம்பேடு, பவூஞ்சூர் மற்றும் சித்தாமூர் போன்ற பகுதிகள் குறைந்தபட்சம் 10 முதல் அதிகபட்சம் 60 கிலோ மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள பெரும்பாலான பகுதிகள் கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ளதால், இச்சாலையை கடக்கும் நபர்களே மீன் நுகர்வோர்களாக அமைந்துள்ளார்கள். மேலும், இப்பகுதியில் ஒரு நாளைக்கு ஒவ்வொரு வியாபாரியும் 10-15 கிலோ அளவிற்கு சில்லரை வியாபாரமாகவே செய்து வருகிறார்கள். எனவே, தற்போது இப்பகுதிகளில் மீன் அங்காடி அமைத்திட தேவை எழவில்லை.

43—

இறால் மீன்பிடி பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 47570—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சலில் இறால் மீன்பிடி பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம் பறக்கையில் "மீன் வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம்" மற்றும் கணபதிபுரத்தில் "வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையம்" அமைக்கப்பட்டு பிரத்யேக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மீனவர்களுக்கான ஆழ்கடல் தொழில்நுட்பங்களுக்கான பிரத்யேக பயிற்சி மையம் இம்மாவட்டத்திலுள்ள தூத்தூரில் விரைவில் நிறுவப்பட உள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் மீன்பிடி பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

தங்கும் விடுதி அமைத்தல்

வினா எண் 47571—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் தொகுதி, குளச்சல் 2 ஆம் நெம்பர் பகுதியில் ஆழ்கடலில் படகு இயக்குபவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் 2 ஆம் நெம்பர் பகுதியில் ஆழ்கடலில் படகு இயக்குபவர்கள் தங்கிடவும், ஓய்வெடுக்கவும் ஏதுவாக துறைமுக வளாகத்தில் ஏற்கெனவே ஓய்வு அறை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேலும் தங்கும் விடுதி அமைத்திடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 34369—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நடிப்பிசை புலவர் N.P.K.R.R. *ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடன் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

மத்திய அரசு ஆண்டுதோறும், கரும்பிற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையை (Fair and Remunerative Price) *அகில இந்திய*

2020 ஜனவரி 9]

அளவிலும், தமிழ்நாடு அரசு, மாநில அரசு பரிந்துரை விலையையும் (State Advised Price) அறிவித்து வந்தது.

முந்தைய பருவங்களில் இந்திய மற்றும் உலக சந்தையில் சர்க்கரை மற்றும் உபபொருட்களின் விற்பனை விலையில் ஏற்பட்ட சரிவால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்து தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நட்டத்தைச் சந்தித்தன. அதனால், சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு காலத்தே கரும்பு விலையினை வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு நிலுவையாக வைத்துள்ளன.

ந.பு.கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை 2015-2016 பருவம் வரை மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையை விவசாயிகளுக்கு வழங்கி விட்டன. 2014-2015 மற்றும் 2015-2016 அரவைப் பருவங்களுக்கு முறையே ரூ.4.18 கோடி மற்றும் ரூ.3.02 கோடி மாநில அரசு பரிந்துரை விலையை வழங்காமல் நிலுவையாக வைத்துள்ளன. மீதமுள்ள, மாநில அரசு பரிந்துரை விலை நிலுவை ஆலையின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டியவையாகும்.

ந.பு.கே.ஆர்.ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை 2016-2017 பருவம் முதல் கரும்பு அரவைக்கு போதிய அளவு பயிரிடப்படாததால் அரவை மேற்கொள்ளப்படவில்லை.

46—

பொருளாதார இழப்பீடு

வினா எண் 45915—திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் கணினிகளுக்கான இணைப்பு மென்பொருள் (Patches Software) மற்றும் வைரஸ் தடை மென்பொருள் (Antivirus Software) இயக்கத்தில் தடை ஏற்பட்டுள்ளதா எனவும், இதனால் அரசுக்கு அல்லது நிறுவனத்திற்கு பொருளாதார இழப்பீடு ஏற்பட்டுள்ளதா எனவும் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் இத்தகைய கணினிகளுக்கான இணைப்பு மென்பொருள் (Patches Software) *மற்றும் வைரஸ் தடை மென் பொருள்* (Antivirus Software) *இயக்கத்தில் தடைகள் ஏற்படவில்லை. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கோ அல்லது தமிழ்நாடு அரசுக்கோ எவ்விதமான பொருளாதார இழப்பீடும் ஏற்படவில்லை. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த நடைமுறையை கையாளுவதாலும்* (Information Security Management System), *மேலும்* ISO *27001 தரசான்றிதழ் பெற்றுள்ளதாலும், பாதுகாப்பு மேலாண்மை நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு/இயக்கப்பட்டு வருகிறது.*

47—

வைரஸ் தடை மென்பொருள், இணைப்பு மென்பொருள் மேம்பாடு

வினா எண் 45917—திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இயந்திரங்களை இயக்க பொருத்தப்பட்டிருக்கும் வைரஸ் தடை மென்பொருள் (Antivirus Software) *மற்றும் இணைப்பு மென்பொருள்* (Patches Software) *குறிப்பிட்ட கால இடைவெளியில் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறதா எனவும், அவ்வாறெனில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவிக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் இயந்திரங்களை இயக்க பயன்படுத்தப்படும் கண்ட்ரோல் சிஸ்டத்தில் பொருத்தப்பட்டிருக்கும் வைரஸ் தடை மென்பொருள் (Antivirus Software) *மற்றும் இணைப்பு மென்பொருள்* (Patches Software) *போன்றவற்றை குறிப்பிட்ட மூன்று மாத கால இடைவெளியில்,*

2020 ஜனவரி 9]

மூல இயந்திர/உபகரண உற்பத்தியாளர்களே தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டு வருகிறபடியால், தடை மென்பொருள் மற்றும் இணைப்பு மென்பொருள் பாதுகாப்பாக உள்ளன.

48—

நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 46161—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகளிலிருந்து வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு, ஆண்டுதோறும், கரும்பிற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையை (Fair and Remunerative Price) *அகில இந்திய அளவிலும், தமிழ்நாடு அரசு, மாநில அரசு பரிந்துரை விலையையும்* (State Advised Price) *அறிவித்து வந்தது.*

முந்தைய பருவங்களில் இந்திய மற்றும் உலக சந்தையில் சர்க்கரை மற்றும் உபபொருட்களின் விற்பனை விலையில் ஏற்பட்ட சரிவால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்து தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நட்டத்தைச் சந்தித்தன. அதன் காரணமாக சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு காலத்தே கரும்பு விலையினை வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு நிலுவையாக வைத்துள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையினை 2017-2018 பருவம் வரை நிலுவையின்றி விவசாயிகளுக்கு வழங்கி விட்டன. மாநில அரசு பரிந்துரை விலை நிலுவையாக

2015-2016 மற்றும் 2016-2017 பருவங்களில் முறையே ரூ.12.07 கோடி மற்றும் ரூ.11.79 கோடி வழங்கப்பட வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை ஆலையின் நிதி ஆதாரத்தின் அடிப்படையிலும் மற்றும் அரசின் நிதி உதவியினை பயன்படுத்தியும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருமண்டங்குடியில் உள்ள திருஆரூரான் சர்க்கரை ஆலை மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையை கடந்த 2016-2017 மற்றும் 2017-2018 பருவங்களுக்கு முறையே ரூ.6.45 கோடி மற்றும் ரூ. 28.60 கோடி நிலுவையாக வைத்துள்ளன. மேற்கண்ட நிலுவைத் தொகையை விவசாயிகளுக்கு கொடுத்து முடிக்க கரும்பு (கட்டுப்பாடு) ஆணை, 1966-ன்படி வருவாய் வசூல் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். மாவட்ட ஆட்சியரும் வருவாய் மீட்பு சட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இருப்பினும் திருஆரூரான் சர்க்கரை ஆலைக்கு கடன் அளித்துள்ள பாரத மாநில வங்கி தங்கள் கடனை முதலில் அடைக்க வேண்டும் என உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளதால் வருவாய் வசூல் சட்டத்தின்மூலம் நடவடிக்கை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தனியார் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு பரிந்துரை விலை அறிவிப்பதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து 2013-2014 பருவம் முதல் மாநில அரசு பரிந்துரை விலை வழங்காமல் நிலுவை வைத்துள்ளனர். இருப்பினும் அரசு அளவில் தனியார் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு பரிந்துரை விலை வழங்க தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

49—

கழிவு நீர் ஆற்றில் கலப்பதை தடுத்தல்

வினா எண் 38027—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு வட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை குழித்துறை தாமிரபரணி ஆற்றில் கலப்பதை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குழித்துறை அரசு மருத்துவமனையில் கழிவறையில் உருவாகின்ற கழிவுநீர் மருத்துவமனையின் வளாகத்திற்குள் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்படும் செப்டிக் டேங்க் மற்றும் சோக்பிட்டுகள்மூலம் சுத்திகரிக்கப்பட்டு பின்னர் மருத்துவமனை வளாகத்திற்குள் வெளியேற்றப்படுகிறது.

மருத்துவமனையின் குளியல் அறை, சமையல் அறை மற்றும் இதர இடங்களில் உருவாகின்ற கழிவுநீர் கிருமிநாசினிமூலம் சுத்திகரிக்கப்பட்டு, பின்பு மருத்துவமனையின் முன்பாக செல்லும் வாய்க்காலில் கலக்கின்றது.

இக்கழிவுநீர் பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் வெளியேற்றப்பட்டு வருவதாக குழித்துறை அரசு மருத்துவமனை நிருவாகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, குழித்துறை நகராட்சியானது உரிய பாதாள சாக்கடையுடன்கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திடவும், கழிவுநீர் நேரடியாக ஆற்றில் சென்றடையாமல் இருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

50—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 22158—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விளவங்கோடு வட்டம், குழித்துறை அரசு மருத்துவமனையிலிருந்து வெளிவரும் கழிவுநீரை குழித்துறை தாமிரபரணி ஆற்றில் கலப்பதை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படும் நவீன அரிசி ஆலைகளுக்கு 20 முறைப்பணியாளர்கள் ஜனவரி 2019-ல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், 10 முறைப்பொறியாளர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

51—

மின்னணு குடும்ப அட்டையின் உண்மைத்தன்மை

வினா எண் 46667—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதியதாக வழங்கப்பட்டுள்ள மின்னணு குடும்ப அட்டையில் (*Smart Family Card*) முகவரியின் உண்மைத்தன்மைக்கு இது சான்று அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நீக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

தமிழகத்தில் 1-4-2017 முதல் மின்னணு குடும்ப அட்டை நடைமுறையில் உள்ளது. மின்னணு குடும்ப அட்டையின் பின்புறத்தில் "முகவரியின் உண்மைத்தன்மைக்கு இது சான்று அல்ல" என குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் அவரவர் இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள நியாய விலைக் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்க ஏதுவாக முகவரி பெறப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெறுவதற்கு மட்டுமே பயன்படுத்த புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படுகிறது. மாறாக மின்னணு குடும்ப அட்டையை அடையாள அட்டையாக பயன்படுத்த வழிவகையில்லை. எனவே, மின்னணு குடும்ப அட்டையில் முகவரியின் உண்மைத்தன்மைக்கு இது சான்று அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நீக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

52—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 50370—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஒன்றியம், வைத்தியநாதன்பேட்டை, ஆச்சனூர், பனையூர் கடையத்தோப்பு கிராமங்களில் குடும்ப அட்டை வழங்கப்படாதவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஒன்றியத்திற்குட்பட்ட வைத்தியநாதன்பேட்டையில் 304 மின்னணு குடும்ப அட்டைகளும், ஆச்சனூர் பகுதியில் மொத்தம் 476 மின்னணு குடும்ப அட்டைகளும், பனையூர் கடையத்தோப்புப் பகுதியில் மொத்தம் 389 மின்னணு குடும்ப அட்டைகளும் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கோரும் மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. புதிய குடும்ப அட்டை வேண்டுவோர் இணையவழி (www.tnpds.gov.in) *மூலமாக உரிய ஆவணங்கள் மற்றும் ஆதார் விவரங்களை பதிவேற்றம் செய்து விண்ணப்பித்தால், களத் தணிக்கை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில் புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படுகிறது.*

53—

கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 6065—திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பத்மநாபபுரம் தொகுதி, ஆற்றூர், திக்கணம்கோடு, பூவன்கோடு மற்றும் பள்ளியாடி, குளச்சல், ஆப்பிக்கோடு, கீழ்குளம், கிராத்தூர் ஆகிய கால்நடை மருந்தகங்களில் காலியாக உள்ள உதவி கால்நடை மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மண்டலம், பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட ஆற்றூர், திக்கணம்கோடு, பூவன்கோடு மற்றும் பள்ளியாடி, குளச்சல், ஆப்பிக்கோடு, கீழ்குளம், கிராத்தூர் ஆகிய கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் நவம்பர் 2018 முதல் நிரப்பப்பட்டு, தற்போது மேற்படி கால்நடை மருந்தகங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

54—

கால்நடை மருத்துவர் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 13100—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், அனந்தபுரம் மற்றும் செஞ்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் கால்நடை மருத்துவர் காலிப்பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மண்டலம், செஞ்சி கோட்டம், செஞ்சி கால்நடை மருத்துவமனையில் மரு. அ. செந்தில்குமார் 24-4-2017 முதல் பணியாற்றி வருகிறார். அனந்தபுரம் கால்நடை மருந்தகத்தில் கால்நடை உதவி மருத்துவர் மரு. எஸ். தண்டபாணி 5-5-2017 முதல் பணியாற்றி வருகிறார்.

55—

இரவுப் பணிக்கு மருத்துவர்கள் நியமித்தல்

வினா எண் 6856—திரு. சி. ராஜா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, குள்ளம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரவு நேரப் பணிக்கு மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) துணை சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுவது இல்லை. செவிலியர் பணியிடம் மட்டுமே ஒப்பளிப்பு செய்யப்படுகின்றது. எனவே, சேலம் சுகாதாரப் பகுதி, அரசிராமணி பேரூராட்சிக்குட்பட்ட குள்ளம்பட்டி துணை சுகதார நிலையத்திற்கு அரசு விதிகளின்படி மருத்துவர் நியமிக்க இயலாது. இந்த துணை சுகாதார நிலையத்தில் ஒரு கிராம சுகாதார செவிலியர் தங்கி பணிபுரிந்து வருகிறார். இருப்பினும், குள்ளம்பட்டி துணை சுகாதார நிலையம் சார்ந்துள்ள அரசிராமணி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்களில் இரு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அங்கு மகப்பேறு சேவைகளை வழங்கிட 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

56—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 14634—திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரேத பரிசோதனைக்காக மருத்துவர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரேத பரிசோதனை செய்யப்படுவதில்லை. கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 5 மருத்துவ அலுவலர் பணியிடங்களில் 5 மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், மகப்பேறு சேவைகளை வழங்க 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

57—

மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர் நியமனம்

வினா எண் 33061—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி ஊராட்சி, கதவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான மருத்துவர், மருந்தாளுநர், செவிலியர்கள் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, வில்லிவாக்கம் ஒன்றியம், வெள்ளச்சேரி ஊராட்சி, கதவூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2 மருத்துவ அலுவலர் பணியிடமும், 1 மருந்தாளுநர் பணியிடமும், 4 செவிலியர் பணியிடமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அனைத்து பணியாளர்களும் பணியில் உள்ளனர்.

58—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 33975—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

திருவெறும்பூர் தொகுதி, மாநகராட்சி வார்டு எண் 7-ல் அரியமங்கலம் பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமனம் செய்து, மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண் 7-க்கான நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், இ.பி. ரோட்டில் செயல்படுகிறது. அரியமங்கலம் பகுதியில் 1. இ.பி. ரோடு, 2. இருதயபுரம், 3. காட்டூர், 4. திருவெறும்பூர் ஆகிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசு ஆணையின்படி, ஏற்கெனவே 2 மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். எனவே, மேலும் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க அவசியம் எழவில்லை.

50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நியதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றது. மேலும், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு விதிகளின்படி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

59—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 34593—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், புதுக்கடை செங்களஞ்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், புதுக்கடை என்பது துணை சுகாதார நிலையமாகும். புதுக்கடை செங்களஞ்சி என்ற துணை சுகாதார நிலையம் இல்லை மற்றும் புதுக்கடை துணை சுகாதார நிலையம் முனிச்சிரை ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் வரும் துணை சுகாதார நிலையமாகும். அரசு விதிகளின்படி, துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிட ஒப்பளிப்பு இல்லை. கிராம சுகாதார செவிலியர் பணியிடம் மட்டும் ஒன்று உண்டு. அதில், ஒரு கிராம சுகாதார செவிலியர் பணிபுரிந்து வருகிறார். இந்த முனிச்சிரை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு பணியிடத்திலும் தற்சமயம் இரண்டு மருத்துவர்கள் பணியில் உள்ளார்கள். மேலும், மகப்பேறு சேவைகளை வழங்க 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர்.

60—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 35684—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனையில் குழந்தைகள் சிறப்பு மருத்துவர் மற்றும் இதயநோய் சிறப்பு மருத்துவர் ஆகிய பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதியில் உள்ள கும்பகோணம் அரசு மருத்துவமனை 526 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

2020 ஜனவரி 9]

இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,610 வெளிநோயாளிகள், 430 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 398 பிரசவங்களும், 155 சிசேரியன்களும், 362 பெரிய மற்றும் 1,405 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு, 44 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவற்றில், 3 குழந்தைகள் நல மருத்துவர், 3 பொது மருத்துவர், 4 பொது அறுவை சிகிச்சை நிபுணர் உட்பட சிறப்பு மருத்துவர்கள் மற்றும் MBBS பொது மருத்துவர்கள் கொண்டு 36 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அவ்வப்போது ஏற்படும் கலந்தாய்வுகளின்மூலம் மருத்துவர்களின் விருப்புரிமை அடிப்படையிலேயே நிரப்பப்படுகிறது.

இம்மருத்துவமனையில், ஏற்கெனவே 3 குழந்தைகள் நல மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இருதய நோய் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்த அளவிலேயே உள்ளதால், அவர்களுக்குத் தேவையான சிகிச்சை இம்மருத்துவமனையில் உள்ள MD (GM) பொது மருத்துவர்களால் வழங்கப்படுகிறது. மேலும், உயர் சிகிச்சை தேவைப்படுபவர்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

61—

ஆரம்ப சுகாதார நிலையம் தரமுயர்த்துதல்

வினா எண் 35907—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சுரண்டை பேரூராட்சியிலுள்ள அரசு மருத்துவமனையை வட்டம் சாரா (Non Taluk) மருத்துவமனையாக தரமுயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சுரண்டை பேரூராட்சியில் அரசு மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. சுரண்டை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே செயல்படுகிறது. மேற்காணும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் வீரகேளம்புதூர் அரசு வட்ட மருத்துவமனையும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ஆயக்குடி அரசு வட்டம் சாரா மருத்துவமனையும் மற்றும் 12 கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையும் 377 படுக்கை வசதிகளுடன், பல்வேறு பிரிவுகளுடன் மற்றும் வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, சுரண்டை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டம் சாரா (Non Taluk) அரசு மருத்துவமனையாக தரமுயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

62—

மகப்பேறு மருத்துவர் நியமித்தல்

வினா எண் 36568—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மகப்பேறு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் தற்போது 3 பெண் மருத்துவர்கள் பணியில் உள்ளனர். இவர்களைக்

2020 ஜனவரி 9]

கொண்டு மகப்பேறு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு மருத்துவம் பார்க்கப்படுகிறது. மேலும், செங்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து 8 கி.மீ.-ல் தென்காசி மாவட்ட அரசு தலைமை மருததுவமனையானது 4 மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் பல்வேறு வசதிகளுடன்கூடிய CEmONC *பிரிவுடன் செயல்படுவதால், மகப்பேறு மகளிர் சிறப்பு சிகிச்சைக்காக செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளது. அதுமட்டுமல்லாமல், மாதமொன்றுக்கு சராசரியாக 3 பிரசவங்கள் மட்டுமே இம்மருத்துவமனையில் நடைபெறுவதால், தற்சமயம் மேற்படி மருத்துவமனைக்கு கூடுதலாக மகப்பேறு மருத்துவரை நியமிக்க அவசியம் எழவில்லை.*

63—

மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம்

வினா எண் 45841—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் வட்ட அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள 2 மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 4 செவிலியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதியில் பூதலூர் வட்ட மருத்துவமனையில் 6 மருத்துவர் மற்றும் 4 செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் நிரப்பப்பட்டு, மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், தற்போது பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் பிற வசதிகளைக் கொண்டு அப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

64—

பிரேத பரிசோதனை கட்டடம் கட்டுதல், மருத்துவர் நியமித்தல்

வினா எண் 47108—திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு தொகுதி, ஏற்காடு ஒன்றியத்திலுள்ள அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு புதிய கட்டடம் கட்டவும் மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஏற்காடு தொகுதி, ஏற்காடு அரசு மருத்துவமனை 25 படுக்கைகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 236 வெளிநோயாளிகளும், 8 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். தற்போது 4 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். எனவே, கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க தற்சமயம் அவசியம் எழவில்லை. மேலும், ஏற்காட்டில் மாதமொன்றுக்கு சராசரியாக 1 முதல் 2 வரையான பிரேத பரிசோதனை மட்டுமே செய்ய வேண்டிய நிலை உள்ளதால், பிரேதங்கள் உடனுக்குடன் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இந்நிலையில் பிரேத பரிசோதனைக்கென்று தனியாக புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்சமயம் எழவில்லை.

65—

மருத்துவர்கள், செவிலியர்கள் நியமனம்

வினா எண் 50158—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2020 ஜனவரி 9]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மேலக்காவிரி பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மேலக்காவிரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள மற்றும் இருப்பிலுள்ள மருத்துவ மற்றும் செவிலியர் பணியிட விவரம் பின்வருமாறு:

பதவி	ஒப்பளிப்பு	இருப்பு	காலியிடம்
மருத்துவ அலுவலர்	1	0	1
செவிலியர் (காலமுறை)	2	2	0
செவிலியர் (ஒப்பந்த அடிப்படை)	2	1	1

(i) *கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மேலக்காவிரி பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமாகும். அதற்கு அரசு விதிகளின்படி, மருத்துவ அலுவலர் பணியிட ஒப்பளிப்பு 1 ஆகும். அதில் 1 மருத்துவ அலுவலர் பணியிடம் காலியாகவுள்ளது. இருப்பினும், கீழாக்காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஒரு மருத்துவ அலுவலரை மாற்றுப் பணியில் பணியமர்த்தி பொது மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. காலியாகவுள்ள 1 பணியிடமும் மருத்துவ தேர்வாணையக் குழுமூலம் விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

(ii) *மேற்குறிப்பிட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாகவுள்ள ஒரு ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர் பணியிடத்தினை நிரப்ப மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

66—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37849—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், குந்தலம்பட்டு ஊராட்சியில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், குந்தலம்பட்டு ஊராட்சியில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37850—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மேல்பாப்பாம்பாடி ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மேல்பாப்பாம்பாடி ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி

2020 ஜனவரி 9]

பகுதியில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37852—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மேல்எடையாளம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மேல்எடையாளம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

69—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37853—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மணலப்பாடி ஊராட்சியில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மணலப்பாடி ஊராட்சியில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2020 ஜனவரி 9

70—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37857—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், கவரை ஊராட்சி, கடகம்பூண்டி கிராமத்தில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், கவரை ஊராட்சி, கடகம்பூண்டி கிராமத்தில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

71—

நெற்களம் அமைத்தல்

வினா எண் 37860—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கொடம்பாடி ஊராட்சி, கோனாந்தல் கிராமத்தில் புதிய நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கொடம்பாடி ஊராட்சி, கோனாந்தல் கிராமத்தில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2020 ஜனவரி 9]

72—

மாவட்டங்களுக்கேற்ப பாசன திட்டங்கள் செயல்படுத்துதல்

வினா எண் 40499—திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து மாவட்டங்களிலும் ஒரே வகையான திட்டம் மற்றும் மானியங்கள் செயல்படுத்துவதை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களின் மண்வாகு, பாசன வசதி மற்றும் சீதோஷண நிலைக்கு ஏற்ப திட்டங்கள் மற்றும் மானியங்கள் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் மாவட்டவாரியாக இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. மாவட்டந்தோறும் தனித்தனியே மாவட்ட வேளாண்மைத் திட்டம் (District Agriculture Plan) *அந்தந்த வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகமும் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து தயாரிக்கப்பட்டு, அதிலிருந்து மாநில வேளாண்மைத் திட்டம்* (State Agricultural Plan) *தயாரிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகின்றது.*

தமிழ்நாட்டில் ஏழு வேளாண் காலநிலை மண்டலங்கள் உள்ளன. அவை வடகிழக்கு மண்டலம், வடமேற்கு மண்டலம், மேற்கு மண்டலம், காவேரி டெல்டா மண்டலம், தெற்கு மண்டலம், உயர் மழைப்பொழிவு மண்டலம் மற்றும் மலை மண்டலமாகும். இந்த மண்டலங்களில் நிலவும் காலநிலை மற்றும் மண் வகை பல்வேறு பயிர்களின் வளர்ச்சிக்கு உகந்ததாக உள்ளது. அந்த பகுதிகளில் நிலவும் காலநிலையினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திட்டங்களின்மூலம் பரப்பு விரிவாக்கத்திற்கும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தத் தேவையான இடுபொருட்கள், இயந்திரங்கள், கருவிகள், தொழில்நுட்பங்கள், விரிவாக்கப் பணி ஆகியவற்றின்மூலம்

வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைமூலம் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களின் தேவை, பயிர் சாகுபடி பரப்பு, இட வசதி, நிதி ஆதாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, பல்வேறு சந்தை உட்கட்டமைப்பு வசதிகளான ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், உழவர் சந்தை, ஊரக வணிக மையம், வணிக வளாகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அறுவடை பின்செய் மேலாண்மைக்கான உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்புக் கிட்டங்கிகள், குளிர்பதன கிடங்குகள், பழுக்க வைக்கும் கூடங்கள் மற்றும் உலர்களங்கள் ஆகியன தேவையின் அடிப்படையில் கட்டப்பட்டு வருகிறது.

விவசாயிகள் விளைபொருட்களை தேசிய அளவில் பெரிய சந்தைகளில் விற்பனை செய்திட வசதியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் மின்னணு வர்த்தகம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்த மாவட்டங்களில் முதன்மையாக விளைவிக்கப்படும் பயிர் சார்ந்த விவசாயிகளை குழுக்களாக்கி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. காய்கறி மற்றும் பழங்களுக்கான விநியோக தொடர் மேலாண்மை திட்டம் கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, விழுப்புரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, வேளாண் விளைபொருட்களை மதிப்பு கூட்டவும், பதப்படுத்திடவும் விழுப்புரம், சேலம், கடலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருநெல்வேலி, விருதுநகர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உணவுப் பூங்காக்கள் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேவைக்கேற்ப வேளாண்மைத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

73—

பயிர் காப்பீட்டுத் தொகை வழங்குதல்

வினா எண் 42710—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2020 ஜனவரி 9]

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டம், தென்புதுப்பட்டு, திருவதிக்குன்னம், ஊரணிதாங்கல், வரிக்கல் மற்றும் வேலந்தாங்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2016-2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2016-2017 ராபி பருவத்தில் பயிர் காப்பீடு செய்யப்பட்ட பயிர்களில் குறிப்பாக சம்பா நெல் மற்றும் உளுந்து பயிர்களில், மகசூல் இழப்பு ஏற்பட்டதால், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டம், தென்புதுப்பட்டு, திருவதிக்குன்னம், ஊரணிதாங்கல், வரிக்கல் மற்றும் வேலந்தாங்கல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்ட வழிகாட்டுதலின்படி, ஒட்டுமொத்தமாக ரூ.24,07,121- வழங்கப்பட்டுள்ளது.

74—

பயிர் காப்பீட்டுத் தொகை வழங்குதல்

வினா எண் 46168—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கீழக்கொருக்கை, மேலக்கொருக்கை, தில்லையம்பூர், திப்பிராஜபுரம், தேணாம்படுகை, சோழன்மாளிகை உள்ளிட்ட கிராமங்களைச் சார்ந்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2016-2017 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் அறிவிக்கை செய்யப்பட்ட பகுதிகளில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2016-2017 ஆம் ஆண்டு கும்பகோணம் தொகுதி, சம்பா நெல் பாதிப்பிற்குள்ளான கீழக்கொருக்கை கிராமத்தில் 38 விவசாயிகளுக்கு ரூ.12,85,837/-ம், மேலக்கொருக்கை கிராமத்தில் 33 விவசாயிகளுக்கு ரூ.20,56,825/-ம், தில்லையம்பூர் கிராமத்தில் 18 விவசாயிகளுக்கு ரூ.18,68,019/-ம், திப்பிராஜபுரம் கிராமத்தில் 60 விவசாயிகளுக்கு ரூ.41,64,344/-ம், தேணாம்படுகை கிராமத்தில் 28 விவசாயிகளுக்கு ரூ.39,45,074/-ம், சோழன்மாளிகை கிராமத்தில் 35 விவசாயிகளுக்கு ரூ.35,21,842/-ம், ஆக மொத்தம் 212 விவசாயிகளுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்ட வழிகாட்டுதலின்படி, ஒட்டுமொத்தமாக ரூ.1,68,41,941/- இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

2017-2018 ஆம் ஆண்டு சோழன்மாளிகை கிராமத்தில் சம்பா நெல் பாதிப்பிற்குள்ளான 60 விவசாயிகளுக்கு ரூ.7,21,356/- இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதர கிராமங்களில் மகசூல் இழப்பு இல்லையென்பதால் இழப்பீடு ஏதும் வழங்கப்படவில்லை.

75—

தென்னங்கன்றுகள் வழங்குதல்

வினா எண் 46679—திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தென்னங்கன்றுகளை கொள்முதல் செய்து அரசே சலுகை விலையில் விவசாயிகளுக்கு வழங்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

31-12-2018 ஆம் நாளிட்ட வேளாண்மைத் துறை, அரசாணை (நிலை) எண் 313-ன்படி, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தென்னை

2020 ஜனவரி 9]

விவசாயிகளுக்கான வாழ்வாதார திட்டத்தின்கீழ், 35 இலட்சம் தென்னங்கன்றுகளை ரூ.17.50 கோடி செலவில் உற்பத்தி செய்து, இலவசமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, அரசு தென்னை நாற்றுப் பண்ணை மற்றும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

76—

மானிய விலையில் உரம்

வினா எண் 46744—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்தில் கடும் பனிப்பொழிவு காரணமாக சம்பா பயிர்கள் பாதிப்படைவதால் மானிய விலையில் உரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட "சத்துக்கள் அடிப்படையிலான மானியம்" என்ற முறையானது 2010 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளது. அதன்படி, ஒவ்வொரு வருடமும் மத்திய அரசு அறிவித்துள்ள மானிய விலைக்கொள்கை, தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், யூரியா உரம் அனைத்து மாவட்டங்களிலும் கட்டுப்படுத்தப்பட்ட மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தழை, மணி, சாம்பல் சத்து தரும் உர வகைகளான டிஏபி, காம்ப்ளக்ஸ் மற்றும் பொட்டாஷ் உரங்களைப் பொறுத்தவரை, ஒரு கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்களுக்கு கீழ்க்கண்டுள்ளவாறு மானியம் வழங்கப்படுகிறது:—

சத்து	ஒரு கிலோவிற்கு வழங்கப்படும் மானியம் (ரூபாயில்)
தழைச்சத்து (N)	18.990
மணிச்சத்து (P)	15.216
சாம்பல்சத்து (K)	11.124
கந்தகச்சத்து (S)	02.722

மத்திய அரசு, 2018-2019 ஆம் நிதியாண்டில் சத்துக்கள் அடிப்படையிலான மானியம் மணி மற்றும் சாம்பல் சத்து உர வகைகளுக்கு வழங்கியுள்ளது. எனவே, கும்பகோணம் வட்டம் உட்பட அனைத்து வட்டங்களிலும் அனைத்து பருவங்களிலும் மேற்கண்டவாறு, மத்திய அரசு வழங்கியுள்ள மானிய விலை கொள்கையினை பின்பற்றி மானிய விலையில் உரம் விற்பனை செய்யப்படுகிறது.

77—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம்

வினா எண் 42301—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

2020 ஜனவரி 9]

78—

இ-அடங்கல்

வினா எண் 46543—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டத்திலுள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு இ-அடங்கல் செயல்படுத்த தேவையான கட்டமைப்பு வசதிகளை செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும் இதுவரை 433 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் வழங்கப்பட்டு, அதற்கான கணினி பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண் 87, வருவாய்த் [*வநி. 2(2)*] *துறை, நாள் 9-3-2012, அரசாணை (நிலை) எண் 56, வருவாய் (ம) பே.மே* [*வநி. 2(2)*] *துறை, நாள் 20-1-2015 மற்றும் அரசாணை (நிலை) எண் 123, வருவாய் (ம) பே.மே* [*வநி. 2(2)*] *துறை, நாள் 21-4-2017 ஆகிய அரசாணைகளில் 433 கிராம நிருவாக அலுவலர்களுக்கு ஒரு ஆண்டு சந்தா மற்றும் இணையதள வசதியுடன்கூடிய சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இ-அடங்கல் செயல்படுத்த தேவையான கட்டமைப்பு வசதி அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.*

79—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 49929—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், கோவில்பத்து ஊராட்சி, வில்வராயன்பட்டியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கோவில்பத்து கிராமத்தில் வில்வராயன்பட்டியில் வசிப்பவர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பூதலூர் வட்ட அலுவலகத்தின் 29-8-2018 நாளிட்ட கடிதத்தின்மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது.

80—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 50118—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், பழமானேரி வருவாய் கிராமத்தில் புதிய புறவழிச்சாலை அமைப்பதால் வீடுகளை இழக்கும் 30 குடும்பங்களுக்கு புதிய வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், பழமானேரி கிராமத்தில் புதிய புறவழிச்சாலை அமைப்பதால் வீடுகளை இழக்கும் 30 குடும்பங்களுக்கு அரசாணை (நிலை) எண் 496, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 24-12-2018-ன்படி வகைமாற்றம் செய்து பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2020 ஜனவரி 9]

81—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 50122—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், தோகூர் வருவாய் கிராமம், தென்னந்தோப்பு குடியிருப்புவாசிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், அசுரப்பேட்டை சரகம் தோகூர் கிராமத்தில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

82—

வீட்டுமனை வழங்குதல்

வினா எண் 50125—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், ஆற்காடு வருவாய் கிராமத்தில் புதிய வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், ஆற்காடு கிராமத்தில் தகுதியுள்ள பயனாளிகளை தேர்வு செய்து, விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

83—

பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்குதல்

வினா எண் 47780—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திண்டிவனத்திலிருந்து தொழுப்பேடு, பெரும்பேர் கண்டிகை, உத்தமநல்லூர், சீதாபுரம், திருமுக்காடு வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 120 பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திருமுக்காடு, சீதாபுரம் கூட்டுச்சாலை வழியாக எலப்பாக்கத்திலிருந்து மதுராந்தகம் வரை 1 நகரப் பேருந்துமூலம் 12 நடைகளும் மற்றும் 1 புறநகரப் பேருந்துமூலம் 4 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T 13/A	நகரம்	எலப்பாக்கம்—மதுராந்தகம்	திருமுக்காடு—சீதாபுரம் கூட்டுச்சாலை	12	40.11
77C/A	புறநகரம்	எலப்பாக்கம்—மதுராந்தகம்	திருமுக்காடு—சீதாபுரம் கூட்டுச்சாலை	4	51.27

2020 ஜனவரி 9]

எனவே, இப்பகுதி மக்களுக்கு மேற்கூறிய பேருந்து வசதிகள் போதுமான அளவில் இருப்பதாலும் மற்றும் பயணிகள் அடர்வு மிகவும் குறைவு என்பதாலும் சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்ட 120 தடப் பேருந்தை மீண்டும் அதே வழித்தடத்தில் இயக்கிட அவசியம் எழவில்லை.

84—

கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 47781—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, கோழியாளம் ஊராட்சி, கோழியாளத்திற்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, கோழியாளம் ஊராட்சி, கோழியாளத்திற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம்மூலம் ஒரு நகரப் பேருந்து மதுராந்தகத்திலிருந்து பாப்பாநல்லூருக்கு கோழியாளம் வழியாக 8 நடைகள் மற்றும் 1 புறநகர் பேருந்து உத்திரமேரூரிலிருந்து மதுராந்தகத்திற்கு கோழியாளம் வழியாக 2 நடைகள் என தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T 16/A	நகரம்	மதுராந்தகம்-பாப்பாநல்லூர்	கோழியாளம்	*8*	***33.95***
89A	புறநகரம்	உத்திரமேரூர்-மதுராந்தகம்	கோழியாளம்	*2*	***52.86***

[*2020 ஜனவரி 9*

எனவே, மேற்கூறப்பட்ட இயக்கங்களே போதுமானதெனக் கருதப்படுவதாலும், பயணிகளின் அடர்வு குறைவாக உள்ளது என்பதாலும், கோழியாளத்திற்கு தற்சமயம் கூடுதல் பேருந்துகள் இயக்க அவசியம் இல்லை.

85—

புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 47782—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், சீதாபுரம் கிராமம், சீதாபுரத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், திருமுக்காடு சீதாபுரம் கூட்டுச்சாலை வழியாக எலப்பாக்கத்திலிருந்து மதுராந்தகம் வரை 1 நகரப் பேருந்துமூலம் 12 நடைகளும் 1 புறநகரப் பேருந்துமூலம் 4 நடைகளும் தினசரி இயங்குகின்றன. எனவே, மேற்காணும் பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

86—

புதிய பேருந்துகள் இயக்குதல் மற்றும் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்லுதல்

வினா எண் 47783—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஒன்றியம், புறங்கால் கூட்டுரோட்டிற்கு புதிய பேருந்துகள் இயக்கவும் இங்கு அனைத்து பேருந்துகளும் நின்று செல்லவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதியின் புறங்கால் கூட்டுச்சாலைக்கு போதுமான பேருந்துகள் இயக்கப்படுவதால் கூடுதலாக பேருந்து இயக்க திட்டம் இல்லை. புறங்கால் கூட்டுச்சாலை மதுராந்தகம்—ஒரத்தி வழித்தடத்தில் தொழுப்பேட்டிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மதுராந்தகத்திலிருந்து புறங்கால் கூட்டுச்சாலை வழியாக ஒரத்திற்கு காஞ்சிபுரம் மண்டலத்தின் 2 நகரப் பேருந்துகள்மூலம் 20 நடைகளும், திண்டிவனத்திலிருந்து புறங்கால் கூட்டுச்சாலை வழியாக ஒரத்திக்கு விழுப்புரம் மண்டலத்தின் 1 நகரப் பேருந்துமூலம் 10 நடைகளும் என தினசரி 30 நடைகள் பின்வருமாறு இயக்கப்படுகின்றன:—

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T 12	நகரம்	மதுராந்தகம்—ஒரத்தி	புறங்கால் கூட்டுச்சாலை	*10*	*45.73*
T23	நகரம்	மதுராந்தகம்—ஒரத்தி—விண்ணம்பூண்டி	புறங்கால் கூட்டுச்சாலை	*10*	*45.50*
T9	நகரம்	திண்டிவனம்—எலப்பாக்கம்	புறங்கால் கூட்டுச்சாலை	*10*	*51.67*

எனவே, மேற்கூறியவாறு அரை மணி நேரத்திற்கும் குறைவான இடைவெளியில் புறங்கால் கூட்டுச்சாலை வழியாக நாள் முழுவதும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன மற்றும் மேற்கூறிய அனைத்துப் பேருந்துகளும் புறங்கால் கூட்டுச்சாலை வழியாக நின்று செல்கின்றன. எனவே, இவ்வியக்கங்களே புறங்கால் கூட்டுச்சாலை பயணிகளின் பேருந்து தேவைக்கு போதுமானதாக கருதப்படுகிறது.

87—

பேருந்துகள் நின்று செல்லுதல்

வினா எண் 47786—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, கடம்பூர் ஊராட்சி, சீத்தளம் கூட்ரோடு அருகில் பேருந்து நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, கடம்பூர் ஊராட்சி, தீட்டாளம் கூட்டுச்சாலை வழியாக செல்லும் அனைத்துப் பேருந்துகளும் தீட்டாளம் கூட்டுச்சாலை அருகில் நின்று செல்கின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது. காஞ்சிபுரம் மண்டலம்மூலம் மதுராந்தகம்—உத்திரமேரூர், எலப்பாக்கம்—தாம்பரம் வழித்தடத்தில் இயங்கும் பேருந்துகள் கடம்பூர் ஊராட்சி, தீட்டாளம் கூட்டுச்சாலை வழியாக இயக்கப்படுகிறது.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	பயணிகள் அடர்வு %
T 15	நகரம்	மதுராந்தகம்—உத்திரமேரூர்	தீட்டாளம் கூட்டுச்சாலை	47.54
T 14	நகரம்	மதுராந்தகம்—உத்திரமேரூர்	தீட்டாளம் கூட்டுச்சாலை	44.54
77 A	புறநகரம்	எலப்பாக்கம்—தாம்பரம்	தீட்டாளம் கூட்டுச்சாலை	49.44

இப்பேருந்துகள் அனைத்தும் தீட்டாளம் கூட்டுச்சாலை அருகில் நின்று செல்கின்றன.

2020 ஜனவரி 9]

88—

பேருந்துகள் நின்று செல்லுதல்

வினா எண் 47787—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, பூதூர் ஊராட்சி, பூதூர், சகாயநகர், பூதூர் காலனி ஆகிய ஊர்களில் பேருந்து நின்றுசெல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, பூதூர் ஊராட்சி, பூதூர், சகாயநகர், பூதூர் காலனி ஆகிய ஊர்களின் வழியாக செல்லும் அனைத்துப் பேருந்துகளும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஊர்களில் பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்கின்றன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது. காஞ்சிபுரம் மண்டலம் மூலம் செங்கல்பட்டு—பூதூர், செங்கல்பட்டு—நீலமங்களம், செங்கல்பட்டு—தச்சூர் கூட்டுரோடு வழித்தடத்தில் இயங்கும் பேருந்துகள் அனைத்தும் ஏற்கெனவே பூதூர், சகாயநகர், பூதூர் காலனி பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்கின்றன.

89—

பேருந்துகள் நின்று செல்லுதல்

வினா எண் 47788—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, தொழுப்பேடு கிராமம், சென்னை—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை தொழுப்பேடு பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது, காஞ்சிபுரம் மண்டலத்தின் 4 நகரப் பேருந்துகள்மூலம் 30 நடைகள் மற்றும் 13 புறநகரப் பேருந்துகள்மூலம் 42 நடைகளும், திருவண்ணாமலை மண்டலத்தின் ஒரு புறநகரப் பேருந்துமூலம் 4 நடைகள் என தினசரி இயக்கப்படும் 76 நடைகளும், சென்னை—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள தொழுப்பேடு வழியாக இயக்கப்படுகின்றன. டீலக்ஸ் பேருந்துகள் நீங்கலாக மேற்கூறப்பட்ட பேருந்துகள் அனைத்தும் தொழுப்பேடு பேருந்து நிறுத்தத்தில் நின்று செல்கின்றன."

90—

பேருந்துத் தடத்தினை நீட்டிப்பு செய்தல்

வினா எண் 48957—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்மாம்பட்டு ஊராட்சி, கடலூரிலிருந்து சாட்டமாம்பட்டு வரை இயக்கப்படும் பேருந்தை புதுப்பாளையம் வரை நீட்டிப்பு செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கடலூர் பணிமனைமூலம் கடலூர்-சாட்டமாம்பட்டு இயக்கப்படும் நகரத் தடம் எண் T15 பேருந்து புதுப்பாளையம் வரை நாள் ஒன்றுக்கு 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

91—

பேருந்துத் தடத்தில் மாற்றம் செய்தல்

வினா எண் 48958—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்மாம்பட்டு ஊராட்சி, பண்ருட்டியிலிருந்து குள்ளன்சாவடி வரை செல்லும் பேருந்தை கீழ்மாம்பட்டு வழியாக இயக்க அரசு முன்வருமா?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பண்ருட்டி பணிமனையிலிருந்து பேருந்துகளின் தடம் எண்கள் T6 மற்றும் T18 மூலம் பண்ருட்டியிலிருந்து குள்ளன்சாவடிக்கு கீழ்மாம்பட்டு வழியாக நாளொன்றுக்கு 16 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

92—

பேருந்து வசதி

வினா எண் 49828—திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் ஊராட்சி, ஒரத்தூருக்கு பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஒரத்தூர் ஊராட்சி, ஒரத்தூருக்கு பேருந்து வசதி உள்ளது. மதுராந்தகம்-எலப்பாக்கம் வழித்தடத்தில் ஒரத்தூர் கூட்டுச்சாலையிலிருந்து ஒரத்தூர் சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஒரத்தூர் வழியாக ஒரு நகரப் பேருந்துமூலம் காலை 2 நடைகள், மாலை 2 நடைகள் என தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. பயன்பாடு 50 விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தபோதிலும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தேவைக்காக இயக்கப்படுகிறது.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T 13	நகரம்	மதுராந்தகம்-எலப்பாக்கம்	அகலி-மாத்தூர்	4	40.11

93—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 49829—திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், விளாங்காடு ஊராட்சி, விளாங்காட்டிற்கு கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம்—செய்யூர் (வழி) சித்தாமூர் வழித்தடத்தில் விளாங்காடு கூட்டுச்சாலையிலிருந்து விளாங்காடு சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. விளாங்காடு கூட்டுரோடு வழியாக 2 நகரத் தடங்களின்மூலம் 22 நடைகள், நான்கு புறநகரத் தடங்களின்மூலம் 14 நடைகள் என தினசரி 36 நடைகள் பின்வருமாறு இயக்கப்படுகின்றன.

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
T7/A & B	நகரம்	மதுராந்தகம்-செய்யூர்	சித்தாமூர்	22	45.12
81	புறநகரம்	சென்னை-கொளத்தூர்	சித்தாமூர்-செய்யூர்	4	81.99
81G	புறநகரம்	செங்கல்பட்டு-கடப்பாக்கம்	சித்தாமூர்-செய்யூர்	4	91.29

2020 ஜனவரி 9]

தடம் எண்	வகை	தட விவரம்	வழி	நடைகளின் எண்ணிக்கை	பயணிகள் அடர்வு %
*81*M	புறநகரம்	சென்னை-முகையூர்	சித்தாமூர்-செய்யூர்	*4*	*74.95*
*81*A	புறநகரம்	மரக்காணம்-சென்னை	சோத்துப்பாக்கம்-சித்தாமூர்-செய்யூர்	*2*	*96.52*
				36	

நேரடியாகவும், பகுதிவாரியாகவும் குறுகிய நேர இடைவெளியில் போதுமான பேருந்து வசதி உள்ளதால், விளாங்காடு பகுதி மக்களுக்கு தற்போதைய இவ்வியக்கங்களே போதுமானதாக கருதப்படுகிறது. எனவே, கூடுதல் பேருந்துகள் இயக்குவதற்கான அவசியம் எழவில்லை.

94—

சுற்றுச்சுவர்

வினா எண் 23563—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், விளந்தகண்டத்திலுள்ள ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய விளந்தகண்டம் (சோழபுரம்) ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியில், சர்வ சிக்ஷா அபியான் நிதியுதவித் திட்டத்தின் (SSA) மூலம் 2011-2012 ஆம் நிதியாண்டில் சுற்றுச்சுவர் ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது.

95—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 43344—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், சோழபுரத்தில் உள்ள ஆதி திராவிடர் நலப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட சோழபுரம் அரசு ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் தற்போது 38 மாணவ/மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். பள்ளியில் உள்ள ஒரு R.C.C. கட்டடத்தில் இரண்டு தளங்கள் (தரை தளம்—3 வகுப்பறைகள் மற்றும் முதல் தளத்தில் 2 வகுப்பறைகள்) உள்ளன. மேற்படி, 5 வகுப்பறைகளே தற்போதுள்ள மாணவ/ மாணவிகளின் எண்ணிக்கைக்கு போதுமானதாக உள்ளது. எனவே, கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

96—

குடமுழுக்கு

வினா எண் 34914—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, மடவாளம் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ அங்கநாதீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மடவாளம், அருள்மிகு அங்கநாதீஸ்வரர் திருக்கோயில் சுவாமி சன்னதி,விமானம்,அம்பாள்சன்னதிமற்றும்விமானம்முன்மண்டபம், இராஜகோபுரம், திருமதில்சுவர் ஆகியவற்றை புதுப்பித்து திருப்பணி மேற்கொள்ளமண்டலமற்றும்மாநிலஅளவிலானதொன்மைவாய்ந்த திருக்கோயில்கள் திருப்பணிக் குழுவின் பரிந்துரை மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெற்று, அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து, திருப்பணி மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

97—

பூசாரி நியமித்தல்

வினா எண் 43395—டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கடனா அணை கோரக்கநாதர் கோயிலுக்கு பூசாரியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவசைலம் அருள்மிகு கோரக்கநாதர் திருக்கோயிலானது களக்காடு முண்டந்துறை புலிகள் பாதுகாக்கப்பட்ட வன பகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் பணிபுரிந்த திரு. அருணாசலம் என்கிற பூசாரி வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற பின்னர் இவர் தொடர்ந்து தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார். இத்திருக்கோயில் வனக்கட்டுப்பாடு மிகுந்த பகுதியில் அமைந்திருப்பதாலும், சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் மலைப்பகுதியில்நடந்துசென்றுபூஜைசெய்யவேண்டியிருப்பதாலும், புதியதாக பூசாரியாக பணிபுரிய தகுதியான நபர்கள் யாரும்

முன்வரவில்லை. மேற்படி, திருக்கோயில் பூசாரியாக பணிபுரிய தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் உரிய முறையில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின்மூலம் பூசாரி நியமனம் செய்யப்படும்.

98—

படித்துறையை விரிவுபடுத்துதல்

வினா எண் 47328—திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொடக்குறிச்சிதொகுதி,மண்ணாதாம்பாளையம்ஊராட்சியில் உள்ள அருள்மிகு குலவிளக்கு அம்மன் திருக்கோயில் அருகே உள்ள படித்துறையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, மண்ணாதாம்பாளையம் ஊராட்சி, நஞ்சை காளமங்கலம் அருள்மிகு குலவிளக்கு அம்மன் திருக்கோயிலுக்கு போதிய நிதி வசதி இல்லை. எனவே, திருக்கோயிலின் முன்புறம் உள்ள காவேரி ஆற்றின் படித்துறையை சுற்றுலாத் துறை மற்றும் பொதுப் பணித் துறைமூலம் விரிவுபடுத்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

99—

அன்னதானத் திட்டம்

வினா எண் 47406—திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் குகை அருள்மிகு காளியம்மன், மாரியம்மன் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம் குகை அருள்மிகு காளியம்மன், மாரியம்மன் திருக்கோயிலில் போதிய இடவசதி மற்றும் நிதி வசதி இல்லை. எனவே, இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினை செயல்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

100—

திருக்கோயிலை புனரமைத்தல்

வினா எண் 48951—திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, மேல்குந்தா ஊராட்சி, அம்பேத்கர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலை புனரமைக்க நிதி உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 190, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி5-1) துறை, நாள் 23-10-2018-ன்படி, உதகமண்டலம் தொகுதி, மேல்குந்தா ஊராட்சி, அம்பேத்கர் ஆதி திராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலை புனரமைக்க 2018-2019 ஆம் நிதியாண்டில் ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2020 ஜனவரி 9

பட்டியல் 3

1—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 48431—திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை அண்ணாநகர் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். தொலைநோக்கு திட்டம் 2023—ன்கீழ் குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் 617 தனி வீடுகள் ரூ.1,851.00 இலட்சங்கள் செலவில் கட்ட மைய மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கூறப்பட்ட ஒப்புதலின் ஒரு பகுதியாக இப்பேரூராட்சியில் வார்டு எண் 11-ல் உள்ள அண்ணா நகர் பகுதியில் 95 வீடுகள் கட்ட அனுமதி பெறப்பட்டு 9 வீடுகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் வார்டு 12-ல் உள்ள சேத்துமடை பகுதியில் 20 வீடுகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

2—

தார்ச் சாலைகள் அமைத்தல்

வினா எண் 4613—திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஒன்றியம், டாப்சிலிப் பகுதியில் தார்ச் சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேத்துமடை முதல் டாப்சிலிப் வரை உள்ள 13 கி.மீ. தார்ச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளரால் அனுமதி வழங்கப்பட்டு, பரம்பிக்குளம், பொதுப் பணித் துறை செயற்பொறியாளரால் தார்ச் சாலை மேம்பாட்டுப் பணிகள் தற்போது செய்து முடிக்கப்பட்டுள்ளன.

3—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 6246—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குன்னம் தொகுதி, குன்னம் வட்டம், பேரளி ஊராட்சிக்குட்பட்ட வனப் பகுதியிலிருந்து பீல்வாடிக்குச் செல்லும் பாதையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தொகுதியில், பேரளி ஊராட்சிக்குட்பட்ட வனப் பகுதியிலிருந்து இருந்து பீல்வாடிக்குச் செல்லும் மண் சாலை வனச் சாலையாகும். இது சித்தலி ஒதுக்கு காட்டின் வழியாக சுமார் 3.890 கி.மீ. செல்கிறது. காப்புக் காட்டின் அறிவிக்கையில் 6 கெஜம் (5.40மீ) அகலத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பாதை அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்பாதையை 2016-2017 ஆம் ஆண்டின் திட்டமில்லா நிதி ஒதுக்கீடு Part I (Non-Plan Scheme)-ல் *தார்ச் சாலையாக மேம்படுத்த 23-2-2017 ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும்*

வனத் துறை அரசாணை (2D) எண் 12-ல், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இச்சாலை 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.92.50 இலட்சம் செலவில் தார்ச் சாலையாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

4—

மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்தல்

வினா எண் 7363—திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், பைத்தூர் ஊராட்சி, கல்லுக்கட்டு கிராமத்திலிருந்து இராமநாதபுரம் செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் வட்டம், பைத்தூர் ஊராட்சி, கல்லுக்கட்டு கிராமத்திலிருந்து இராமநாதபுரம் செல்லும் மண் சாலை, சேலம் வனக் கோட்டம், தம்மம்பட்டி வனச்சரகத்திற்கு உட்பட்ட பகுதியாகும். கல்லுக்கட்டு கிராமம் மற்றும் இராமநாதபுரம் கிராமத்தை பைத்தூர் வழியாக இணைக்க காப்புக்காட்டிற்கு வெளியே ஏற்கெனவே தார்ச் சாலை உள்ளது. இதேபோல் வானாபுரம், தவளப்பட்டி வழியாக ஒரு தார்ச் சாலை உள்ளது. இந்நிலையில் புதியதாக மேற்கண்ட இரு கிராமங்களை இணைக்க சாலை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

மலைப் பாதையில் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 7365—திரு. ஆர்.எம். சின்னதம்பி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் முதல் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் வரை உள்ள மலைப் பாதையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கீழ்நாடு ஊராட்சி, நாகலூர் முதல் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் வரையுள்ள பகுதியானது சேலம் வனக் கோட்டம், கல்வராயன்மலையில் அமைந்துள்ளது. மேற்கண்ட நாகலூர் கிராமத்திற்கும், இராமநாயக்கன்பாளையம் கிராமத்திற்கும் இடையில் நாகலூர் காப்புக் காடு உள்ளது. இந்த காப்புக் காடு அறிவிக்கையில் சுமார் 4.5 கி.மீ. தூரத்திற்கு 6 கெஜம் அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித் தடம் உள்ளது. இந்த வழித் தடத்தை தற்போது மண் சாலையாக மலைவாழ் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்தக் காப்புக் காட்டிற்கு வெளியே இருபுறங்களிலும் இந்த கிராமங்களை இணைக்க ஊரக வளர்ச்சித் துறையால் தார்ச் சாலை அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. இந்த காப்புக் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க தேவைப்படும் வன நிலத்தை ஒதுக்கீடு செய்ய வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ் அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். அரசின் முன் அனுமதி பெற பயனீட்டு துறையின்மூலம் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் கீழான பிரேரணை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பயனீட்டாளரால் உரிய முன்மொழிவுகளை இணையதளம்மூலம் பதிவேற்றம் செய்யப்படும்பட்சத்தில் உரிய நடவடிக்கை வனத் துறையால் மேற்கொள்ளப்படும்.

6—

சாலை அமைத்தல்

வினா எண் 7370—திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, பச்சைமலைமாயம்பாடிக்கும் நினங்கரைக்கும் இடையே வனத் துறையின்மூலம் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தம்மம்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட பேளூர் காப்புக் காட்டிற்கு வடக்குப் பகுதியில் நினங்கரை கிராமமும், தெற்கு பகுதியில் பச்சைமலைமாயம்பாடி கிராமமும் அமைந்துள்ளன. இவ்விரு கிராமங்களுக்கும் இடையே அமைந்துள்ள பேளூர் காப்புக் காட்டில் இவ்விரு கிராமங்களை இணைக்க 3.8 கி.மீ. நீளத்திற்கு காப்புக் காடு அறிவிக்கையில் 6 கெஜம் (5.4 மீட்டர்) அகலத்திற்கு அனுமதிக்கப்பட்ட வழித் தடம் உள்ளது. இந்த வழித் தடம் தற்போது நடந்து செல்லும் அளவிற்கு மட்டுமே உள்ளது. மேலும் இத்தார்ச் சாலையை அமைக்கும்பட்சத்தில் அதிக நிலைமரங்கள் வெட்டும் நிலை ஏற்படும். இந்த காப்புக் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமெனில் 2.05 எக்டர் வன நிலம் ஒதுக்கப்பட வேண்டும். இவ்வன நிலத்தினை ஒதுக்கீடு செய்யக் கேட்டு வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்கீழ் அரசின் அனுமதி கோரி பயனீட்டாளரால் (ஊரக வளர்ச்சித் துறை) பிரேரணைஏதும்இணையதளத்தில்பதிவேற்றம்செய்யப்படவில்லை.

7—

குரங்குகளைப் பிடித்தல்

வினா எண் 35657—திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள குரங்குகளைப் பிடித்து வனப் பகுதியில் விட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் குடியிருப்புப் பகுதிகளில் பொது மக்களுக்கு இடையூறு தந்து வந்த குரங்குகள் வனத் துறையால் கூண்டு வைத்துப் பிடித்து அடர்ந்த வனப் பகுதியில் விடப்பட்டன.

2020 ஜனவரி 9]

8—

மூலிகைச் செடிகளை வளர்த்தல்

வினா எண் 41696—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மூலிகைப் பண்ணையில் அரிய வகை மூலிகைச் செடிகளை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மூலிகைப் பண்ணையானது, 1984 முதல் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக வளாகத்தில், பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட பொது நிதியிலிருந்து உருவாக்கப்பட்டு, அரிய வகை மூலிகைச் செடிகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இம்மூலிகை பண்ணையில் மேலும் மூலிகைச் செடிகள் வளர்த்து பராமரிக்கும் பணிகள் வனத் துறையால் செயல்படுத்தப்படுவதில்லை.

9—

குரங்குகளைப் பிடித்தல்

வினா எண் 48819—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், தென்பெரமூர் ஊராட்சி,பனவெளி கிராமத்தில் உள்ள குரங்குகளைப் பிடித்து வனப் பகுதிக்குள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தென்பெரமூர் ஊராட்சி, பனவெளி கிராமப் பகுதிகளில் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் இடையூறு

செய்த குரங்குகள் வனப் பணியாளர்களால் கூண்டு வைத்துப் பிடித்து, அடர்ந்த வனப் பகுதிக்குள் விடப்பட்டன.

10—

குரங்குகளைப் பிடித்தல்

வினா எண் 49559—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், தொண்டராயன் பாடி, தோகூர் ஊராட்சிகளில் உள்ள குரங்குகளை பிடித்து வனப் பகுதியில் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், தொண்டராயன் பாடி, தோகூர் ஊராட்சிகளில் உள்ள 50-க்கும் மேற்பட்ட குரங்குகள் பிடிக்கப்பட்டு, அவை வனப் பகுதியில் விடப்பட்டன.

11—

குரங்குகளைப் பிடித்தல்

வினா எண் 50861—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சி, தட்டுமால் தெருவில் உள்ள குரங்களைப் பிடித்து வனப் பகுதிக்குள் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கொத்தங்குடி ஊராட்சி, தட்டுமால் தெருவில் உள்ள பொது மக்களுக்கு இடையூறு தந்து வந்த குரங்குகளை கூண்டு வைத்துப் பிடித்ததில் சுமார் 30 குரங்குகள் பிடிக்கப்பட்டு, அருகில் உள்ள வனப் பகுதியில் விடப்பட்டன.

2020 ஜனவரி 9]

12—

தொலைநோக்கு கருவி அமைத்தல்

வினா எண் 52251—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பறை தொகுதி, 9-வது கொண்டை ஊசி வளைவில் சுற்றுலாப் பயணிகள் இயற்கை அழகைக் கண்டுகளிக்க தொலைநோக்கு கருவி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை செல்லும் பகுதியிலுள்ள 9-வது கொண்டை ஊசி வளைவு, ஆனைமலைப் புலிகள் காப்பகத்தின் உள்மண்டல பகுதியாகும். இப்பகுதியானது தமிழ்நாட்டின் மாநில வன உயிரினமான வரையாடுகளின் வாழ்விடமாகும். குறிப்பாக, இந்த 9-வது கொண்டை ஊசி வளைவுப் பகுதியில் சுமார் 20-க்கும் மேற்பட்ட வரையாடுகள் நாள்தோறும் நடமாடும். இவற்றை பாதுகாப்பதற்கென்று தனியாக பாதுகாப்பு பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இப்பகுதியில் தொலைநோக்கு கருவி அமைக்கப்படும்பட்சத்தில் அதிகளவில் சுற்றுலாப் பயணிகளும், சுற்றுலா வாகனங்களும் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு, அதனால் வரையாடுகளின் வாழ்விடம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். தவிர, தொலைநோக்கு கருவி அமைப்பதற்கான பாதுகாப்பான நிலப்பரப்பு இல்லாத காரணத்தினால் இங்கு தொலைநோக்கு கருவி அமைப்பதற்கு வழிவகையில்லை.

13—

சினிமா படப்பிடிப்பு நடத்துதல்

வினா எண் 52252—திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை மலைப் பகுதியில் வனத் துறை அனுமதியுடன் சினிமா படப்பிடிப்பு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியிலுள்ள வனப் பகுதிகள் முழுவதும் ஆனைமலை புலிகள் காப்பகத்தின் உள்மண்டல பகுதியாக உள்ளதால் தேசிய புலிகள் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி சினிமா படப்பிடிப்பு நடத்த அனுமதிக்க வழிவகையில்லை.

14—

ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 57410—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தென்பெரமூர் ஊராட்சி, பனவெளியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தென்பெரமூர் ஊராட்சி, பனவெளியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 6 முதல் 10 வரையுள்ள வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளியில் 1 தலைமை ஆசிரியர் பணியிடமும், 6 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 1 உடற்கல்வி ஆசிரியர் பணியிடமும் அனுமதிக்கப்பட்டு, அனைத்து பணியிடங்களிலும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது மாணவர்களின் எண்ணிக்கை 91 ஆக உள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதலாகவே ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, கூடுதலாக ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் அவசியம் எழவில்லை.

2020 ஜனவரி 9]

15—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா எண் 28238—திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஒன்றியம், பேராம்பட்டு சி.2579 கூட்டுறவு கடன் சங்கத்தின் மேற்கத்தியானூர் வினாயகபுரம் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கந்திலி ஊராட்சி ஒன்றியம், சி.2579 பேராம்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் வினாயகபுரம் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு புதிய அரசு கட்டடம் கட்டப்பட்டு, 13-12-2018 முதல் அப்புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

16—

நியாய விலைக் கடையில் பொருட்களை விற்பனை செய்தல்

வினா எண் 37766—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், கும்மனூர் கிராமத்திலுள்ள BP 042 நியாய விலைக் கடையில் அனைத்துப் பொருட்களும் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சோழவரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கும்மனூர் முழுநேர நியாய விலைக் கடை 512

குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் டீ தூள், அரசு உப்பு ஆகியவை மாதந்தோறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களின் விருப்பத்தின்பேரில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

17—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 48005—திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், இருளஞ்சேரி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பேரம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இருளஞ்சேரி முழுநேர நியாய விலைக் கடை 540 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அரசு வழிகாட்டி நெறிகளின்படி, கிராமப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், பிரிக்கப்பட்டபின் தாய் அங்காடியில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியில் அரசுக் கட்டடம்/ பஞ்சாயத்துக் கட்டடம் இருக்க வேண்டும். இருளஞ்சேரி நியாய விலைக் கடையில் 540 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால், இக்கடையை இரண்டாகப் பிரிக்கும்பட்சத்தில், தாய் நியாய விலைக் கடையில் 500 குடும்ப அட்டைகளுக்கும் குறைவாகவே இருக்கும் என்பதால் அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் இருளஞ்சேரி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரிக்க சாத்தியக்கூறுகள் இல்லாததால், அவற்றிற்கு புதிய கட்டடம் கட்டும் நேர்வு எழவில்லை.

2020 ஜனவரி 9]

18—

கூட்டுறவு வங்கியை செயல்படுத்துதல்

வினா எண் 50377—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், பாலையப்பட்டி தெற்கு ஊராட்சியில் உள்ள கூட்டுறவு வங்கியை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பூதலூர் ஒன்றியம்,பாலையப்பட்டி தெற்கு ஊராட்சியை சேர்ந்தவர்கள் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செங்கிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

பாலையப்பட்டி தெற்கு ஊராட்சியின் மக்கள் தொகை 2,510 ஆகும். இதில் செங்கிப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினராக உள்ளோர் எண்ணிக்கை 252 மட்டுமே ஆகும்.

மேலும், அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் புதிதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை துவக்க தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் புதிதாக தொடங்கப்படும் சங்க எல்லைக்குள் குறைந்தபட்சம் 2000 ஹெக்டேர் அல்லது 4950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். ஆனால், பாலையப்பட்டி கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 689 ஹெக்டேர் மட்டுமே உள்ள நிலையில், மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனை பூர்த்தியாகாத காரணத்தினால், பாலையப்பட்டி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

19—

நியாய விலைக் கடையில் பொருட்கள் வழங்குதல்

வினா எண் 50390—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், சிதம்பரபட்டி கிராம மக்களுக்கு வீமண்பட்டியிலுள்ள நியாய விலைக் கடைக்கு பதிலாக காத்தாட்டிபட்டி நியாய விலைக் கடையிலிருந்து பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், புதுக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் புதுக்குடி தெற்கு முழுநேர நியாய விலைக் கடை 239 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. சிதம்பரப்பட்டி கிராமத்தை சேர்ந்த 20 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே புதுக்குடிதெற்கு நியாய விலைக்கடையில் பயன்பெற்று வருகிறார்கள். குடும்ப அட்டைதாரர்கள் விரும்பினால் இணையத்தின்மூலம் நேரடியாக கடை மாற்றத்திற்கு விண்ணப்பித்து காத்தாட்டிபட்டி (பாளையம்பட்டி வடக்கு) கடைக்கு மாற்றிக் கொள்ளலாம்.

20—

அடிப்படை வசதிகள் செய்தல்

வினா எண் 18059—திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, முத்துரங்கம் பூங்காவில் கண்காணிப்புக் கேமரா பொருத்தவும், கழிவறையை செப்பனிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி, 35-வது வார்டு, முத்துரங்கம் பூங்காவில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

21—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 22766—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊராட்சிகளில் பணிபுரியும் தொகுப்பூதிய பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து 1-10-2010 அன்று மூன்றாண்டுகள் பணி முடித்த துப்புரவு பணியாளர்கள் அனைவரும் அரசாணை எண் 39, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 7-5-2013-ன்படி சிறப்பு காலமுறை ஊதியத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசாணை (நிலை) எண் 129, நாள் 14-9-2013-ன்படி மக்கள் தொகைக்கேற்ப கூடுதலாக பணியமர்த்தப்பட்டு, மூன்றாண்டு பணி முடித்த, தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் பணியானது பகுதிநேர பணி என்பதால் நடைமுறையிலுள்ள அரசாணைகளின் அடிப்படையில் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு

வருகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களை சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணி நிரந்தரம் செய்ய வழிவகையில்லை.

22—

பொது சுகாதார வளாகம் அமைத்தல்

வினா எண் 44872—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, 25-வது வார்டு, இரயில்வே நிலைய சாலையில் பொது சுகாதார வளாகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி, 25-வது வார்டு இரயில்வே நிலைய சாலையில் பொது சுகாதார வளாகம் அமைக்க நகராட்சிக்கு சொந்தமாக போதிய இட வசதி இல்லை. ஆதலால் இவ்விடத்தில் நகராட்சிமூலம் பொது சுகாதார வளாகம் அமைக்க வழிவகை இல்லை.

23—

பூங்கா திறத்தல்

வினா எண் 46934—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி, செல்வம் நகரில் அம்ரூட் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பூங்காவை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் நகராட்சி, செல்வம் நகரில் அம்ரூட் திட்டத்தின்கீழ் ரூ.43.421 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட பூங்கா 10-3-2019 முதல் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

24—

மீன் விற்பனை மையம் அமைத்தல்

வினா எண் 1854—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஒவ்வொரு வட்டத்திலும் நவீன மீன் விற்பனை மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 59 தனியார் மீன் சந்தைகள் செயல்பட்டு வருவதால் ஒவ்வொரு வட்டத்திலும் புதிதாக மீன் விற்பனை மையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

25—

மீன்பிடித் துறைமுகம் தொடங்குதல்

வினா எண் 22301—திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவொற்றியூர் தொகுதியில் விரைவில் மீன்பிடித்துறைமுகத்தை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்திட, மத்திய அரசின் மீன் வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியத்தின் (FIDF) கீழ் 200 கோடி ரூபாய்க்கு அரசு, நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

26—

முகத்துவாரங்களை தூர்வாருதல்

வினா எண் 39477—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யூர் தொகுதிக்குட்பட்ட கடலோரங்களில் உள்ள முகத்துவாரங்களை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

செய்யூர் தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களான கடலூர் சின்னகுப்பம், முதலியார் குப்பம் மற்றும் ஆலம்பரை குப்பம் ஆகிய பகுதிகளில் முகத்துவாரங்கள் அமைந்துள்ளன. தற்போது வரை இம்மூன்று முகத்துவாரங்களும் எவ்வித தடைகளுமின்றி மீன் பிடிப்பதற்கு ஏதுவாக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆற்று முகத்துவாரங்களை சீரமைப்பது தொடர்பாக மீனவ பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

உதவி இயக்குநர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 47315—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்*

2020 ஜனவரி 9]

துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, தூத்தூர் பகுதியில் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு ஒரு மீன் துறை துணை இயக்குநர் அலுவலகமும், நாகர்கோவில், குளச்சல் மற்றும் கன்னியாகுமரியை தலைமையிடமாகக் கொண்டு மூன்று மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகங்களும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. குளச்சல், மீன் துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் தூத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மீன் துறை ஆய்வாளர் பணியிடம் ஏற்படுத்தப்பட்டு தூத்தூர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களது கோரிக்கைகள் மற்றும் நிவாரண திட்டங்கள் போன்ற அரசு திட்டங்களை செயல்படுத்த மீன் துறை ஆய்வாளர் பணியாற்றி வருகிறார். இந்நிலையில் மேலும் கூடுதலாக/புதிதாக ஒரு மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தூத்தூரில் ஏற்படுத்தும் அவசியம் எழவில்லை.

28—

நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 23730—திரு. அ. பிரபு: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் வட்டத்தில், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் வட்டத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

கரும்பு நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 34810—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைமூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய கரும்பு நிலுவைத் தொகையை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு ஆண்டுதோறும், கரும்பிற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையை (Fair and Remunerative Price) *அகில இந்திய அளவிலும், தமிழ்நாடு அரசு, மாநில அரசு பரிந்துரை விலையையும்* (State Advised Price) *அறிவித்து வந்தது.*

முந்தைய பருவங்களில் இந்திய மற்றும் உலக சந்தையில் சர்க்கரை மற்றும் உபபொருட்களின் விற்பனை விலையில் ஏற்பட்ட சரிவால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்து தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நட்டத்தைச் சந்தித்தன. அதனால் சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்கு காலத்தே கரும்பு விலையினை வழங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு நிலுவையாக வைத்துள்ளன.

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை 2018-2018 பருவம் வரை மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையை

2020 ஜனவரி 9]

வழங்கி முடித்து விட்டது. மாநில அரசு பரிந்துரை விலையைப் பொறுத்தவரை 2014-2015 ஆம் பருவம் வரை நிலுவையின்றி விவசாயிகளுக்கு வழங்கி விட்டது. 2015-2016 மற்றும் 2016-2017 ஆம் பருவங்களில் முறையே ரூ.4.83 கோடி மற்றும் ரூ.5.99 கோடி மாநில அரசு பரிந்துரை விலை நிலுவைத் தொகையை திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையால் வழங்கப்பட வேண்டியுள்ளது. மாநில அரசு பரிந்துரை விலை நிலுவை, ஆலையின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

30—

தொழிற்சாலைகள் துவங்குதல்

வினா எண் 38600—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், தகுந்த தொழில்முனைவோர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதி ஆதாரங்களுடன் முன்வந்தால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அவர்களுடன் இணைந்து திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன்வரும்பட்சத்தில் அவர்களை கவரும்விதமாக தொழில் கொள்கை 2014-ன்படி தொகுப்புச் சலுகை வழங்கப்படும்.

[*2020 ஜனவரி 9*

31—

கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் செயல்படுத்துதல்

வினா எண் 46765—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அருகே உள்ள தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை அருகே உள்ள தலைஞாயிறு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையினை புனரமைத்து இயக்குவது தொடர்பான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தேசிய கூட்டமைப்பிற்கு (National Federation of Co—operative Sugar Factories) *வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தேசிய கூட்டமைப்பிடமிருந்து விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.*

32—

விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்குதல்

வினா எண் 46791—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் 2015—2016 மற்றும் 2016—2017 ஆம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2020 ஜனவரி 9]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசு ஆண்டுதோறும், கரும்பிற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையை (Fair and Remunerative Price) *அகில இந்திய அளவிலும், தமிழ்நாடு அரசு மாநில அரசு பரிந்துரை விலையையும்* (State Advised Price) *அறிவித்து வந்தது.*

முந்தைய பருவங்களில் இந்திய மற்றும் உலக சந்தையில் சர்க்கரை மற்றும் உபபொருட்களின் விற்பனை விலையில் ஏற்பட்ட சரிவால் உற்பத்திச் செலவுக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்து தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நட்டத்தைச் சந்தித்தன. இருப்பினும், தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலையினை 2017-2018 பருவம் வரை நிலுவையின்றி விவசாயிகளுக்கு வழங்கி உள்ளது.

மாநில அரசு பரிந்துரை விலை நிலுவையாக 2015-2016 மற்றும் 2016-2017 ஆம் பருவங்களில் முறையே ரூ.12.07 கோடி மற்றும் ரூ.11.79 கோடி வழங்கப்பட வேண்டியுள்ளது. இருப்பினும், 2017-2018 பருவத்திற்கு மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு மேல் மாநில அரசு டன் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் 2017-2018 அரவைப் பருவத்தில் அரவை செய்த கரும்பிற்கு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வழங்கியுள்ளது. மேலும், கடந்த பருவங்களின் மாநில அரசு பரிந்துரை விலை நிலுவைத் தொகையை ஆலையின் நிதி நிலைமை மேம்பாடு அடைந்தவுடன் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 50163—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணத்தை அடுத்த தேவனோடை கிராமத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நடப்பு கே.எம்.எஸ். 2018-2019 ஆம் கொள்முதல் பருவத்தில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி கும்பகோணம் தொகுதி, பாபநாசம் வட்டம், தேவனோடை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் 21-1-2019 அன்று திறக்கப்பட்டு, 915 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 201 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கான தொகை ரூ.1,68,94,800/- விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டது. மேலும், நெல்வரத்து இல்லாத காரணத்தினால் 12-4-2019 முதல் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று நெல் கொள்முதல் நிலையம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

34—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 50375—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், மனையேரிப்பட்டி கிராமத்தில் உள்ள மீதமுள்ள குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஒன்றியம், மனையேரிப்பட்டி கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை எண் 19IP077PN, 321 *குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. மேற்கூறிய கிராமத்தில் அனைவருக்கும் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. தற்போது புதிய குடும்ப அட்டை கோரி*

2020 ஜனவரி 9]

மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. பொது மக்கள் பயன்பாட்டிற்கென www.tnpds.gov.in *என்ற இணையமும்* TNePDS *என்றகைபேசிசெயலியும்உருவாக்கப்பட்டுள்ளன.புதியதாகமின்னணு குடும்ப அட்டை பெற விரும்பும் பொது மக்கள் இணையத்தின் வழியாக ஆதார் விவரங்களுடன் விண்ணப்பிக்கும்பட்சத்தில் உரிய தலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தகுதியின் அடிப்படையில் புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.*

35—

நெசவாளர்களுக்கு பட்டு, பாவு, சரிகை வழங்குதல்

வினா எண் 45945—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணத்தை அடுத்த திருபுவனத்தில் உள்ள திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தில் நெசவாளர்களுக்கு பட்டு, பாவு, சரிகை காலதாமதமின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 12-11-1955 அன்று பதிவு செய்யப்பட்டு 24-11-1955 முதல் இயங்கி வருகிறது. சங்கத்தில் உள்ள 1806 தறிகளில் 1325 தறிகள்மூலம் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.268.93 இலட்சம் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.393.77 இலட்சம் மதிப்புள்ள பட்டுச் சேலைகள் சங்க தலைமையக விற்பனை நிலையம் மற்றும் 27 முகவர்/கிளை விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டு தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

சங்கத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு:

ரூ.இலட்சத்தில்

வ.எண்	ஆண்டு	உற்பத்தி மதிப்பு	விற்பனை மதிப்பு	இலாபம்
1.	2013—2014	3221.89	4053.92	792.28
2.	2014—2015	3119.66	4263.04	643.58
3.	2015—2016	3080.35	4378.17	706.87
4.	2016—2017	3232.67	4523.94	716.47
5.	2017—2018	3227.22	4725.33	704.24

சங்கத்தின் விற்பனையினை கருத்திற்கொண்டு ஆண்டுதோறும் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும், திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தில் நெசவாளர்களுக்கு பட்டு, பாவு, ஜரிகை காலதாமதமின்றி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

36—

ஆடுகள், மாடுகள் வளர்த்தல்

வினா எண் 9921—திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் அதிகமாக ஆடுகள் மற்றும் மாடுகள் வளர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி எண் 110-ன்கீழ் 13-2-2019 அன்று சேலம் தலைவாசல் கூட்ரோட்டில் ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா ஒன்று அமைப்படும் என அறிவித்தார்கள். சின்னசேலம் ஆட்டுப் பண்ணை நிலத்தில் அமையவுள்ள இத்திட்டத்தில் அதிக அளவில் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் மற்றும் பசுக்களை உள்ளடக்கிய பல்துறை பல்நோக்குடன்கூடிய

2020 ஜனவரி 9]

நவீன கால்நடை பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

37—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 16547—திரு. அ. பிரபு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், மடம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், மடம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

38—

கால்நடை மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்குதல்

வினா எண் 53506—டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் போதிய மருந்துகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

செய்யூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து கால்நடை நிலையங்களிலும் கால்நடைகளுக்கு தினசரி சிகிச்சை மற்றும்

குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளை மேற்கொள்ள தேவையான போதிய மருந்துகள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ஆண்டுக்கு ரூ.1,09,000/- மதிப்பில் பல தரப்பட்ட மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு தொகுதிக்குட்பட்ட அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

39—

மகப்பேறு மருத்துவர் நியமித்தல்

வினா எண் 39597—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 34 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, அதில் தற்போது 3 மயக்கவியல் மருத்துவர், 1 தோல் மருத்துவர், 3 ENT மருத்துவர், 4 பொது மருத்துவர், 3 பொது அறுவை சிகிச்சை மருத்துவர், 4 மகப்பேறு மருத்துவர், 1 கண் மருத்துவர், 3 எலும்பு முறிவு மருத்துவர், 5 குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் 1 Radiologist உட்பட 28 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். காலிப்பணியிடங்களும் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் நிரப்பப்படும்.

இம்மருத்துவமனையில் தற்போது 4 மகப்பேறு மருத்துவர்கள் பணியில் உள்ளனர். இவர்களைக் கொண்டு மகப்பேறு சிகிச்சைகள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாக 470 பிரசவங்களும், 240 அறுவை சிகிச்சை பிரசவங்களும்

2020 ஜனவரி 9]

நடைபெறுகின்றன. அங்கு போதுமான எண்ணிக்கையில் மகப்பேறு மருத்துவர்கள் பணியில் உள்ளனர்.

40—

ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை சீரமைத்தல்

வினா எண் 47253—திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆலங்குடி தொகுதி முழுவதும் கஜா புயலால் பாதிக்கப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட கொத்தமங்கலம், கீரமங்கலம், நெடுவாசல், வடகாடு, திருவரங்குளம், வல்லத்திராகோட்டை, வெண்ணாவல்குடி, சிலட்டூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் கஜா புயல் நிவாரண நிதி மூலமாகவும், நன்கொடை மூலமாகவும் பழுதுகள் சரிசெய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்களில் கஜா புயலால் விழுந்த மரங்கள் கஜா புயல் நிவாரண நிதி மூலமாக அகற்றி சரிசெய்யப்பட்டுள்ளன.

மேலும், நடப்பு நிதியாண்டில் அரையப்பட்டி, மேற்பனைக்காடு, பூவைமாநகர், மறமடக்கி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள பழுதினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44955—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், பாக்கம், பாலப்பட்டு, பள்ளியம்பட்டு, பழவலம், பொன்னங்குப்பம் மற்றும் பொன்பத்தி ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மன் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள

ALONE TRIUMPHS

2020 ஜனவரி 9]

அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

42—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44961—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், பெருங்காப்பூர், கவரை, கோணை, கொணலூர் மற்றும் கணக்கன்குப்பம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	*25,401*	*25,401*	*1,35,000*
2016-2017	*66,211*	*66,211*	*4,53,631*
2017-2018	*35,720*	*35,720*	*2,89,539*

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

43—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44967—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், காட்டுசித்தாமூர், மாதப்பூண்டி,மழவந்தாங்கல்,மணலப்பாடி,மாத்தூர்திருக்கைமற்றும் மீனம்பூர் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம்

2020 ஜனவரி 9]

ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

44—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44973—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2020 ஜனவரி 9

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், மேலருங்குணம், மேல்எடையாளம்,மேல்பாப்பாம்பாடி,நாகலாம்பட்டு,அணையேரி, அத்தியூர் மற்றும் தேவதானம்பேட்டை ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள

2020 ஜனவரி 9]

அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

45—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44980—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கலத்தம்பட்டு, அண்ணமங்கலம், தேவனூர், அவலூர்பேட்டை, ஆத்திப்பட்டு, தேவந்தவாடி மற்றும் எதப்பட்டு ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	*25,401*	*25,401*	*1,35,000*
2016-2017	*66,211*	*66,211*	*4,53,631*
2017-2018	*35,720*	*35,720*	*2,89,539*

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

46—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 44987—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், எய்யில், ஈயக்குணம், செங்கபுரம், கூடுவாம்பூண்டி, கடலி, சாத்தாம்பாடி மற்றும் சாத்தனந்தல் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மன் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில்

2020 ஜனவரி 9]

செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

47—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 45005—திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2020 ஜனவரி 9

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், தென்புதுப்பட்டு, திருவதிக்குன்னம், ஊரணிதாங்கல், வரிக்கல், வேலந்தாங்கல் மற்றும் போத்துவாய் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத்துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	25,401	25,401	1,35,000
2016-2017	66,211	66,211	4,53,631
2017-2018	35,720	35,720	2,89,539

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள

2020 ஜனவரி 9]

அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

48—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 45011—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், புதுப்பாளையம், புலிப்பட்டு, புத்தகரம், ரெட்டிப்பாளையம், சத்தியமங்கலம் மற்றும் சிங்கவரம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. முதல் சுழற்சி 2015-2016 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் புவியியல் விவரங்களுடன்கூடிய கட்ட அடிப்படையில், இறவையில் 2.5 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் 10 எக்டருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு, பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அந்தப் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பின்வருமாறு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடம்	மண் மாதிரி சேகரம் (எண்கள்)	மண் மாதிரி ஆய்வு (எண்கள்)	விநியோகிக்கப்பட்ட மண்வள அட்டைகள் (எண்கள்)
2015-2016	**25,401**	**25,401**	**1,35,000**
2016-2017	**66,211**	**66,211**	**4,53,631**
2017-2018	*35,720*	*35,720*	*2,89,539*

2018-2019 ஆம் ஆண்டில் சுமார் 43,852 மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்யப்பட்டு அதன்மூலம் சுமார் 2,80,123 மண்வள அட்டைகள் வழங்க திட்டமிடப்பட்டு, இதுவரை 43,852 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதில் 13,536 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனடிப்படையில் 25,875 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, மண்வள அட்டைகள் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவசமாக மண்வள அட்டைகள் 2 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகின்றன.

49—

மாதிரி மண் பரிசோதனை

வினா எண் 45017—திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி ஒன்றியம், சிறுநாம்பூண்டி, சிட்டாம்பூண்டி, செம்மேடு, சே.பேட்டை, செத்தவரை, சோ.குப்பம் மற்றும் தடாகம் ஆகிய ஊராட்சிகளில் வேளாண்மைத் துறையின்மூலம் மாதிரி மண் பரிசோதனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்வள அட்டை திட்டமானது, இரு வருட சுழற்சியின் அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில்

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை@ *இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை*

@ *490 முதல் 494 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளது.*

இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 6,580.15 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 3,952.48 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 2,627.67 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2019 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20 ஆம் நாளன்று, 2019–2020 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், “புதுப் பணிகள்” மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. 2020 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புகளுடன் 1,000 ரூபாய் ரொக்கத் தொகையும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2,363.13 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 13–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–45

4. சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ் இரண்டு மின் தொடரமைப்புத் திட்டங்களை நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 4,332.57 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. இத்தொகை, ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கடனுதவித் தொகை மற்றும் தமிழ்நாடு அரசின் பங்கு மூலதன உதவியான 1,000 கோடி ரூபாயையும் உள்ளடக்கியது. நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கென துணை மதிப்பீடுகளில் மொத்தமாக 108 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. திண்டுக்கல், இராமநாதபுரம், நீலகிரி, திருப்பூர், விருதுநகர், நாமக்கல், திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்காக மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு 3,266.47 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முதற்கட்டமாக துணை மதிப்பீடுகளில் 90 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 19-மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் இணைந்து, கிராமப்புறங்களில் உள்ள சிறிய நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளைப் புதுப்பிக்கும் பணிகளுக்காக 2019-2020 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 500 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 346.04 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

7. கரும்புக்கான நியாயமான மற்றும் ஆதாய விலை (FRP) நிலுவைத் தொகையை வழங்கிட 10 கூட்டுறவு மற்றும் 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 143.73 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. மேலும், நேஷனல், அமராவதி மற்றும் என்.பி.கே. ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தங்கள் பணியாளர்களுக்கு சட்டப்படியான நிலுவைத் தொகைகளை செலுத்துவதற்கு 28.74 கோடி ரூபாயை வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் மொத்தமாக 175.02 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாட்டில், திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் வெள்ளத்தால் அதிக பாதிப்படையக்கூடிய கரையோரப் பகுதிகளில் நீண்ட கால வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 290.78 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கென துணை மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு' என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

9. 2019–2020 ஆம் ஆண்டில் 2,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவியாக 450 கோடி ரூபாயையும், தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகத்திற்கு பங்கு மூலதன உதவியாக 150 கோடி ரூபாயையும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதித்துள்ளது. இதுபோக, நிலுவை ஊக்க ஊதியம் மற்றும் கருணைத் தொகைகளைச் செலுத்துவதற்காக, மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு வழிவகை முன்பணமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 206.53 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகைகள் துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. கோயம்புத்தூர் விமான நிலைய ஓடுதளத்தை விரிவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நில எடுப்பிற்கான இழப்பீட்டுத் தொகையை நில உரிமையாளர்களுக்கு வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 189.30 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 48–போக்குவரத்துத் துறை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	90,44	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	—	—
3	நீதி நிருவாகம்	5,59,20	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	32	7	—
5	வேளாண்மைத் துறை	192,87,10	7,24,37	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*157,37,23*	*15,00,01*	—
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*21,67,43*	*16,98,01*	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	*57,10*	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	*2,07,49*	*3*	—
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*11,66,61*	—	—
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	*19,94,72*	—	—
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	*2,00,08*	*1*	*37,50*
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	*2,363,76,65*	*2,50,00*	—
14	எரிசக்தித் துறை	*2,48,86*	*45,00,00*	*63,00,00*
16	நிதித் துறை	*9,11*	—	—
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	*1,02,14*	*1,20,00*	*45,00*

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	11,51,70	—	—
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	89,14,93	93,33,01	—
20	உயர் கல்வித் துறை	49,77,69	4	—
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	2,19,27	41,78,01	—
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	8,18,33	2	—
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	93,98	1	—
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7	1	—
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	85,35	—	—
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	47,09,21	—	—
27	தொழில் துறை	5,96,62	73,78,00	264,34,74
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	13,41,84	—	—
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	10,28,14	5,00,70	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	—	—
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	15,90,87	—	—
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	24,84,56	17,66,08	—
33	சட்டத் துறை	4	—	—
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	58,83,13	5,00,01	—
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	12	2	—
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	6	—	—
38	பொதுத் துறை	50,55,64	—	—
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	72,63	89,70,37	—
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	24,99	24,86,92	—
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	5,94,88	10,02	—
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	359,87,61	468,64,60	—
43	பள்ளிக் கல்வித் துறை	73,97,19	—	—
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	4,07,30	—	—
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	4,41,98	4	—
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	85,30	—	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	*27,22*	—	—
48	போக்குவரத்துத் துறை	*49,76*	*694,38,85*	*206,52,48*
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	*2,60,18*	—	—
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	*1*	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*220,08,51*	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	*7*	*1*	—
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	*42,62,63*	*39,98,39*	*16,72,00*
	பெருமொத்தம்	*3,887,76,32*	*1,642,17,61*	*551,41,72*

முற்பகல் 11–50

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதி 13, உட்பிரிவு (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத்

2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தள்ளிவைத்து, 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019–2020, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

“In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation, for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year 2019–2020.”

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019–2020, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 9–1–2020 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2019–2020 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	90,44	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	—	—
3	நீதி நிருவாகம்	5,59,20	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	32	7	—
5	வேளாண்மைத் துறை	192,87,10	7,24,37	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	***157,37,23***	***15,00,01***	—
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	***21,67,43***	***16,98,01***	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	***57,10***	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	***2,07,49***	***3***	—
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	***11,66,61***	—	—
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	***19,94,72***	—	—
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	*2,00,08*	*1*	*37,50*
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	***2,363,76,65***	***2,50,00***	—
14	எரிசக்தித் துறை	*2,48,86*	*45,00,00*	*63,00,00*
16	நிதித் துறை	***9,11***	—	—
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	*1,02,14*	*1,20,00*	*45,00*

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	11,51,70	—	—
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	89,14,93	93,33,01	—
20	உயர் கல்வித் துறை	49,77,69	4	—
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	2,19,27	41,78,01	—
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	8,18,33	2	—
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	93,98	1	—
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7	1	—
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	85,35	—	—
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	47,09,21	—	—
27	தொழில் துறை	5,96,62	73,78,00	264,34,74
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	13,41,84	—	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	10,28,14	5,00,70	—
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	2	—	—
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	15,90,87	—	—
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	24,84,56	17,66,08	—
33	சட்டத் துறை	4	—	—
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	58,83,13	5,00,01	—
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	12	2	—
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	6	—	—
38	பொதுத் துறை	50,55,64	—	—
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	72,63	89,70,37	—
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	24,99	24,86,92	—
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	5,94,88	10,02	—
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	359,87,61	468,64,60	—
43	பள்ளிக் கல்வித் துறை	73,97,19	—	—

TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	4,07,30	—	—
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	4,41,98	4	—
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	85,30	—	—
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	27,22	—	—
48	போக்குவரத்துத் துறை	49,76	694,38,85	206,52,48
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,60,18	—	—
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	220,08,51	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	7	1	—
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	42,62,63	39,98,39	16,72,00
பெருமொத்தம்		**3,887,76,32**	**1,642,17,61**	**551,41,72**

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் *(அறிமுகம் செய்தல்)*—
தொடர்ச்சி

(ஔ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

11. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—விவாதத்திற்கான பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். 61 மாண்புமிகு*

உறுப்பினர்கள் தங்களுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் உறுப்பினரும் திருத்தங்களை முன்மொழிந்து பேசினால் காலதாமதம் ஆகும் என்பதால், நான் திருத்தங்களை முன்மொழிகின்ற உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன். திருத்தங்களை முன்மொழியும் உறுப்பினரும், வழிமொழியும் உறுப்பினரும் உட்கார்ந்த இடத்திலிருந்தே கையை உயர்த்தினால் போதும். மாண்புமிகு உறுப்பினர்களின் திருத்தங்களைப் பதிவு செய்துகொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. செய்யூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

2. செய்யூர் தொகுதி, செய்யூர் அரசு பொது மருத்துவமனையில் மருத்துவ உபகரணங்களான ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே அமைத்து, தேவையான கட்டடங்கள் கட்டி, மருத்துவமனையைப் பராமரிப்பது குறித்தும்;

3. செய்யூர் தொகுதி, செய்யூரில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்தும்;

4. செய்யூர் தொகுதி, செய்யூர் பேருந்து நிலையத்தில் அமரும் இருக்கைகள் மற்றும் பேருந்து நிலையம் முழுவதும் பேவர் பிளாக் தரை அமைத்து பராமரிப்பது குறித்தும்;

5. செய்யூர் தொகுதியில் உள்ள படித்த மாணவ மாணவிகளுக்கு கல்பாக்கம் அணுமின் நிலையத்திலும், தனியார் தொழிற்சாலைகளிலும் முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவது குறித்தும்;

6. செய்யூர் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;

7. செய்யூர் தொகுதியில் பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) அமைப்பது குறித்தும்;

8. செய்யூர் தொகுதியில் அரசு சுற்றுலா பயணியர் மாளிகை அமைப்பது குறித்தும்;

9. செய்யூர் தொகுதியில் அனைத்து தேர்வு போட்டிகளில் பங்குபெற்று தேர்ச்சிபெறும் வகையில், தேர்வு பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;

10. செய்யூர் தொகுதியில் சிப்காட் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

11. செய்யூர் தொகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்களை நியமித்து மருந்துகள் மற்றும் தேவையான உபகரணங்களை உடனடியாக வழங்குவது குறித்தும்;

12. செய்யூர் தொகுதியில் கூடுதலாக பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

13. செய்யூர் தொகுதியில் வெண்ணாங்குப்பட்டு முதல் மாமல்லபுரம் வரை உள்ள தரம் உயர்த்தப்பட்ட கடப்பாக்கம் (ஈ சி ஆர்) அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24X7 நேரமும் இயங்கக்கூடிய விபத்துகால மருத்துவமனையாக மாற்றி அமைப்பது குறித்தும்;

14. செய்யூர் தொகுதியில் உள்ள நெரும்பூர், வள்ளிபுரம், கூவத்தூர், கேநெல்வாய், பவுஞ்சூர், பொலம்பாக்கம், சூனாம்பேடு, கயப்பாக்கம் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள், (எக்ஸ்ரே–ஸ்கேன்) கட்டடம், குடிநீர், கழிவறை போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

15. செய்யூர் தொகுதியில் மூன்று கிராமங்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைத்து அதற்கான மருத்துவரை நியமிப்பது குறித்தும்;

16. செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர் பஜார், சௌபாக்கியா நகர், தேவராஜபுரம் வடக்கு செய்யூர், மேற்கு செய்யூர், வெள்ளிமேடு மற்றும் தொகுதிக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் மழைநீர் வடிகால்வாய் அமைப்பது குறித்தும்;

17. செய்யூர் தொகுதி, சித்தாமூர் மற்றும் இலத்தூர் ஆகிய ஒன்றியங்களில் உள்ள உதவி தொடக்க கல்வி அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

18. செய்யூர் தொகுதி, சித்தாமூர் குழந்தைகள் நல அலுவலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

19. செய்யூர் தொகுதியில் தேவையான இடங்களில் குழந்தைகள் மைய கட்டடம் கட்டுவது குறித்தும்;

20. செய்யூர் தொகுதியில் உள்ள ஈ.சி.ஆர்., ஜி.எஸ்.டி. சாலைகளில் உள்ள வாயலூர், காத்தான்கடை, கூவத்தூர், பவுஞ்சூர், செய்யூர், சித்தாமூர், சோத்துப்பாக்கம், சூனாம்பேடு, வெண்ணாங்குப்பட்டு, கடப்பாக்கம், எல்லையம்மன்கோவில் மற்றும் தேவையான பகுதிகளில் சிசிடிவி கேமரா பொருத்துவது குறித்தும்;

21. செய்யூர் தொகுதியில் உள்ள அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர், குடிநீர், கழிவறை வசதிகள் செய்வது குறித்தும்;

22. செய்யூர் தொகுதியில் அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர், அலுவலர் பணியிடங்களை விரைவாக நிரப்புவது குறித்தும்;

23. செய்யூர் தொகுதியில் அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

24. செய்யூர் தொகுதியில் அரசு ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

25. செய்யூர் தொகுதியில் அரசு ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

26. செய்யூர் தொகுதியில் அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மாணவ, மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

27. செய்யூர் தொகுதியில் அரசு ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் குடிநீர், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

28. செய்யூர் தொகுதியில் அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகளில் குடிநீர், கழிவறை மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

2020 ஜனவரி 9] [டாக்டர் ஆர்.டி. அரசு]

29. செய்யூர் தொகுதியில் அரசு ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள விடுதி காப்பாளர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

30. செய்யூர் தொகுதியில் அரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள விடுதி காப்பாளர் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

31. செய்யூர் தொகுதியில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அகற்றியும், தேவைப்படும் இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைப்பது குறித்தும்;

32. செய்யூர் தொகுதியில் உள்ள *105* ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளின் அனைத்து இடங்களிலும் புதியதாக தெருக்குழாய்கள் அமைப்பது குறித்தும்;

33. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் புதியதாக சிமெண்ட் மற்றும் தார்ச் சாலைகள் அமைப்பது குறித்தும்;

34. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் புதிய கல்வெட்டுக்கள் அமைப்பது குறித்தும்;

35. செய்யூர் தொகுதியில் வெடால், வடபட்டிணம், அமந்தங்கரணை, நாங்களத்தூர் மற்றும் இதர பகுதிகளில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

36. செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், இரும்புலிசேரி தற்காலிக தரைப்பாலத்தை அகற்றி புதிய மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

37. செய்யூர் தொகுதி, இலத்தூர் ஒன்றியம், அணைக்கட்டு– பொய்கைமடு பகுதியில் கிளியாறு, பாலாற்றின் குறுக்கே புதிய தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;

38. செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம் சோத்துப்பாக்கம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

39. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை முதல் போளூர் வரையிலான சாலை விரிவுபடுத்தும் பணியை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

40. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை முதல் போளூர் வரையிலான சாலை விரிவுபடுத்தும் பணிக்காக கையகப்படுத்தப்படும் இடத்திற்கு நில உரிமையாளர்களுக்கு அரசு வழிகாட்டி மதிப்பின்படி நான்கு மடங்கு தொகையை விரைந்து வழங்குவது குறித்தும்;

41. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை முதல் போளூர் வரையிலான சாலை விரிவுபடுத்தும் பணிக்காக அகற்றப்படும் மரத்தின் உரிமையாளர்களுக்கு அரசு வழிகாட்டி மதிப்பின்படி நான்கு மடங்கு தொகையை விரைந்து வழங்குவது குறித்தும்;

42. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை முதல் பனையூர் பெரியகுப்பம் வரை, கிழக்கு கடற்கரை சாலை முதல் கொடூர் வரை, கிழக்கு கடற்கரை சாலை முதல் கடலூர் ஆலிகுப்பம், பெரியகுப்பம் வரை, புதுப்பட்டினம் குப்பம் முதல் சுடுகாடு வரை பக்கிங்காம் கால்வாயின்மேல் புதிய மேம்பாலங்கள் அமைப்பது குறித்தும்;

43. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் தேவைப்படும் இடங்களில் மயானம், சாலை வசதி, சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

44. செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர் பஜார் சால்ட் சாலை மற்றும் செய்யூர்–பவுஞ்சூர் சாலையை சீரமைப்பது குறித்தும்;

45. செய்யூர் தொகுதியில் அனைத்து பகுதிகளிலும் குடிசை வீடுகள் தீ விபத்துகளில் பாதிக்கப்படும்போது அரசு வழங்கும் உதவித் தொகையை 50 ஆயிரமாக உயர்த்தி வழங்குவது குறித்தும்;

46. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து மீனவ கிராமங்களிலும் தரைமட்ட மின் இணைப்பு வசதி அமைப்பது குறித்தும்;

47. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து மீனவர்களுக்கும் தரமான வாக்கி–டாக்கி விரைந்து வழங்குவது குறித்தும்;

48. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவ சமுதாய மாணவ–மாணவியர்கள் மீன் வளத் துறை பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க முன்னுரிமை வழங்குவது குறித்தும்;

49. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவ சமுதாய மாணவ–மாணவியர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க முன்னுரிமை வழங்குவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [டாக்டர் ஆர்.டி. அரசு]

50. செய்யூர் தொகுதியில் மீன்பிடிக்க செல்லும்போது விபத்துக்குள்ளாகி இறக்கும் மீனவர்கள் குடும்பத்திற்கு அரசு வழங்கும் உதவித் தொகையை ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தி வழங்குவது குறித்தும்;

51. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க செல்லும்போது விபத்துக்குள்ளாகி இறக்க நேரிடும்போது, குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்குவது குறித்தும்;

52. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு அரசு வழங்கியுள்ள வீட்டுமனைப் பட்டாக்களை வருவாய் பதிவேட்டில் பதிவு செய்வது குறித்தும்;

53. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து மீனவ கிராமங்களிலும் கடலரிப்பைத் தடுக்கும் வகையில் தூண்டில் வளைவுகள் மற்றும் பலூன் தடுப்புக்களை அமைப்பது குறித்தும்;

54. செய்யூர் தொகுதியில் மீனவர்களுக்கு மீன்பிடி தடைகாலத்தில் அரசு வழங்கும் மானியத் தொகையை ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தி வழங்குவது குறித்தும்;

55. செய்யூர் தொகுதியில் வசிக்கும் இருளர்களுக்கு விரைவாக வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

56. செய்யூர் தொகுதியில் வசிக்கும் இருளர்களுக்கு பசுமை வீடுகள் கட்டுவது குறித்தும்;

57. செய்யூர் தொகுதியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டுவது குறித்தும்;

58. செய்யூர் தொகுதியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு விரைவாக வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

59. செய்யூர் தொகுதியில் வசிக்கும் திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

60. செய்யூர் தொகுதியில் வசிக்கும் திருநங்கைகளுக்கு பசுமை வீடுகள் விரைந்து கட்டுவது குறித்தும்;

61. செய்யூர் தொகுதியில் அனைத்து மீனவப் பகுதிகளிலும் முகத்துவாரங்களை தூர்வாரும் இயந்திரத்தை அந்தப் பகுதியிலேயே நிரந்தரமாக வைத்திருப்பது குறித்தும்;

62. செய்யூர் தொகுதியில் உள்ள ஆலம்பரக்கோட்டை துறைமுகப் பணியை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

63. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரம் மற்றும் இடுபொருட்கள் மலிவு விலையில் அந்தந்த பகுதிக்குட்பட்ட வேளாண்மை கூட்டுறவு மையங்களில் தட்டுப்பாடின்றி வழங்குவது குறித்தும்;

64. செய்யூர் தொகுதியில் இயற்கை வேளாண்மை குறித்த விவரங்களை அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் துறை அதிகாரிகள் விவசாயிகளின் நிலங்களுக்குச் சென்று ஆலோசனை வழங்குவது குறித்தும்;

65. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உரிய நிவாரணத்தை அந்தந்தப் பகுதிக்குட்பட்ட வேளாண்மைக் கூட்டுறவு மையங்களில் தாமதமின்றி வழங்குவது குறித்தும்;

66. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பிரதம மந்திரி விவசாய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிவாரணத் தொகையை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவது குறித்தும்;

67. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறைமூலம் வழங்கப்படுகின்ற மினி டிராக்டர், டிராக்டர், பவர்டில்லர், அறுவடை இயந்திரம் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குவது குறித்தும்;

68. செய்யூர் தொகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை விரைந்து வழங்குவது குறித்தும்;

69. செய்யூர் தொகுதியில் உள்ள கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய காப்பீட்டுத் தொகையை விரைந்து வழங்குவது குறித்தும்;

70. செய்யூர் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான மண் பரிசோதனை விவரத்தை அந்தந்த விவசாயிகளுக்குத் தெரிவித்து, மண்ணின் தன்மைக்கேற்ப பயிர் செய்வது குறித்தும்;

71. செய்யூர் தொகுதியில் விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிட வேளாண்மை அலுவலர்கள் மேற்பார்வை செய்வது குறித்தும்;

72. செய்யூர் தொகுதியில், தென்னை விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களை மானிய விலையில் தட்டுப்பாடின்றி வழங்குவது குறித்தும்;

73. செய்யூர் தொகுதியில், தென்னை விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையை விரைவாக வழங்குவது குறித்தும்;

74. செய்யூர் தொகுதியில் உள்ள மா, பலா விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களை மானிய விலையில் தட்டுப்பாடின்றி வழங்குவது குறித்தும்;

75. செய்யூர் தொகுதியில், மாம்பழ குளிர்பதன நிலையம் அமைப்பது குறித்தும்;

76. செய்யூர் தொகுதியில் மாம்பழக்கூழ் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

77. செய்யூர் தொகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

78. செய்யூர் தொகுதியில் தேங்காய்நார் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

79. செய்யூர் தொகுதியில் பனைமர தொழிலை மேம்படுத்தி பதநீர் உற்பத்தி செய்வது குறித்தும்;

80. செய்யூர் தொகுதியில் இளம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் அனைவருக்கும் அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குவது குறித்தும்;

81. செய்யூர் தொகுதியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வசிக்கும் அனைத்து ஏழைகளுக்கும் முதியோர்களுக்கும் முதியோர் உதவித் தொகை விரைந்து வழங்குவது குறித்தும்;

82. செய்யூர் தொகுதியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் குடிசை வீட்டில் வசிக்கும் அனைத்து ஏழைகளுக்கும் (பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்) மற்றும் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவது குறித்தும்;

83. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடின்றி வழங்குவது குறித்தும்;

84. செய்யூர் தொகுதியில் வெடால், நாங்களத்தூர், பாளையூர், வெள்ளக்கொண்டஅகரம், இந்தலூர் பெரியார் நகர் மற்றும் தேவைப்படும் இடங்களுக்கு புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவது குறித்தும்;

85. செய்யூர் தொகுதியில் அனைத்து ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் குளங்களை தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

[டாக்டர் ஆர்.டி. அரசு] [2020 ஜனவரி 9

86. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் குளங்களில் புதியதாக மதகுகள் அமைப்பது குறித்தும்;

87. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து பொதுப் பணித் துறை ஏரிகள் மற்றும் குளங்களை தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

88. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து பொதுப் பணித் துறை ஏரிகளிலும் புதியதாக மதகுகள் அமைப்பது குறித்தும்;

89. செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், வெள்ளக் கொண்டஅகரம் பகுதியில் ஓங்கூர் ஆற்றின் கரையோரம் புதிய வெள்ளத் தடுப்பணை அமைப்பது குறித்தும்;

90. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை முதல் செய்யூர் இணைப்பு சாலை வரையிலான காளியம்மன் கோயில் சாலையை விரைந்து சீரமைப்பது குறித்தும்;

91. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளின் கட்டடங்களுக்கு வண்ணம் பூசுவது குறித்தும்;

92. செய்யூர் தொகுதியில் எல்லையம்மன் கோயில் செல்லும் பகுதியில் உள்ள மேம்பாலம் அருகே ஒரு வெள்ளத் தடுப்பணையும், முதலியார்குப்பம் பகுதியில் ஒரு வெள்ளத் தடுப்பணையும் அமைப்பது குறித்தும்;

93. செய்யூர் தொகுதி, பவுஞ்சூர், செய்யூர், கடப்பாக்கம், பொலம்பாக்கம், சூனாம்பேடு, நெற்குணம், கூவத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

94. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து இல்லங்களிலும் தனிநபர் இல்ல கழிப்பறை அமைப்பது குறித்தும்;

95. செய்யூர் தொகுதியில் உள்ள சமய பழங்கால கோயில்களை இந்து அறநிலையத் துறைமூலம் புனரமைப்பு செய்வது குறித்தும்;

96. செய்யூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் சமுதாயக் கூடங்கள் அமைப்பது குறித்தும்;

97. செய்யூர் தொகுதியில் புதிய தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

98. செய்யூர் தொகுதியில் ‘நீரா’ பானம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

2020 ஜனவரி 9] [டாக்டர் ஆர்.டி. அரசு]

99. செய்யூர் தொகுதியில் கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

100. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு மானிய விலையில் தரமான மீன்பிடி இயந்திரம் விரைந்து வழங்குவது குறித்தும்;

101. செய்யூர் தொகுதியில் உள்ள மீனவர்களுக்கு புதிய தரமான மீன்பிடி வலைகளை மானிய விலையில் விரைவாக வழங்குவது குறித்தும்;

102. செய்யூர்தொகுதியில்உள்ளஅனைத்துபகுதிகளிலும்பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றிடும் வகையில் குடியிருப்புகளுக்கு வெளியே குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

103. செய்யூர் தொகுதி மீனவர்களுக்கு வழங்கப்படும் வாக்கி–டாக்கி பராமரிப்புத் தொகையை அரசே செலுத்துவது குறித்தும்;

104. செய்யூர் தொகுதியில் உள்ள கடப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

105. செய்யூர் தொகுதியில் தேவைப்படும் இடங்களில் புதிய மின்கம்பங்கள் அமைப்பது குறித்தும்;

106. செய்யூர் தொகுதியில் தேவையான இடங்களில் புதிய (10 கே.வி.) மின்மாற்றி அமைப்பது குறித்தும்;

107. செய்யூர் தொகுதியில் பணியின்போது மின் விபத்தில் இறக்கும் பணியாளர்கள் குடும்பத்திற்கு உரிய நிவாரணத் தொகையை விரைந்து வழங்குவது குறித்தும்;

108. செய்யூர் தொகுதியில் பணியின்போது மின் விபத்தில் இறக்கும் பணியாளரின் வாரிசு ஒருவருக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் வாரியத்தில் விரைந்து பணி வழங்குவது குறித்தும்;

109. செய்யூர் தொகுதியில் மின் வாரியத்தில் தற்காலிக பணியாளராகப் பணிபுரியும் ஊழியர்களை தகுதியின் அடிப்படையில் பணி நிரந்தரம் செய்வது குறித்தும்;

110. செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி, கண்ணிமங்களம் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்துவது குறித்தும்;

111. செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், போரூர் பகுதிக்கு காப்புக்காட்டின் வழியே புதிய தார்ச் சாலை விரைந்து அமைப்பது குறித்தும்;

112. செய்யூர் தொகுதியில் காலியாக உள்ள வனக் காவலர் பணியிடங்களை விரைவாக நிரப்புவது குறித்தும்;

113. செய்யூர் தொகுதியில் கடலோரப் பகுதியில் அரசு அனுமதியில்லாமல் இயங்கும் இறால் குஞ்சு பொறிப்பு நிலையங்களை அகற்றுவது குறித்தும்;

114. செய்யூர் தொகுதியில் உள்ள பொலம்பாக்கம் அரசு தொழுநோய் மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவர்கள் நியமித்து தேவையான மருந்துகளை விரைந்து வழங்குவது குறித்தும்;

115. செய்யூர் தொகுதியில் சேம்புலிபுரம் துணைமின் நிலையம் அமைக்கும் பணியை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

116. செய்யூர் தொகுதியில் வசிக்கும் மக்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு சென்று வரும் வகையில் ஓங்கூர் ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

117. செய்யூர் தொகுதியில் தேவையான இடங்களில் புதிய உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பது குறித்தும்;

118. செய்யூர் தொகுதியில் உள்ள வண்ணியநல்லூர் மற்றும் ஆண்டார்குப்பம் பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் அமைப்பது குறித்தும்;

119. செய்யூர் தொகுதியில் உள்ள செய்யூர் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களுக்கு புதிய காவலர் குடியிருப்பு அமைப்பது குறித்தும்;

120. செய்யூர் தொகுதியில் உள்ள துணை சுகாதார நிலையங்களைப் பயன்பாட்டிற்கு கொண்டுவருவது குறித்தும்;

121. செய்யூர் தொகுதியில் அனைத்து ஊராட்சிகளிலும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்தும்;

122. செய்யூர் தொகுதியில் உடற்பயிற்சி கல்வி மையம் அமைப்பது குறித்தும்;

123. செய்யூர் தொகுதியில் உள்ள வெடால் வடமாமுனிஸ்வரர் திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறைமூலம் புனரமைப்பது குறித்தும்;

124. செய்யூர் தொகுதியில் தேவையான இடங்களில் பேருந்து நிழற்குடைகள் அமைப்பது குறித்தும்;

125. செய்யூர் தொகுதியில் உள்ள விளம்பூர் பகுதியில் குழந்தைகள் நல மையத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

126. செய்யூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (RO Water) வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

127. செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், பொலம்பாக்கம் பள்ளிக்கு நுழைவு வாயில் மற்றும் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடல் அமைப்பது குறித்தும்;

128. செய்யூர் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் கிராம ஊராட்சி சாலைகள் அனைத்தையும் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆம்பலாப்பட்டு தெற்கு ஊராட்சி, குடிகாடு நடுநிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

2. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், அருமலை ஊராட்சி தொடக்கப் பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

3. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், கண்ணுகுடி மேற்கு ஊராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

4. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் ஊராட்சி மேல்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

5. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சங்கரநாதர் குடிகாடு உயர்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

6. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், இராகவாம்பாள்புரம் ஊராட்சி, நார்த்தேவன் குடிகாடு தொடக்கப் பள்ளிக்கு புதிய வகுப்பறை கட்டுவது குறித்தும்;

7. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நெய்வாசல் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுசுவர் அமைப்பது குறித்தும்;

8. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நடூர் மற்றும் கொல்லாங்கரை உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுசுவர் அமைப்பது குறித்தும்;

9. ஒரத்தநாடு கோவிலூரர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுசுவர் அமைப்பது குறித்தும்;

10. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தெற்கோட்டை ஊராட்சி, இளங்கோவில் அருகில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

11. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஆதி திராவிடர் தெருவிற்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

12. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் ஊராட்சி, வடக்கு கிளாமங்கலம் ஆதி திராவிடர் தெருவிற்கும் தெற்கு கிளாமங்கலம் ஆதி திராவிடர் தெருவிற்கும் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

13. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஒக்கநாடு கீழையூர் ஊராட்சி, கீழத் தெருவிற்கு புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

14. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஆம்பலாப்பட்டு தெற்கு ஊராட்சி, பாலாயி குடிக்காட்டில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

15. வெட்டிகாடு மஹாராஜசமுத்திரத்தில் இரண்டு இடங்களில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

16. பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி, தெக்கூரில், கல்லணைக் கால்வாயில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;

17. கண்டிதம்பட்டு ஊராட்சி, கண்டிதம்பட்டுவில் கல்லணைக் கால்வாயில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;

18. கண்டிதம்பட்டு ஊராட்சி, பொட்டுவாசாவடியில் கல்லணைக் கால்வாயில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;

19. உஞ்சிய விடுதி ஊராட்சி, வெள்ளத்தேவன் விடுதியில் கல்லணை கால்வாயில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;

20. *கல்லணை கால்வாயை தூர்வாருவது குறித்தும்;*

21. *கல்லணை கால்வாய் பிரிவு வாய்க்கால்களான 6, 7, 8, 9-ம் நம்பர் வாய்க்கால்களைத் தூர்வாருவது குறித்தும்;*

22. *ராஜாமடகால்வாயில் பின்னையூர் ஊராட்சி மேல்நிலைப் பள்ளி அருகில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;*

23. *ராஜாமடகால்வாயை தூர்வாருவது குறித்தும்;*

24. *ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெலுங்கன் குடிகாடு ஊராட்சி, கல்யாண ஓடை கால்வாயில் தாளிவெட்டி என்ற இடத்தில் புதியதாக பாலம் அமைப்பது குறித்தும்;*

25. *ஒரத்தநாடு வட்டார மருத்துவமனையில்* X-RAY *மற்றும் ஸ்கேன் வசதி செய்வது குறித்தும்;*

26. *ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தொன்டராம்பட்டு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களை நியமித்து ஜெனரேட்டர் வசதி செய்வது குறித்தும்;*

27. *ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், மேல உளூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான மருத்துவ வசதிகள் செய்வது குறித்தும்;*

28. *திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சில்லத்தூரில் உள்ள மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள் நியமித்து தேவையான மருந்து பொருட்கள் மற்றும் ஜெனரேட்டர் வசதி செய்வது குறித்தும்;*

29. *திருவோணம் ஊராட்சி ஒன்றியம், திருவோணத்தில் உள்ள மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள் நியமித்து தேவையான மருந்துகள் மற்றும் ஜெனரேட்டர் வசதி செய்வது குறித்தும்;*

30. *தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்தும்;*

31. *ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், இராகவாம்மாள்புரம் ஊராட்சி, நார்த்தேவன் குடிகாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவது குறித்தும்;*

32. *கல்லணை கால்வாய், ஈச்சங்கோட்டை முதல் வெட்டிக்காடு வரை உள்ள குறுகிய சாலையை அகலப்படுத்தி இருவழி சாலையாக்குவது குறித்தும்;*

33. *குலமங்கலம் முதல் ஒக்கநாடு கீழையூர் வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;*

[திரு. எம். இராமச்சந்திரன்] [*2020 ஜனவரி 9*

34. அருமலை முதல் திருமங்கலக்கோட்டை மேலையூர் வழியாக வடசேரி வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;
35. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், இராவுசாப்பட்டி புதுக்கோட்டை–தஞ்சாவூர் சாலையில் பிரிவு சாலையான இராவுசாப்பட்டி சாலையை சீரமைப்பது குறித்தும்;
36. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், ஒக்கநாடு கீழையூர் முதல் சமயன்குடிகாடு பிரிவு சாலையான கருவிழிக்காடு செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;
37. நெய்வாசல் முதல் குலமங்கலம் ஒக்கநாடு கீழையூர், ஒக்கநாடு மேலையூர் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;
38. பின்னையூர் முதல் ஏனாதி வரை செல்லும் ராஜாமடகால்வாய் கரை சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;
39. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், திருமங்கலக்கோட்டை கீழையூர் வடசேரி சாலையிலிருந்து கண்ணுகுடி வரை செல்லும் வாய்க்கால்கரை சாலையை சீரமைப்பது குறித்தும்;
40. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், அருமலை முதல் திருமங்கலக்கோட்டை கீழையூர் பள்ளிக்கூடம் வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;
41. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி திப்பியகுடி ஊராட்சி, சங்கரன் தெரு எட்டுபுலிகாடு வாய்க்காலில் 2 சிறிய பாலங்கள் அமைப்பது குறித்தும்;
42. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை ஊராட்சி, சின்னையன் குடிக்காடு முதல் சாமிபட்டி வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;
43. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பொய்யுண்டார்கோட்டை ஆதி திராவிடர் தெரு சாலையை சீரமைப்பது குறித்தும்;
44. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தலையமங்கலம் முதல் தாந்தோணி நெய்வாசல் குலமங்கலம் சாலை வரை சீரமைப்பது குறித்தும்;
45. வடக்கூர் தெற்கு ஊராட்சி, கருப்படிபட்டி ஆதி திராவிடர் தெருவிற்கு கல்லணை கால்வாய் கரை சாலையில் இருந்து புதியதாக சாலை அமைப்பது குறித்தும்;

46. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெக்கூர் ஊராட்சி, உப்புண்டார்பட்டி ஆதி திராவிடர் தெருவிற்கு கல்லணை கால்வாய் கரையிலிருந்து புதியதாக சாலை அமைப்பது குறித்தும்;

47. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், தெக்கூர் ஊராட்சி, ஒரத்தநாடு செல்லம்பட்டி சாலையில் உப்புண்டார்பட்டி ஆதி திராவிடர் தெரு சாலையை சீரமைப்பது குறித்தும்;

48. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கொ.வல்லூண்டாம்பட்டு ஊராட்சி, நாஞ்சிக்கோட்டை சாலையிலிருந்து நா.வல்லூண்டாம்பட்டு வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

49. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், கொல்லாங்கரை ஊராட்சி, கொல்லாங்கரையிலிருந்து நடூர் வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

50. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் நடூர் சாலையில் கோவிலூர் உளூர் வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

51. தஞ்சாவூர் பட்டுக்கோட்டை சாலையில் மடிகையிலிருந்து காசநாடு புதூர் செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

52. தஞ்சாவூர் பட்டுக்கோட்டை சாலையில் மடிகையிலிருந்து காட்டுக்குறிச்சி வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

53. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், கிளாமங்கலம் ஊராட்சி, ஏனாதி சாலையிலிருந்து கிளாமங்கலம் குளக்கரை வரை செல்லும் சாலையை சீரமைப்பது குறித்தும்;

54. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பின்னையூர் ஊராட்சி, ஆதி திராவிடர் தெரு, கணக்கன் தெரு, தெற்கு தெரு, சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

55. திருவோணம் ஊராட்சி ஒன்றியம், சோழகன்கரை ஊராட்சி, வெள்ளையன்தெரு,குப்பையன் தெருசாலைகளை சீரமைப்பது குறித்தும்;

56. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், நெய்வாசல் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ள இடத்தை வருவாய்த் துறை ஆவணத்தில் வகைமாற்றம் செய்து கல்வித் துறைக்கு மாற்றுவது குறித்தும்;

57. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பூவத்தூர் ஊராட்சி, பொட்டலங்குடிகாட்டில் வசிப்பவர்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்குவது குறித்தும்;

58. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, அம்பலக்காரர் தெருவில் வசிப்பவர்களுக்கு குடியிருப்பு பட்டா வழங்குவது குறித்தும்;

59. தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், குளிச்சப்பட்டு ஊராட்சி, மேலஅம்பலக்காரத் தெருவில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

60. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், வன்னிபட்டு ஊராட்சி, மேல வன்னிப்பட்டு ஆதி திராவிடர் தெருவில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

61. ஒரத்தநாடு ஊராட்சி ஒன்றியம், பரிதிக்கோட்டை ஊராட்சி, மேலஅம்பலக்கார தெருவில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்கி, வகை மாற்றாம் செய்து, சிட்டா, அடங்கல் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.

திரு. கே.எஸ். மஸ்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. செஞ்சி கோட்டையை சுற்றுலாத்தலமாக மாற்றி "கம்பி வட ஊர்தி" (ரோப்கார்) வசதி செய்து கோட்டையில் உள்ள "சக்கரை குளம்" மற்றும் "செட்டிகுளத்தை" தூர்வாரி "படகு சவாரி" ஏற்படுத்துவது குறித்தும்;

2. செஞ்சி கோட்டையை ஆண்ட மாவீரன் ராஜா தேசிங்கு மற்றும் தளபதி முகமத்கான் இருவருக்கும் நீலாம்பூண்டியில் அரசு சார்பில் "நினைவு மணிமண்டபம்" அமைப்பது குறித்தும்;

3. செஞ்சியை செஞ்சி கோட்டை என்று பெயர் மாற்றம் செய்வது குறித்தும்;

4. செஞ்சி நகரத்தில் உள்ள அருணாச்சலேஸ்வரர் குளம், நவாப் குளம், சக்கராபுரம் குளம், ஈஸ்வரன்கோயில் குளம் ஆகியவற்றை தூர்வாரி மேம்படுத்துவது குறித்தும்;

5. செஞ்சி நகரத்தில் உள்ள B ஏரியை தூர்வாரி நிலத்தடி நீரை பாதுகாத்து படகு சவாரி (Boating) அமைப்பது குறித்தும்;

6. செஞ்சி கோட்டையை ஆண்ட மாவீரன் ராஜா தேசிங்கிற்கு முழு உருவ சிலை அமைத்து, மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோயிலை சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

7. மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு வளத்தி ஊராட்சியில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தில் அரசு பயணியர் விடுதி அமைப்பது குறித்தும்;

8. மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூர் ஏரியில் படகு சவாரி (Boating) அமைப்பது குறித்தும்;

9. மேல்மலையனூர் ஒன்றியம், மேல்மலையனூர் பேருந்து நிலையத்தை நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக மாற்றி அமைப்பது குறித்தும்;

10. செஞ்சி ஒன்றியம், செஞ்சி சிங்கவரம் அருள்மிகு ரங்கநாதசுவாமிகள் சாலை அமைக்கும் பணியை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் செயல்படுத்துவது குறித்தும்;

11. செஞ்சி தொகுதியில் அரசு தொழில்நுட்ப கல்லூரி அமைப்பது குறித்தும்;

12. செஞ்சி தொகுதியில் அரசு தொழில் பயிற்சிமையம் (ITI) அமைப்பது குறித்தும்;

13. செஞ்சி ஒன்றியம், மேல்களவாய் சாலையின் குறுக்கே உள்ள சங்கராபரணி ஆற்று தரைப்பாலத்தை உயர்மட்ட பாலமாக அமைப்பது குறித்தும்;

14. செஞ்சி ஒன்றியம், நல்லாண்பிள்ளைபெற்றாள் கிராமத்தில் இருந்து மாதப்பூண்டி கிராமத்திற்கு செல்லும் வகையில் மாதப்பூண்டி ஊராட்சி அருகில் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

15. மேல்மலையனூர் ஒன்றியம்,செக்கடிக்குப்பம் அணைக்கட்டை (112.26HAS) சீரமைப்பது குறித்தும்;

16. மேல்மலையனூர் ஒன்றியம், சீயப்பூண்டி அணைக்கட்டை (141.13HAS) சீரமைப்பது குறித்தும்;

17. மேல்மலையனூர் ஒன்றியம், கடலி–மேலச்சேரி கிராமத்தில் கடலி அணைக்கட்டை சீரமைப்பது குறித்தும்;

18. செஞ்சி ஒன்றியம், மேல்களவாய் ஊராட்சி அருகில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

19. செஞ்சி ஒன்றியம், நந்தன்கால்வாய், சோ.குப்பம்–தேவதானம்பேட்டை ஊராட்சி பகுதியில் இணைகின்ற இடத்தில் வனத் துறை பகுதியில் விடுபட்டுள்ள 900 மீட்டரில் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்வது குறித்தும்;

20. செஞ்சி தொகுதிக்குட்பட்ட பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 70 ஏரிகளில் கான்கிரீட் மதகுகள் அமைப்பது குறித்தும்;

21. செஞ்சி தொகுதிக்கு உட்பட்ட நந்தன் கால்வாய் முழுவதும் கான்கிரீட் வாய்க்காலாக மாற்றி அமைப்பது குறித்தும்;

22. செஞ்சி தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

23. செஞ்சி தொகுதியில் புதிய நூலகம் அமைப்பது குறித்தும்;

24. செஞ்சி தொகுதி, செஞ்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பது குறித்தும்;

25. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கிராமங்களிலுள்ள நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களை சரியான எடையில் தரமானதாக வழங்குவது குறித்தும்;

26. செஞ்சி தொகுதியில் உள்ள 37 முழுநேர நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. செஞ்சி அரசு பொது மருத்துவமனையை நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்வது குறித்தும்;

28. செஞ்சி தொகுதி, அனந்தபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை அறைகள் கொண்ட அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

29. மேல்மலையனூர் வட்டம், மேல்மலையனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

30. மேல்மலையனூர் வட்டம், அவலூர்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

31. செஞ்சி அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையில் பழுதடைந்துள்ள பேருந்துகளுக்கு மாற்றாக புதிய பேருந்துகள் இயக்குவது குறித்தும்;

32. செஞ்சி–மேல்மலையனூர்–ஆரணி–வேலூர் வழித்தடத்தில் திருப்பதி செல்ல புதிய பேருந்து இயக்குவது குறித்தும்;

33. செஞ்சியிலிருந்து சென்னை செல்வதற்கு கூடுதலாக புதிய பேருந்து இயக்குவது குறித்தும்;

34. செஞ்சி–புதுவை, செஞ்சி–தஞ்சாவூர், செஞ்சி–வந்தவாசி மற்றும் செஞ்சி–கும்பகோணம் ஆகிய வழித்தடங்களில் இயக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

35. செஞ்சி தொகுதி, அனந்தபுரம் பேரூராட்சியில் புதியதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்தும்;

36. செஞ்சி ஒன்றியம், சென்னாலூர்–பாடிபள்ளம் சாலையில் வனத் துறைக்கு சொந்தமான காப்புக்காட்டில் சாலை சுமார் 1,800 மீ அமைப்பது குறித்தும்;

37. செஞ்சி ஒன்றியம், சேரானூர்–சென்னாலூர் சாலையில் வனத் துறைக்கு சொந்தமான காப்புக்காட்டில் (சுமார் 1 கி.மீ) சாலை அமைப்பது குறித்தும்;

38. செஞ்சி ஒன்றியம், அத்தியூர்–அனந்தபுரம் சாலையில் வனத் துறைக்கு சொந்தமான காரை காப்புக்காட்டில் (சுமார் 3 கி.மீ) தொலைவில் தார்ச் சாலையை விரிவாக்கம் செய்வது குறித்தும்;

39. செஞ்சி ஒன்றியம், கொத்தமங்கலம் வழியாக பெருங்காப்பூர்–மேல்மலையனூர் ஒன்றியம், மேலச்சேரி–வழியாக செஞ்சி பேரூராட்சியை இணைக்கும் சிறுவாடி காப்புக்காட்டில் சாலை அமைப்பது குறித்தும்;

40. செஞ்சி ஒன்றியம், கோணை ஊராட்சியில் உள்ள சோமுசமுத்திரம்-வடகால் சாலையில் வனத் துறைக்கு சொந்தமான இடத்தில் சாலை அமைப்பது குறித்தும்;

41. செஞ்சி ஒன்றியம், செஞ்சி கொத்தமங்கலம் வழியாக பெருங்காப்பூர் செல்லும் சாலையில் பச்சையம்மன் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்ல வனத் துறையின்மூலம் அனுமதி வழங்குவது குறித்தும்;

42. செஞ்சி தொகுதி, செஞ்சியில் தரச்சான்று பெற்ற அரசு விதைப் பண்ணை அமைப்பது குறித்தும்;

43. விவசாயிகளுக்கு அனைத்து வகையான நவீன உழவு இயந்திரங்களும் குறைந்த வாடகை கட்டணத்தில் கிடைத்திட நவீன வேளாண் இயந்திரங்கள் அடங்கிய வேளாண் பண்ணை அமைப்பது குறித்தும்;

44. செஞ்சியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட விரைவு நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

45. செஞ்சி தொகுதி, செஞ்சியில் புதிய சார் ஆட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

46. மேல்மலையனூர் ஒன்றியம், கடலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டடம் கட்டுவது குறித்தும்;

47. செஞ்சி தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்களுக்கு தனித்தனியே தரமான பள்ளி கழிப்பறை கட்டடம் கட்டுவது குறித்தும்;

48. செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சிக்குட்பட்ட குளங்களைத் தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

49. செஞ்சி பேரூராட்சி, பி.ஏரியில் திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;

50. செஞ்சி பேரூராட்சி, பொன்பத்தி ஏரியில் திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;

51. செஞ்சி தொகுதி, அண்ணமங்கலம்-கன்னலம் ஓடை குறுக்கே தடுப்பணை அமைப்பது குறித்தும்;

52. செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், தாயனூர் பெரிய ஏரியில் புதிய திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;

53. *செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், கெங்கபுரம் கிராமத்தில் புதிய திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;*

54. *செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் வட்டம், மல்லாண்டி கிராமத்தில் புதிய திறந்தவெளி கிணறு அமைப்பது குறித்தும்;*

55. *மேல்மலையனூர் ஒன்றியம், வளத்தி ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;*

56. *செஞ்சி தொகுதியில் நேரடி விவசாய கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

57. *செஞ்சி தொகுதிக்குட்பட்ட அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் விவசாயிகள் பயன்பெறும்வகையில் வாடகைக்கு விவசாய இயந்திரங்கள் வழங்குவது குறித்தும்;*

58. *செஞ்சி தொகுதி, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டங்களில் ஆவின் பால் பண்ணை அமைப்பது குறித்தும்;*

2. மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டில் ஆம்புலன்ஸ் வசதியுடன் கூடிய ஒரு அவசர சிகிச்சை மையமும், ஒரு தீயணைப்பு நிலையமும் அமைப்பது குறித்தும்;

3. மயிலம் ஒன்றியம், மைலம் ஊராட்சியில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

4. மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், ஒரு கால்நடை கிளை மருந்தகமும் அமைப்பது குறித்தும்;

5. மயிலம் ஒன்றியம், பெரியதச்சூர் மதுரா, விநாயகபுரம் செல்லும் சாலையை புதிய தார்ச்சாலையாக அமைப்பது குறித்தும்;

2020 ஜனவரி 9] [டாக்டர் இரா. மாசிலாமணி]

6. வல்லம் ஒன்றியம், கீழையூர் மணியம்பட்டிலிருந்து கொங்கரப்பட்டு செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் அமைப்பது குறித்தும்;
7. வல்லம் ஒன்றியம், சேர்விளாகம் ஊராட்சி, காந்திநகர் பகுதியில் திறந்தவெளிக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;
8. வல்லம் ஒன்றியம், கடுகுப்பட்டு, சித்தாமூர் செல்லும் சாலையில் உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டித் தருவது குறித்தும்;
9. மயிலம் தொகுதிக்குட்பட்ட கொங்கரப்பட்டு–வெங்கந்தூர் செல்லும் சாலையில் ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டுவது குறித்தும்;
10. ஒலக்கூர் ஒன்றியம், கொடியம் ஊராட்சியில் உள்ள பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் நியாய விலைக் கடை கட்டுவது குறித்தும்;
11. ஒலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;
12. ஒலக்கூர் ஒன்றியம், வெள்ளிமேடுப்பேட்டை கிராமத்தில் சமுதாயக்கூடம் அமைப்பது குறித்தும்;
13. மயிலம் ஒன்றியம், நெடி, மோழியனூர் கிராமத்தையும் வல்லம் ஒன்றியம், நெகனூர்புதூர் கிராமத்தையும் தனித்தனி ஊராட்சிகளாக பிரிப்பது குறித்தும்;
14. மயிலம் ஒன்றியம், பெலாக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட முட்டியூர், வேம்பூண்டி ஆகிய கிராமங்களை தனித்தனி ஊராட்சிகளாக பிரிப்பது குறித்தும்;
15. வல்லம் ஒன்றியம், திருவம்பட்டு கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைப்பது குறித்தும்;
16. வல்லம் ஒன்றியம், பணப்பாக்கம்–அருகாவூர் செல்லும் சாலையில் ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் கட்டுவது குறித்தும்;
17. வல்லம் ஒன்றியம், ராஜாம்புலியூர், கல்லடிக்குப்பம், கல்லாளிப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு புதிய பேருந்து வசதி செய்து தருவது குறித்தும்;
18. வல்லம் ஒன்றியம், மேல்கூடலூர் ஊராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நியாய விலைக் கடை கட்டுவது குறித்தும்;

[டாக்டர் இரா. மாசிலாமணி] [2020 ஜனவரி 9

19. மயிலம் ஒன்றியம், பெரியதச்சூர் ஊராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;
20. மயிலம் ஒன்றியம், சின்னநெற்குணம், சாலை ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;
21. மயிலம் ஒன்றியம், ரெட்டணை அருகே செல்லும் தொண்டியாற்றில் உள்ள தடுப்பணையில் கதவுகளை புதியதாக மாற்றி ஆற்றை தூர்வாரி இரு கரைகளையும் பலப்படுத்துவது குறித்தும்;
22. மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் உள்ள வீடூர் அணையை தூர்வாரி அதன் பிரதான கால்வாய்களை சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. மரக்காணம் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;
2. மரக்காணம் பேரூராட்சியில் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பது குறித்தும்;
3. மரக்காணம் ஒன்றியம், நடுக்குப்பம் ஊராட்சியை மையமாகக் கொண்டு (சாக்கோ) மரவள்ளிக்கிழங்கு பதப்படுத்துதல் மற்றும் சேமியா, சவ்வரிசி உற்பத்தி தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

4. மரக்காணம் வட்டத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் புதிய கருவூலக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

5. மரக்காணம் ஒன்றியத்தில் பழுதடைந்துள்ள ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

6. மரக்காணம் வட்டத்திற்குட்பட்ட கந்தாடு ஊராட்சியில் சிப்காட்மூலம் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

7. மரக்காணம் வட்டம், சிறுவாடி ஊராட்சியை மையமாகக் கொண்டு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

8. மரக்காணம் வட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

9. திண்டிவனம் தொகுதியில் அரசு சார்பில் CBSE பள்ளி துவங்குவது குறித்தும்;

10. மரக்காணம் வட்டத்திற்குட்பட்ட கந்தாடு, களனிமேடு, அசப்பூர் கிராமங்கள் வழியாக செல்லும் ஓங்கூர் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

11. திண்டிவனம் வட்டம், சாரம், கோனேரிகுப்பம் வழியாக செல்லும் ஓங்கூர் ஆற்றின் குறுக்கே ஓங்கூரில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

12. திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகர் கிடங்கல் 1 மற்றும் பூதேரிக்கு செல்லும் சாலையின் குறுக்கே கிடங்கல் ஏரியின் உபரிநீர் செல்லும் ஓடையின் குறுக்கே பழைய பேருந்து நிலையம் அருகில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

13. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

14. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

15. திண்டிவனம் வட்டம், ஆவணிப்பூரில் வாணிபக் கழகம் சார்பில் அரசு நெல் கொள்முதல் நிலையம் கட்டுவது குறித்தும்;

16. திண்டிவனம் நகரில் இருந்து தென் மாநில நகரங்களுக்கு தமிழக அரசின் விரைவு பேருந்து இயக்குவது குறித்தும்;

17. திண்டிவனத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அருகில் அணுகு சாலையும், தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே சுரங்கப்பாதையும் அமைப்பது குறித்தும்;

18. திண்டிவனம் தொகுதி, ஆவணிப்பூரில் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

19. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட அனைத்து பொதுப் பணித் துறை ஏரிகளையும் குடிமராமத்து செய்வது குறித்தும்;

20. திண்டிவனம் தொகுதி, நொலிபூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய சுகாதார கட்டடம் கட்டுவது குறித்தும்;

21. திண்டிவனம் தொகுதி, ஓலக்கூர் ஒன்றியத்திலுள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்தும்;

22. திண்டிவனம் தொகுதி, ஓலக்கூர் ஊராட்சியிலுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

23. திண்டிவனம் தொகுதி, ஓலக்கூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தோட்டக்கலை அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் கட்டுவது குறித்தும்;

24. திண்டிவனம் தொகுதி, மரக்காணம் ஒன்றியம், அன்னம்புத்தூர் ஊராட்சியிலிருந்து ஓமந்தூர் ஊராட்சிக்கு செல்லும் சாலையின் குறுக்கே செல்லும் கிடங்கல் ஏரியில் நரசிம்மர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

25. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் ஊராட்சிக்கு புதிய கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

26. திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட நொளம்பூர் ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

2020 ஜனவரி 9]

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"*1.* *வேடசந்தூர் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;*

2. *நத்தம் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்துவது குறித்தும்;*

3. *ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு தனி காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பது குறித்தும்;*

4. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் பாலாறு–பொருந்தலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்தும்;*

5. *ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் பரப்பலாறு அணை அருகே சமுதாயக் கிணறு அமைத்து குடிநீர் வழங்குவது குறித்தும்;*

6. *ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 3 இடங்களில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைப்பது குறித்தும்;*

7. *ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி, பழனி ஊராட்சி ஒன்றியங்களுக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;*

8. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் சண்முகநதி, அமராவதி ஆறுகளில் கலக்கும் ஆலைக் கழிவுகளைத் தடுத்து மாசற்ற குடிநீர் வழங்குவது குறித்தும்;*

9. *திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தேசிய வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களை இரத்து செய்வது குறித்தும்;*

10. *ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியத்தில் வில்வாதம்பட்டி, மானூர், கோரிக்கடவு, தும்பலப்பட்டி, அக்கரைப்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;*

11. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

12. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள சத்யா நகர் நியாய விலைக் கடையிலிருந்து, இலட்சுமிபுரத்திற்கு பகுதிநேர நியாய விலைக் கடையை பிரிப்பது குறித்தும்;

13. ஒட்டன்சத்திரம் தொகுதியில் சுமார் 26 பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைப்பது குறித்தும்;

14. மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

15. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கொத்தயம், கேதையுறம்பு ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

16. மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்குவது மற்றும் 2009 ஆம் ஆண்டு சுயநிதித் திட்டத்தில் ரூ.25,000/– ரூ.50,000/– கட்டணம் செலுத்திய அனைவருக்கும் உடனடியாக இலவச மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

17. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பது குறித்தும்;

18. தமிழகம் முழுவதும் பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

19. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பழனி, நரிக்கல்பட்டி வழியாக பெரிய மொட்டனூத்து, போதுபட்டி, தாளையூத்து, மடத்துக்குளம் வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

20. ஒட்டன்சத்திரம் தொகுதியில் திண்டுக்கல் முதல் கள்ளிமந்தையம், தொப்பம்பட்டி, தாளையூத்து வழியாக பொள்ளாச்சி வரை இயங்கி வந்த அரசு பேருந்தை மீண்டும் இயக்குவது குறித்தும்;

21. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பள்ளி, கல்லூரி நேரங்களில் பேருந்துகளை மீண்டும் இயக்குவது குறித்தும்;

22. ஒட்டன்சத்திரம் நகரில் அரசு பேருந்து பணிமனைக்கு நிலம் தேர்வு செய்து அரசு பணிமனை அமைப்பது குறித்தும்;

23. *ஒட்டன்சத்திரம் தொகுதியில், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு புதிய சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;*

24. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் வடமதுரை—ஒட்டடன்சத்திரம் SH—ல் 41/ 8—ல் உயர் மட்ட பாலம் கட்டுவது குறித்தும்*

25. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பொருளூர்—ஆயக்குடி 11/2—ல் உயர்மட்ட பாலம் அமைப்பது குறித்தும்*

26. *பழனி, நெடுஞ்சாலைத் துறை மூலமாக புதிதாக பயணிகள் தங்கும் ‘விடுதி கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்*

27. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்களில் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;*

28. *பழனியில் பாலாறு—பொருந்தலாறு இடது பிரதான கால்வாயை சீரமைத்து, சிலாப்; லயனிங், மடைகள் அனைத்தும் செப்பனிட்டு பாசன வசதி செய்வது குறித்தும்;*

29. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் மானூர், வில்வாதம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்கிடையே சண்முகநதி ஆற்றில் பாலம் கட்டுவது குறித்தும்;*

30. *ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியில் உள்ள பரப்பலாறு அணையை தூர் வாருவது குறித்தும்;*

31. *ஒட்டன்சத்திரம் தொகுதியில், பொருளூர் கரிசல் குளம், பாலப்பன்பட்டிபுதூர் கருங்குளம், மஞ்சநாயக்கன்பட்டி காளிபட்டி குளம் ஆகிய குளங்களின் வாய்க்காலில் சிமெண்ட் சிலாப் அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;*

32. *ஒட்டன்சத்திரம்தொகுதியில்,பரப்பலாறுஅணையிலிருந்துமுத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம், முத்து சமுத்திரம், காவேரியம்மாபட்டி குளம், ஒட்டடை குளம், பாப்பாகுளம், சடையன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாதுபட்டி குளம் ஆகிய குளங்களுக்கு செல்கின்ற நீர் வீணாகாமல் இருக்க லைனிங்—ல் சிமெண்ட் கற்கள் அமைப்பது குறித்தும்;*

33. அமராவதி ஆற்றில் உபரிநீர் கடலில் கலக்கின்ற காலங்களில் பாலாறு, பொருந்தலாறு வரதமாநதி, நல்லதங்காள், நங்காஞ்சியாறு, குடகனாறு அணை ஆகியவற்றை இணைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

34. ஒட்டன்சத்திரம் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்ற நீரை காளிபட்டி குளத்திற்கு கொண்டு செல்ல வாய்க்கால் அமைப்பது குறித்தும்;

35. ஒட்டன்சத்திரம் தொகுதி, நல்லதங்காள், சண்முகநதி, நங்காஞ்சியாறு ஆகிய ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டிய அவசியம் குறித்தும்;

36. ஒட்டன்சத்திரம் தொகுதி, தாசரிபட்டியில் பள்ளத்து ஓடை— முத்துபூபாலசமுத்திரம் டேங்க் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

37. ஒட்டன்சத்திரம் தொகுதி, தங்கச்சியம்மாபட்டியில் நங்காடஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

38. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஓடைப்பட்டியில் சின்ன ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

39. ஒட்டன்சத்திரம் தொகுதி, சோளியப்பக் கவுண்டனூரில் ஒட்டன்கோம்பை ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

40. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டியில் பெரிய ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

41. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஜவ்வாதுபட்டியில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

42. ஒட்டன்சத்திரம் தொகுதி, அத்திக்கோம்பை கெகருமாய்கோசில் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

43. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அத்திக்கோம்பை முருங்குத்திகுழி ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

44. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அத்திக்கோம்பை கொங்குட்டியூத்து ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

45. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அணைப்பட்டியில் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தடுப்புச்சுவர் கட்டுவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. அர. சக்கரபாணி]

46. ஒட்டன்சத்திரம் தொகுதியில் இடையகோட்டை ஊராட்சி, அய்யம்பாளையத்தில் பெரிய ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவது குறித்தும்;

47. ஒட்டன்சத்திரம் நகரத்தில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை வசதி செய்வது குறித்தும்;

48. ஒட்டன்சத்திரம் கே.ஆர். அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், ஆய்வகக்கூடம் கட்டுவது குறித்தும்;

49. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள முத்துநாயக்கன்பட்டி, சத்திரப்பட்டி, இடையகோட்டை, மார்க்கம்பட்டி பெரியகோட்டை, ஓடைப்பட்டி ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம் அறிவியல் ஆய்வுக்கூடம் கட்டுவது குறித்தும்;

50. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், சின்னகரட்டுப்பட்டி, புளியமரத்துக்கோட்டை, காவேரியம்மாபட்டி ஆகிய அரசு உயர் நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம், சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

51. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பரப்பலாறு உயர்நிலைப் பள்ளியை வண்டிப்பாதையில் உள்ள கல்வித் துறைக்குச் சொந்தமான இடத்திற்கு மாற்றம் செய்வது குறித்தும்;

52. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானூர், பூலாம்பட்டி, பெரிச்சிபாளையம், சாமிநாபுரம், கூத்தம்பூண்டி, பொருளூர் கயாம்பட்டி ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

53. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொப்பம்பட்டி, கீரனூர், தாளையூத்து, மஞ்சநாயக்கன்பட்டி, கொக்கரக்கல் வலசு ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், கழிப்பறை கட்டடம், அறிவியல் ஆய்வுக்கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்தும்;

54. ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கணக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம், ஆய்வகக்கூடம் கட்டுவது குறித்தும்;

55. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய பகுதிகளில் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

56. மாணவ, மாணவியர் தேசிய வங்கியில் பெற்ற கல்விக் கடனை ரத்து செய்வது குறித்தும்;

57. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு பணியாளர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துவது குறித்தும்;

58. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

59. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை மக்கள் தொகை அடிப்படையில் பிரித்து, புதியதாக கள்ளிமந்தையத்தை தனி வட்டமாக பிரிப்பது குறித்தும்;

60. ஒட்டன்சத்திரம் தொகுதியில் தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் முதியோர் உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

61. ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் மக்களுக்கு நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

62. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டை, வலையபட்டி ஆகிய கிராமங்களில் நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத்தின் இடது மற்றும் வலதுபுற வாய்க்கால் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. அர. சக்கரபாணி]

63. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாக தொழிற்பேட்டைகள் அமைப்பது குறித்தும்;

64. ஒட்டன்சத்திரம் தொகுதியில் முருங்கை பொடி தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

65. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டை ஊராட்சி பகுதியில் அரசுக்கு சொந்தமான 150 ஏக்கர் நிலத்தில் தொழிற்பேட்டை துவங்குவது குறித்தும்;

66. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்தும்;

67. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, **5,6,7** வார்டுகளில் இரயில்வே தரைப்பாலங்கள் இணைப்புச் சாலை ஏற்படுத்தி மழைக்காலத்தில் தேங்கும் மழைநீரை வெளியேற்றுவது குறித்தும்;

68. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் உள்ள காய்கனி மார்க்கெட் கழிவுகளை கொட்டுவதற்கு அரசு இடம் ஒதுக்கி, குப்பைக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

69. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் போதுமான பணியாளர்களை அமர்த்துவது குறித்தும்;

70. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் மற்றும் தொப்பம்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து கள்ளிமந்தையத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைப்பது குறித்தும்;

71. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றுவது குறித்தும்;

72. ஒட்டன்சத்திரம் தொகுதியில் கிராமப்புற சாலைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நடுவது குறித்தும்;

73. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற சாலைகளை பராமரிப்பது குறித்தும்;*

74. *ஒட்டன்சத்திரம் தொகுதி, ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிக்கவும், மாவட்ட முக்கிய சாலைகளை இணைத்து ஊராட்சி ஒன்றிய சாலைகளை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைப்பது குறித்தும்;*

75. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் சேதமடைந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அகற்றி புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்குவது குறித்தும்,*

76. *தமிழகத்தில் பல்வேறு ஊராட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை அரசின் செலவிலே பராமரிப்பது குறித்தும்;*

77. *ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு ஊராட்சி, மாட்டுப்பட்டிக்காடு கிராமத்தில் வசிப்பிடமின்றி உள்ள மக்களுக்கு, அரசின் மூலம் இடம் ஒதுக்கி வீடுகள் கட்டித்தருவது குறித்தும்;*

78. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள பாறைப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, சாமியார்புதூர், மஞ்சநாயக்கன்பட்டி, போடுவார்பட்டி, தேவத்தூர், காளிபட்டி, புளியம்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, எவிக்சன் நகர் போன்ற பகுதிகளில் சுகாதார வளாகம் கட்டுவது குறித்தும்;*

79. *ஒட்டன்சத்திரம் ஊராட்சியில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் பசுமை வீட்டு வசதித் திட்டங்களில் கட்டப்படும் வீடுகளுக்கு ஒதுக்கப்படும் நிதியினை உயர்த்துவது குறித்தும்;*

80. *ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு பகுதியில் உள்ள மலைக்கிராமங்களில்; விளைநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் வன விலங்குகள் வராமல் தடுக்கும் விதமாக அகழிகள் அமைப்பது குறித்தும்;*

81. *ஒட்டன்சத்திரம் தொகுதியில் மேற்கு தொடர்ச்சி மலையில் வன விலங்குகளிடமிருந்து பொதுமக்களை பாதுகாக்க சோலார் மின்வேலி அமைப்பது குறித்தும்;*

82. *ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடகாடு ஊராட்சியில் வனத் துறை மூலமாக ஏற்கெனவே அமைக்கப்பட்ட பெத்தேல்புரம்– சிறுவாட்டுக்கோம்பை சாலையை சீரமைப்பது குறித்தும்;*

83. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள குறுவட்டங்கள் (*Revenue Firka*) தோறும் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்தும்;

84. தேசிய, மாநில, மாவட்ட, பல்கலைக்கழக அளவில் விளையாட்டுத் துறையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு அரசு பொது நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிப்பது குறித்தும்;

85. இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் ஸ்கூட்டர் வழங்குவது குறித்தும்;

86. மாற்றுத் திறனாளிகளில் 40% குறைபாடு உள்ள அனைத்து நபர்களுக்கும் அரசு உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

87. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகளவு பயிரிடப்படும் கண்வல்லிக் கிழங்கு (*Gloriosa Superba*) விதைகளை அரசே கொள்முதல் செய்ய கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

88. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

89. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அதிகமாக பயிரிடப்படும் பருத்தி, மக்காச்சோளம், சூரியகாந்தி, நிலக்கடலை ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பது குறித்தும்;

90. ஒட்டன்சத்திரம் தொகுதியில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வேளாண்மைத் துறை அலுவலகம் மற்றும் கூட்டுறவு வங்கிகளில்; பணம் செலுத்திய விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்குவது குறித்தும்;

91. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

92. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகளின் விளைபொருட்களை சேமித்து வைப்பதற்கு 100 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;

93. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள கள்ளிமந்தையம், இடையகோட்டை, நரிக்கல்பட்டி, மிடாப்பாடி ஆகிய இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

94. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு மருத்துவக் கல்லூரியுடன்கூடிய மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

95. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கூடுதலான கட்டட வசதி, போதிய மருத்துவர்கள் நியமிப்பது குறித்தும்;

96. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் கூடிய பிணவறை கட்டுவது குறித்தும்;

97. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கீரனூர் பேரூராட்சி மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், கொ.கீரனூர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் செவிலியர் ஓய்வெடுக்கும் அறை, எக்ஸ்ரே கருவி, போதுமான அவசர ஊர்தி வழங்குவது குறித்தும்;

98. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நரிக்கல்பட்டி, தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை மற்றும் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொ.கீரனூர், சத்திரப்பட்டி, கேதையுறம்பு ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

99. ஒட்டன்சத்திரம் தொகுதி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தேவத்தூர், மிடாப்பாடி, வாகரை, கீரனூர் பேரூராட்சி ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவப் பிரிவு அமைப்பது குறித்தும்;

100. ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டுவது குறித்தும்;

101. ஒட்டன்சத்திரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அரசு துணை சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

102. ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் இயங்கி வந்த சித்தா பிரிவுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்,

103. ஒட்டன்சத்திரம் தொகுதி, மிடாப்பாடி ஊராட்சி—வன்னியர்வலசு கிராமத்தில், தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள் தங்கிய புனித இடத்தை காந்தி நினைவு மண்டபமாக அமைப்பது குறித்தும்;

104. ஒட்டன்சத்திரம் தொகுதி, விருப்பாட்சி ஊராட்சியில் தளையூற்று மற்றும் சின்ன தளையூற்று என்ற இரண்டு நீர்வீழ்ச்சிகள் உள்ள இடத்தை சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

105. ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொழுமங்கொண்டான், சந்தன்செட்டி வலசு, நரிக்கல்பட்டி, அமரப்பூண்டி ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டு சேலைகளை அரசே கொள்முதல் செய்து, அதை விற்பனை செய்ய விற்பனை நிலையம் அமைப்பது குறித்தும்;

106. ஒட்டன்சத்திரம் தொகுதியில் உற்பத்தி செய்யும் மல்பரியை (பட்டுப்புழு வளர்ப்பு) திண்டுக்கல் மாவட்டத்திலே விற்பனை செய்வதற்காக அரசு கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்தும்;

107. சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி கோபால்சாமி நாயக்கர் உருவம் பொறித்த தபால் தலை வெளியிட்டு, அவரது வீரவாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப்புத்தகத்தில் இடம்பெறச் செய்வது குறித்தும்;

108. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பால் கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்தும்;

109. ஒட்டன்சத்திரம் தொகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பாலை ஆவின் நிறுவனம் முழுமையாக கொள்முதல் செய்வது குறித்தும்;

110. கால்நடைகளுக்கான உலர் தீவனம், கலப்பு தீவனத்தை ஆவின் மூலமாக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவது குறித்தும்;

111. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சி, கீரனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் வீடில்லாத ஏழை, எளிய மக்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;

112. ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் அரசு பெண்கள் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

113. ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளில் சமையலறையுடன்கூடிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள அரசு பொது மருத்துவமனையை, அரசு பல்நோக்கு மருத்துவமனையாக மாற்றுவது குறித்தும்;

2. சைதாப்பேட்டை தொகுதியில், மேற்கு சைதாப்பேட்டை பேருந்து நிலையத்திலிருந்து பல்வேறு வழித்தடங்கள் அமைப்பது குறித்தும்;

3. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள சந்தையை (மார்க்கெட்) மேம்படுத்துவது குறித்தும்;

4. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள கிண்டி தீயணைப்பு நிலையத்தை புதுப்பித்து, நவீன உபகரணங்கள் வழங்குவது குறித்தும்;

5. சைதாப்பேட்டை தொகுதி, தாடண்டர் நகரில் உள்ள விளையாட்டுத் திடலை மேம்படுத்துவது குறித்தும்;

6. சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. சோழிங்கநல்லூர் தொகுதி, கிழக்கு கடற்கரை சாலையில் கடலோர பகுதியான கொட்டிவாக்கம் குப்பம் முதல் உத்தண்டி நைனார் குப்பம் வரை தடுப்புச்சுவர், சாலைகள் மற்றும் வலைகளை உலர வைப்பதற்கு பாதுகாப்பு கட்டடம் கட்டித் தருவது குறித்தும்;

2. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-14, வார்டு 168, 169, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191 மற்றும் மண்டலம்-15-ல் வார்டு 192, 193, 194, 195, 196, 197, 198, 199, 200 ஆகிய வார்டுகளில் உள்ள பகுதியில் பாதாள சாக்கடை (UG) மற்றும் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணிகளை துவங்கி விரைந்து முடிக்க வேண்டுவது குறித்தும்;

3. சோழிங்கநல்லூர் தொகுதி, செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், வேங்கைவாசல், பெரும்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை, குடிநீர்க் குழாய், மழைநீர்க் கால்வாய் அமைக்கும் பணிகளை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

4. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் SRP டூல்ஸ் முதல் முட்டுக்காடு வரை படகு குழாம் மற்றும் போக்குவரத்துக்கான சாலைகள் அமைப்பது குறித்தும்;

[திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்] [2020 ஜனவரி 9

5. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;
6. சோழிங்கநல்லூர் தொகுதியில் மழைநீர் தேங்கியுள்ள அனைத்து இடங்களிலும் மழைநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;
7. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஒட்டியம்பாக்கம் ஊராட்சியில் உள்ளடங்கிய அரசங்கழனி, DLF, செம்மஞ்சேரி, பெரும்பாக்கம், செம்மொழிப்பூங்கா வழியாக ஒக்கியம் மடுவு வரை மழைநீர்க் கால்வாய் அமைப்பது குறித்தும்;
8. சோழிங்கநல்லூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;
9. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகளிலும் ஆங்கில வழி கல்வி துவங்குவது குறித்தும்;
10. சோழிங்கநல்லூரில் உயர்தர சிகிச்சை அளிக்கும் அரசு பல்நோக்கு மருத்துவமனை அமைப்பது குறித்தும்;
11. சோழிங்நல்லூரில் அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்தும்;
12. சோழிங்கநல்லூரில் அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய நுகர்வோர் உணவுப் பொருள் பாதுகாப்பு உதவி ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;
13. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–15–ல் உள்ள வார்டு–200 செம்மஞ்சேரி தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சுகாதார நிலையத்தை போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் 24 மணி நேரம் இயங்கும் வகையில் தரம் உயர்த்துவது குறித்தும்;
14. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 மற்றும் 15–ல் உள்ள வார்டுகளில் புனித தோமையார்மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் தேவையான ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;
15. சோழிங்கநல்லூரில் தீயணைப்பு நிலையம் அமைத்து, தீ விபத்தால் பாதிக்கப்படும் வீடுகளுக்கு நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

16. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளிலும் போதிய ஆசிரியர்களை நியமிப்பது குறித்தும்;

17. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி வழங்குவது குறித்தும்;

18. சோழிங்கநல்லூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

19. சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

20. சோழிங்நல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து வார்டுகளிலும், புனித தோமையார் மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளிலும் நூலகம் கட்டுவது குறித்தும்;

21. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுவது குறித்தும்;

22. சோழிங்கநல்லூர் தொகுதி, நீலாங்கரையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

23. சோழிங்கநல்லூர் தொகுதி, சென்னை மாநகராட்சியிலும், பொதுப் பணித் துறை விராங்கால் ஓடையிலும் அனைத்து கால்வாய்களை தூர் வாருவது குறித்தும்;

24. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் (UNDERGROUND ELECTRIC CABLE) *புதைவட மின் கேபிள் அமைப்பது குறித்தும்;*

25. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கண்காணிப்பு கேமரா (CCTV) *அமைப்பது குறித்தும்;*

26. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட துரைப்பாக்கம், நீலாங்கரை, நீலாங்கரை உதவி ஆணையர் ஆகிய காவல் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

27. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர், எழில் நகர், செம்மஞ்சேரி சுனாமி நகர், பெரும்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் மேல்தளம் மற்றும் குளியல் அறைகள் ஆகியவற்றைச் சீரமைப்பது குறித்தும்;

28. சோழிங்கநல்லூர் தொகுதியில் தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது குறித்தும்;

29. சோழிங்கநல்லூர் தொகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

30. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 மற்றும் மண்டலம்–15–ல் உள்ள வார்டுகளிலும், புனிததோமையார்மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளிலும் சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

31. சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள படித்த பட்டதாரி மாணவர்களுக்கு சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள தனியார் நிறுவனங்களில் வேலையில் முன்னுரிமை அளிப்பது குறித்தும்;

32. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் நவீன மயானம் அமைப்பது குறித்தும்;

33. சோழிங்கநல்லூர் தொகுதி, கண்ணகி நகர் பகுதியில் உள்ள பேருந்து நிலைய தரைதளத்தை சீரமைப்பது குறித்தும்;

34. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி, சுனாமி நகர் பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் அமைந்துள்ள பேருந்து நிலைய மேற்கூரை மற்றும் தரைதளத்தை சீரமைப்பது குறித்தும்;

35. சோழிங்கநல்லூர்தொகுதிக்குட்பட்ட புனிததோமையார்மலை ஒன்றியத்தில் சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் கன்னிக்கோயில் கால்வாயில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;

36. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து வார்டுகளிலும், புனித தோமையார்மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளிலும் சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;

37. சோழிங்கநல்லூர் தொகுதியில் 15–வது மண்டலத்தில் சென்னை மாநகராட்சி வருவாய் துறை, சுகாதாரத் துறை, மின்சாரத் துறைக்கு அலுவலகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

38. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியான பக்கிங்ஹாம் கால்வாய் இடையே ECR, OMR சாலைகளை இணைக்கும் 6 பாலங்களையும் விரிவுபடுத்தும் பணிகளை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்]

39. சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார்மலை ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் சேரும் குப்பைகளை அகற்றுவதற்கு கூடுதலாக ஜே.சி.பி. மற்றும் லாரிகள் வசதி செய்து கூடுதலாக ஊழியர்களை நியமிப்பது குறித்தும்;

40. சோழிங்நல்லூர் தொகுதிக்குட்பட்ட துரைப்பாக்கம் 200 அடி சாலையிலிருந்து ECR–க்கு இணைப்புச் சாலை அமைப்பது குறித்தும்;

41. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்தும்;

42. சோழிங்கநல்லூர் தொகுதி, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக பிரிக்க வேண்டியது குறித்தும்;

43. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூர் சர்வே எண் 439 கிராம நத்தத்திற்கும், காரப்பாக்கம் சர்வே எண். 160B, 161B, 123B, 165, 170, 171/1, 172, 169/2, 170/2, 123/9, ஜல்லடையான்பேட்டை திருவள்ளுவர் நகர் சர்வே எண் B337–12, B337/12, ஒக்கியம் துரைப்பாக்கம், மூட்டைகாரன் சாவடி சர்வே எண். 227/1A, 262/2 உள்ளகரம் சர்வே எண், 91, புழுதிவாக்கம் சர்வே எண். 230/16, ஈஞ்சம்பாக்கம் பெத்தேல் நகர், சர்வே எண். 282/2, 283/2 மற்றும் சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் நீண்ட நாட்களாக குடியிருக்கும் மக்களுக்கு தனி அரசு அதிகாரிகளை அமைத்து பொதுமக்களுக்கு நிரந்தரமாக குடியிருப்பதற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

44. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட உள்ளகரத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் இடம் கையகப்படுத்தப்பட்டு மனைபிரிவுகளாகபிரித்துபொதுமக்களுக்குவழங்கப்பட்டுள்ள உள்ளகரம் சர்வே எண் 90–ல் 35 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருபவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

45. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14 வார்டு எண் 168, உள்ளகரம், வித்தியா நகர் 3–வது தெருவில் அமைந்துள்ள ஓடையில் தடுப்பு சுவரை உயர்த்தி அமைப்பது குறித்தும்;

46. சோழிங்கநல்லூர்தொகுதிக்குட்பட்டபுனிததோமையார்மலை ஒன்றியத்தில் உள்ளடங்கிய சித்தாலப்பாக்கம் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை கட்டுவது குறித்தும்;

47. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்–15–ல் வார்டு எண் 195 கண்ணகி நகர் பகுதியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு இடையே உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை சீரமைப்பது குறித்தும்;

48. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநதராட்சி மண்டலம் 15–ல் வார்டு எண் 200 செம்மஞ்சேரி சுனாமி நகர் பகுதியில் இந்து, முஸ்லீம் மற்றும் கிறித்தவர்களுக்கு என தனித்தனியாக மயானம் அமைப்பது குறித்தும்;

49. சோழிங்கநல்லூர்தொகுதிக்குட்பட்டபுனிததோமையார்மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பகுதியில் சமுதாய நலக் கூடம் கட்டுவது குறித்தும்;

50. சோழிங்கநல்லூர்தொகுதிக்குட்பட்டபுனிததோமையார்மலை ஒன்றியம், பெரும்பாக்கம் ஊராட்சியில் உள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பகுதிகளை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைப்பது குறித்தும்;

51. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூர் முதல் மேடவாக்கம் செல்லும் சாலையை அகலப்படுத்துவது குறித்தும்;

52. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் செல்லும் சாலையில் அமைந்துள்ள நூக்கம்பாளையம் சாலை, ஜல்லடையான்பேட்டை சாலைக்கு செல்லும் சந்திப்பில் உயர் மட்ட மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

53. சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட செம்மஞ்சேரி முதல் நூக்கம்பாளையம் செல்லும் சாலையில் சுனாமி நகர் குடியிருப்பு அருகில் மழைநீர் செல்ல சாலையின் குறுக்கே பாலம் அமைப்பது குறித்தும்;

54. *சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ல் உள்ளடங்கிய உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம் ஆகிய பகுதிகளில் மின்னழுத்தம் அதிகமாக உள்ளதால் பள்ளிக்கரணை பகுதியில் உள்ள சர்வே எண் 24/4, 23/3 அடங்கிய அரசுக்கு சொந்தமான அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;*

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. *தென்பெண்ணையாற்றை செய்யாறு உடன் இணைத்து, அதிலிருந்து நந்தன் கால்வாயினை இணைக்கும் திட்டம் குறித்தும்;*

2, *கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்கு புதிதாக கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;*

3, *கீழ்பெண்ணாத்தூர் தாலுகா மருத்துவமனையை தரம் உயர்த்துவது குறித்தும்;*

4, *விவசாய கடன்களைத் தள்ளுபடி செய்வது குறித்தும்;*

5, *திண்டிவனம்–கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும்;*

6, *கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்குட்பட்ட நாறையூர், அவூர், மருத்துவாம்பாடி ஆகிய பகுதிகளுக்கு புதிதாக பள்ளிக் கட்டடங்கள் அமைப்பது குறித்தும்;*

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. 2018–2019 ஆம் ஆண்டிக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகையை பல கிராமங்களுக்கு இன்றுவரை வழங்குவது குறித்தும்;

2. கஜா புயலால் வீடுகளை இழந்தவர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டுவது குறித்தும்;

3. மன்னார்குடி தொகுதி முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள பழுதடைந்த சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

4. மன்னார்குடி தொகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர்களை சீரமைப்பது குறித்தும்;

5. மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்தும்;

6. மன்னார்குடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவது குறித்தும்;

7. மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை ஊராட்சி, திருமேனி ஏரிக்கரை நரிக்குறவர்களுக்கு வீடுகள் உட்பட அனைத்து அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

8. மன்னார்குடி அரசு போக்குவரத்து பணிமனையில் இயக்கப்பட்டு வரும் பழைய பழுதடைந்த பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளை இயக்குவது குறித்தும்;

9. மன்னார்குடி தொகுதியில் பல்வேறு இடங்களில் கூடுதலாக குடிநீர் வழங்குவது குறித்தும்;

10. இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் அதற்கென தனிப் பிரிவு அமைப்பது குறித்தும்;

11. இரசாயன உரங்களினால் மக்களுக்கு ஏற்படும் உபாதைகளைத் தவிர்ப்பது குறித்தும்;

12. மன்னார்குடியில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் தூர் வாருவது குறித்தும்;

13. மன்னார்குடியில் விசைத்தறி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க அவர்களுக்கு சிறப்பு சலுகைகள் கொடுப்பது குறித்தும்;

14. சிறுதானிய வகைகளைப் பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையும் வட்டியில்லா கடனும் வழங்குவது குறித்தும்;

15. காவேரியில் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் அமைத்து காவேரி கடலில் கலப்பதை நிறுத்தி நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவது குறித்தும்;

16. டெல்டாவில் பாயும் ஆறுகளில் உள்ள அனைத்து பாசன மதகு ரெகுலேட்டர்களை சீரமைப்பது குறித்தும்;

17. மன்னார்குடி-பட்டுக்கோட்டை அகல இரயில் பாதை திட்டத்தை விரைந்து முடிப்பது குறித்தும்;

18. மன்னார்குடியில் புதிய டிஜிட்டல் நூலகம் அமைப்பது குறித்தும்;

19. மன்னார்குடியில் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு மதிப்புக் கூட்டும் வகையில் விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

20. முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை அளிப்பது குறித்தும்;

21. மன்னார்குடியில் அரசு பேருந்து நிலையத்தை புதுப்பித்து நவீனமயமாக்குதல் குறித்தும்;

22. மன்னார்குடியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைத்திடுதல் குறித்தும்;

23. மன்னார்குடி நகரில் சட்டுருட்டி வாய்க்காலை தூர் வாரி சீரமைப்பது குறித்தும்;
24. மன்னார்குடியில் புதிய அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;
25. மன்னார்குடியில் புதிய விவசாயக் கல்லூரி அமைப்பது குறித்தும்;
26. நீடாமங்கலம் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;
27. நீடாமங்கலத்தில் இரயில்வே மேம்பாலத்திற்கான பணிகள் துவங்குவது குறித்தும்;
28. நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் ஏரியில் உள்ள விடுபட்ட பகுதிகளை முழுமையாக தூர் வாரி கரைகளை பலப்படுத்தி தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;
29. மன்னார்குடி நகரில் கர்த்தநாதவபுரம் பாலத்தை புதுப்பித்து கட்டுவது குறித்தும்;
30. மன்னார்குடி நகரில் புதிய உள்விளையாட்டு அரங்கம் அமைப்பது குறித்தும்;
31. மன்னார்குடி, ஆர்.பி. சிவம் நகரில் சிறு விளையாட்டுப் பூங்கா மற்றும் உடற்பயிற்சி மையம் அமைப்பது குறித்தும்;
32. மகாதேவப்பட்டிணம்–கருவாக்குறிச்சி இடையே காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்தும்;
33. மன்னார்குடி நகரின் பிரம்மாண்டமான அரித்திராநதி தெப்பக்குளத்தை சீரமைத்து சுற்றுலாத்தலமாக மாற்றுவது குறித்தும்;
34. மன்னார்குடி தொகுதியில் கோட்டூர் ஒன்றியம், தெற்கு தென்பரை–பாலையூர் இடையே புதிய பாலம் கட்டுவது குறித்தும்;
35. மன்னார்குடி தொகுதியில் பல்வேறு இடங்களில் நிலவி வரும் பட்டா பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும்;
36. மன்னார்குடியில் அரசு பாலிடெக்னிக் துவங்குவது குறித்தும்;
37. மன்னார்குடி தொகுதியில் எடகீழையூர், தென்பரை, ராயபுரம், நெடுவாக்கோட்டை, கர்ணாவூர் ஆகிய ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. டி.ஆர்.பி. ராஜா]

38. *மன்னார்குடி தொகுதி, கற்கோவில்–கருவேலங்குளம் மற்றும் இடையர்-எம்பேத்தி போன்ற கிராமங்களுக்கு புதிய அரசு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;*

39. *கோவில்வெண்ணி–நகர்–வாசுதேவமங்கலம்–நரசிங்கமங்கலம்–சித்தமல்லி வழியாக நீடாமங்கலத்திற்கு புதிய அரசு பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;*

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. *கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் அமைந்துள்ள இரயில்வே சந்திப்பு (*Railway Junction*)–ல் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

2. *கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்தும்;*

3. *கீழ்வேளூர் தொகுதியில் கஜா புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த வீடுகளுக்கு பதிலாக கான்கிரீட் வீடுகள் கட்டித்தருவது குறித்தும்;*

4. *கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்டுவது பற்றியும்;*

5. *கீழ்வேளூர் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், கொளப்பாடு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகளுடன்கூடிய கட்டடம் கட்டுவது குறித்தும்;*

6. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், காமேஸ்வரம் மீனவ கிராமத்தில் கடற்சீற்றத்தால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்கு தூண்டில்வளைவு அமைப்பது குறித்தும்;
7. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், காமேஸ்வரம் மீனவ கிராமத்தில் சக்கிலியன் வாய்க்கால் முகத்துவாரத்தில் மீன் இறங்குதளம் அமைப்பது குறித்தும்;
8. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், காமேஸ்வரம் ஊராட்சி, ஏரி திடல் ஏரியை தூர் வாரி மழைநீரைச் சேமிப்பது குறித்தும்;
9. கீழ்வேளூர் தொகுதியில் கீழையூர் ஒன்றியம், நாகை ஒன்றியம், தலைஞாயிறு ஒன்றியம், கீழ்வேளூர் ஒன்றியம் ஆகிய அனைத்து பகுதிகளிலும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் (Plant) அமைப்பது குறித்தும்;
10. கீழ்வேளூர் தொகுதியில் தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;
11. கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், வேட்டைக்காரன் இருப்பு ஊராட்சி, கடைத்தெருவில் உயர் மின் கோபுர விளக்கு அமைப்பது குறித்தும்;
12. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூர் பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;
13. கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுகா குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

2020 ஜனவரி 9]

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

*"1. நீலகிரி மாவட்டம் முழுவதும் வீடில்லா ஏழை மக்கள் கட்டியுள்ள அங்கீகாரமில்லாத வீடுகளை வரன்முறைப்படுத்தி (*one time settlement*) வழங்குவது குறித்தும்;*

2. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அதிக அளவில் பாதுகாப்புப் பெட்டக வசதியுடன் குளிக்கும் வசதியும் உள்ள நவீன கட்டண கழிப்பிடங்கள் அமைக்க வேண்டியது குறித்தும்;

3. உதகமண்டலம் நகராட்சிப் பகுதியிலுள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அப்பகுதிகளிலிருந்து கிடைக்கும் வருவாயில் பெரும்பங்கை நகராட்சிக்கு ஒதுக்க வேண்டியது குறித்தும்;

4. உதகமண்டலத்தில் அரசு பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

5. உதகமண்டலத்தில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைப்பது குறித்தும்;

6. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட R.K.*புரம் முதல் பிஷப் டவுன் வரை, குருசடி முதல்* BLF *வரை, மைசூர் ரோடு முதல் டிங்கள்டன் வரை, கோல்ப்லைன் சாலை, பாலிடெக்னிக் சாலை ஆரம்பப் பள்ளி முதல் குளிச்சோலை வரை உள்ள சாலைகளை சீர்செய்வது குறித்தும்;*

7. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட எலிக்கஸ் சாலை water tank *முதல் எலிக்கஸ் வரை காந்துர் முக்கோணம் முதல் 22 வார்டு கடை வரை கரும்புகள் வளைவு முதல் பட்டயர் வரை உள்ள சாலைகளை சீரமைக்க வேண்டியது குறித்தும்;*

8. நீலகிரி மாவட்டத்தில் பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.30 நிர்ணயம் செய்வது குறித்தும்;

9. நீலகிரி மாவட்டத்தில் உள்ள படுகர் இனமக்களை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்ப்பது குறித்தும்;

10. உதகமண்டலத்தில் கேபிள் கார் வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

11. நீலகிரி மாவட்டத்தில் இன்கோசர்வ் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஊட்டி தேயிலையை பிற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்து அதிக விலை கிடைக்க வேண்டியது குறித்தும்;

[திரு. ஆர். கணேஷ்] [2020 ஜனவரி 9

12. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 15 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு நவீன இயந்திரங்கள் வழங்கி பச்சை தேயிலைக்கு அதிக விலை கிடைப்பது குறித்தும்;

13. நீலகிரி மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் சுற்றித் திரியும் குரங்குகளைப் பிடித்து வனத்தில் விடுவது குறித்தும்;

14. நீலகிரி மாவட்டத்தில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதங்களைத் தடுப்பது குறித்தும்;

15. உதகமண்டலம் நகராட்சி, வார்டு எண் 22, ரோகினி தியேட்டர் பின்புறம் மற்றும் புதுநகர் அருந்ததியர் காலனியில் தடுப்புச் சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை அமைப்பது குறித்தும்;

16. நீலகிரி மாவட்டத்தில் வசித்து வரும் ஈழுவதியா மக்களுக்கு உடனடியாக சாதி சான்றிதழ் வழங்க வேண்டியது குறித்தும்;

17. உதகமண்டலம் தொகுதி, குந்தா தாலூகா, குந்தா ஊராட்சி, கீழ்குந்தா பேரூராட்சி, முள்ளிகூர் ஊராட்சி, பிக்கட்டி பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய கேராகுந்தா வராகபள்ளம் ஆற்றில் தடுப்பணை கட்டி குடிநீர் வழங்குவது குறித்தும்;

18. உதகமண்டலம் தொகுதி, குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரை கிராமத்தில் சித்த மருந்தகம் அமைப்பது குறித்தும்;

19. உதகமண்டலம் தொகுதி, குந்தா ஊராட்சி, கிண்ணக்கொரை முதல் கெத்தை வரை இணைப்புச் சாலை அமைக்க வேண்டியது குறித்தும்;

20. உதகமண்டலம் தொகுதி, நஞ்சநாடு ஊராட்சி, மேல்கௌஹட்டி கிராமத்தில் கோல்கீரின் பாம் அருகிலுள்ள தடுப்பணையை சீரமைத்து புதிதாக குடிநீர் வழங்குவது குறித்தும்;

21. உதகமண்டலம் தொகுதி, கக்குச்சி ஊராட்சி, ஒன்னதூலை சுடுகாடு வரை மற்றும் கேத்தி பேரூராட்சி, கெச்சிகட்டி சாலை முதல் முக்கட்டி சாலை வரை உள்ள சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைக்க வேண்டியது குறித்தும்;

22. உதகமண்டலம் தொகுதியில் கக்குச்சி ஊராட்சி, கக்குச்சி பேருந்து நிறுத்தம் முதல் பண்ணெகல் வரை, கூக்கல் ஊராட்சி, கூக்கய்தொரை பிரதான சாலை முதல் உயிலட்டி விளையாட்டு மைதானம் வரை, கூக்கல் ஊராட்சி, கூக்கய்தொரை பிரதான சாலை முதல் அத்திகம்பை தட்டமுக்கு வரை, தும்மணட்டி ஊராட்சி, கம்பட்டி ஊர் முதல் குடிநீர் ஆதாரம் வரை, மோகிகல் கிராமம் முதல் மடித்தொரை சந்திப்பு வரை தார்ச் சாலைகள் அமைப்பது குறித்தும்;

23. உதகமண்டலம் தொகுதி, எப்பநாடு ஊராட்சி, கெங்கமுடி முதல் உப்பட்டடா வரை, எப்பநாடு ஊராட்சி, கெங்கபாடா முதல் ஒரவாடா வரை சிறிய பாலங்களுடன் தார்ச் சாலைகள் அமைக்க வேண்டியது குறித்தும்;

24. உதகமண்டலம் தொகுதியில் கடநாடு ஊராட்சி, சின்னகுன்னூர், பெந்தட்டி முதல் மல்லிகொரை வரை தொட்டபெட்டா ஊராட்சி, தலைகுந்தா முதல் எப்பநாடு ஊராட்சி, கெங்கமுடி வரை நெடுஞ்சாலைத் துறை சாலைகளை அகலப்படுத்தி தார்ச் சாலைகளாக அமைப்பது குறித்தும்;

25. உதகமண்டலம் தொகுதியில் தூனேரி ஊராட்சி, கெல்லிமந்து முதல் ஊர்மலை உள்ள இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக அமைப்பது குறித்தும்;

26. உதகமண்டலம் தொகுதியில் குந்தா தாலுகா, மஞ்சூரில் பல்தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) அமைப்பது குறித்தும்;

27. உதகமண்டலம் தொகுதியில் குந்தா வட்டம், மஞ்சூரில் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) அமைப்பது குறித்தும்;

28. உதகமண்டலம் தொகுதியில் தூனேரி ஊராட்சி, அணிக்கொரை கிராமம் தொட்டணியில் தடுப்பணை கட்ட வனத் துறை அனுமதி வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

[திரு. அ.செ. வில்வநாதன்] [2020 ஜனவரி 9

"1. ஆம்பூர் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

2. ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பேர்ணாம்பட்டு ஊராட்சிக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவது குறித்தும்;

3. ஆம்பூர் தொகுதி, மாதனூார் ஊராட்சி ஒன்றியத்தில் விடுபட்டுள்ள 19 ஊராட்சிகளுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்து தர வேண்டியது குறித்தும்;

4. ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியத்திற்குட்பட்ட 5 ஊராட்சிகளில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்ய வேண்டியது குறித்தும்;

5. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் அரசு மருத்துவமனையை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்துவது குறித்தும்;

6. ஆம்பூர் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேத பரிசோதனை அறையை குளிர்சாதன வசதி செய்வது குறித்தும்;

7. ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சர்க்கரை நோய் மருந்து கூடுதலாக வழங்குவது குறித்தும்;

8. ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக துவங்குவது குறித்தும்;

9. ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், வெலிதிகிமாணி பெண்டா ஊராட்சியில் அரசு ஆரம்ப துணை சுகாதார நிலையம் புதியதாக துவக்குவது குறித்தும்;

10. ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், ஆசனாம்பட்டு, பெரியாங்குப்பம்,நாயக்கனேரி அரசு உயர்நிலைப்பள்ளிகளைத் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது குறித்தும்;

11. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மேல்காணாங்குப்பம், மேல்மிட்டாளம் அரசு உய்ரநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது குறித்தும்;

12. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரில் ஏ.கஸ்பா பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோருதல்.

13. ஆம்பூர் தொகுதி, மாதனூர் பகுதியில் புறக் காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

14. ஆம்பூர் தொகுதி, சான்றோர் குப்பம் முதல் கன்னிகாபுரம் வரை பாலாற்றினை ஒட்டி புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

15. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்து சான்றோர்குப்பம் முதல் கோவிந்தாபுரம் வரை தொங்கும் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

16. ஆம்பூர் தொகுதி, சின்னவரிகம், விவசாய கூட்டுறவுச் சங்கத்திற்கு உட்பட்ட மிட்டாளம் ஊராட்சி, குட்டசன்துரில் இயங்கும் பைரபல்லி நியாய விலைக் கடையினை சிறப்பு அனுமதியுடன் திறப்பது குறித்தும்;

17. ஆம்பூர் தொகுதி, ஆசனாம்பட்டிலிருந்து நாயக்கனேரிக்கு தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;

18. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சி, 28–வது வார்டு, சானிகணவாய்மேடு (கம்பிகொல்லை) என்ற மலையடிவாரத்தில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

19. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சியில் அம்ருத் திட்டத்தின்கீழ் குடிநீர்ப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீரமைப்பது குறித்தும்;

20. ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சியில் 5, 6, 10, 12 வார்டுகளுக்குட்பட்ட ஓஏஆர் தியேட்டர் அருகில் காணாற்றில் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

21. ஆம்பூர் தொகுதி, மின்னூர்–வடகரை இடையே குடியாத்தம் - கிரிவாணியம்பாடி சாலையில் பாலாற்றின் குறுக்கே நபார்டு (அ) கிராமச் சாலைகள் திட்டத்தில் உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்தும்;

22. ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் நடைபெறும் முகாம் சார்பு நீதிமன்றத்தை நிரந்தர சார்பு நீதிமன்றமாக மாற்றுவது குறித்தும்;

23. ஆம்பூர் தொகுதி, மானூர் ஊராட்சி ஒன்றியம், நாயக்கனேரி ஊராட்சியில் காமனூர் தட்டு கிராமத்தில் பகுதிநேர கடை சிறப்பு அனுமதியுடன் துவக்குவது குறித்தும்;

24. ஆம்பூர் தொகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மகளிர் கலை அறிவியல் கல்லூரி புதியதாக துவக்குவது குறித்தும்;

25. ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட மிட்டாளம் ஊராட்சி, பைரபல்லி அடுத்த ஊட்டல் தேவஸ்தானத்தை சுற்றுலா தலமாக்குவது குறித்தும்;

26. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சி, கீழ் மிட்டாளம் ஆதி திராவிட குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைப்பது குறித்தும்;

27. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சி, கீழ்மிட்டாளம் புதுமனையில் காட்டாற்று வெள்ளம் ஊருக்குள் நுழைவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுவது குறித்தும்;

28. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சியில் புதுமனை அண்ணா நகர் பகுதியில் ஆதி திராவிடர்களுக்கு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதியதாக கட்டுவது குறித்தும்;

29. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், தேவலாபுரம் ஊராட்சி, காமராஜபுரம் ஆதி திராவிட மக்களுக்கு 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

30. ஆம்பூர் தொகுதி, மாதனூர் ஒன்றியம், பாலூர் ஊராட்சி, ஆர். பட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது குறித்தும்;

31. ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட பேர்ணாம்பட்டு ஒன்றியம், மிட்டாளம்-மேலூர் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மாதனூர் ஒன்றியம், மின்னூர் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் அமைப்பது குறித்தும்;

32. ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஒன்றியம், கொல்லகுப்பம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் அவர்கள்.

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.*

டாக்டர் ப. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. பள்ளிக்கூடங்களை சீரமைக்க வேண்டியது குறித்தும்;

2. மருத்துவமனைகளை மேம்படுத்த வேண்டியது குறித்தும்;

3. குடிமராமத்துப் பணிகளை முறைப்படுத்துவது குறித்தும்;

4. நகர்ப்புறங்களில் கண்காணிப்பு காமிரா பொருத்துவது குறித்தும்;

5. பல்வேறு துறைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவது குறித்தும்;

6. எய்ம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான பணிளை விரைவுபடுத்துவது குறித்தும்;

7. மதுரை விமான நிலைய விரிவாக்கப் பணிகளை விரைவுபடுத்துவது குறித்தும்;

8. வடபழஞ்சியில் IT Park அமைக்கும் பணியை மீண்டும் செயல்படுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார் அவர்கள்.*

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. ராணிப்பேட்டை தொகுதியில் இராணிப்பேட்டை நகராட்சியில் பொழுதுபோக்கு பூங்காவும், நவீன பேருந்து நிலையமும் அமைக்க வேண்டியது குறித்தும்;

[திரு. ஆர். காந்தி] [2020 ஜனவரி 9

2. ராணிப்பேட்டை தொகுதியில் ராணிப்பேட்டை I.V.P.M. கால்நடை தொற்று தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையத்தில் உள்ள காலியிடத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டியது குறித்தும்;

3. ராணிப்பேட்டை தொகுதியில் நவ்லாக் விவசாயப் பண்ணை பகுதியில் விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டியது குறித்தும்;

4. ராணிப்பேட்டை தொகுதியில் விடுபட்ட ஊரகக் குடியிருப்புகளில் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இரண்டாம் கட்டத் திட்டத்தில் சேர்க்க வேண்டியது குறித்தும்;

5. ராணிப்பேட்டை தொகுதியில் அம்மூர்–சோளிங்கர் நெடுஞ்சாலையில் எல்.எப்.சி பள்ளி அருகில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டியது குறித்தும்;

6. ராணிப்பேட்டை தொகுதியில் நவ்லாக் பகுதி மக்களின் குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்தும்;

7. ராணிப்பேட்டை தொகுதியில், சிப்காட் பகுதியில் இயங்கி வரும் ESI மருத்துவமனையை (தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை) தற்போது சிப்காட் ராணிப்பேட்டை பகுதியில் பணியாற்றும் பெண் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பயன்பாட்டிற்கு உள்நோயாளிகள் சிகிச்சை பெறும் வகையில் மாற்ற வேண்டியது குறித்தும்;

8. ராணிப்பேட்டை தொகுதியில் பாலாற்று கரையோரம் உள்ள நீர்வள ஆதார அமைப்புகளை பொதுப் பணித் துறைமூலம் தூர் வாருவது குறித்தும்;

9. ராணிப்பேட்டை தொகுதியில் மேல்விஷாரம்–தொங்கல் இணைப்பு பாலத்திலிருந்து திருவலம் பாலம் தேசிய நெடுஞ்சாலை வரையிலான இணைப்புச் சாலையை புதியதாக அமைக்க வேண்டியது குறித்தும்;

10. ராணிப்பேட்டை தொகுதியில் வாலாஜாப்பேட்டை–இராணிப்பேட்டை–மேல்விஷாரம் ஆகிய நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்ற வேண்டியது குறித்தும்;

11. இராணிப்பேட்டை தொகுதியில் சிப்காட் பகுதியில் மூடப்பட்டுள்ள தமிழ்நாடு குரோமைட் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் உள்ள குரோமிய கழிவுகளை அகற்றுவது குறித்தும்;

2020 ஜனவரி 9] [திரு. ஆர். காந்தி]

12. ராணிப்பேட்டை தொகுதியில் நவ்லாக் கோடதோப்பு ஏரியை நீர் தேங்காதவண்ணம் உலர் தன்மையாக்குதல் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சிக்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;

2. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் உள்ள மூன்று கால்வாய்களை தூர் வாரி கால்வாய் கட்டுவது குறித்தும்;

3. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் உள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்துவது குறித்தும்;

4. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் பாலாற்றங்கரையில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பது குறித்தும்;

5. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் உள்ள ஆதி திராவிடர் காலனி மற்றும் முஸ்லீம் சிறுபான்மையினர் பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் கால்வாய் கட்டும் பணிகள் துவங்குவது குறித்தும்;

6. ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் விரிவாக்கம் குறித்தும்;

7. வேலூர் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து ஆற்காடு, ராணிப்பேட்டை, சோளிங்கர், அரக்கோணம் ஆகியவற்றை உள்ளடக்கி ராணிப்பேட்டை மாவட்டம் என்று அறிவித்ததை மாற்றி சரித்திர புகழ்வாய்ந்த ஆற்காடு மாவட்டம் என்று அறிவிக்க வேண்டியது குறித்தும்;

8. ஆற்காடு தொகுதி, முதியோர் உதவித் தொகை 2006–2011–ல் இருந்தது போன்று அஞ்சல் துறைமூலம் வழங்குவது குறித்தும்;

9. ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

10. ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சிக்கு புறவழிச்சாலை அமைப்பது குறித்தும்;

11. ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சியில் உள்ள ஆதி திராவிடர் காலனி பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;

12. ஆற்காடு தொகுதி, விளாம்பாக்கம் பேரூராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

13. ஆற்காடு தொகுதி, கலவை பேரூராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் புதிய கட்டடம் அமைப்பது குறித்தும்;

14. ஆற்காடு தொகுதியில் உள்ள அனைத்து அரசினர் மேல்நிலை, உயர்நிலை, நடுநிலை மற்றும் துவக்கப் பள்ளிகளில் கழிவறை அமைக்க வேண்டியது குறித்தும்;

15. ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சியில் உள்ள அரசினர் மேல்நிலை, நடுநிலை, துவக்கப் பள்ளிகளில் புதிய கட்டடம் கட்ட வேண்டியது குறித்தும்;

16. ஆற்காடு தொகுதியில் உள்ள கிராமப்புற இளைஞர்கள் தொழில் தொடங்க தேவையான உதவிகளை அரசு செய்வது குறித்தும்;

17. ஆற்காடு தொகுதியில் 1980 ஆம் ஆண்டு முதல் அரசால் வழங்கப்பட்ட பட்டாக்கள் அரசு பதிவேட்டில் இடம்பெறுவது குறித்தும்;

18. ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், எசையனூர் ஊராட்சி, திமிரி ஒன்றியம், இருங்கூர், கலவைபுத்தூர், வெள்ளம்பி, வளையாத்தூர், வெங்கடாபுரம் ஊராட்சியில்–கணியம்பாடி ஒன்றியம், கம்மான்பேட்டை, மேட்டுப்பாளையம், கந்தாழம்பட்டு, நஞ்சுகொண்டாபுரம், மோத்தகல் மூஞ்சுர்பட்டு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டியது குறித்தும்;

19. ஆற்காடு தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மயான பாதை, சுடுகாடு மேம்படுத்த மின்வசதி, ஆழ்துளைக் கிணறு, சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியது குறித்தும்;

20. ஆற்காடு தொகுதியில் உள்ள கிராமப்புற இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டியது குறித்தும்;

21. ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், அ.கட்டுபடி கிராமத்திலும், திமிரி ஒன்றியம், வளையாத்தூர் ஊராட்சியிலும் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியது குறித்தும்;

22. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், காவனூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டியது குறித்தும்;

23. ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், கணியனூர் ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியது குறித்தும்;

24. ஆற்காடு தொகுதி, கலவை பேரூராட்சியில் உள்ள அரசினர் மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள் நியமிப்பது குறித்தும்;

25. ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கணியம்பாடி ஊராட்சியில் உள்ள அரசினர் இருபாலர் படிக்கும் மேல்நிலைப் பள்ளியை தனித்தனியாக ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக பிரித்து செயல்படுத்த வேண்டியது குறித்தும்;

26. ஆற்காடு தொகுதி, வேலூர் ஒன்றியம், பாலம் மற்றும் செங்காநத்தம் இடையே இணைப்புச் சாலையை அமைப்பது குறித்தும்;

27. ஆற்காடு தொகுதியில் புதிய அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

28. ஆற்காடு தொகுதியில் புதிய பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

29. ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கத்தாழம்பட்டு ஊராட்சியில் உள்ள சிங்கரிகோயில் பகுதியில் இருளர் ஜாதி சான்றிதழ் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. தமிழகத்தில் மாதம் ரூ.7,000/- தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்குவது குறித்தும்;

2. தமிழகத்தில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்குவது குறித்தும்;

3. பெட்ரோல், டீசலுக்கான மாநில வரியை குறைப்பது குறித்தும்;

4. தமிழக அரசு பொறியியல் கல்லூரிகளில் தகுந்த திறமையான புதிய பேராசிரியர்களை நியமிப்பது குறித்தும்;

5. தமிழக அரசு வருவாய்த் துறையின்கீழ் வழங்கல் அலுவலகம், தேர்தல் பிரிவு வட்டாட்சியர் அலுவலகங்களில் 10 ஆண்டுகளாக தொகுப்பூதியங்களில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பள உயர்வு மற்றும் பணி நிரந்தரம் குறித்தும்;

6. NEET தமிழகத்திற்கு விலக்கு அளிக்க தேசிய மருத்துவ ஆணைய சட்ட விதிகளில் திருத்தம் கொண்டு வருவது குறித்தும்;

7. கன்னியாகுமரி மாவட்டத்தை ஒருங்கிணைந்த சுற்றுலாத்தலமாக அறிவிப்பது குறித்தும்;

8. தமிழக பேரூராட்சிகளில் நிரந்தர சுகாதாரப் பணியாளர்கள், நிரந்தர மின் விளக்கு பொருத்துபவர்கள், தண்ணீர் உடனாள்கள், இரவுக் காவலர்கள் ஆகிய பணியாளர்கள் நியமனம் குறித்தும்;

9. மண்பாண்டம் தினம் கொண்டாடுவது குறித்தும்;

10. ரேசன் பொருட்கள் வீடு தேடி வரும் திட்டம் குறித்தும்;

11. விவசாயிகள் உயிரிழந்தால் ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்குவது குறித்தும்;

12. முழு மதுவிலக்கு குறித்தும்;

13. விளவங்கோடு, கிள்ளியூர், திருவட்டார் தாலுகாக்களுக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

14. கிள்ளியூர், திருவட்டார் தாலுகாக்களுக்கு (Taluk court) தாலுகா நீதிமன்றம் அமைப்பது குறித்தும்;

15. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தேர்தல் நடத்துவது குறித்தும்;

16. விளவங்கோடு தொகுதி, வெள்ளங்கோடு ஊராட்சி, சிதறால் ஊரில் அமைந்துள்ள மலைக்கோவிலில் சுற்றுலா திருவிழா நடைபெறுவது குறித்தும்;

17. விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், மாங்கோடு ஊராட்சி, குளப்பாறை முதல் கடையால்மூடு பேரூராட்சி அரங்க நாடு வரை சாலை அமைப்பது குறித்தும்;

18. குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் பகுதிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

19. விளவங்கோடு தொகுதி, இடைக்கோடு பேரூராட்சி, முல்லையாற்றின் குறுக்கே பல்லிக்கூட்டம் என்ற இடத்தில் தடுப்பணை கட்டுவது குறித்தும்;

20. விளவங்கோடு தொகுதி, கடையால்மூடு பேரூராட்சி, பேச்சிப்பாறை, ஜீரோ பாயிண்ட் முதல் கோதையார் லோயர் கேம்ப் நீர் மின் நிலையம் வரை சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

21. குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம், தாமிரபரணி ஆறு, குறுக்கு தடுப்பணைகள் (Check dams) கட்டுவது குறித்தும்;

22. கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், கருங்கல் சாலை விரிகோடு இயில்வே கிராசிங்கில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

23. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நாகர்கோவிலில் Pay ward அமைப்பது குறித்தும்;

24. விளவங்கோடு தொகுதி, மலையோரச் சாலை ஓரங்களில் குடியிருக்கும் ஏழை மக்களை தொடர்ந்து அந்த இடத்திலே குடியமர்த்த பட்டா வழங்குவது குறித்தும் அறிவிப்பு இல்லை.

25. விளவங்கோடு தொகுதி, வெள்ளாங்கோடு ஊராட்சி, சிதறால் ஊரில் அமைந்துள்ள மலைக்கோவிலில் சுற்றுலா திருவிழா நடைபெறுவது குறித்தும்;

26. நாகர்கோவில் மாநகராட்சிக்கு சுற்றுவட்டச் சாலை (Ring Road) அமைப்பது குறித்தும்;

27. நாகர்கோவில் மாநகராட்சியை Smart City திட்டத்தில் சேர்ப்பது குறித்தும்;
28. நாகர்கோவில் மாநகராட்சியில் NH47, NHAI சாலைகள் சந்திக்கும் அப்டா மார்க்கெட் மற்றும் நாகர்கோவில் சந்திப்பு இரயில் நிலையம் இடையே Bus port அமைப்பது குறித்தும்;
29. நாகர்கோவில் மாநகராட்சி, மீனாட்சிபுரம் அண்ணா பேருந்து நிலையம், SETC பணிமனைகளை ஒருங்கிணைத்து அடுக்குமாடி பேருந்து நிலையம், வாகனக் காப்பகம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.க. செல்வம், இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார் அவர்கள்.

திரு. க.சு. சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. பெரியகுளம் தொகுதி, வைகை அணையைத் தூர் வாருவது குறித்தும்;
2. பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகரில் செல்லும் வராக நதியில் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்தும்;
3. பெரியகுளம் தொகுதி, மாவட்ட தலைநகரமான தேனியில் ஒருங்கிணைந்த ஆம்னி பேருந்து நிலையம் அமைப்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.*

2020 ஜனவரி 9]

டாக்டர் ப. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சு. சரவணக்குமார் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. காஞ்சிபுரத்தின் குடிநீர் தேவைக்காக செய்யாற்றிலிருந்து குடிநீரேற்றும் நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

2. காஞ்சிபுரத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்தும்;

3. காஞ்சிபுரத்தில் இயங்கிவரும் மாவட்ட நீதிமன்றம்–II உள்ளிட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களுக்கு புதிய வளாக கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

4. காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாக்கம் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன் அவசியம் குறித்தும்;

5. காஞ்சிபுரம் நகரிலுள்ள மஞ்சள் நீர் கால்வாயை புனரமைத்து சிறு கால்வாய் (பேபி கனால்) உடன் கூடிய சிமெண்ட் கால்வாயாக மாற்றுவது குறித்தும்;

6. காஞ்சிபுரம் தொகுதி, இலுப்பைபட்டு ஊராட்சி, ராஜகுளத்தில் அமைந்துள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

7. காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள பெரும்பாக்கம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைப்பது குறித்தும்;

8. காஞ்சிபுரம் தொகுதி, சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சியில் ஜெ.ஜெ. நகர் பகுதிவாழ் மக்களுக்கு பட்டா வழங்குவதன் அவசியம் குறித்தும்;

9. காஞ்சிபுரம் பெருநகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

10. காஞ்சிபுரத்தில் நவீன வசதி கொண்ட கூடுதல் அறைகளுடன் கூடிய புதிய விருந்தினர் மாளிகை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

11. காஞ்சிபுரம் தொகுதி, திருப்புட்குழி ஊராட்சி, பாலுசெட்டி சத்திரத்தில் அமைந்துள்ள அரசு பால் குளிரூட்டும் நிலையத்தை விரிவாக்கம் செய்து பதப்படுத்தும் நிலையம் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

12. காஞ்சிபுரம் தொகுதி, கூரம் ஊராட்சியில் அமைந்துள்ள கூரத்தாழ்வார் கோவில் அருகில் இராமானுஜருக்கு நினைவு மண்டபம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

13. காஞ்சிபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

14. காஞ்சிபுரம்–வையாவூர் சாலையில் அமைந்துள்ள இரட்டை குட்டை இடுகாட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

15. சாத்தனூர்–வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் காஞ்சிபுரத்திற்கு ஒரு இணைப்புத் திட்டம் ஏற்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

16. காஞ்சிபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, பயணிகள் தங்கும் விடுதி அமைப்பதன் அவசியம் குறித்தும்;

17. காஞ்சிபுரத்தில் போதிதருமர் சிலை நிறுவுவதன் அவசியம் குறித்தும்;

18. காஞ்சிபுரத்தில் நரசிம்ம பல்லவர் சிலை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

19. தொன்மையான காஞ்சி மாநகரில் தொல்லியல் ஆய்வு மையம் நிறுவுவதன் அவசியம் குறித்தும்;

20. சுற்றுலாத்தலமான காஞ்சிபுரத்தில், சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டி (Tourist Guide) பயிற்சி மையம் தொடங்கி, சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

21. நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களை முறையாக வரிந்து கட்டி (Packing) வழங்குவதன் அவசியம் குறித்தும்;

22. காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள அனைத்து பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிகளிலும் கான்கிரீட் மதகுகள் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

23. காஞ்சிபுரம்தொகுதி,காஞ்சிபுரம்ஒன்றியம்,சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சி, பாலாஜி நகரில் கழிவுநீர் சிமென்ட் கால்வாய் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

24. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் கூடுதல் பேராசிரியர்கள் நியமிப்பதன் அவசியம் குறித்தும்;

25. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாக முகப்பில் திருவள்ளுவர் சிலை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

26. காஞ்சிபுரத்தில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்கு புதிய காவலர் குடியிருப்பு அமைப்பதன் அவசியம் குறித்தும்;

27. காஞ்சிபுரம் தொகுதி, வாலாஜாபாத் ஒன்றியம், சிறுவாக்கம் ஊராட்சியில் ஊரக தொழிற்பேட்டை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

28. காஞ்சிபுரம் தொகுதி, கோவிந்தவாடி ஊராட்சியில் அமைந்துள்ள தட்சிணாமூர்த்தி கோவிலைச் சுற்றி நிழற்கூரை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

29. காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட தாமல், மேல்கதிர்பூர், மற்றும் கூரம் ஆகிய இடங்களில் நெல் கிடங்குகள் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

30. அரசால் அறிவிக்கப்பட்ட தள்ளுபடி மானியத்தின் அடிப்படையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குவதன் அவசியம் குறித்தும்;

31. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அதிக அளவிலான இருப்பினை (Stock) குறைத்து, கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்து ஆண்டு முழுவதும் தள்ளுபடி விற்பனைக்கு உத்தரவிட்டு அதற்குரிய மானியம் வழங்குவதன் அவசியம் குறித்தும்;

32. காஞ்சிபுரத்தில் இயங்கி வரும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையைப் பெருக்கி, இலாபம் ஈட்ட வழங்க வேண்டிய ஊக்குவிப்புத் தொகை (Marketing Incentive) நிலுவையை உடனடியாக வழங்குவதன் அவசியம் குறித்தும்;

33. தாமல் ஏரியின் நீர்வரத்து கால்வாயை தூர்வாருவதன் அவசியம் குறித்தும்;

34. தாமல் ஏரியில் உள்ள கருவேல மரங்களை அகற்றி தூர் வாரி கரையை பலப்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

35. காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு பதிவுக்கு வரும் வாகனங்களுக்கு நிறுத்த இடவசதியும், வாகன ஓட்டுநர் உரிமம் அளிக்க நடத்தப்படும் பல்வேறு தேர்வுக்கான முழுமையான வசதி கொண்ட (Test Drive Track) புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

36. காஞ்சிபுரம் நகரத்தின் புறநகர் பேருந்து நிலையத்தை தேசிய நெடுஞ்சாலையில் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

37. காஞ்சிபுரம் நகராட்சியோடு புதியதாக இணைக்கப்பட்ட செவிலிமேடு, நத்தப்பேட்டை, தேனம்பாக்கம், ஓரிக்கை பகுதிகளில் புதைவடி கால்வாய் (UGD) அமைப்பதன் அவசியம் குறித்தும்;

38. காஞ்சிபுரம் தொகுதி, கோவிந்தவாடி ஊராட்சியில் அருள்மிகு தட்சிணாமூர்த்தி கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி அமைப்பதன் அவசியம் குறித்தும்;

39. காஞ்சிபுரம் தொகுதி, தாமல் கிராமப் பகுதி நடுவே செல்லும் சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைகளில் விவசாய நிலத்திற்கும் இடுகாட்டிற்கும் செல்லும் நேரங்களில் ஏற்படும் விபத்துகளை தவிர்க்க சுரங்க நடைபாதை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

40. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கூடுதல் தங்கும் விடுதி கட்டுவதன் அவசியம் குறித்தும்;

41. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக்கழகம் உறுப்பு பொறியியல் கல்லூரியில் புதிய பொறியியல் பாடப்பிரிவுகள் தொடங்குவதன் அவசியம் குறித்தும்;

42. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்குத் தேவையான புதிய பாடப் பிரிவுகளுக்கான வகுப்பறை கட்டடம், ஆய்வுக் கூடங்கள், விளையாட்டுத்திடல், மாணவ, மாணவிகள் தங்கும் விடுதி ஆகியவை அமைக்க தேவைப்படும் 10 ஏக்கர் நிலத்தினை தனியாரிடமிருந்து கையகப்படுத்துவதன் அவசியம் குறித்தும்;

43. காஞ்சிபுரம் பெருநகராட்சி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

44. காஞ்சிபுரம் மாவட்ட தலைநகரான காஞ்சிபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவதன் அவசியம் குறித்தும்;

45. காஞ்சிபுரத்தில் அரசு சட்டக் கல்லூரி அமைப்பதன் அவசியம் குறித்தும்;

46. காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பொது மக்கள் புகார் அளிக்க ஏதுவாக கோனேரிகுப்பம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் காவல் நிலையத்தை மாற்றுவதன் அவசியம் குறித்தும்;

47. காஞ்சிபுரத்தில் போதிதருமர் பெயரில் தொன்மையான கல்விகளுக்கான பல்கலைக்கழகம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

48. காஞ்சிபுரத்தில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

49. காஞ்சிபுரம் தொகுதி, திருப்புட்குழி ஊராட்சி, சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் உயர்கோபுர மின் விளக்கு அமைப்பதன் அவசியம் குறித்தும்;

50. காஞ்சிபுரம் தொகுதி, தாமல் ஊராட்சி, சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் உயர்கோபுர மின் விளக்கு அமைப்பதன் அவசியம் குறித்தும்;

51. காஞ்சிபுரம் தொகுதி, ராஜகுளம் ஊராட்சி, சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் உயர்கோபுர மின் விளக்கு அமைப்பதன் அவசியம் குறித்தும்;

52. காஞ்சிபுரம் தொகுதி, சிறுகாவேரிப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

53. காஞ்சிபுரம் தொகுதி, கோவிந்தவாடி அகரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

54. காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள 54 ஊராட்சிகளிலும் மழையினால் சேதம் அடைந்துள்ள சாலையைச் சீரமைப்பது குறித்தும்;

55. காஞ்சிபுரம் தொகுதி, செவிலிமேடு பகுதியில் நூலகம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

56. காஞ்சிபுரம் தொகுதி, ஏனாத்தூர் ஊராட்சியில் நூலகம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

57. காஞ்சிபுரம் தொகுதி, பழைய சிறுகாவேரிப்பாக்கம் கிராமத்தில் ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதன் அவசியம் குறித்தும்;

58. காஞ்சிபுரம் தொகுதி, சிறுகாவேரிப்பாக்கம் கிராமத்தில் சுடுகாட்டில் சுற்றுச் சுவர் அமைத்து பாதையை சீரமைப்பதன் அவசியம் குறித்தும்;

59. காஞ்சிபுரம் நகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட நத்தப்பேட்டை, தாண்டித்தோப்பு முருகன் குடியிருப்புப் பகுதிகளுக்கு செல்லும் பாதையில் சேதமடைந்த வேகவதி ஆற்று தரைபாலத்தை கட்டுவதன் அவசியம் குறித்தும்;

60. காஞ்சிபுரம் தொகுதியில், வேளியூர் ஊராட்சியில், கால்நடை மருத்துவமனை அமைப்பதன் அவசியம் குறித்தும்;

61. காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நீரிழிவு மருத்துவர்கள், இருதய மருத்துவர்களுக்கு புதிய பணியிடம் உருவாக்கி மருத்துவர்களை பணி அமர்த்துவதன் அவசியம் குறித்தும்;

62. காஞ்சிபுரம், அரசு பொது மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், பணி நியமனம் செய்வதன் அவசியம் குறித்தும்;

63. பல்லாவரம் தொகுதி அல்லது திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யாறு மற்றும் வந்தவாசி தொகுதிகளை காஞ்சிபுரம் மாவட்டத்தோடு இணைப்பதன் அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. திருவள்ளூர் தொகுதி, திருத்தணி முதல் திருவள்ளூர் வரை ராமஞ்சேரி, பூண்டி வழியாக பேருந்து வசதி ஏற்படுத்துவது குறித்தும்;

2. திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் நகராட்சியை சிறப்புநிலை நகராட்சியாக தரம் உயர்த்துவது குறித்தும்;

3. திருவள்ளூர் நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை மேம்படுத்தி குடிநீர் விநியோகம் செய்வது குறித்தும்;

4. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்தும்;

5. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் மாம்பழச்சாறு தொழிற்சாலை அமைப்பது குறித்தும்;

6. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்தும்;

7. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருத்தணி வட்டத்தைப் பிரித்து புதிய வட்டம் அமைப்பது குறித்தும்;

8. திருவள்ளூர் தொகுதி, பூண்டி, கடம்பத்தூர் மற்றும் திருவாலங்காடு ஒன்றியங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தரமான உணவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது குறித்தும்;

9. திருவள்ளூர்தொகுதி,பட்டரைபெரும்புதூர்,கனகம்மாசத்திரம், திருவாலங்காடு, பேரம்பாக்கம் மற்றும் கடம்பத்தூர் ஆகிய பகுதிகளில் கால்நடை தீவன பண்ணை அமைப்பது குறித்தும்;

10. திருவள்ளூரில் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

11. திருவள்ளூரில் அரசு கலைக் கல்லூரி அமைப்பது குறித்தும்;

12. திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், பனப்பாக்கம் ஊராட்சியில் உள்ள ஏரியை தூர் வாரி வரத்து கால்வாய்களை சீரமைப்பது குறித்தும்;

13. கடம்பத்தூர் ஒன்றியம், மப்பேடு ஏரியை தூர் வாரி சீரமைப்பது குறித்தும்;

14. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் உள்ள ஏரியை தூர் வாரி வரத்து கால்வாயை சீரமைப்பது குறித்தும்;

15. திருவள்ளூர் நகரம் முதல் பிளேஸ்பாளையம் வரை பூண்டி, நம்பாக்கம் வழியாக புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்துவது குறித்தும்;

16. திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காடு, பழையனூர், மாவூர், பெரியகளக்காட்டூர் ஆகிய ஏரிகளை தூர்வாரி சீரமைப்பது குறித்தும்;

17. திருவள்ளூர் நகரில் உள்ள உழவர் சந்தையை நடைமுறைப்படுத்துவது குறித்தும்;

18. திருவள்ளூர் நகராட்சிக்கு வெள்ளியூரிலிருந்து திருவள்ளூர் வரை குடிநீர் கொண்டு செல்ல புதிய பைப்லைன் அமைப்பது குறித்தும்;

19. பூண்டி ஒன்றியம், பாண்டூர் ஊராட்சி, கனகவல்லிபுரத்தில் 110 கி.வோ துணை மின்நிலைய பணியினை விரைவுபடுத்துவது குறித்தும்;

20. திருவள்ளூர் முதல் காக்களூர் வரை நடைபெறும் புறவழிச் சாலை பணியினை விரைந்து முடிப்பது குறித்தும்;

21. திருவள்ளூரிலிருந்து அரண்வாயல் குப்பம், கொப்பூர், பாப்பரம்பாக்கம், மேளூர்குப்பம் வழியாக பூந்தமல்லி வரை மாநகரப் பேருந்து இயக்குவது குறித்தும்;

22. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், நெமிலிஅகரம் வரை ஒன்றியச் சாலை அமைப்பது குறித்தும்;

23. கடம்பத்தூர் முதல் செஞ்சி பனப்பாக்கம் வரை உள்ள ஒன்றிய சாலையை சீரமைப்பது குறித்தும்;

24. என்.எச்–204 திருப்பாச்சூரில் உயர்கோபுர மின்விளக்கு அமைப்பது குறித்தும்;

25. திருவாலங்காடு ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர் வாருவது குறித்தும்;

26. கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் உள்ள ஸ்ரீதிரிபுரந்தக சுவாமி திருக்கோயில் குளம் சீரமைப்பது குறித்தும்;

27. திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்ந்த திருப்பாச்சூரில் அமைந்துள்ள வாசீஸ்வர திருக்கோயில் திருக்குளத்தை சீரமைப்பது குறித்தும்;

28. திருவள்ளூரில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையம் திருவள்ளூர் நகரிலேயே அமைப்பது குறித்தும்;

29. *திருவள்ளூர் நகரின் அருகே உள்ள காக்களூர் ஏரியை தூர் வாரி படகு குழாம் அமைத்து சுற்றுலாத் துறை மூலம் மேம்படுத்துவது குறித்தும்;*

30. *திருவள்ளூர் தொகுதியில் உள்ள குக்கிராமங்களில் உள்ள வழித்தடங்களில் பேருந்து வசதி மீண்டும் இயக்குவது குறித்தும்;*

31. *திருவள்ளூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த மாவட்ட பேருந்து நிலைய திட்டப் பணிகள் அமைப்பது குறித்தும்;*

32. *திருவள்ளூர் தொகுதி, வெங்கத்தூர் ஊராட்சி, மணவாளநகர்–திருவள்ளூர்இரயில்நிலையத்தைஇணைக்கும்தரைப்பாலத்தை மேம்பாலமாக அமைப்பது குறித்தும்;*

33. *திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், சத்தரை, ஏகாட்டூர் ஆகிய பகுதிகளில் கூவம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பது குறித்தும்;*

34. *திருவள்ளூர்தொகுதி,திருவாலங்காடுஒன்றியம்,திருவாலங்காடு இரயில் நிலையம் அருகில் மேம்பாலம் அமைப்பது குறித்தும்;*

35. *திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் சிமென்ட் தளம் அமைப்பது குறித்தும்;*

36. *பூண்டி ஒன்றியம், சத்தியமூர்த்தி நீர்த்தேக்கத்தில் நீரின் கொள்ளளவை அதிகப்படுத்துவது குறித்தும்;*

37. *திருவள்ளூர் நகரில் வைத்ய ஸ்ரீவீரராகவ சுவாமி திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி கட்டித் தருவது குறித்தும்;*

38. *திருவள்ளூர் இரயில் நிலையத்தில் சுரங்கப்பாதை அமைப்பது குறித்தும்;*

39. *திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இலவச தங்கும் விடுதி மற்றும் குளியலறை கட்டுவது குறித்தும்;*

40. *கனகம்மாசத்திரம் முதல் திருவள்ளூர் வரை திருவாலங்காடு வழியாக புதிய பேருந்து வழித்தடம் அமைப்பது குறித்தும்;*

41. *திருவள்ளூர் நகராட்சியில் அனைத்து பூங்காக்களையும் சிறப்புத் திட்டம்மூலம் சீரமைப்பது குறித்தும்;*

42. *திருவள்ளூர் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் பணியினை விரைந்து செயல்படுத்துவது குறித்தும்;*

43. திருவள்ளூர் என்.எச்–204 திருத்தணி–திருப்பதி தேசிய நெடுஞ்சாலை பட்டரைபெரும்புதூர் அருகே புதிய மேம்பாலம் கட்டுவது குறித்தும்;

44. திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதலாக புதிய அவசர ஊர்திகள் வழங்குவது குறித்தும்;

45. கடம்பத்தூர் ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

46. திருவள்ளூர் நகரில் 22–வது வார்டு, என்.ஜி.ஓ. காலனியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

47. பூண்டி ஒன்றியம், பூண்டி ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைப்பது குறித்தும்;

48. தேசிய நெடுஞ்சாலை–204, திருவள்ளூர் முதல் திருத்தணி வரை உள்ள கிராமங்கள் வழியாகச் செல்லும் சாலைகளில் வேகத்தடை அமைப்பது குறித்தும்;

49. திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தில் குண்டும் குழியுமாக உள்ள நரசிங்கபுர கிராமச் சாலையை சீரமைப்பது குறித்தும்;

50. திருவள்ளூர், அரசு பொது மருத்துவமனையில் நீரழிவு நோய்க்கான சிறப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி அனைத்து மருத்துவ சோதனைகளும் எடுத்து பொது மக்கள் பயன்பெறும் வகையில் புதிய நவீன கருவிகள் ஏற்படுத்துவது குறித்தும்;

51. திருவாலங்காடு ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம் மற்றும் பூண்டி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளில் அனைத்து கிராமங்களிலும் ஆழ்துளைக் கிணறு அமைப்பது குறித்தும்;

52. திருவள்ளூர் நகராட்சியில் வெள்ளியூர் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்றுத் திட்டம்மூலம் குடிநீர் வழங்குவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள்.

2020 ஜனவரி 9]

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. மரமடக்கி–திருநாளூர் வடக்கு, திருநாளூர் தெற்கு–ஆவணத்தாங்கோட்டை நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையை புதுப்பிக்க வேண்டியது குறித்தும்;

2. ஆலங்குடி தொகுதியில் உள்ள வார சந்தையை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

3. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியில் உள்ள சாலைகளை தார்ச் சாலையாக சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

4. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

5. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சி பகுதியில் உள்ள 15 வார்டுகளிலும் வடிகால் வசதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

6. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சியில் உள்ள திருக்குளத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

7. ஆலங்குடி தொகுதி, வேப்பங்குடி ஊராட்சி, திருவரங்குளம் காலனி, பாரதியார் நகர் பகுதியில் புதிய திருமண மண்டபம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

8. ஆலங்குடி தொகுதி, புதுக்கோட்டை விடுதி ஊராட்சி, கும்மங்குளம் பகுதியில் புதிய ஆழ்குழாய்க் கிணறு மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

9. புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில் உள்ள ஆவுடையார்கோயில் திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

10. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் சிவன் கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

11. ஆலங்குடி தொகுதிக்குட்பட்ட குலமங்கலத்தில் அமைந்துள்ள பெருங்காரையடி நீண்ட அய்யனார் கோயிலை சுற்றுலாத்தலமாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

12. திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் தெற்கு பகுதி, கருவன் குடியிருப்பு பகுதியில் 1000 அடி ஆழ்துளைக் கிணறு மற்றும் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
13. திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் தெற்கு அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;
14. திருநாளூர் ஊராட்சி, திருநாளூர் வடக்கு பகுதி, காசியா குடியிருப்பு பகுதியில் 900 அடி மாற்று ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
15. ஆலங்குடி தொகுதி, குலமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது குறித்தும்;
16. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி பேரூராட்சிக்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்தும்;
17. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பகுதியில் விவசாயிகளுக்கு குளிர்பதனக் கிடங்கு அமைப்பது குறித்தும்;
18. ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம், சிட்டங்காடு ஊராட்சி, கரிசக்காடு கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்தும்;
19. ஆலங்குடி தொகுதி, புள்ளான்விடுதி ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;
20. ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் பேரூராட்சி, கீரமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;
21. ஆலங்குடி தொகுதி, அறந்தாங்கி முதல் ஆவணத்தாங்கோட்டை, பூவற்றக்குடி, வல்லவாரி மேற்கு, வல்லவாரி வழியாக பேராவூரணி வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்தும்;
22. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடி முதல் கொத்தமங்கலம் வழியாக கீரமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையை இருவழிச் சாலையாக தரம் உயர்த்துவது குறித்தும்;
23. ஆலங்குடி தொகுதி, KV கோட்டை ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

24. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் செயல்படும் முழு நேர ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்துவது குறித்தும்;

25. ஆலங்குடி தொகுதி, வெண்ணாவால்குடி ஊராட்சி, வெண்ணாவால்குடியில் புதிய 33/11 KV *துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

26. ஆலங்குடி தொகுதி, கொத்தமங்கலம் ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்துவதன் அவசியம் குறித்தும்;

27. ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் புதிய கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

28. ஆலங்குடி தொகுதி, கொத்தக்கோட்டை ஊராட்சி, வம்பனில் 33/11 KV *துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. *சத்யா, இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. S. *காத்தவராயன், இருக்கையில் இல்லை.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. 58-வது வார்டில் உள்ள நேவல் மருத்துவமனை சாலையில் மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை சீரமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

2. 58-வது வட்டத்தில் உள்ள ஐயப்பா விளையாட்டு மைதானத்தை சீரமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

3. 58-வது வார்டில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தில் தனியார்கள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளுக்கு கொடுக்கப்படும் நுழைவுச்சீட்டிற்கு சென்னை மாநகராட்சி சார்பில் கேளிக்கை வரி வசூலிப்பதைக் குறைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

4. 58-வது வார்டில் உள்ள நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் நேரு உள்விளையாட்டு அரங்கம் ஆகியவற்றை சீரமைத்து மேம்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

5. 58-வது வார்டில் உள்ள நேரு விளையாட்டு மைதானங்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவது குறித்தும்;

6. 61-வது வார்டில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கத்தை சீரமைத்து மேம்படுத்த தகுந்த நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

7. 61-வது வட்டத்தில் உள்ள ரங்காச்சாரி தெரு, மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை சீரமைப்பது குறித்தும்;

8. 77-வது வார்டில் பழைய ஆட்டு தொட்டி தெருவில் உள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தை சீரமைப்பது குறித்தும்;

9. 77-வது வார்டில் உள்ள பேசின் பிரிட்ஜ் சாலையில் உள்ள சிவராஜபுரம் விளையாட்டு மைதானத்தை சீரமைப்பது குறித்தும்;

10. 58-வது வார்டு, நேவல் மருத்துவமனையில் இரண்டாவது தெருவில் உள்ள 50 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

11. 61 வார்டு, பூபதி நகரில் 50 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் 65 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

12. 77–வது வார்டு, டிமலஸ் ரோடு குமாரசாமி ராஜாபுரத்தில் இருக்கும் 63 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

13. 77–வது வார்டு, போகிபாளையம் கார்ப்பரேசன் லேன் 338 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

14. 104–வது வார்டு, சாஸ்திரி நகர் பகுதியில் 580 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

15. 104–வது வார்டில் உள்ள சாலைமாநகரில் வசிக்கும் மக்களுக்கு விற்பனைப் பத்திரம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

16. 104–வது வார்டில் உள்ள புல்லாபுரம் பகுதியில் இருக்கும் 338 வீடுகளுக்கு நிரந்தர பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

17. 107–வது வார்டு, எம்.எஸ். நகர் பகுதி 50 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் 118 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

18. 107–வது வார்டு ஜெகநாதபுரம் 6–வது தெருவீல் உள்ள (ஆதி ஆந்திரா பகுதியில்) 50 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் 65 வீடுகளுக்கு பட்டா வழங்குவது குறித்தும்;

19. 78–வது வார்டில் உள்ள சச்சிதானந்த தெரு, ஐந்து விளக்கு அருகில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

20. 107–வது வார்டில் உள்ள டாக்டர் அம்பேத்கர் விளையாட்டு திடல் அருகில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

21. 78–வது வார்டில் உள்ள அங்காளம்மன் கோயில் அருகில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

22. 61–வது வார்டில் வேலாயுதம் மெயின்ரோடு சந்திப்பு அருகில் உயர் கோபுர மின் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

23. 77–வது வட்டத்தில் உள்ள சிவராஜபுரத்தில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்துக்கு நவீன உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

24. 77–வது வட்டத்தில் பி.கே.காலனி குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்திற்கு புதிய நவீன உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

25. 78–வது வட்டத்தில் உள்ள சச்சிதானந்தா தெருவில் பெண்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தில் போதிய உபரகணங்கள் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

26. 78–வது வட்டத்தில் கே.கே. குடியிருப்புப் பகுதியில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்தை சீரமைத்து புதிய உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

27. 58–வது வட்டத்தில் உள்ள மைலேடிஸ் பூங்காவை சீரமைக்க வேண்டியது குறித்தும்;

28. 61–வது வார்டில் உள்ள லஷ்மிபதி ருக்மணி சாலையில் உள்ள பூங்காவில் மூலிகைச் செடிகள் மற்றும் நீரூற்று அமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

29. 77–வது வட்டத்தில் உள்ள பூங்காவை சீரமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

30. 77–வது வட்டத்தில் புளியந்தோப்பு நெடுஞ்சாலையில் உள்ள கே.எஸ். பூங்காவை சீரமைக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

31. 107–வது வட்டத்தில் உள்ள சத்தியமூர்த்தி சாலையில் அமைந்துள்ள சத்தியமூர்த்தி பூங்காவை சீரமைப்பது குறித்தும்;

32. எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டில் உள்ள கே.பி. பூங்கா குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் 1 முதல் 14 பிளாக் வரை 672 குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள போதுமான நிதியை ஒதுக்கி கூடுதல் பணியாளர்களை நியமிப்பது குறித்தும்;

33. எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டில் கே.பி. பூங்காவில் 864 புதிய குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டதை பயனாளிகளுக்கு விரைவில் ஒதுக்க நடவடிக்கை எடுப்பது குறித்தும்;

34. *எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டில் உள்ள பி,கே. காலனி 594 குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு மாற்றாக புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவது குறித்தும்;*
35. *எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 61–வது வார்டில் உள்ள டாக்டர் சந்தோஷ் நகர் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கு மாற்றாகப் புதிய குடியிருப்புகள் கட்டுவது குறித்தும்;*
36. *61–வது வட்டத்தில் உள்ள வீராசாமி தெருவில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய நவீன குளிர்சாதன சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;*
37. *77–வது வட்டத்தில் உள்ள சிவராஜபுரத்தில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;*
38. *104–வது வட்டத்தில் உள்ள ஓசான்குளம் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் அருகே உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;*
39. *107–வது வட்டத்தில் உள்ள எம்.எஸ்.நகர் சமுதாயக் கூடத்திற்குப் பதிலாக புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்தும்;*
40. *107–வது வட்டத்தில் உள்ள வெங்கடாசலம் தெருவில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு பதிலாக புதிய சமுதாயக் கூடத்தைக் கட்டுவது குறித்தும்;*
41. *107–வது வட்டத்தில் பள்ளிச் சாலையில் உள்ள டோபிக்கான புதிய அறைகள் கட்டுவது குறித்தும்;*
42. *நேரு விளையாட்டு அரங்கத்தில் பள்ளிகள் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளுக்கு குறைந்த கட்டணம் வசூலிப்பது குறித்தும்;*
43. *77–வது வட்டத்தில் உள்ள போகிப்பாளையம் கார்ப்பரேஷன் லைனில் 338 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு தர வேண்டியது குறித்தும்;*
44. *58–வது வட்டத்தில் உள்ள பல தெருக்களில் கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;*
45. *61–வது வட்டத்தில் உள்ள பல தெருக்களில் கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;*

46. 77–வது வட்டத்தில் உள்ள பல தெருக்களில் கழிவுநீர் மற்றும் குடிநீர்க் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;

47. 78–வது வட்டத்தில் உள்ள பல தெருக்களில் கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;

48. 107–வது வட்டத்தில் உள்ள பல தெருக்களில் கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்களை மாற்றி அமைப்பது குறித்தும்;

49. 77–வது வட்டத்தில் உள்ள கண்ணப்பத்திடலில் புதிய நவீன வசதிகளுடன் கூடிய மீன் மார்க்கெட் அமைப்பது குறித்தும்;

50. 58–வது வட்டத்தில் உள்ள ராட்லர் தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய நூலகம் அமைப்பது குறித்தும்;

51. 78–வது வட்டத்தில் குறவம்குளம் நூலகத்தைச் சீரமைக்க வேண்டுவது குறித்தும்;

52. 107–வது வட்டத்தில் அம்பேத்கர் விளையாட்டு திடல் எதிரே உள்ள நூலகத்தை சீரமைப்பது குறித்தும்;

53. 104–வது வட்டத்தில் சுந்தரம் தெருவில் உள்ள நூலகத்தை சீரமைக்க வேண்டியது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

“1. திருப்பூர், கோவை மாவட்டத்தில் பாசனப் பகுதி மேம்பட மற்றும் கூடுதல் நீர் வரத்துப்பெற ஆனைமலை ஆறு– நல்லாறு திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும்;

2. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைவாழ் கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தருவதன் அவசியம் குறித்தும்;

3. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் கிராமங்களுக்கு தரமான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

4. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதியில் தொடர்ந்து காட்டு யானை மற்றும் காட்டுப்பன்றிகளால் உயிர்ச்சேதம் மற்றும் பயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

5. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

6. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அமராவதி அணையின் நீர் வரத்தை அதிகப்படுத்துவதற்காக அப்பர் அமராவதி திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும்;

7. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கூட்டாற்றுப் பகுதியில் அமராவதி நீர் வரத்து கால்வாய் பாம்பாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

8. மடத்துக்குளம் தொகுதியில் இயங்கிவரும் பொது விநியோக கட்டடங்களில் பழுதடைந்த கடைகளுக்குப் பதில் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டிய அவசியம் குறித்தும்;

9. மடத்துக்குளம் தொகுதியில் ராவனாபுரம் ஊராட்சி, வரப்பள்ளத்தில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

10. மடத்துக்குளம் தொகுதி, அமராவதி அணையில் இருந்து கரூர் வரை அமராவதி ஆற்றின் குறுக்கே தேவையான இடங்களில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

11. மடத்துக்குளம்தொகுதிக்குட்பட்டஅனைத்துஊராட்சிகளிலும் நவீன சமுதாயக்கூடம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

12. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து நியாய விலைக் கடைகளிலும் எல்லா நாட்களிலும் அனைத்துப் பொருட்களும் கிடைக்க வழி செய்வது குறித்தும்;

13. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட தகுதிவாய்ந்த முதியவர்கள், கணவனால்கைவிடப்பட்டமாற்றுத்திறனாளிகள்அனைவருக்கும் உதவித்தொகை வழங்குவதன் அவசியம் குறித்தும்;

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்] [2020 ஜனவரி 9

14. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மூத்த குடிமக்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவது குறித்தும்;
15. திருப்பூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
16. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
17. மடத்துக்குளம் தொகுதியில் வன விலங்குகளால் ஏற்படும் உயிர்ச் சேதத்திற்கு 25 இலட்சமும், பயிர்ச் சேதத்திற்கு கூடுதல் இழப்பீட்டுத் தொகையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
18. மடத்துக்குளம் தொகுதியில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
19. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கணக்கம்பாளையத்தில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய 3 இடங்களில் 2 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;
20. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
21. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கல்லாபுரம் ஊராட்சி, பூளவாடிபுதூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
22. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட உடுக்கம்பாளையம் கிராமம், நெசவாளர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
23. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் அனைத்துத் தொகுப்பு வீடுகளையும் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;
24. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும்;

25. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட தேவனூர்புதூர் கிராமத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

26. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட குமரலிங்கம், மடத்துக்குளம், துங்காவி, கோட்டமங்கலம், பெதப்பம்பட்டி வரை உள்ள சாலையை புறவழிச் சாலையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

27. மடத்துக்குளம் தொகுதி, துங்காவி ஊராட்சி, துங்காவியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது குறித்தும்;

28. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

29. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஐந்து பேரூராட்சிகளில் தார்ச் சாலைகளை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

30. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் உள்ள திறந்தவெளி கிணற்றை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் அவசியம் குறித்தும்;

31. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வீட்டுமனை இல்லாத மக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்குவதன் அவசியம் குறித்தும்;

32. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் பேரூராட்சி, சர்க்கார் கண்ணாடி கிராமத்திலிருந்து பசுபதிபுத்தூர் கிராமத்திற்குச் செல்ல அமராவதி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

33. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட நல்லாற்றின் குறுக்கே தேவையான இடங்களில் தடுப்பணை கட்டுவதன் அவசியம் குறித்தும்;

34. மடத்துக்குளம் தொகுதி, உடுமலை முதல் தாராபுரம் வரை உள்ள சாலையை 4 வழிச்சாலையாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

35. மடத்துக்குளம் தொகுதி, பூலாங்கிணறு ஊராட்சியில், பூலாங்கிணற்றில் கூடுதலாக 1 இலட்சம் லிட்டர் குடிநீர்த் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் குறித்தும்;

[திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்] [*2020 ஜனவரி 9*

36. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட கணக்கம்பாளையம் கிராமம், எஸ்வி.புரம் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

37. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம்–குமரலிங்கம் சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதன் அவசியம் குறித்தும்;

38. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பூலாங்கிணறு–ஆனைமலை சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பது குறித்தும்;

39. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் உள்ள வீடுகளில் தனி நபர் கழிப்பிடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

40. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் உள்ள சாக்கடைகளை அகற்றி அனைத்து இல்லங்களிலும் உறிஞ்சுகுழி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

41. கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற அனைத்துக் கடன்களையும் இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்;

42. மாணவர்கள் மேல்படிப்புக்காக பெற்ற அனைத்து கல்வி கடன்களையும் இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்;

43. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட தளி பேரூராட்சியில் சுதந்திர போராட்ட வீரர் எத்தலப்ப நாயக்கருக்கு மணி மண்டபம் கட்டுவதன் அவசியம் குறித்தும்;

44. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அந்தியூர் ஊராட்சி, சடையபாளையத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

45. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

46. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட ஒன்றியப் பகுதிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

47. தமிழகத்தில் ஏற்படுகின்ற இயற்கை சீற்றத்தை ஈடு செய்வதற்கு அரசு பொதுக் காப்பீடு செய்வதன் அவசியம் குறித்தும்;

48. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு உரிய ஆதார விலை அரசு நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்;

49. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அரசு பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்;

50. அனைத்து பள்ளிகளுக்கும் இரவு காவலர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

51. மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் பேரூராட்சி, கே.டி. எல் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

52. மடத்துக்குளம் தொகுதி, சோழமாதேவி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

53. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அமராவதி அணையில் உள்ள பூங்காவை அனைத்து வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

54. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட திருமூர்த்தி அணையில் உள்ள பூங்காவை அனைத்து வசதிகளுடன்கூடிய சுற்றுலாத் தலமாக தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

55. மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட குமரலிங்கம் முதல் காரத்தொழுவு வரை உள்ள சாலையை 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

56. மின் இணைப்புக்காக பதிவு செய்த விவசாயிகள் அனைவருக்கும் மின் இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. கூடலூருக்கு ஜென்மி ஒழிப்பு மற்றும் இரத்து வாரிய பட்டா வழங்க சட்டப் பிரிவு 17–ல் வசிக்கின்ற 16 ஆயிரம் குடும்பங்களுக்கு 35 ஆயிரம் ஏக்கரில் பட்டா வழங்குவது குறித்தும்;

2. பிரிவு 17–ல் வசிக்கின்ற அனைவருக்கும் மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

3. கூடலூர் தொகுதிக்குட்பட்ட விண்ணப்பித்துள்ள 10 ஆயிரம் பேருக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்தும்;

4. கூடலூர் அரசு கலைக் கல்லூரி விரிவுரையாளர்களை நியமிப்பதும், புதிய பாடப் பிரிவுகள் ஏற்படுத்துவது குறித்தும்;

5. நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டத்தில் ஊப்பட்டியில் உள்ள ஐ.டி.ஐ–ல் இதர பிரிவு மாணவர்களை சேர்ப்பது குறித்தும்;

6. நீலகிரி மாவட்டம், கூடலூரில் பந்தலூர் உள் விளையாட்டு அரங்கம் மற்றும் பார்வை அரங்கம் அமைப்பது குறித்தும்;

7. தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக் கழகத்தை மேம்படுத்த சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்தும்;

8. தமிழ்நாடு வன சட்டம், 1882–ல் பிரிவு 16ஏ கொண்டு வந்த திருத்தத்தை இரத்து செய்வது குறித்தும்;

9. தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்த்தி வழங்குவது;

10. தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களுக்கு பணி வழங்குவது குறித்தும்;

11. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வழங்குவது குறித்தும்;

12. நீலகிரி மாவட்டத்தில் அரசு வழங்கும் விலை இல்லாத வீடுகளுக்கு வழங்கும் தொகையை உயர்த்துவது குறித்தும்;

13. சாலைகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவை சரி செய்வது குறித்தும்;

14. பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளை உடனடியாக கட்டுவது குறித்தும்;

15. கூடலூர் தொகுதிக்குட்பட்ட நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவது குறித்தும்;

16. முதுமலைக்கு கல்லட்டி வழியாக நீலகிரி மாவட்டம் தவிர மற்ற மாவட்ட வாகனங்கள் செல்வதற்கான தடையை நீக்குவது குறித்தும்;

17. கூடலூர் தொகுதிக்குட்பட்ட பொன்னூர் தோட்டக் கலைக்கு சொந்தமான இடம் மற்றும் வனத் துறைக்கு சொந்தமான நாடுகானி சீன்புயலில் உள்ள இடங்களை சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்தும்;

18. தாட்கோ மூலமாக கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நடுவட்டம், கூடலூர் பொன்னார், கூடலூர் அண்ணாநகர் அம்பேத்கர் நகர் இன்கோ காலனி தத்தெடுப்பது குறித்தும்;

19. கூடலூரில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பது குறித்தும்;

20. கூடலூர் தொகுதிக்குட்பட்ட பந்தலூரில் காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்தும்;

21. கூடலூரில் மின்சாரக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

22. கூடலூரில் 110 கி.வாட் துணை மின் நிலையம் அமைப்பது குறித்தும்;

23. கூடலூரில் வேளாண்மை இயக்குநர் அலுவலகம் அமைப்பது குறித்தும்;

24. நீலகிரி மாவட்ட பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை வழங்குவது குறித்தும்;

25. முதுமலை புலிகள் காப்பகத்திற்கு உள் மற்றும் வெளி மண்டல பகுதியில் உன்னிச் செடி மற்றும் பார்த்தீனிய செடிகளை அகற்றுவது குறித்தும்;

26. முதுமலை புலிகள் காப்பத்திற்குள் வசிக்கிற பழங்குடியினர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வது குறித்தும்;

27. *மாநிலத்தில் பெரிய ஊராட்சிகளான சேராங்கோடு, நிலக்கோட்டை ஆகியவற்றை பிரிப்பது குறித்தும்;*

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:*

"1. *சின்னசேலம் ஏரிக்கு கோமுகி அணையிலிருந்து வரும் கடத்தூரில் இருந்து பிரிந்து வரும் வாய்க்காலை ஆழப்படுத்தி தண்ணீர் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்தும்;*

2. *சின்னசேலம் பேரூராட்சியில் அகலமான தார்ச் சாலையின் நடுவில் பிரிவு தடுப்புச் சுவர் அமைத்து கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;*

3. *கல்வராயன் மலையில் உள்ள உப்பூர், வாரம், சேத்தூர் போன்ற கிராமங்களில் தார்ச் சாலை அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;*

4. *கல்வராயன் மலை, எழுத்தூர் முதல் சின்னதிருப்பதி வரை ஜல்லிபரப்பி வரை தார்ச் சாலை அமைப்பது குறித்தும்;*

5. *சின்னசேலம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்தும்;*

6. *சங்கராபுரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் குறித்தும்;*

7. *வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், பொட்டியம் ஊராட்சியில் உள்ள கல்படை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;*

8. வெள்ளிமலை ஊராட்சி ஒன்றியம், பொட்டாம்பட்டிகூடலூர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

9. சங்கராபுரத்தில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

10. கல்வராயன் மலையில் கடுக்காய் தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

11. கல்வராயன் மலையில் மலைவாழ் பழங்குடியின மக்கள் விவசாயம் செய்யும் நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டிய அவசியம் குறித்தும்;

12. சங்கராபுரம் அல்லது சின்னசேலம் பகுதியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்;

13. கோமுகி அணையை தூர் வாரி தர வேண்டியதன் அவசியம் குறித்தும்;

14. மணிமுத்தாறு அணையை தூர் வார வேண்டிய அவசியம் குறித்தும்;

15. வெள்ளிமலையில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

16. வடக்கனந்தல் கல் ஏரியை மதகுகள் கோடியை புதுப்பித்து தர வேண்டியதன் அவசியம் குறித்தும்;

17. சின்னசேலம் அம்சகுளம் அருகே அமைந்துள்ள ஏரியை தூர் வாரி அங்குள்ள கருவேல முள் மரங்களை அகற்றி கரையை பலப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும்;

18. சின்னசேலம் பகுதியில் புதியதாக துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

19. கல்வராயன் மலை, வெள்ளிமலை ஆகிய இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

20. கோமுகி அணையில் உள்ள பூங்காவைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

21. கல்வராயன் மலையில் உள்ள கொண்டியநத்தம், சிறுக்கலூர் ஆகிய நீர் வீழ்ச்சிகளை சுற்றுலாத் தலமாக அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

22. சங்கராபுரம் ஒன்றியம், பூட்டை ஊராட்சியில் உள்ள துணை கிராமமான பாவளத்தை தனி ஊராட்சியாக பிரிக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

23. வடக்கனந்தல் பேரூராட்சி (கச்சிராபாளையம்) சடையம்பட்டு துணை மின் நிலையத்திலிருந்து எடுத்து வாய்நத்தம் துணை மின் நிலையத்திலிருந்து 24 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டிய அவசியம் குறித்தும்;

24. சின்னசேலம் ஒன்றியம், சிங்காநத்தம் ஊராட்சியில் ஆதி திராவிட மக்களுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் குறித்தும்;

25. கச்சிராபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்டம் சாரா மருத்துவமனையாக 30 படுக்கை வசதியுடன் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் குறித்தும்;

26. கள்ளக்குறிச்சி, சிறுங்கூரில் அமைந்துள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு தனியாக பேருந்து வசதி அமைத்துத் தர வேண்டிய அவசியம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் அவர்கள்.

திரு. ஆ. மகாராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட என்னுடைய திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:

"1. ஆண்டிபட்டி தொகுதி, ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 30 ஊராட்சிகள், 300 கிராமங்களில் நிலத்தடி நீரை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்வது குறித்தும்;

2. வள்ளல் நதி கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்தும்;

3. அரப்படிதேவன்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்தும்;

4. பாலகோம்பை கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்தும்;

5. வைகையாற்றிலிருந்து மடை அமைத்து அம்மச்சிபாளையம், கருங்குளம், செங்குளம் நிறைந்ததும், கோவில்பட்டி சக்கிலிச்சிகுளம் வாய்க்காலுக்கு மடை அமைத்து திருப்புவது குறித்தும்;

6. முல்லை பெரியாரிலிருந்து தண்ணீரை குழாய் மூலமாக கண்டமனூர் தெற்கு பகுதி வைகை ஆற்றோடு இணைப்பது குறித்தும்;

7. வைகை அணை தூர் வாருவது குறித்தும்;

8. வைகை அணைக்கு அருகே பிக்-அப் அணையிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;

9. கம்பம் ஒன்றியத்தில் 10 ஆயிரம் ஹெக்டேரில் திராட்சை ஆராய்ச்சி மையம் அமைப்பது குறித்தும்;

10. ஆண்டிபட்டி, சுப்புலாபுரம் உயர் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைப்பது குறித்தும்;

11. கடமலை-மயிலை ஒன்றியத்தில் வைகை ஆற்றில் தடுப்பணை குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. மகாராஜன் அவர்கள்முன் மொழிந்த திருத்தங்களை வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 6-1-2020 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலுரையாற்றுகிறேன்.*

அறமும், தமிழும் வளர்த்த நற்றமிழ் நாயகி! அறிவும், ஆளுமையும் மிக்க அன்னைத் தமிழரசி! அகிலம் போற்றும் அன்பின் திருஉருவம்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மையே என்று வணங்கத் தோன்றும் அம்மா என்னும் தெய்வம்! சமூக நீதி காத்த சரித்திர வீராங்கனை! காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வி! தமிழர்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து vision 2023 தந்த தீர்க்கதரிசி! பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் குலச்சாமி! (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனதில் என்றென்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் மறைந்தும் மறையாத மக்கள் தலைவி! இசைபட வாழ்ந்த ஏழிசை ராகம்! சுவைபட பேசிய அறுசுவை அமுதம்! மக்களை அரவணைக்கும் ஐவகை நிலம்! நல்லதைப் போதித்த நான்குமறை! நாட்டைக் காக்கும் முப்பெரும் சக்தி! (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க்கையை நெறிப்படுத்தும் இருவரிக் குறள்! மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து எங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் குடியிருக்கும் ஒப்பற்ற ஒரே உன்னதத் தலைவி! எங்கள் அம்மா தெய்வத்தை போற்றி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் திருமுகத்தால் இன்னமும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் இந்த மாமன்றம்; மாண்புமிகு அம்மாவின் உரை வீச்சால் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தப் பேரவை; எளியவர்களையும் வலியவர்களாக மாற்றி இப்பேரவையில் அமர வைத்த வல்லமை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களையும், இம்மாமன்றத்தையும் வணங்கி என் பதிலுரையைத் துவக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 6–1–2020 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. நி. சதன் பிரபாகர் அவர்களால் வழிமொழியப்பட்ட இத்தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். பாராட்டியும், குறை கூறியும் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நண்பகல் 12-00

2011 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலர்ந்தபோது, "துயரத்தை மறந்து விடுங்கள், இனி சிரித்துக் கொண்டே இருங்கள், உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையும், அதை நான் உறுதி செய்கிறேன்" என்றும், "எங்கள்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை, அளித்துள்ள பொறுப்புகளைக் கட்டாயமாக நிறைவேற்றுவோம்" என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அவர்கள், தன் ஆட்சிக் காலத்தில் சொன்னதை மட்டுமல்ல, சொல்லாமல் விட்ட நல்ல பல மக்கள் நலத் திட்டங்களையும் செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க காலத்தில் நெடுஞ்செழியன் என்னும் மாமன்னர், பல மன்னர்களை போர்க் களத்தில் வென்றவர். போர் முனையில் மட்டுமின்றி, ஏர் முனையிலும் மன்னர் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணிய புலவர் ஒருவர், 'நிலன் நெறி மருங்கின் நீர்நிலைப் பெருக' என்று மன்னருக்கு அறிவுரை கூறினார். அதாவது, பகைவரை வென்று, அவர்களைச் சிறையில் இடுவதைவிட, மழையால் பெருகும் நீரை ஏரிகளிலும், குளங்களிலும் தேக்குவதே ஒரு நாட்டிற்கு நலன் பயக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு நீரைத் தேக்கி வைத்தவர்களின் பெயர்தான் புகழோடு உலகத்தில் நிலைக்கும் என்றார். அப்புலவரின் கூற்றுக்கிணங்க, நீண்ட நாட்களாக தூர்வாரப்படாமலும், சீரமைக்கப்படாமலும் இருந்த பெரிய ஏரிகள், சிறு பாசன ஏரிகள், குளங்கள், ஊரணிகள் மற்றும் குட்டைகள் போன்ற 34,871 நீர்நிலைகள் 2017 முதல் இன்று வரை 2,182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத்தட்டும்ஒலி) இப்பணிகள், குடிமராமத்து திட்டத்தின்கீழ், விவசாய சங்கங்கள் மூலமாக அவர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் பராமரிப்பில் உள்ள 1,315 நீர்நிலைகள் 811.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர, ஆறுகள், ஓடைகள், கால்வாய்கள் போன்றவற்றில் 1,141 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 59 பெரிய தடுப்பணைகள் பொதுப் பணித் துறையின் மூலமும், 40 ஆயிரம் சிறிய தடுப்பணைகள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமும் கட்டப்பட்டுள்ளன.

வேளாண் பெருமக்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்கென அக்கறையுடன் செயல்படுத்தி உண்மையாக

உழைக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசின் செயல்பாடுகளை இயற்கையே அங்கீகரிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் பருவ மழை பொழிந்து, தூர்வாரப்பட்ட பெரும்பாலான நீர்நிலைகள் நீர் நிறைந்து ததும்பி நிற்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி ஆற்றுப் பாசனப் பகுதிகளில், கடைமடை வரை தண்ணீர் செல்ல கடந்த காலங்களில் பல நாட்கள் ஆகும். ஆனால், தமிழ்நாடு முழுவதும் குடிமராமத்து திட்டமும், காவேரி டெல்டா மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளும் செம்மையாக மேற்கொள்ளப்பட்டதால், இந்த ஆண்டு 15 முதல் 20 நாட்களுக்குள் கடைமடை வரை தண்ணீர் தங்குதடையின்றி சென்றடைந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் பயிர் சாகுபடி பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

“கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி” (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நமது விவசாயிகளைப் பேணிப் பாதுகாத்து, அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் சரியான நேரத்தில் செய்து கொடுத்த காரணத்தினால்தான், தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு இதே நாளில் 85 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் என இருந்த வேளாண் பயிர் சாகுபடி பரப்பு, இந்த ஆண்டில் இதுவரை 7 இலட்சம் ஏக்கர் கூடுதலாக, (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 92 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதனால் இந்தாண்டு, தமிழ்நாடு, உணவு தானிய உற்பத்தியில் ஒரு புதிய மைல் கல்லை அடையும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்படப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும், நன்னீர் தேவையைக் குறைக்கவும், நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்கவும், கழிவு நீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்தவும், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கம் சென்ற ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இத்திட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாக, சென்னை மாநகரில் பெருகிவரும் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் வகையில், கோயம்பேடு, கொடுங்கையூர் பகுதிகளில் நாளொன்றுக்கு தலா 45 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள் என்னால் துவக்கி வைக்கப்பட்டன. இவ்விரண்டு நிலையங்களின் உற்பத்தித் திறன் தலா 60 மில்லியன் லிட்டராக உயர்த்தப்படவுள்ளது. இதன்மூலம் இந்தியாவிலேயே 20 சதவீதம் கழிவு நீர் மறுசுழற்சி செய்யப்படும் ஒரே நகரமாக சென்னை திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

மேலும், சென்னை மாநகரில் உள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை முற்றிலும் தடுத்திட 2,371 கோடி ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. மேலும், சென்னை குடிநீர்த் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களால் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் தலா 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதேபோன்று, 27–6–2019 அன்று நெம்மேலியில் 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட ஒரு புதிய திட்டத்தினை நான் துவக்கி வைத்துள்ளேன். பேரூரில், 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இத்திட்டங்களினால் வருங்காலத்தில் பருவமழை பொய்த்தாலும், சென்னை நகர மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க முடியும் என்பதை திடமாக இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கடந்த 3 ஆண்டுகளில், பொதுமக்களின் குடிநீர்த் தேவைகளுக்காக புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் 57.81 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் சுமார் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், தேனி, திண்டுக்கல், தென்காசி, விழுப்புரம், நீலகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 12.5 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 373

கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 நகர்ப்புற தனி குடிநீர்த் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேபோன்று, கிருஷ்ணகிரி, தேனி, விருதுநகர், அரியலூர் உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 5.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 407 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பாதாள சாக்கடைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியைக் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் முதுகெலும்பு விவசாயம் என்போம். "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகு" என்றார் திருவள்ளுவர். "சேற்றில் உழவன் கால் வைத்தால்தான் மக்கள் சோற்றில் கை வைக்க முடியும்" என்பதை ஒரு விவசாயி என்ற முறையில் நான் நன்கு உணர்ந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 8 ஆண்டுகளில் ஆறாவது முறையாக உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி தமிழ்நாடு சாதனை புரிந்துள்ளது. மேலும், கடந்த 8 ஆண்டுகளில், 5 முறை மத்திய அரசின் கிருஷி கர்மான் விருதினைப் பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு, வேளாண் பெருமக்களுக்கு 7,283 கோடி ரூபாய் பயிர்க் காப்பீட்டு இழப்பீட்டு நிதியை பெற்றுத் தந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தேசிய அளவில் ஒரு சாதனையாகும்.

2018 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களைப் பாதுகாக்க அரசு உடனடி நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது மாண்புமிகு அம்மாவுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாண்டு அமெரிக்கன் படைப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசே, 47 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் பூச்சிக்கொல்லி மருந்தினைத் தெளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மக்காச்சோளம் பயிரிட்ட வேளாண் பெருமக்களிடமிருந்து இப்பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைமூலம் பெரிதும் வரவேற்பைப் பெற்ற அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தொடக்க வேளாண்மை

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக நடப்பு நிதியாண்டில் 31–12–2019 வரை சுமார் 9 இலட்சம் குறு, சிறு விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. பருவமழை சிறப்பாக இருந்ததாலும், சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதாலும், இந்த ஆண்டு நெல் உற்பத்தி அதிகரிக்கும் என்பதாலும், வேளாண் பெருமக்களுக்கு உரிய விலை கிடைக்க, தேவைப்படும் இடங்களில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும்.

பல்வேறு தரப்பு மக்களிடமிருந்தும் வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, சர்க்கரை குடும்ப அட்டைகளை, அரிசி குடும்ப அட்டைகளாக மாற்றுவதற்கு நான் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப, அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு போதிய மழையும், விவசாயத்திற்குத் தேவையான தண்ணீரும் உள்ள காரணத்தாலும், அதிக பரப்பிலான பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருவதாலும், வேளாண் பெருமக்கள் இடுபொருட்கள் மற்றும் பிற பணிகளுக்காக கணிசமான பணத்தைச் செலவழித்திருப்பதாலும், மக்கள் அனைவரும் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை உற்சாகத்துடன் கொண்டாட 1,000 ரூபாயுடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்க நான் உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இன்றிலிருந்து வழங்கப்பட்டு வருகின்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தில் உதித்த விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் ஆகியவற்றினால், சமீபத்தில் வெளியான கால்நடை மற்றும் பறவை இனங்களுக்கான கணக்கெடுப்பில், தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 7.6 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாநில பொருளாதார வளர்ச்சியில்கூட கால்நடை பராமரிப்புத் துறையினுடைய வளர்ச்சியின் பங்கு கூடியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, கிராமப்புற

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 ஜனவரி 9

பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் பெருமக்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் சென்றடையும் நோக்குடன், தலைவாசல் கூட் ரோட்டுக்கு அருகில் நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றக்கூட்டத்தொடரின்போதுநான் அறிவித்தேன்.அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அமெரிக்க நாட்டிலுள்ள உலகப் புகழ்பெற்ற பஃபலோ கால்நடைப் பண்ணையை பார்வையிட்டு, அங்கு பயன்படுத்தப்படும் நவீன யுக்திகளை தமிழ்நாட்டிலுள்ள வேளாண் பெருமக்களும் பயனடையும் வகையில், தலைவாசலில் புதியதாக உருவாக்கப்படவுள்ள கால்நடைப் பூங்காவில் பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டின் ஐந்தாவது கால்நடை மருத்துவக்கல்லூரியை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பல திட்டங்களுக்கு முன்னோடியாகத் திகழும் நமது தமிழகத்தில் 108 ஆம்புலன்ஸ் சேவையைப் போலவே, கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கென 'அம்மா ஆம்புலன்ஸ்' சேவையை துவக்கி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகள் பயன்பெற செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 200 கோடி ரூபாய் செலவில் திருவொற்றியூர் குப்பம், 120 கோடி ரூபாய் செலவில் தரங்கம்பாடி மற்றும் 100 கோடி ரூபாய் செலவில் கடலூர் முதுநகர் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க, மத்திய அரசின் மீன் வளம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ், மேற்கண்ட மீன்பிடித் துறைமுகங்களுக்காக தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் 420 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மத்திய அரசின் இத்திட்டத்தின்கீழ் இதுவரை அதிக அளவு நிதி உதவி பெற்ற மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மேலும், கடலில் மீன்பிடிப்பு மேற்கொள்ளும் மீனவர்களின் பாதுகாப்பினை தொடர்ந்து உறுதிபடுத்திட தமிழ்நாடு அரசு முன்னுதாரணமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆழ்கடல் மற்றும் அண்மைக் கடல் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு 25,000 VHF *கருவிகள், 160 செயற்கைக் கோள் கருவிகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்மூலம் 507 டிரான்ஸ்பான்டர் கருவிகள் மற்றும் 200 நாவிக் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அனைத்து மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பல்வேறு முன்னேற்றங்களையும், தொழில்நுட்பங்களையும் வெளிநாடுகளிலிருந்து அறிந்துகொண்டு தமிழ்நாட்டில் செயல்படுத்திடவும், வெளிநாடுவாழ் தமிழர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகளைப் பெற்று, தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு 26-8-2019 முதல் 10-9-2019 வரை நான் அரசுமுறை பயணம் மேற்கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கிலாந்திலுள்ள சர்வதேச அளவில் புகழ் பெற்ற கிங்ஸ் மருத்துவமனையின் கிளையினை தமிழ்நாட்டில் துவக்கிட அந்நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதனடிப்படையில், அந்நிறுவனத்துடன் பல்வேறு நிலையிலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் தமிழ்நாட்டில் கிங்ஸ் கிளை மருத்துவமனை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கவும், உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாடுவாழ் தமிழ் மக்களையும், பிற முதலீட்டாளர்களையும் வரவேற்கும் வகையில், 'யாதும் ஊரே' என்ற முன்னோடித் திட்டத்தை கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நான் அறிவித்து, இத்திட்டத்தை அமெரிக்காவில் நான் துவக்கி வைத்தேன்.

இந்தப் பயணத்தில், இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளிலும், துபாயிலும் உள்ள தொழில் முதலீட்டாளர்களை சந்தித்து, அதன்மூலம் 8,835 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான (மேசையைத் தட்டும் ஒலி) முதலீடுகளை ஈர்த்து, 41 நிறுவனங்களுடன்

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதனால், 35,520–க்கு மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேற்படி ஒப்பந்தங்களில் 5 நிறுவனங்கள் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. மேலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், குறிப்பாக தமிழ் இளைஞர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு முதலீடுகளைச் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருவதையும் இந்த அரசுமுறைப் பயணத்தின்போது நான் அறிந்தேன்.

பிற்பகல் 12–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம்மூலம், ஒற்றைச்சாளர அனுமதிகளை நேரடியாகக் கண்காணித்து, விரைவுபடுத்திட எனது தலைமையில் ஒரு தனிக் குழு, முதலமைச்சர் அலுவலகத்தில், முதலீடு செய்வதை எளிதாக்குதல் பிரிவு, பாதுகாப்பு மற்றும் வானூர்தி, தொழில் பூங்கா, மின்சார வாகனப் பூங்கா, Start-up என புத்தொழில்களை ஊக்குவிக்க தனிக் கொள்கை, தகவல் தொழில்நுட்பக் கொள்கை, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை என தொழில் துறை மேம்பட பல்வேறு கொள்கைகளை வகுத்து, திட்டங்களைச் செயல்படுத்தி, மாண்புமிகு அம்மாவின் அரசு வெற்றி கண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2015 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்ற ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் ஈர்க்கப்பட்டன. இவற்றில் 272 நிறுவனங்கள் பணிகளைத் துவக்கி, பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இது கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் ஏறக்குறைய 90 சதவீதமாகும். இது மாண்புமிகு அம்மாவின் அரசுமீது தொழில் முதலீட்டாளர்கள் கொண்ட திடமான நம்பிக்கையைக் காட்டுவதாக உள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கையொப்பமிடப்பட்ட 3,592 தொழில் திட்டங்கள், தங்கள் பணிகளைத் துவக்கி பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வெற்றிகரமாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்குப் பிறகு, இதுவரை 19 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 63 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின்மூலம் 83 ஆயிரம் வேலைவாய்ப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

தொழில் சிக்கல்கள் காரணமாக மூடப்பட்ட நோக்கியா நிறுவன தொழிற்சாலையினை வாங்கி, மின்னணு சாதன உற்பத்தியினை மேற்கொள்ள 'சால்காம்' நிறுவனம் உடன்பாடு செய்துள்ளது.

இது தவிர, உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நோக்கியா சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் மின்னணு சாதன உற்பத்திக்கான பணிகளைத் துவக்கியுள்ளது. இதன்மூலம் 20,000 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு, முந்தைய காலங்களில் பல்வேறு காரணங்களால் செயல்படாமல் நின்ற தொழில் நிறுவனங்கள்கூட, தற்போது இந்த மக்கள் நல அரசின் தொடர் முயற்சிகளால் புத்துயிர் பெறும் சிறப்பான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் (NCAER) வெளியிட்டுள்ள 2018 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், முதலீட்டை ஈர்க்கும் ஆற்றல் மிக்க மாநிலங்கள் பட்டியலில், தமிழ்நாடு 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் அன்னிய நேரடி முதலீடு கடந்த ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 33 ஆயிரம் கோடி ரூபாய் என இருந்தது. கடந்த 3 ஆண்டுகளில் அது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, சுமார் 47 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய நேரடி முதலீட்டினை மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதலாக ஈர்த்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்" என்ற நாமக்கல் கவிஞர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப,

திறன்மிகு மனித வளத்தை உருவாக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு அம்மாவின் அரசு திறன் மேம்பாட்டிற்கான குறைந்த மற்றும் நீண்ட கால பயிற்சிகளை அளிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 28 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பித்துள்ளதும், இயங்கிவரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 53 புதிய தொழிற் பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளதும் இதற்குச் சான்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து, இதுவரை சுமார் 7 இலட்சம் இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இந்தியாவிலுள்ள தலைசிறந்த 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 5 தொழிற்பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்படுவது குறிப்பிடத்தக்கது.(மேசையைத் தட்டும் ஒலி) முதன்முறையாக சுகாதாரத் துறை, ஆட்டோமொபைல் மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்துக்காக மூன்று உயர்திறன் பயிற்சி மையங்கள் அமைக்க சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகச் செயல்படும்.

இத்தருணத்தில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட தேசிய அளவிலான திறன் போட்டியில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒரு தாய் மக்கள் நாம் என்போம்,
ஒன்றே எங்கள் குலம் என்போம்"

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்பவும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சமுதாயத்தினரின் நலனையும் பேண வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினர் முன்னேற்றத்திற்காக "வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் சட்டம், 2018" என்கிற புதிய சட்டத்தினை மாண்புமிகு அம்மாவின் அரசு இயற்றியது. (மேசையைத் தட்டும் ஒலி) அச்சட்டத்தைச் செவ்வனே

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

செயல்படுத்திட ஒரு வாரியம் அமைத்து, அவ்வாரியம் திறம்பட செயலாற்ற போதுமான அளவு நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

பிரமலைக் கள்ளர் உள்ளிட்ட பல்வேறு சீர்மரபினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மத்திய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவின் கீழும், அதே நேரத்தில் தமிழ்நாடு அரசின் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இட ஒதுக்கீட்டின் கீழும் பயன்களைப் பெறும் வகையில் உரிய அரசாணை வெளியிடப்பட்டு, அவர்களின் நீண்ட நாள் கோரிக்கை மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதி திராவிடர், பழங்குடியினர் வாழும் ஒவ்வொரு குடியிருப்புப் பகுதியிலும் இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், பாதை வசதிகள், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கி பணிகளை மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர்களாக விளங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் வகுத்துத் தந்த பாதையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசு சிறுபான்மையின மக்களைப் பாதுகாக்கும் அரணாக விளங்கி வருகிறது. இந்தப் பேரியக்கத்தின் தலைவர்கள் வகுத்துத் தந்த பாதையில் ஆட்சி செய்யும் இந்த அரசு, சிறுபான்மையின மக்களைப் பாதுகாப்பதில் எக்காலத்திலும் உறுதியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதனை தொடர்ந்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியத்தை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் அரசு மானியம், ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாயிலிருந்து 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும்

ஒலி) நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2011 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் அளவிற்கு குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறை பயன்படுத்தக்கூடிய நெகிழியை மாண்புமிகு அம்மாவின் அரசு தடை செய்து, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகிறது. வருங்கால சந்ததியினர் நெகிழியினால் பாதிப்பு அடையாமல் இருக்க வேண்டுமெனில் இதைத் தொடர்ந்து முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இதற்கு மக்கள் தங்கள் முழுமையான ஒத்துழைப்பினை நல்க வேண்டும் என்றும் அனைவரையும் இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை ஏராளமான மக்கள் பார்வையிட்டு, பயன்பெற்று வருகின்றனர். இப்பூங்காவை, நானே மூன்று முறை நேரில் சென்று பார்வையிட்டுள்ளேன். இப்பூங்காவில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு நீடித்த நிலையான வளர்ச்சியினை குறிக்கோளாகக் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத எலக்ட்ரிக் பேருந்துகள், எலக்ட்ரிக் கார்கள் மற்றும் ஆட்டோக்களை உற்பத்தி செய்வதற்கும், அதற்கான முதலீட்டிற்கும், அதை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கும் போதிய ஊக்கமளித்து வருகிறது. அந்தவகையில், தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக பொதுப் போக்குவரத்துக்கு, மின் பேருந்துகளை கடந்த ஆகஸ்ட்

மாதம் 28 ஆம் தேதி நான் துவக்கி வைத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 16–9–2019 அன்று மின் வாகனக் கொள்கை, 2019–ஐ வெளியிட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் நாளன்று சுற்றுச்சூழலுக்கு உகந்த மின் ஆட்டோக்களையும் நான் துவக்கி வைத்தேன். இது, அரசுமுறை பயணமாக நான் துபாய் சென்றிருந்தபோது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆனதாகும் என்பதை பெருமையுடன் இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, கேரள மாநிலங்களுக்கு இடையே முல்லைப் பெரியாறு, ஆழியாறு–பரம்பிக்குளம், பாண்டியாறு–புன்னம்புழா, செண்பகவல்லி அணை, நெய்யாறு பிரச்சினை எனப் பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன. எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும்; விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டுமென்று மாண்புமிகு கேரள முதலமைச்சருக்கு நான் கடிதம் எழுதினேன். நீங்கள் நேரில் வாருங்கள் இதுகுறித்துப் பேசலாம் என்று கேரள முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பினை ஏற்று, நானே நேரடியாகச் சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேரள முதலமைச்சரைச் சந்திக்கச் சென்றபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் என்னோடு வந்தார்கள். இதைத் தொடர்ந்து செயலாளர்கள் அளவில் ஒரு கூட்டமும் நடத்தப்பட்டது. வருங்காலத்தில் இம்மாதிரி சந்திப்புகள் பல்வேறு நிலைகளில் நடத்தப்படவுள்ளன. இதன்மூலம் இரு மாநிலங்களுக்கு இடையே நிலவும் தண்ணீர்ப் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்வு காணப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த கோடை காலத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின்போது, எனது உத்தரவின்பேரில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து, தெலுங்கு–கங்கை திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நீரினை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டனர்.

அதனடிப்படையில், பெறப்பட்ட நீரினைக் கொண்டு சென்னை பெருமக்களின் குடிநீர்த் தேவை நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரத்தை மேம்படுத்திட கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்கு ஆந்திரா மற்றும் தெலுங்கானா முதல்வர்களின் கூட்டத்தினை விரைவில் நடத்தி, மத்திய அரசு தயாரித்த கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்திற்கான வரைவுத் திட்ட அறிக்கையின்மீது அவர்களின் ஒப்புதலை விரைவில் பெற வேண்டும் என நான் கடிதங்கள் மூலமாகவும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியுள்ளேன்.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலுள்ள வறட்சியான பகுதிகளுக்கு நீர்வள ஆதாரத்தினை ஏற்படுத்தி, அங்குள்ள வேளாண் பெருமக்களின் துயர் துடைக்க காவேரி–குண்டாறு திட்ட முதற்கட்ட பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் உதவியை எதிர்நோக்கி மாநில அரசு நிதியிலேயே வரும் நிதியாண்டில் இத்திட்டம் தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி நதியில் ஏற்படும் மாசுகளை நீக்கி, காவேரி நதியை தூய்மையாக்க “நடந்தாய் வாழி காவேரி” திட்டத்தினை மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்கெனவே, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கும் மற்றும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கும் பாசன வசதி அளிப்பதற்காக, அத்திக்கடவு–அவிநாசி கால்வாய்த் திட்டத்தின்கீழ் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் சுமார் 57 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின் நில எடுப்புப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்பதையும், விரைவில் இத்திட்டம் நிறைவு பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

காவேரி நதிநீர் மற்றும் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டது மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும்தான். தற்போது தென்பெண்ணையாற்றின் பாசன விவசாயப் பெருமக்களின் உரிமையை நிலைநாட்டவும், மாண்புமிகு அம்மாவின் அரசு 3–7–2019 அன்று ஓர் இடைக்கால மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில், இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நடுவர் மன்றத்தினை அமைக்க மத்திய அரசை வலியுறுத்தியும், உச்ச நீதிமன்றத்தில் தொடர் நடவடிக்கை எடுக்கவும் சம்பந்தப்பட்ட சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. காவேரி மற்றும் முல்லைப் பெரியாறு பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு கண்டதுபோல, இந்தப் பிரச்சினைக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு தீர்வுகாணும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 12,524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" என்ற அற்புதமான திட்டம் விரைவில் துவக்கப்படவுள்ளது. இதற்காக இந்த ஆண்டு 76 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுக் குழுக்கள் அமைத்தல், அக்குழு உறுப்பினர்களுக்கு வாலிபால், கபடி, கிரிக்கெட், பூப்பந்து அல்லது இதர விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்தவெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் தொழில்நுட்பம் மற்றும் மின் ஆளுமை மூலமாக மக்களுக்கு சிறந்த சேவை புரியும் அரசுதான், ஒரு நல்ல அரசாகத் திகழ முடியும். ஆளுமையின் ஒவ்வோர் அம்சத்திலும் அதிக அளவில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும், நுகர்வதிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. அந்த வகையில், தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு துறையும், முகமையும் மேற்கொண்ட பல்வேறு முன்முயற்சிகள் நல்ல பலனைத் தந்துள்ளன. பெரிய

அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்குச் சான்றாக, நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் அதிக புதுமைகளை படைக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2018–2019 ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதி ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 899 கோடி ரூபாயாகும். இதனால் 6 இலட்சத்து 60 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மென்பொருள் ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்றிட, 'இல்லந்தோறும் இணையம்' என்ற கொள்கையை செயல்படுத்தும் வண்ணம், அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்களும் அடையும் வகையில், அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் 'பாரத்நெட்' திட்டத்தை 1,815 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும், கண்ணாடி இழை கட்டமைப்புமூலம் இணைக்கப்படும். இதன்மூலம் அனைத்து கிராமங்களுக்கும் ஒரு Gbps அளவிற்குக் குறையாமல் இணையதள வசதி வழங்கப்படும். இத்துடன் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் "தமிழ்நெட்" திட்டத்தின்மூலம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நகரப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள வசதி விரிவுபடுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டங்கள் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்படவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி என்பது எழுத்தறிவில் மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பதை நன்குணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 12 ஆம் வகுப்பு வரையிலும் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சாதனை படைத்துள்ள அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கல்வித் துறை சிறக்க வேண்டுமென்பதற்காக கடந்த 8 ஆண்டுகளில்43,587புதியஆசிரியர்கள்நியமனம்செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர் காலிப்பணியிடங்கள் அனைத்தும் துரிதமாக நிரப்பப்பட்டு வருகின்றன. புதிதாக 248 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 117 துவக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 1,079 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், முக்கிய பாடங்களை எளிதாக, புரியும் வகையில் ஒளிபரப்பவும், பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் "கல்வி தொலைக்காட்சி" என்ற பெயரில் ஒரு புதிய தொலைக்காட்சி என்னால் சமீபத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொலைக்காட்சியில் 24 மணி நேரமும் மாணாக்கர்களுக்கு பயன்தரக்கூடிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு, பொது மக்களிடத்திலும், மாணாக்கர்களிடத்திலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'கல்லூரிகளில் 50 சதவிகிதத்திற்கும்மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்' என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளதுடன், 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் துவக்கியுள்ளது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவிகிதம் 49 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமையுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர் 7 ஆக இருந்த சட்டக் கல்லூரிகளின் எண்ணிக்கை, தற்போது 14

ஆக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதவிர, திருச்சிராப்பள்ளியில் ஒரு தேசிய சட்டப் பள்ளியும் மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டது.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையினை ஏற்று 227 புதிய நீதிமன்றங்களைத் திறப்பதற்கான அரசாணையை வெளியிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இது தவிர, பெண்கள் வன்கொடுமை, குழந்தைகள் பாலியல் தொல்லை போன்ற வழக்குகளில் விரைந்து நீதி கிடைக்க ஏதுவாக 16 போக்சோ நீதிமன்றங்கள் அமைக்க உத்தரவிடப்பட்டு, தற்போது 3 நீதிமன்றங்கள் இயங்கிவருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 13 போக்சோ நீதிமன்றங்களும் விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழரின் தொன்மையை உலகத்திற்கு பறை சாற்றும் கீழடியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை மக்கள் பார்வையிடும் பொருட்டு, மதுரையில் உள்ள உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தொல்லியல் பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அதனை நிரந்தரமாகக் காட்சிப்படுத்த சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அருங்காட்சியம் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி வழங்கியதைப்போல், தற்போது அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க 1 கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

“காலத்தை வென்றவர், காவியமானவர்,
வேதனை தீர்த்தவர், நம் விழிகளில் நிறைந்தவர்”

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

(மேசையைத் தட்டும் ஒலி) பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா மாநிலம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக புரட்சித் தலைவரின் நினைவைப் போற்றிடும் வகையில், கடந்த 27–2–2019 அன்று காமராஜர் சாலையில் அமைந்துள்ள அவரது நூற்றாண்டு வளைவு என்னால் திறந்து வைக்கப்பட்டு, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புகழ் சேர்க்கப்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

“பிறந்த நாடே சிறந்த கோவில்
பேசும் மொழியே தெய்வம் – இதை
மறந்திடாமல் வாழ்ந்து வந்தால்
கோபுரமாகும் கொள்கை”

என்று புரட்சித் தலைவர் பாடிய பாடலுக்கு ஏற்ப, தமிழுக்காவும், தமிழ்நாட்டிற்காகவும் சேவை செய்த தியாகிகளை நினைவு கூருவதிலும், அவர்களுக்கு சிறப்பு செய்வதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் 7 மணி மண்டபங்களைத் திறந்து வைத்து, மறைந்த தலைவர்களுக்கு பெருமை சேர்த்துள்ளோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதுமட்டுமன்றி, இதே சட்டமன்றப் பேரவையில் விடுதலைப் போராட்ட வீரரும், சமூக நீதிப் பாதுகாவலருமான திரு. ராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவப் படமும் திறக்கப்பட்டு அவருக்கு பெருமை சேர்த்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 9 ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்கு 75 ஆயிரத்து 268 கோடியே 72 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 17–லிருந்து 16 ஆகவும், பேறு காலத்தில் தாய்மார்கள் இறப்பு விகிதத்தைப் பொறுத்தவரையில், 2030–ல் அடைய வேண்டிய நீடித்த நிலையான இலக்குகளை நாம் எடுத்த பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளால் இப்போதே அடைந்துவிட்டோம் என்பது ஒரு சரித்திர சாதனையாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டு ஒரு வரலாற்றுச்

சாதனையை நிகழ்த்தியுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஆண்டில் 9 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்ற ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி 9 மருத்துவக் கல்லூரிகளைத் துவங்குவதன்மூலம் கூடுதலாக 900 பேர் மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் உருவாக்கித் தந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் அரியலூர், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் இதுவரை 32,660 பணியிடங்களை நிரப்பியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டதற்காக மத்திய அரசின் தேசிய விருதுகளை கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து பெற்று சாதனை படைத்த அரசு அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவர்கள் தங்கள் கோரிக்கைகளை பல்வேறு காலகட்டங்களில் வலியுறுத்தி வந்தனர். அவர்களது கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு கவனத்துடனும் கனிவுடனும் பரிசீலனை செய்யும் என்பதை இப்பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “தமிழ்நாட்டில், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தொழில் அல்லது வணிக நிறுவனமும் நிலையான தரமுள்ள தடையற்ற மின்சாரத்தைப் பெற வேண்டும் என்பது என்னுடைய நோக்கமாகும்” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக பல்வேறு திட்டங்கள் மூலமும், புதிய மின் நிலையங்களை இயக்கியதன் மூலமும், நடுத்தர மற்றும் நீண்ட

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கால ஒப்பந்த அடிப்படையில் மின் கொள்முதல் செய்வதன் மூலமும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலமும், கூடுதல் மின்சாரம் மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டு அனைவருக்கும் தடையில்லா மின்சாரம் என்ற நிலையை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 2,600 மெகா வாட் மின்சாரம் கூடுதலாக மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் சூரிய எரிசக்தி அதிகம் கிடைக்கக்கூடிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சூரிய எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க "சூரிய எரிசக்தி கொள்கை, 2019" வெளியிடப்பட்டது. இந்தக் கொள்கையின்படி சுமார் 9,000 மெகா வாட் திறனுள்ள சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொடர்ந்து மின் மிகை மாநிலமாகவும், தரமான தடையில்லா மின்சாரத்தை வழங்குவதன் காரணத்தினாலும், புதிய தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், சென்ற ஆண்டு கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக்கட்ட மின் தேவைகள் எந்தவிதமான மின் தடையுமின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டம்-ஒழுங்கை நிலைநிறுத்துவதும், மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமையாகும், மக்களின் முக்கிய பிரச்சினைகளையும், அவர்களின் உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம்-ஒழுங்கை நிலைக்கச் செய்கிறது" என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களின் "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற கோட்பாட்டின்படி மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சமீபத்தில் மாமல்லபுரத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், மாண்புமிகு சீன அதிபர் திரு. ஷி ஜின்பிங் அவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இரு பெரும் உலகத் தலைவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வுக்கு சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த காவல் துறையினரை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், சீன நாட்டு அதிகாரிகளும், அதிபர் அவர்களும் வெகுவாகப் பாராட்டினார்கள்

என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் சட்டமன்றத்தில் அறிவித்தபடி, காவல் துறையின் பணிகளைமேலும்சிறப்பாக்கும்வகையிலும்,நமதுகாவல்துறைஇந்திய அளவில் முதன்மை இடத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்காகவும், மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து, பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பிக்க "நான்காவது போலீஸ் கமிஷன்" அமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொது இடங்களில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்கும், குற்றவாளிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும்போது அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கைது செய்வதற்கு ஏதுவாகவும், காவல் நிலையங்களில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இணையதள முறைமையுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் தமிழ்நாடு முழுவதும் முழுவீச்சில் பொருத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் மட்டும் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் கேமராக்களும், சென்னை உட்பட மாநிலம் முழுவதும் சுமார் 4 இலட்சத்து 40 ஆயிரம் CCTV கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் குற்றங்கள் நடைபெறுவது பெருமளவில் குறைக்கப்பட்டதுடன், குற்றவாளிகளை மிக விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இத்திட்டம் பேருதவியாக அமைந்துள்ளது.

மகளிர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக "அம்மா ரோந்து வாகனம்" மற்றும் எளிதில் புகார் அளிக்க வாட்ஸ்-ஆப் எண் மற்றும் "காவலன்" செயலி ஆகியவை சென்னை பெருநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. "காவலன்" செயலியைப் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு, தற்போது இலட்சக்கணக்கான மகளிர் இச்செயலியை பதிவிறக்கம் செய்து பெரும் வரவேற்பை நல்கி உள்ளனர் என்பதை பெருமையுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் தேசிய அளவில் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில்

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

மிகக் குறைவாகவே உள்ளதாக சமீபத்தில் வெளியான தேசிய குற்றப் பகுப்பாய்வு அறிக்கை கூறுகிறது.

தமிழ்நாட்டில் தேனியில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம், அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களில் 4-*வது இடத்தைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

2018–2019 *ஆம் ஆண்டில், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தொடர்ந்து* 2-*வது முறையாக (மேசையைத் தட்டும் ஒலி) தேர்வு செய்து பிரபல ஆங்கிலப் பத்திரிகையான "இந்தியா டுடே" விருது வழங்கியுள்ளது. தமிழ்நாடு காவல் துறையினரின் சிறப்பான செயல்பாடுகளினால், மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி தீவிரவாத இயக்கங்கள் மற்றும் நக்ஸல் அமைப்புகளின் சட்ட விரோதமான செயல்கள் பெருமளவு தடுக்கப்பட்டு அமைதியான மாநிலமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு சீன அதிபரின் மாமல்லபுரம் சந்திப்புக்குப் பிறகு உலகமே மாமல்லபுரத்தை நோக்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மாமல்லபுரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், ஏற்கெனவே உள்ள வசதிகளை நவீனப்படுத்தவும் தனியே கருத்துரு ஒன்று தயாரித்து, மத்திய அரசு நிதியுதவியுடன் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமாக, பெண்களின் நல்வாழ்வுக்காக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2011 *ஆம் ஆண்டு முதல்* 2017–2018 *ஆம் ஆண்டு வரை* 61,675 *கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2018–2019 *ஆம் ஆண்டில்* 2,95,612 *மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு* 11,000 *கோடி ரூபாய் வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மிகுதியாக* 11,449

கோடி ரூபாய் வழங்கிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விழைகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோல, 2019–2020 ஆம் நிதியாண்டில் இதுவரை 12,500 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 9,045 கோடியே 88 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடனுதவிகள் 2,16,965 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக 5 வகையான திருமண நிதியுதவித் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு 726.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 1 இலட்சத்து 4 ஆயிரத்து 795 பயனாளிகளுக்கு 838.36 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* 415.21 கோடி ரூபாய் நிதியும் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும், குழந்தை பிறப்பில் பாலின விகிதத்தை உயர்த்தியதற்காக தமிழ்நாட்டுக்கு 'நாரி சக்தி புரஸ்கார்' விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* முதியோர் நலனைப் பாதுகாப்பதற்கென சிறந்த முறையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டதற்காக 'வயோசே ரேஷ்ட்ரா சம்மான்' விருதும் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச் சத்து நிலையினை முன்னேற்றுவதற்கு பிரதமரின் ஊட்டச் சத்து ஒருங்கிணைப்புத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தியதற்கான தேசிய விருதினை இவ்வாண்டு தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் உயர பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு வேலைவாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீடு அளித்து, அவர்களுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து இதுவரை 1,483 நபர்களைப் பணியமர்த்தி உள்ளது. *(மேசையைத் தட்டும்*

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

ஒலி) மூன்றாம் பாலினத்தவரும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழும்வண்ணம், அவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அமைச்சர்களும் கிராமங்களுக்கே சென்று, மனுக்களைப் பெற்று தீர்வு காண வேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில், தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலமாக 9 இலட்சத்து 77 ஆயிரத்து 265 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* அவற்றில் தகுதியான 5 இலட்சத்து 18 ஆயிரத்து 946 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 152 மனுக்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு வழங்கியிருக்கின்றேன். தீர்வு காணப்பட்ட மனுக்களில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் முதியோர் ஓய்வூதிய மனுக்கள் மட்டும் 1 இலட்சத்து 54 ஆயிரத்து 888 ஆகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களுக்குச் செல்கின்றபோது, வயது முதிர்ந்தவர்கள், உழைக்கும் திறனற்று இருக்கின்ற முதியோர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூதியமாக ரூ.1,000/– வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையிலே 5 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து *(மேசையைத் தட்டும் ஒலி)* அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நேரடியாகச் சென்று முதியோர்களால் கொடுக்கப்படுகின்ற மனுக்களைப் பெற்று, ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு இன்றையதினம் முதியோர் உதவித் தொகை வழங்குகின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுவரை 1,54,888 நபர்களுக்குதான் கொடுத்திருக்கிறார்கள். மேலும் விடுபட்ட எஞ்சிய கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அது நடந்தால், பெருமைப்படக்கூடியவன் நான்தான். அதில் ஒன்றும் சந்தேகம் கிடையாது. ஆனால், நிலைமை என்னவென்று கேட்டீர்களேயானால், எங்களைப் போன்ற* MLAs *வாங்கிக் கொண்டுபோய்க் கொடுக்கிறோம். தாசில்தார் என்ன சொல்கிறார் என்றால், 'இந்த ஊரில் இத்தனை நபர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். இதில் யாராவது ஒருவர் இறந்தால்தான், மற்றொரு நபருக்குக் கொடுக்க முடியும்' என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) நான் உண்மை நிலைமையைச் சொல்கிறேன். எனக்கு ஒன்றும் இல்லை. நான் உண்மையைச் சொல்வதைக் கேளுங்கள். வாங்குபவரும் என்ன சொல்கிறாரென்றால், 'எப்படியாவது வாங்கிக் கொடு' என்கிறார். ஆனால், "10 இருக்கிறது, அதில் ஏதாவது ஒன்று போனால்தான் கொடுக்க முடியும்" என்கிறார். "இரண்டு நாட்களாக இழுத்துக்கொண்டிருக்கிறது சின்னசாமிக்கு" என்கிறார். (சிரிப்பு) அந்த அளவிற்கு உள்ளது நிலைமை. ஆகையினால், முதலமைச்சர் சொல்வதைப்போல் நடந்ததென்றால்,* well and good. *வரவேற்பதில் முதல் ஆள் நான்தான். ஆனால், நிலைமைகள் அப்படி இல்லை என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மேற்கொண்டு விசாரித்துப் பாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறைபாட்டை நீக்க வேண்டுமென்பதற்காகத்தான் தமிழகத்தில், 5 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில் மாவட்டந்தோறும் இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மக்களிடம் நேரடியாகச் சென்று மனுக்களைப் பெற்றுஅதற்குபரிகாரம்செய்யப்பட்டுவருகிறதுஎன்பதைமாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நீங்கள் முதியோர் ஓய்வூதியத் தொகை பெறுவதற்குத் தகுதி வாய்ந்த நபர்களைக் கொடுத்தால், நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இப்படி நீங்கள் சொல்கின்ற காரணத்தினால்தான், அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, தமிழகத்தில் உள்ள 5 இலட்சம் முதியோர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவர் இறந்தால் கொடுப்பது என்பது ஒன்று. அதற்குமேல் கூடுதலாக 5 இலட்சம் முதியோர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாய் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற உத்தரவை நான் வழங்கியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையில்தான் 1,54,858 நபர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு கிட்டத்தட்ட 9 இலட்சத்திற்கு மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன. அந்த மனுக்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில், தகுதியான மனுக்களைத் தேர்வு செய்து, எனது உத்தரவின் பேரில், 1,54,858 நபர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மீதி இன்னும் கிட்டத்தட்ட 3 இலட்சம் நபர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், நீங்கள் அதனைக் குறையாக நினைக்க வேண்டாம். மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று நீங்கள் எப்படி எண்ணுகின்றீர்களோ, அதே நோக்கோடுதான் நான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது நடந்தால் முதலில் நான் பாராட்டுவேன் என்று சொல்கிறேன். ஆனால்* well–deserved persons*–க்குக் கிடைக்கவில்லை. நான் கொடுத்த மனுக்களுக்கே இன்னும் கிடைக்கவில்லை, வேண்டுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கிறோம். பார்த்துக்கொடுங்கள். (குறுக்கீடு) கிடைக்கவில்லை, கிடைத்தால் உங்களிடம் அனுப்பிவைத்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுவிட்டது. 5 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று அரசாணையும் வெளியிடப்பட்டுவிட்டது. அதற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது. 1½ இலட்சம் நபர்களுக்குத்தான் வந்துள்ளது, இன்னும் 3½ இலட்சம் நபர்களுக்குதான் வழங்கலாம். அது மட்டுமல்ல, இந்த முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கு 50,000 ரூபாய் வரையில் சொத்து இருந்தால் மட்டுமே ஓய்வூதியம் கொடுக்கப்படுவதாக இருந்தது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி நாங்கள் அறிவித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் அந்த. . . (குறுக்கீடு) மைக்கில் பேசுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவதென்னவென்றால், தகுதியானவர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால், அதற்கு முன்னுரிமை அளிக்கலாம். ஏனெனில், அவர்கள் மக்களின் பிரதிநிதிகள். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதன்மீது கவனம் செலுத்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற பரிந்துரைகளின்மீது முன்னுரிமை அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–55

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அந்த முதியவர்களே நேரடியாகக் கொண்டுபோய்க் கொடுத்தால்கூட அதனை நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் உத்தரவு வழங்கியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது முதியோர்களுடைய பிரச்சினை. இதில் அரசியலே கிடையாது. உழைக்கும் திறனற்ற முதியோர்களுக்கு உதவி செய்கின்ற வகையில், இந்தத் திட்டத்தை நாங்கள் துவக்கியிருக்கின்றோம். பாகுபாடே கிடையாது. இதில், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி

என்பதே கிடையாது. முதியோர் என்பவர்கள் பொதுவானவர்கள். உழைக்கும் திறனற்றவர்கள். அவர்களுக்கு ஒவ்வொருவரும் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றோம். நீங்கள் சொன்னதையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, நீங்கள் அடுத்த கூட்டத்திற்கு வருகின்றபோது, நீங்கள் இதற்கு—நீங்கள் புகழ்ந்து பேச மாட்டீர்கள். ஏற்கெனவே நீங்கள் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் 'நாங்கள் எப்பொழுதுமே எதிர்த்துதான் பேசுவோம்' என்று சொல்லிவிட்டீர்கள். இருந்தாலும் இந்தத் திட்டத்தையாவது புகழ்ந்து பேசுவீர்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, போதும். இந்த* subject *போதும். உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *நீங்கள் அப்புறம் பேசுங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைந்து கிடைக்க வகை செய்யும் நோக்குடன், மாண்புமிகு அம்மாவின் அரசு வரலாற்றுச் சாதனையாக 5 புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமனம் செய்து முழுவீச்சில் மாவட்டங்கள் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இப்புதிய மாவட்டங்களுக்கான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினை வெற்றிகரமாக தமிழ்நாடு அரசு செயல்படுத்துவதால், மத்திய அரசிடமிருந்து குறைந்த அளவில் இழப்பீட்டுத் தொகை பெறும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாடு வணிக மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை ஜி.எஸ்.டி. மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுசென்று, பலவகையான சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு வரி விலக்கும், வரி குறைப்பும் செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் பல்வேறு பொருட்களுக்கான விலை, தொடர்ந்து மக்கள் பயன்பெறும் வகையில் குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், சில சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு

வரி விலக்கு பெறவும், வரி குறைப்பு செய்யவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் அரசுப் பணியாளர்களின் பணிப் பதிவேடு எளிமையான முறையில் பராமரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதோடு, சம்பளப் பட்டியல், பதவி உயர்வு, இட மாறுதல்கள் போன்ற விவரங்கள் நிகழ்நேர அடிப்படையில் உடனுக்குடன் பதியவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, பணியாளர் நலனில் அக்கறை கொண்டுள்ளன மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசு அவ்வப்போது அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வினை மாநில அரசு ஊழியர்களுக்கும் உடனுக்குடன் வழங்கி வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், பல்வேறு வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சமுதாய நலப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றது. கடந்த 8 ஆண்டுகளில் 1.92 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 8,222.91 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராயநகர், பாண்டி பஜார் பகுதியில் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ் சுமார் 40 கோடி ரூபாய் செலவில் நடைபாதை வளாகம், வை-ஃபை வசதி, சிசிடிவி கேமராக்கள், ஸ்மார்ட் பைக்குகள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறக்கப்பட்டுள்ளது. இதற்கு முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் என அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

மத்திய அரசின் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின்கீழ் நாட்டிலேயே அதிகபட்சமாக 11 நகரங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டு, 11,000 கோடி ரூபாயில் 413 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 72 பணிகள் முடிவடைந்தும், 206 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2019–2020 ஆம் நிதியாண்டில், நெடுஞ்சாலைத் துறைமூலம் 9,211 கி.மீ. நீளத்திற்கு சாலைகள், 2,582 எண்ணிக்கையில் சாலைப் பாதுகாப்புப் பணிகள், மழைநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் தாங்கு சுவர் அமைக்கும் பணிகள் ஆகிய 6,664 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் 5,451 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 65 ஆற்றுப் பாலங்களும், ஒரு சாலை மேம்பாலமும், 4 இரயில்வே மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. 10,563 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 328 ஆற்றுப் பாலங்களும், 19 சாலை மேம்பாலங்களும், 42 இரயில்வே மேம்பாலங்களும், 2 நடை மேம்பாலங்களும் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017–2018 முதல் 2019–2020 முடியவுள்ள 3 ஆண்டுகளில் சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட மொத்தம் 453 அறிவிப்புகளில், 419 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 118 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 301 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் பெரும்பாலும் முடிவுறும் தருவாயில் உள்ளன. 25 அறிவிப்புகளுக்கு, திட்டப் பணிகளுக்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 8 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையிலும், ஓர் அறிவிப்பு சம்பந்தமாக வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன.

பிற்பகல் 1–00

மாண்புமிகு அம்மாவின் அரசு பதிவியேற்றது முதல் இன்று வரை, 34 ஆயிரத்து 893 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 47 ஆயிரத்து 829 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 24 ஆயிரத்து 90 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 909 பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று, நாலடியாரிலிருந்து ஒரு பாடலை குறிப்பிட்டுப் பேசினார். இத்தருணத்தில் நன்னூலிலிருந்து கீழ்க்கண்ட பாடலை நான் குறிப்பிட விரும்புகின்றேன்:

"மன்னுடைய மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையிலும்
மன்னிய அவையிடை வெல்லுற பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தல்நம் தகும் புலவோற்கே"

அதாவது, தன்னுடைய புலமைத் திறனை அறியாதவரிடத்தும், அவையில் வாதிட்டு வெற்றி பெற வேண்டிய சூழ்நிலையிலும், எதிரி தன்னைப் பழித்துரைக்கும் போதும், தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது தவறாகாது. இருந்தாலும், நாங்கள் எங்களைப் பற்றி தற்பெருமையாக ஆளுநர் உரையில் எதையும் குறிப்பிடவில்லை. மாறாக, இந்த அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், சாதனைகளையும், நிகழ்த்தப்பட்ட சாதனைகளுக்காகப் பெற்ற விருதுகளையும்தான் குறிப்பிட்டுள்ளோம். இது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் கிடைத்த பெருமையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

எல்லா ஆட்சிக்காலங்களிலும், ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்தில், ஆளுநர் உரையில் அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி கோடிட்டுக் காட்டப்படுகின்றன. இதைத்தான் நீங்களும் செய்தீர்கள், நாங்களும் செய்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை. துன்பமும், (மேசையைத் தட்டும் ஒலி) துயரமும் வரும் பொழுதெல்லாம், அதனை எதிர்கொண்டு வெற்றி கண்டது, சுடர் முகம் ஏந்தும் உங்களைப் போன்ற உடன்பிறப்புகளைப் பெற்றதால்தான்" என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்கள், இரண்டாவது முறையாக தொடர்ந்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தாலும், அவரது ஆசியுடன் ஆட்சியை நடத்தி வரும் நாங்கள் மிகவும் சாதாரணமானவர்கள்தான். ஒரு

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

முதலமைச்சரின் வாரிசாகவோ, அரசியல் பின்பலம் உள்ள குடும்ப வாரிசாகவோ நான் இந்த இருக்கையில் அமரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் அப்படித்தான். விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், (குறுக்கீடு)—அவருடைய மகன் வசதியான இடத்தில்தான் பிறந்திருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியில், அவரது தொண்டர்களை ஒருங்கிணைத்து பல்வேறு வகைகளிலும் மக்கள் நலனைப் பற்றியே சிந்தித்து ஆட்சி நடத்தி வருகின்றேன். அதன்மூலம் தமிழ்நாடு தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் பலனாக இன்று மத்திய அரசும், பல்வேறு தனியார் ஆய்வு நிறுவனங்களும், முன்னணி பத்திரிகை நிறுவனங்களும் தகுந்த ஆய்வுகளுக்குப் பின்னர் இந்தியாவிலேயே தமிழ்நாடு, பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு, முன்னணியில் இருப்பதாக அறிவித்துக்கொண்டே உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

2018–2019 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி* 8.17 *சதவீதமாக உள்ளது. இது* 2018–2019 *ஆம் ஆண்டின் தேசிய வளர்ச்சி விகிதமான* 6.81 *சதவீதத்தைவிட அதிகமாக உள்ளது என்று ஓர் ஆங்கில நாளிதழ் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல், மாண்புமிகு அம்மாவின் அரசு எத்தனையோ விருதுகள் வாங்கியிருந்தாலும், அதன் நல்லாட்சிக்கு ஓர் அத்தாட்சியாக வேளாண்மை, தொழில், மனிதவள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூக நலத் திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், 2019*–க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இவையனைத்தும் மாண்புமிகு அம்மாவின் ஆசியினாலும், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தின் உண்மைத் தொண்டர்களாலும், எங்களது நிருவாகத் திறமையினாலும் மற்றும் மக்களின் ஒத்துழைப்பினாலும் கிடைக்கப்பெற்றது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவை மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி மாலைகள். இந்த வெற்றி மாலைகளைக் கண்டு பொறுக்க முடியாமல், சில எதிர்க்கட்சியினர் இந்த ஆட்சியின் காலத்தை இன்று, நாளை, 10 நாள், 100 நாள் என்று குறைத்து மதிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் எண்ணத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில், இன்று விருதுகள், ஒன்று பத்தாகி, பத்து நூறாகி பெருகிக்கொண்டு, தமிழ்நாட்டில் விருது மழையாய்ப் பொழிந்து கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

சிலர், இயற்கைப் பேரிடர் என்றாலும், குடிநீர்ப் பற்றாக்குறை என்றாலும், உள்ளாட்சித் தேர்தல்கள் என்றாலும், அனைத்துப் பிரச்சினைகளிலும், மக்களை திசை திருப்பி போராட்டங்கள் நடத்துவதிலும், நீதிமன்றங்களில் வழக்குகளைப் போட்டு, அரசின் வேகத்திற்கு ஒரு வேகத் தடையாக இருக்கிறார்களே தவிர, வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கப்பூர்வமான எந்த ஒரு நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு அளிப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடியில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய திருவுருவப் படத்தை நாங்கள் பதித்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அண்ணாவினுடைய பெயரில்தான் எங்களுடைய இயக்கம் இயங்கி வருகிறது. ஆகவே, எங்களுடைய இயக்கம், மக்களுக்குச் சேவை செய்வதில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை, எங்களுடைய இயக்கம் நனவாக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சோதனைகளை எல்லாம் தாண்டி சுடச்சுட ஒளிவிடும் தங்கத்தைப்போல ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பீடு நடை போடுவோம் என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, இந்த அரசு வெற்றிமேல் வெற்றி பெற்று, வெற்றி வாகை சூடி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி தொகுதிகளில், அண்மையில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில் அனைத்திந்திய அண்ணா

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய வெற்றி பெற்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அது மக்கள் நம் பக்கம் உள்ளதைத் தெளிவாக்குகின்றது. ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ்நாட்டு மக்கள் நமக்கு அளித்த ஆதரவும் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* விக்கிரவாண்டி மற்றும் நாங்குநேரி இடைத்தேர்தலில் வாக்களித்து, நம்மை வெற்றிபெற வைத்த வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் 27 மாவட்டங்களில் நடந்து முடிந்த ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்களித்த, வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதேபோன்று, வரவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலிலும், 2021–ல் நடைபெறும் சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் மக்களின் பேராதரவைப் பெற்று, தொடர்ந்து மூன்றாவது முறையாக கழகம் வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

"வீட்டுச் சுவற்றின் இடுக்கிலே முளைத்திருக்கும் செடிகளை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல, கழகத்திற்கும், கழக ஆட்சிக்கும் இடையூறு செய்பவர்களை மக்கள் ஆதரவுடன் கிள்ளி எறிவோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் NRC–ஐப் பற்றி, நீண்ட விவாதம் செய்தனர். அதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினர் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதைத் தெளிவாகவும், விளக்கமாகவும் அறுதியிட்டும், உறுதியிட்டும் தெளிவுபடுத்தியிருக்கின்றார். *(மேசையைத் தட்டும் ஒலி)* பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு மாண்புமிகு அம்மாவின் அரசும், தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கு மேலாக, சிறுபான்மையின மக்களுக்கு அரணாக இருந்து பாதுகாத்து வருகின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த இருபெரும் தலைவர்களின் வழியிலே, மாண்புமிகு அம்மாவின் அரசும் சிறுபான்மையின மக்களைத் தொடர்ந்து பாதுகாக்கும் அரணாக விளங்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, அரசியல் உள்நோக்கத்துடன், உண்மைக்குப் புறம்பாகப் பரப்பப்படும் வதந்திகளை யாரும்

நம்ப வேண்டாம் என்றும், சிறுபான்மையின மக்கள் எள்ளளவும் ஐயப்படவோ, அச்சப்படவோ தேவையில்லை என்பதையும் திடமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம்; என்றும் அதுதான் சத்தியம்" என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளுக்குஉரியபதிலைநான்அளித்திருக்கிறேன்எனநம்புகிறேன். அவர்களது கோரிக்கை ஏதேனும் விடுபட்டிருப்பின், அதையும், அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த இனிய நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களுக்கும், மாண்புமிகு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத்தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

திரு. துரைமுருகன்: *எனக்குத் தட்டுகிறீர்களா அல்லது முதலமைச்சர் அவர்களுக்குத் தட்டுகிறீர்களா என்று தெரியவில்லை. (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய ஆட்சியில் இதுவரை செய்ததையெல்லாம் தொகுத்து அவரே சொன்னதைப்போல் நாங்களே எங்களுடைய புகழை சொல்வதில் ஒன்றும் தவறு இல்லை என்று சொல்லியிருக்கிறார். அது அவர்கள் இஷ்டம். ஆனால், எல்லாவற்றையும்விட, அவருடைய தைரியம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், அடுத்த தேர்தல் எல்லாம் என்னவாகும் என்று அவருக்குத் தெரியும், இருந்தாலும் (சிரிப்பு) தனது கட்சிக்காரர்களை,

2020 ஜனவரி 9] [திரு. துரைமுருகன்]

எப்படி வலுவூட்டினால், ஒரு போர்ப்படைத் தளபதி போல் சொன்னார் பாருங்கள், அதில் நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விட்டுவிடுங்கள். அதுபோனால் போகட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை அவர்களுடைய பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் நான் ஒன்று கேட்டேன். பொதுப் பணித் துறையில் தினக்கூலியாகப் பணியாற்றுகின்ற 1458 பேர்கள் கடந்த 10 வருடங்கள், 20 வருடங்களாக பணியாற்றி வருகிறார்கள் என்றும், அவர்களையெல்லாம் permanent செய்ய வேண்டும் என்று சொன்னேன். செய்து தருகிறேன் என்று சொன்னார்கள். இன்னும் அவர்களை permanent செய்யவில்லை.

இரண்டாவதாக, சென்ற பட்ஜெட்டுக்கு முன்னால், அதற்கு முன்னால் உள்ள பட்ஜெட்டில் எனது தொகுதியில் ஒன்றை அறிவித்தார். காங்கேயநல்லூர் முதல் கலெக்டர் அலுவலகம் ரோடு வரை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக நான் அவர்களை கேட்டுக் கேட்டுப் பார்க்கிறேன். ஆனால், அவர்கள் அதனை ஆய்வில் இருக்கின்றது, ஆய்வில் இருக்கின்றது என்று கடந்த இரண்டு வருடங்களாகச் சொல்கிறார்கள். அது என்ன ஆனது என்று தெரியவில்லை.

மூன்றாவதாக, எம்.எல்.ஏ.-க்கள் fund-னை ஒன்று நிறுத்துங்கள், அல்லது எங்களது இஷ்டத்திற்கு செலவு செய்யச் சொல்லுங்கள். நீங்கள் பல restrictions-ஐ அதில் போட்டுவிடுகிறீர்கள். ஒரு சிறிய உதாரணம் சொல்கிறேன். கிராமத்திற்குச் சென்றீர்களென்று சொன்னால், இப்போதெல்லாம் இந்த light-ஐ கேட்பதைவிட high mast-ஐ கேட்கிறார்கள். அதற்கு மூன்றரை இலட்சம் அல்லது நான்கு இலட்சம் ரூபாய் என்று ஆகின்றது. அதனைப் போடவிடமாட்டேன் என்கிறீர்கள். MP fund-ல் அதனைப் போடுகிறார்கள். ஆனால், இந்த fund-ல் அதனைப் போடவிடமாட்டேன் என்கிறார்கள். அதுபோல் சில திட்டங்களுக்கெல்லாம், கொடுப்பதே ரூ.3 கோடி. நாங்களா அதனை எடுத்துக்கொண்டு செல்கிறோம்? தொகுதிக்குதானே செலவு செய்யப்போகிறோம். எந்தெந்த வேலைக்கு என்னென்ன செலவு செய்ய வேண்டும் என்று கொடுத்துவிடுங்கள். எங்கள் இஷ்டத்திற்கு தொகுதிக்கு செய்கிறோம். இதில் வேறு, அதற்கு இவ்வளவு செய்ய வேண்டும், குடிநீருக்கு இவ்வளவு செய்ய வேண்டும் என்று; குடிநீர் தற்போது இல்லை. இப்படியிருக்கையில் குடிநீருக்கு எங்கிருந்து

செய்வது? ஆகையினால், மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, எவ்வளவோ செலவு செய்கிறீர்கள், அதுகுறித்தும் படித்தார்கள். இந்த எம்.எல்.ஏ.–க்களுக்கு கொடுக்கும் ரூ.3 கோடியை எங்கள் இஷ்டத்திற்கு செலவு செய்ய; எங்கள் இஷ்டத்திற்கு ரோடு போடுவோம், high mast போடுவோம், பள்ளிக்கூடம் கட்டுவோம், எங்கள் இஷ்டத்திற்கு செய்வோம். எனவே, அந்த restriction–ஐ எடுங்கள். விடமாட்டேன் என்கிறாரே திரு. வேலுமணி. (சிரிப்பு) (குறுக்கீடு) GST வேறு பிடித்துக்கொள்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன், எங்களுடைய எம்.எல்.ஏ–க்களின் இஷ்டத்திற்குக் கொடுங்கள். நாங்கள் ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை. எங்களுக்கு எங்கெங்கு ஓட்டு போட்டார்கள், எந்த இடத்தில் பல்பு இல்லை, எந்த இடத்தில் ரோடு போடமுடியவில்லையோ அங்கெல்லாம் நாங்கள் சென்று ரோடு போடுவோம். அந்த எம்.எல்.ஏ–க்களும் இப்படித்தான் செய்வார்கள். நாங்களும் இப்படித்தான் செய்வோம். ஆகையினால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தடையினை அகற்றி; அடித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள் பார்க்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியினைப் பற்றிக் கேட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தாயுள்ளத்தோடு ரூ.3 கோடியாக உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். அதற்கு நன்றியும் சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரையறை உங்களுடைய ஆட்சிக்காலத்திலிருந்தே தொடர்ந்து இருக்கின்றது. இப்போது கொண்டுவரப்படவில்லை. நீங்கள் இருக்கும்போதும் இருந்தது. தொடர்ந்து அதற்கு வரையறை இருக்கின்றது. தற்போது ஒரு புயல் வருகின்றது என்று ஒரு சூழ்நிலை இருந்தால், அப்போது குடிநீர் மற்றும் நிவாரணப் பணிகளுக்குக் கொடுக்க வேண்டும். வறட்சியானகாலத்தில்குடிநீருக்குக்கொடுக்கவேண்டியசூழ்நிலையும் உள்ளது. இப்படி இருக்கும்போது அதற்கு வேறு fund கொடுக்க*

2020 ஜனவரி 9] [திரு. எஸ்.பி. வேலுமணி]

முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதற்கான வரையறை தொடர்ந்து உங்களுடைய ஆட்சிக்காலத்திலிருந்தே இருக்கின்றது. அதுவும் குறிப்பிட்ட அளவுதான். குறிப்பிட்ட அளவிற்கு மேல் மற்ற பணிகளுக்கும் இந்த fund*–ஐ பயன்படுத்திக்கொள்ளலாம். அதுபோல், கூட்டுறவு சங்கக் கட்டடங்கள் உள்ளன. அதுபோல் பல கட்டடங்கள் உள்ளன. அதற்குக் கொடுக்கக்கூடாது என்று விதிமுறைகள் உள்ளன.* Police Station *என்று இதுபோல் நிறைய உள்ளன. இதுபோன்ற வரைமுறைகள் ஆரம்பத்திலிருந்தே உள்ளன. நீங்கள் அவசியமான சில பணிகளைச் சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அதனைக் கொஞ்சம் மாற்றியமைக்கலாம். முழுமையாக அதனை எடுப்பதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் சில பணிகளுக்கு நாம் அதை கொடுத்துத்தான் ஆக வேண்டும். அப்போதுதான் அந்தப் பணிகளை அவர்கள் செய்வார்கள். இன்றைக்கு பார்த்தீர்களென்று சொன்னால்,* High mast lamp *முதலில் 10 இருந்துகொண்டிருந்தது. அதேநேரத்தில் அதனை முழுமையாகக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். பல பஞ்சாயத்துகளில்* current charge *கட்ட முடியவில்லை. ஏனென்றால்* lights *மட்டும் கொடுக்கிறோம். சில பேரூராட்சிகளில்* current charge *கட்டக்கூட பணமில்லை. சம்பளம் கொடுக்க பணம் இல்லை. இதுபோன்ற சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன. எனவே, சில பணிகளை நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் அதனை* restrict *செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருவில்* lights *எரிவதில்லை. நாங்கள்தான் மாட்டிக்கொள்கிறோம். தெரு விளக்குகள் எரிவதில்லை. யாரோ ஒருவர் வந்து பல்ப் மாட்டிவிட்டுச் செல்கிறார். மறுபடியும் அவர் வருவதே இல்லை. எங்கே போகிறார் என்று தெரியாது. நாங்கள் கேட்பது ஒன்று. அந்த* restriction*—நான்* Collector Office*–க்கு போவது இல்லை.* Collector Office*–க்கு போய்விட்டு வந்து சொல்கிறார்கள்.*

அடுத்து, குடிநீர். எந்த ஊருக்குச் சென்றாலும், தண்ணீர் வசதி கேட்கிறார்கள். இவ்வளவு பணத்தை குடிநீருக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்? அதைச் சொன்னால், 'No, no, நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம்' என்று P.O.-ஆக யாரோ ** அவர் சொல்வதாக யாரோ வந்து சொல்கிறார்கள். நான் போவது கிடையாது. என் தொகுதி மேம்பாட்டு நிதியெல்லாம் அங்கே அப்படியே கிடக்கிறது. நான் என்ன செய்வது? Waste-ஆகக் கிடக்கிறது. அமைச்சர், உங்களிடம் இது நடக்காது. மாண்புமிகு முதலமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (சிரிப்பு) அப்பொழுதுதான் சரியாக வரும். அதனால் நீங்கள் சொல்லுங்கள்.

இரண்டாவது, பொதுப் பணித் துறையில் NMR குறித்துச் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே NMR ஆக குறிப்பிட்ட ஆண்டுகள் பணியாற்றியவருக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு தகுதியானவர்களாக இருந்தால் NMRs-ஐ நிரந்தரமாக்குவதற்கு அரசு முயற்சி செய்யும். அதேபோல, இன்னும் பல்வேறு கோரிக்கைகள், சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தங்களுடைய விருப்பப்படி எந்த வேலைக்கு வேண்டுமானாலும், எந்தப் பணிக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைப் பரிசீலிக்கிறேன். எந்த அளவுக்கு அது சாத்தியம் என்பதை துறையின் அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, உங்களுக்கு முடிந்த அளவுக்கு சாதகமான பதிலைக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரையும் நான் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இருங்கள். இருங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள், 15 (குறுக்கீடு) எனக்கு, இன்னும் முதலமைச்சர் பேசி முடித்ததற்கு பிறகு, அந்தத் தீர்மானம் நிறைவேறியதற்கு பிறகு 15 Bills இருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள், (குறுக்கீடு) இது விவாதம் இல்லை. (குறுக்கீடு) நான் (குறுக்கீடு) இல்லை, இல்லை, எதிர்க்கட்சித் தலைவருக்கு (குறுக்கீடு)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி எழுந்து நின்று பேச வாய்ப்பு கோரினார்.)

உங்களுக்கு (குறுக்கீடு) நேற்றைக்கு அவர் பேச நான் அனுமதித்தேன். (குறுக்கீடு) அவர் பேச வேண்டிய எல்லாவற்றையும் பேசிவிட்டு போய்விட்டார். (குறுக்கீடு) உங்கள் கட்சிக்கு 2 பேர் பேச விட்டுவிட்டேன். (குறுக்கீடு) எல்லோரும் பேசிக்கொண்டே இருக்க முடியாது. இல்லை, போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

(தி.மு.க. உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள் முன் இருக்கைக்கு வந்து பேச வாய்ப்பு கோரினார்.)

இல்லை, இல்லை, நீங்கள் இந்தமாதிரி பேசினீர்கள் என்றால் சரியாக இருக்காது. (குறுக்கீடு) இந்தமாதிரி பேசினால் சரியாக இருக்காது. (குறுக்கீடு) நீங்கள் இடத்திற்கு போங்கள். (குறுக்கீடு) புது MLA, பழைய MLA என்றில்லை. எல்லோரும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள்தான். (குறுக்கீடு)

(காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் தொடர்ந்து எழுந்து நின்று பேச வாய்ப்பு கோரினார்.)

உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் வாய்ப்பில்லை. (குறுக்கீடு) வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா. எனக்கு சபையில் இன்னும் 15 Bills நிறைவேற்ற வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) உங்கள் கட்சிக்குத்தான் (குறுக்கீடு) உங்கள் கட்சிக்கு நிறைய வாய்ப்பு நான் நேற்று கொடுத்துவிட்டேன் அம்மா. (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, என்ன சொல்லப் போகிறீர்கள், சொல்லுங்கள். சீக்கிரம் ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

[2020 ஜனவரி 9

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி. முதியோர் pension–ல் ஒரேயொரு சிறிய சந்தேகம். ஆண் பிள்ளைகள் இருந்தால் முதியோர் pension இல்லை என்று நிராகரிக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் சில நேரத்தில் தாய், தகப்பனுக்கு உதவுவது இல்லை. ஆகையால், அதிலும் ஒரு ruling கொண்டு வந்து, ஆண் பிள்ளைகள் இருந்தாலும், பெற்றோருக்கு உதவி இல்லையென்றால், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு pension கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னால், நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். என்ன, சொல்லுங்கள்.

திரு. சே. கருணாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘உண்மையைச் சொல், உறுதியாய் சொல், இறுதிவரையில் சொல்’ என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்தார் என் தெய்வத் திருமகனார். இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கவர்னர் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து தரப்பட்ட மக்களையும் திருப்திபடுத்தியமைக்காக, ஒட்டுமொத்த தமிழக மக்கள் சார்பாக, என்னுடைய புலிப்படை சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு வழங்குவதாக அறிவித்திருந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் விசாரித்து பாருங்கள். நான் இன்றைக்கும் வாடகை வீட்டில்தான் இருக்கிறேன். என்னைப்போல் நிறைய பேர் இருக்கிறார்கள். Village–ல் இல்லை; நான் கேட்பது சென்னையில் ஒரு apartment அல்லது தரைவீடு தருவதாகச் சொன்னீர்கள். அதனால், தயவுசெய்து—படத்தில் நடித்து சம்பாதித்த வீட்டை விற்றுவிட்டு இப்போது ஒட்டாண்டியாக நிற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருணாஸ், போதும், சீக்கிரம் முடியுங்கள்.

2020 ஜனவரி 9]

பிற்பகல் 1–20

திரு. சே. கருணாஸ்: *சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தாங்கள் அறிவித்த அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக சிரம் தாழ்த்தி கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) எனக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *நன்றி மட்டும் சொல்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் சிறுபான்மையின மக்களுடைய அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயல்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் முழுமையாக மத்திய அரசாங்கம் கொண்டுவந்திருக்கக்கூடிய குடியுரிமை திருத்தச் சட்டத்திலே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் 100 பேர் இருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் பேச வாய்ப்பு கேட்டால் நான் எவ்வாறு சபையை நடத்த முடியும்? (குறுக்கீடுகள்) உங்கள்* Leader*–க்குத்தான் நான் வாய்ப்பு தர முடியும். 100 பேரும் வந்து வாய்ப்புக் கேட்டால் நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்?*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *எந்த நிலையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். மனைவியையும், மகளையும் இழந்திருக்கக்கூடிய அவருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன். நன்றி. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய* Leader*–க்குத்தான் நான் வாய்ப்பு தர முடியும். நீங்கள் எல்லோரும் பேச வாய்ப்பு கேட்டால் நான் தர முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

[2020 ஜனவரி 9

திரு. துரைமுருகன்: கிராமங்களில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை எடுத்து செப்பனிடுகின்ற ஒரு நல்ல காரியத்தை கடந்த இரண்டு ஆண்டு காலமாக இந்த அரசு செய்து வருகிறது. 7,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளை எடுத்துக்கொண்டு இப்போது செப்பனிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இன்னும் நிறைய சாலைகள் இருக்கின்றன. ஆக, இந்த ஆண்டும், வருகின்ற ஆண்டிலும் மேற்கொண்டு சாலைகள் செப்பனிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்படுமா? எங்களுடைய மாவட்டத்தில் குறைவான சாலைகளைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அங்கு அதிகமாக சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், இது மிகவும் முக்கியமானது. இப்பொழுது கிராமச் சாலைகளை யாரும் கவனிப்பதே இல்லை. மிகவும் மோசமாக இருக்கின்றன. Highways-ஐ இணைக்கின்ற சாலைகளையாவது செப்பனிட எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது சாலைகளை எடுத்து செப்பனிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இன்னும் 7,000 கி.மீ. சாலைகளை செப்பனிட எடுத்துக்கொண்டால் பரவாயில்லை. அதை இந்த அரசு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டும் சாலைகள் செப்பனிட எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, பணிகளைத் தொடங்கவிருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட நீளமுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான நிதியை ஒதுக்கி செப்பனிடப்படுகின்றன. ஒட்டுமொத்தமாகச் செய்ய வேண்டுமென்றால் அதிகமாக நிதி தேவைப்படுகிறது. அதனால், ஒவ்வோர் ஆண்டும், அதாவது, கிராமப்புறங்களில் பேருந்துகள் செல்கின்ற சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான், சுமார் 8,000 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகளை எடுத்துக்கொண்டு, நெடுஞ்சாலைத் துறை மூலமாக, இத்திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, படிப்படியாக அந்தச் சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டும் குறிப்பிட்ட நீளமுள்ள சாலைகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. வருகின்ற ஆண்டிலும் குறிப்பிட்ட நீளமுள்ள

2020 ஜனவரி 9] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, கிராமப்புறச் சாலைகள் செப்பனிடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாலைகளெல்லாம் மோசமான நிலையில் இருக்கின்றன என்று சொன்னார்கள். கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2011-ல் 1 இலட்சத்து 2 ஆயிரம் கி.மீ. நீளமுள்ள கிராமச் சாலைகள்தான் இருந்தன. அதற்குப் பிறகு, 47,000 கி.மீ. சாலைகள் புதியதாகக் கண்டறியப்பட்டு, அதிகமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு கிராமங்களில் தரமான சாலைகள் அதிகமான அளவில் அம்மாவுடைய அரசால் போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, 7,000 கி.மீ. நீளமுள்ள சாலைகளைச் செப்பனிட படிப்படியாக அவர்கள் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.*

அதுமட்டுமல்லாமல், இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, High Mast Light *பற்றிச் சொன்னார்கள். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத்தான் அவர்கள் அதிகமான நிதி கொடுக்கிறார்கள். அதனால்தான், பஞ்சாயத்துகளில்* current bill *கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது.*

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, P.O. *பற்றிச் சொன்னார்.* P.O.s *எல்லாம்* Collector*-க்கு அடுத்த* rank*-ல் இருக்கிறார்கள்.* Collector *ஆகப்போகின்ற* rank*-ல் இருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது தெரிந்தோ தெரியாமலோ ஒரு* P.O. ** *என்று* ** *சொல்லிவிட்டார்கள். அதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒருமையில் சொன்னதை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம். அதில் ஒன்றுமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு ஒரத்தநாடு தொகுதி, மூத்த சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. இராமச்சந்திரன் அவர்கள்* G.A. Canal*-ஐப் பற்றிக் கேட்டார். அதற்கு விளக்கம் தருகின்றேன். கல்லணைக் கால்வாய் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் வழியாக 148.654 கி.மீ. தூரத்திற்கு பயணிக்கிறது. இந்தக் கல்லணைக் கால்வாய் அமைப்பில் உள்ள கடைமடை வரை நீர் செல்வதில் ஏற்படும் குறைபாடுகளைக் களைவதற்கு பிரதான கால்வாயிலும் மற்றும் கிளை வாய்க்கால்களிலும் நீண்ட காலத்திற்கு முன்பே போடப்பட்ட* concrete lining *அமைப்பு சீர்செய்யப்படவுள்ளது. அதைப்பற்றித்தான் உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். இப்பகுதியில் 694 குளங்கள், ஏரிகள், கண்மாய்கள் உள்ளன. இதில், 448 குளங்கள், ஏரிகள், கண்மாய்கள், சேதமடைந்த நிலையில் உள்ள கலுங்குகள் மற்றும் ஏரிகள், மதகுகள், மறு கட்டுமானப் பணியில் ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களைத் தூர் வாரும் பணிகள் மேற்கொள்வதால், ஏரிகள், குளங்கள் மற்றும் கண்மாய்களில் நீர் தேங்கும் அளவு மேம்படுகிறது. மேலும், அதன் கரைகளும் மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தினைச் செயல்படுத்தியதால் 63,284 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி உறுதி செய்யப்படும். இத்திட்டத்திற்காக, 2,298 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்திற்கான நிதி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிமூலம் பெறப்படவுள்ளது. நிதி பெறப்பட்டதும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். (திருத்தங்கள் வலியுருத்தப் பெறவில்லை.)*

மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

"2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்களால் 7-1-2020 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு

எண் 6/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020), 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2020) மற்றும் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2020) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)
மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—விவாதத்திற்கான பதிலுரை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார். தேர்தல் முடிந்து* result *என்னவாகும் என்று தெரிந்து, தைரியமாக முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசியதை வரவேற்கிறேன் என்று சொன்னார்.தேர்தலிலேநிச்சயமாகநாங்கள்தான்வெற்றிபெறுவோம் என்று நன்றாகவே எங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தமுறைகூட நீங்கள் அவ்வாறுதான் 'நாங்கள் இங்கே இருக்கின்றோம்; 2016–க்குப் பிறகு அங்கே வருவோம்; ஆளுங்கட்சி தரப்பிலேவருவோம்'என்றுசொன்னீர்கள்.ஆனால்,மக்கள்நிலையாக உங்களுக்குஅந்தஇடத்தையேதந்துவிட்டார்கள்.(மேசையைத்தட்டும் ஒலி) நீங்கள் சொன்னதிலும் தவறொன்றுமில்லை. ஏனென்றால், உங்கள் தொண்டர்களெல்லாம் சோர்வாக இருக்கின்றார்கள்; அவர்கள் மனநிறைவைப் பெற வேண்டுமென்பதற்காக இந்தச் செய்தியைச் சொல்லியிருப்பீர்கள் என்று கருதுகின்றேன். ஆகவே, வருகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, எந்தத் தேர்தல் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) திடமாக, உறுதியாக, நிச்சயமாக வெற்றி பெற்று தொடர்ந்து 3–வது முறையாக நிலையான ஆட்சி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதில் ஒன்றும் தவறில்லை. தேர்தலுக்குப் போன எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால், ஒருவர்தான் ஜெயிக்கிறார், மற்றொருவர் திரும்பி வருகிறார். அந்த* list*–ல் நீங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எவ்வளவோ கனவு காண்கிறீர்கள். எந்தக் கனவும் பலிக்கவில்லை. அதுதான் இப்போது நடக்கிறது.*

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2020 ஜனவரி 9

(ஆ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ **9–1–2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, என்னவென்று சொல்லுங்கள்.

பிற்பகல் 1–35

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 பிரிவு 76–ல் திருத்தம் கொண்டு வந்து, 76A பிரிவின்மூலம் சங்கத் தலைவர், துணைத் தலைவர் ஆகியோரை பதிவாளர் தற்காலிக நீக்கம் செய்யலாம் என்று இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. It is against the principles of natural justice and the intention of the Legislation has ulterior motive. ஏனென்றால், இந்த intention ஆனது பல்வேறு யூகத்தை ஏற்படுத்துகிறது. There is no ambiguity. Next, it is against the Parent Act. ஏனென்றால், இந்த சட்டத்திலே, தமிழ்நாடு கோ–ஆப்ரேட்டிவ் சட்டத்தில், பிரிவுகள் 34, 35, 36, 88, 61, 62–ல் என்ன disciplinary action எடுக்கலாம் என்று clear ஆக சொல்லப்பட்டிருக்கிறது. தலைவர், துணைத் தலைவர் என்பவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்களை disqualification தான் செய்ய முடியுமேயொழிய, தற்காலிக பணி நீக்கம் செய்ய முடியாது. தற்காலிக பணி நீக்கம் செய்யலாம் என்று சொன்னால், அந்த Board என்னவாகும்? எதற்கு Board?

@ 8–1–2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அப்போது, நிருவாகம் சீர்குலைந்து போகும். நிருவாகம் சீர்குலைந்து போனால், எப்படி அந்த நிருவாகத்தை நடத்த முடியும்? ஆகையால், என்ன செய்யலாம் என்றால், இவர்களை disqualification தான் செய்ய முடியுமேயொழிய, அவர்களை suspension செய்ய முடியாது. Suspension யாரை செய்ய வேண்டுமென்றால், ஊதியம் பெறக்கூடியவர்கள். இவர்கள் ஊதியம் பெறக்கூடியவர்களல்ல. ஏனென்றால், collective responsibility இருக்கிறது. இந்த Board–ல் collective responsibility இருக்கிறது; Members இருக்கிறார்கள். எல்லோருக்கும் சேர்ந்து பொறுப்பு இருக்கும். அப்படியென்றால், Board–ன் நிலை என்ன? அப்போது இது நிலையில்லாத தன்மையை ஏற்படுத்தும். ஆகவே, இது நீதிமன்றத்திற்குப் போனால், நிற்கவே நிற்காது. Mutli–litigations–ஐ ஏற்படுத்தும். ஏற்கெனவே உள்ள ஒரு சட்டம், Parent Act–லேயே clear ஆக இருக்கும்போது, இந்தச் சட்டம் தேவையில்லாத ஒரு சட்டம். பிரிவு 81–ன்கீழ் enquiry இருக்கிறது. பிரிவு 82–ன்கீழ் enquiry இருக்கிறது. பிரிவு 81–ன்கீழ் enquiry–க்கு பிறகுதான் செய்ய முடியும். Disqualification செய்யக்கூடியவர்களை, தற்காலிக பணி நீக்கம் செய்தால், அவர்களுக்கு பிழைப்பூதியம் கொடுக்க முடியும். அப்போது,பிழைப்பூதியம்என்னவாகும்? ஆகவே,இது பல்வேறு multi–litigations–யையும், நிறைய சிக்கல்களையும் உருவாக்கக்கூடிய சட்டம். இது தேவையற்றது. பழிவாங்கும் நோக்கத்தில் கொண்டுவரப்படுகிற சட்டம். ஆகவே, நிருவாகம் சீர்குலையும். ஏற்கெனவே, பார்த்தீர்களென்றால், அந்த கோ–ஆப்ரேட்டிவ்காரர்கள், அண்ணா அவர்கள் சொன்ன மாதிரி, ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு’ என்பதுபோல், கூட்டுறவின் நன்மை இருக்கும். ஆனால், இது கூட்டுறவை சிதைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கும். பயமில்லாமல் பணியாற்றிட வேண்டுமானால், இந்தச் சட்டத்தை திரும்பப் பெறுவதுதான் நல்லது. இல்லையென்றால், இது நீதிமன்றத்தில் நிற்கவே நிற்காது. Multi–litigation–க்கு வழிவகுக்கும். இந்தச் சட்டம் ஏற்கத்தக்கதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் இவ்வளவு ஆதங்கப்பட வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்த பிறகுதான், இந்தக் கூட்டுறவுச்

[திரு. செல்லூர் கா. ராஜு] [2020 ஜனவரி 9

சங்கங்களே இன்றைக்கு நிலைத்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, அகில இந்திய அளவில், சிறப்பாக, ஏறத்தாழ 29 விருதுகளைப் பெற்றிருக்கிறோம். இதற்கு இரண்டு முறை ஜனநாயக முறையில் தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். அதனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பொறுத்த அளவிற்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதில் அச்சம்கொள்ளத் தேவையில்லை. மேலும், சங்கங்களை வலுப்படுத்துகின்ற வகையிலும், இன்றைக்கு மக்கள் அதில் நிறைய நிதி போட்டிருக்கிறார்கள். அது விஷயமாக, அதைப் பாதுகாக்கின்ற வகையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 76-ன்கீழ் சங்கப் பணியாளர் ஒருவர் கையாடல், நம்பிக்கை மோசடி அல்லது சட்டம் மற்றும் விதிகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டால் அவரை தற்காலிக பணி நீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய காரணங்களுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவரை தற்காலிக பதவி நீக்கம் செய்ய இதுவரை சட்டத்தில் வழிவகை இல்லை என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சங்கத்தின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் சங்கத்தின் நிதியைக் கையாடல் செய்துள்ளார் அல்லது சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணாகச் செயல்பட்டுள்ளார் என்று முதல் நோக்கிலேயே தெரிய வந்தால், சங்க நலன் அல்லது பொது நலன் கருதி, அவர்களை தற்காலிக பதவி நீக்கம் செய்ய வேண்டியது அவசியம் என மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருதுகிறது.

பிற்பகல் 1-40

எனவே, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் 76A என்ற புதிய பிரிவை அறிமுகப்படுத்தி, சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டப் பிரிவின்படி தவறு புரிந்த தலைவர் அல்லது துணைத் தலைவர்மீது தண்ட வசூல், குற்றவியல் நடவடிக்கை மற்றும் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் வரை, தொடர்ந்து பதவியில் நீடிக்க அனுமதிக்காமல், முதல்கட்டமாக 6 மாத காலம் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யலாம். தேவை ஏற்படின், தற்காலிகப் பதவி நீக்கத்தை மேலும் 6 மாதகாலம் நீட்டித்தும், சட்டப் பிரிவு 81 மற்றும் 82-ன்மீதான விசாரணையில் ஆதாரம் இருப்பின், சட்டப் பிரிவு 36-ன்கீழ் நிரந்தர தகுதிநீக்கம் செய்து இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் வரை அவர்கள்மீதான தற்காலிக பதவி நீக்கத்தைத்

தொடரலாம். தலைவர் அல்லது துணைத் தலைவரை தற்காலிகப் பதவி நீக்கம் செய்தால் அவர்கள் ஆவணங்களை அழிக்கவோ அல்லது தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணையில் தலையிடவோ அல்லது பணியாளர்களை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவோ இயலாது என்று மாண்புமிகு அம்மாவின் அரசு கருதுகிறது. ஒரு சங்கத்தின் தலைவர் அல்லது துணைத் தலைவர், சங்கத்தை சிறப்புடன், வெளிப்படைத் தன்மையுடன் நடத்தவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு இச்சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது மாறிவரும் சூழ்நிலையில் கணினிமயமாக்கல், சைபர் குற்றங்களைத் தடுத்தல் ஆகிய காரணிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு கருத்தில் கொண்டுள்ளது. மாநிலத்திலுள்ள 4,449 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் பொதுமக்கள் 30–11–2019 வரை இட்டுவைத்துள்ள 55,599 கோடி ரூபாய் வைப்புத் தொகையினை கவனத்துடன் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு உள்ளது என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் புதிய சட்டப் பிரிவு தவறு இழைத்தவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை தொடர வழிவகுக்கும் என்பதுடன், கூட்டுறவின் மீதான நம்பகத் தன்மை பொதுமக்களிடம் அதிகரிப்பதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் துணைத் தலைவரின் பொறுப்புத் தன்மையும் மேம்படும். இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எந்த அச்சமும் கொள்ளவேண்டியதில்லை. யாருக்கும் எந்த ஆபத்தும் வராது, பாதிப்பும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எல்லோரும், பொதுமக்களும் இந்தச் சங்கம் நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறோம். அந்த அடிப்படையில்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2020) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று கோருகிறேன். மேலும் அதை நிறைவேற்றிக் கொடுக்கும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே பேசிவிட்டீர்களே, பிறகு என்ன? (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவ்வளவுதான். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். சபையில் இந்த நடைமுறை எல்லாம் இல்லை. 15 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் இப்படி discuss செய்தால் எப்பொழுது முடிப்பது? (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2020 ஜனவரி 9]

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/ 2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2020 ஜனவரி 9

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி சட்டத்தில் நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சி, முதல் நிலை நகராட்சி, Selection Grade, Special Grade என்று 5 வகைகளாகவும், பேரூராட்சிகள் 3 வகைகளாகவும், ஊராட்சிகள், தேர்வு நிலை ஊராட்சி, சிறப்பு நிலை ஊராட்சி என 2 வகைகளாகவும், இருக்கின்றன. மக்கள் தொகையின் அடிப்படையில், வருமானத்தின் அடிப்படையில், நிருவாகத்தின் அடிப்படையிலே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்போது நம்முடைய உள்ளாட்சித் துறை, மூன்றாம் நிலை நகராட்சி என்பதை மட்டும் எடுத்துவிட்டு, இரண்டாம் நிலை நகராட்சியாக இருக்க வேண்டும் என்ற திருத்தச் சட்டத்தினை கொண்டு வந்திருக்கிறது. தற்போது சில மாவட்டங்களைப் பிரித்திருக்கின்றார்கள். இந்த மூன்றாம் நிலை நகராட்சியை மட்டும் எடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தாம்பரம் நகராட்சியிலிருந்து கடந்து, சிட்லபாக்கம் பேரூராட்சியைக் கடந்து, பல்லாவரம் நகராட்சியையும் கடந்து, திருநீர்மலை பேரூராட்சியையும் கடந்து, தாம்பரம் நகராட்சியின் எல்லை இருக்கிறது. 2 பேரூராட்சி, 1 நகராட்சியைக் கடந்து 1 நகராட்சி இருக்கிறது. சீர்காழியில் 28,000 பேருக்கு ஒரு நகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. அனகாபுத்தூரிலே 30,000 பேருக்கு ஒரு நகராட்சி இருந்து கொண்டிருக்கிறது. சிட்லபாக்கத்தில் 18 வார்டுகள் உள்ளன, செம்பாக்கத்தில் 15 வார்டுகள் உள்ளன. செம்பாக்கம் நகராட்சி ஆகிவிட்டது. சிட்லபாக்கம் இன்னும் பேரூராட்சியாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, ஒரு நகராட்சி, உள்ளாட்சி நிருவாகம் எப்படியிருக்கிறது என்றால், அதிகாரிகள் வைத்தது ஒரு சட்டம், ஒவ்வோர் அமைச்சர் சொல்வதும் சட்டம், வருகிறவர்கள், போகிறவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு அரசு செயல்படுகிறதா என்பது எனக்கு ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது.

நான் சொல்ல வருவது என்னவென்றால், எப்படி மாவட்டத்தைப் பிரிக்கிறீர்களோ, எப்படி நாடாளுமன்றத் தொகுதி, சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கிறீர்களோ, அதைப்போல ஒரே தடவையாகப் பிரியுங்கள். அதற்கென ஒரு தனிக் குழுவை அமைத்து, எது அதிக மக்கள் தொகை கொண்டது என்பதை ஆய்வு செய்து, ஒரே தடவையாக பிரியுங்கள். ஊராட்சியில் 20,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி இருக்கிறது; பேரூராட்சியில்

50,000 மக்கள் தொகை கொண்ட பேரூராட்சி இருக்கிறது; ஆனால், நகராட்சியில் 28,000 மக்கள் தொகை இருக்கிறது. இந்தச் சட்டம் சரியா என்று பாருங்கள். உதாரணத்திற்காக ஒரு ஊரைத்தான் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கின்றேன். இன்னோர் உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், பெருங்களத்தூர் பேரூராட்சி ஒரு பெரிய பேரூராட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, இன்றைக்கு நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: பீர்க்கன்கரணை பேரூராட்சி என்பது ஜி.எஸ்.டி. ரோட்டிற்கு இந்தப் பக்கமும்,—Geographical level-லிலும் சரியில்லை, Population level-லிலும் சரியில்லை, Economic level-லிலும் சரியில்லை. ஆகவே, தயவுசெய்து அரசு இதில் தனிக் கவனம் எடுக்க வேண்டும். இப்போது எந்த நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்த வேண்டுமென்றால், மனசாட்சி உள்ளவர்களுக்குத் தெரியும், தாம்பரம் நகராட்சியைத்தான் முதலில் மாநகராட்சியாக தரமுயர்த்த வேண்டும். அங்கு மக்கள் தொகை அவ்வளவு அதிகம். இன்னும் சொன்னால், மக்கள் வரிப் பணம்—இப்போது இவ்வளவு சொல்கிறோம், இவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம், அரசுப் பணத்தில் 96% சம்பளம் கொடுப்பதற்கே போகிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், பல இடங்களில் அதிகாரிகளே கிடையாது. ஆக, இப்பொழுது நிருவாகம் சரியில்லாத ஒரு நிலை இருக்கிறது. நான் அதிகமாகச் சொன்னால் பேசுவதற்கு விடமாட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் பேசவிட்டதால்தான் நீங்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: நான் சபாநாயகருக்கு பயந்து, அடக்கம் ஒடுக்கமாக கொஞ்சம் குறைவாகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள். 15 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நேரத்தைப் பாருங்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: உள்ளாட்சி நிருவாகத்தை, மாநகராட்சி நிருவாகத்தை நீங்கள் ஒட்டுமொத்தமாக சரி செய்ய வேண்டும். Instalment-ல் ஊராட்சியை பேரூராட்சியாக ஆக்காமல், பேரூராட்சியை நகராட்சியாக ஆக்காமல், நகராட்சியை மாநகராட்சியாக ஆக்காமல், மூன்றாம் நிலையை எடுத்துவிடுவதை நிறுத்தி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டை மாற்றியமைக்க வேண்டும்; இந்தச் சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி வார்டுகளைப் பிரிக்கக்கூடிய விஷயம் குறித்து ஏற்கெனவே நடைபெற்ற கூட்டத்திலும் நான் சொன்னேன். சில ஊர்களில், குறிப்பாக திருநெல்வேலி மாநகராட்சியிலே மேலப்பாளையம் பகுதியில் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அதைப்போல, கடையநல்லூர் பகுதியில் இருக்கிறார்கள், காயல்பட்டினம் பகுதியில் இருக்கிறார்கள். இதுபோன்ற ஏரியாக்களில் வார்டுகளைப் பிரிக்கும்போது, சில வார்டுகள் 10,000 வாக்காளர்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் வாழக்கூடிய வார்டுகள் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதேநேரத்தில், மற்ற வார்டுகளிலே 5,000 வாக்காளர்கள் இருக்கின்றார்கள். அந்த வார்டு நம்பர்களைக் குறிப்பிட்டுக்கூட நான் சென்ற கூட்டத்தொடரில் பேசினேன். அதேபோன்று, ஒரு வார்டு, நான்கு தெருக்களில் இருக்கக்கூடிய சில பகுதிகளை இணைத்து தனி வார்டாகப் பிரித்திருக்கிறார்கள். இதனால், முஸ்லிம்களுடைய பிரதிநிதித்துவம் குறையக்கூடிய அளவிலே இந்த வார்டுகளெல்லாம் இருப்பதை ஏற்கெனவே நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். தேர்தல் ஆணையரிடத்திலேகூட இதற்கான விவரங்களையெல்லாம் முழுமையாகக் கொடுத்திருக்கின்றோம். ஒரு சில இடங்களில்தான் முஸ்லிம் சமுதாயத்தின் பிரதிநிதிகள் வெற்றி பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தும்கூட, அந்த வார்டுகள் பிரிக்கப்பட்ட முறையிலே குளறுபடிகளெல்லாம் இருப்பதன் காரணமாக, முஸ்லிம் சமுதாயத்தினுடைய பிரதிநிதித்துவம் குறையக்கூடிய வகையிலே இருக்கின்றது. அதையும் சரி செய்யக்கூடிய முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

2020 ஜனவரி 9]

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.ஆர். இராஜாவும் சரி, திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களும் சரி, சட்டமுன்வடிவில் பேசாமல் subject மாறியே பேசுகிறார்கள். சட்டமுன்வடிவு என்பது, மூன்றாம் நிலை நகராட்சிகள் குறித்தது. 2011 ஆம் ஆண்டிலேயே 3 ஆம் நிலை நகராட்சி இல்லை. அதேபோல் 528 பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுமாதிரி, நகராட்சிகளை upgrade செய்வதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்த பின்னரே, இந்தமாதிரி மாற்றமெல்லாம் செய்ய முடியும். அதேபோல் தமிழகத்தில் ஏற்கெனவே இருந்த 49 மூன்றாம் நிலை நகராட்சிகளில் பெரும்பாலானவை சென்னை, வேலூர், ஈரோடு, திருப்பூர் போன்ற மாநகராட்சிகளுடன் எல்லை விரிவாக்கத்தின்போது இணைக்கப்பட்டன. சில மூன்றாம் நிலை நகராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இறுதியாக, மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சி, 5–1–2011 அன்று இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு தமிழகத்தில் மூன்றாம் நிலை நகராட்சிகள் எதுவும் தரம் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில் 1920 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில், மூன்றாம் நிலை நகராட்சிகளில் இருக்கும் வகைமுறைகளை இச்சட்டத்திலிருந்து நீக்குவது பொருத்தமாக இருக்குமெனக் கருதப்பட்டது. மேலும், தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெறஉள்ள நிலையில் பொதுமக்கள் மத்தியில் மூன்றாம் நிலை நகராட்சிக்கும் தேர்தல் நடைபெறுகிறது என்ற ஐயம் எழ வாய்ப்புள்ளது. எனவே, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் மூன்றாம் நிலை நகராட்சிகள் நிருவகிக்கும் வகைகளை நீக்க வேண்டுமென்ற நோக்கத்தில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் 11–11–2019 அன்று மேதகு ஆளுநர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில் மேற்கண்ட அவசரச் சட்டத்தை மாற்றியமைக்க ஏதுவாக இந்தச் சட்டமுன்வடிவைச்

சட்டமாக இயற்ற தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, இதில் சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் இல்லை என்று சொன்னார். இதில் அந்தமாதிரி பாகுபாடே கிடையாது. அதேபோல், நீதிமன்றங்களில் நிறைய வழக்குகள் வந்தன. இதில் பாகுபாடுகள் எதுவுமே இல்லை. எல்லாமே விதிமுறைக்கு உட்பட்டு எந்தப் பாகுபாடும் இல்லாமல் சரியான முறையில்தான் போய்க்கொண்டிருக்கிறது. அதிகாரிகளுக்கு, அமைச்சர்களுக்கு, சாதாரண மனிதர்களுக்கு சாமானியன், பெரியவன் என எல்லோருக்கும் சட்டம் ஒன்றுதான். யாருக்குமே பிரிவெல்லாம் கிடையாது. எனவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவுக்கு, எந்தப் பிரிவும் இல்லாமல் சரியான முறையில், உறுப்பினர் சொல்வதுமாதிரி,இஸ்லாமியர்கள் இருக்கிற வார்டுகளில் இந்துக்கள் இருக்கிறார்கள். நாம் அந்தமாதிரி நிலைமைக்கே போகவில்லை. அந்தமாதிரி எண்ணமோ, ஐயமோ கிடையாது. அதிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசைப் பொறுத்தவரையில், சரியான முறையில் இன்றைக்குச் செயல்படுகிறது. அதைத் தேர்தல் ஆணையம் சிறப்பான முறையில் செய்துகொண்டுள்ளது. அதனோடு ஒத்துழைத்து, நம்முடைய உள்ளாட்சித் துறை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, எந்தப் பாகுபாடு எண்ணமும் இதிலே கிடையாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். கடையநல்லூர் போன்ற நகராட்சிகளில் எந்தவித பாகுபாடும் இல்லை. அதற்குள் அதிகாரிகளிடமிருந்து notes வந்துவிட்டது. இதிலே எந்தவித பாகுபாடும் கண்டிப்பாக இல்லை. இந்தச் சட்டத்தைப் பொறுத்தளவுக்கு மூன்றாம் நிலை நகராட்சிகள் இல்லாத காரணத்தினாலே இதை நாம் எடுக்கிறோம், வேறொன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சொல்லுங்கள்.*

பிற்பகல் 1–55

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4–10–2016 அன்று நீதிப் பேராணையின்படி உள்ளாட்சி மன்றத் தேர்தலில் 7–வது முறையாக தனி அலுவலர் நியமன நீட்டிப்புக்காக இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இதில், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையையும், நோக்கக் காரண விளக்க உரையையும் கூர்ந்து கவனித்தால், தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2019–ஐ திரும்பப் பெற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.*

*@ **9–1–2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

2020 ஜனவரி 9] [திரு. பி.கே. சேகர்பாபு]

அதேபோல், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையில் பார்த்தால், நகர்ப்புற தேர்தல் ஏடுகள், மறு அச்சு செய்யப்பட வேண்டுமென்றும்; அதேபோல், தேர்தல் ஆணையம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வழக்கமான தேர்தலை நடத்துவதற்கு தேவைப்படும் சட்டப்படியான மற்றும் சட்டப்படி அல்லாத படிவங்களைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகுறிப்பிட்டிருக்கிறீர்கள்.சட்டப்படிநடவடிக்கையை, சட்டத்திற்குட்பட்டு நீங்கள் எடுத்துவிடலாம். ஆனால், சட்டப்படி அல்லாத நடவடிக்கையை எந்த அளவுகோலை வைத்து எடுப்பீர்கள் என்பதை விளக்க வேண்டும்.

அதோடுமட்டுமல்லாமல், இந்தத் தேர்தலை ஆறு மாதங்களுக்குள்ளாக நடத்தி முடிக்க வேண்டுமென்பதற்காகத் தனி அலுவலர்களைக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே நடைபெற்று முடிந்த தேர்தலோடு ஒப்பிட்டுப் பார்த்தால், 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், தற்போது தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்கள் 6 மாதங்கள் கழித்து தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது, இதன் பிறகு நடத்தப்படுகின்ற தேர்தலில் இதேபோன்று 5 ஆண்டுகளுக்கு ஒரு குறிப்பிட்ட 27 மாவட்டங்களுக்கு பதவி காலம் முடிவுற்றும், 5½ ஆண்டுகளுக்கு ஒரு குறிப்பிட்ட மாவட்டங்களில் பதவி காலங்கள் முடிவுறுகின்ற நிலையும் இருப்பதால், தொடர்ந்து இப்போது நடத்தப்படுகின்ற தேர்தலையாவது நகராட்சிகள், மாநகராட்சிகள் போன்ற அனைத்துப் பகுதிகளுக்கும் ஒரே கட்டமாக நடத்த வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், கடந்த 4 நாட்களாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மறைமுகத் தேர்தல் குறித்த *சட்டமுன்வடிவு. நீங்கள் அதனுடைய சாதக பாதகங்களைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் அதனுடைய சாதக பாதகங்களைப் பேசுங்கள். (குறுக்கீடு)*

திரு. பி.கே. சேகர்பாபு: *இந்தச் சட்டம் குறித்து, உங்களுடைய விவர அறிக்கையில்தான் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இது அடுத்த Bill–ல்தான் வரும்.

திரு. பி.கே. சேகர்பாபு: பேசிவிடுகிறேன், பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) இருங்கள், பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதக பாதகங்களைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: இந்த அவையிலே நான் எடுத்து வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால்,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த Bill–ல் அவர் பேசப்போகிறார்.

திரு. பி.கே. சேகர்பாபு: கடந்த 3 நாட்களாக வெற்றி என்பதை யார் அதிகம் பெற்றோம் என்ற வாதம் நடைபெற்றது. அந்த வெற்றியின் களிப்பிலே நீங்கள் இருப்பதால், உடனடியாக ஒரே கட்டமாக இந்தத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். தேர்தல் நடைமுறைச் சட்டம் அமலில் இருப்பதால் வளர்ச்சிப் பணிகள் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றன. தொடர்ந்து இந்தத் தேர்தலை இன்னும் 6 மாத காலத்திற்கு நீட்டித்துக் கொண்டே போனால், வளர்ச்சிப் பணிகள் தடைபடும் என்பதால், அடுத்து நடைபெறவிருக்கின்ற தேர்தலை ஒரே கட்டமாக நீங்கள் நடத்த வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தை பதிவு செய்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்ன சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் திருத்தச் சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020, குறிப்பாக நகராட்சிகளுக்கான மறைமுகத் தேர்தல் நடத்துவதற்கான ஒரு சட்டமுன்வடிவு. இதில் குறிப்பாக ஏற்கெனவே நேரடித் தேர்தல் நடைபெற வேண்டுமென்று, பல ஆண்டு காலமாக அந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. அதனால், நேரடியாக மக்கள் ஒரு மேயரையோ அல்லது நகராட்சியில் Chairman–ஐயோ தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு. ஜனநாயக ரீதியாக நேரடி தேர்தல் என்பது வரவேற்கத்தக்கது.

2020 ஜனவரி 9] [திருமதி எஸ். விஜயதரணி]

எனவே, அந்த நேரடித் தேர்தலை ஊக்குவிக்க வேண்டும். மறைமுகத் தேர்தல் என்பது பெரிய அளவில் குதிரை பேரத்திற்கு வழிவகை செய்கிறது. ஆகையால், அதை நாம் ஊக்குவிக்கக் கூடாது. அதற்குண்டான நடைமுறைகளைப் பின்பற்றுவோமேயானால் பண பலம், ஆள் பலம் எல்லாம் பயன்படுத்தப்படும். இதைத் தடுப்பதற்கு நேரடித் தேர்தலே சரியான நடைமுறை. அதையே தொடர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் தரப்பில் முன்வைக்கிறோம். இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலும், நிறைவேறும் நிலையிலும் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு Bills-க்கும் நான் பதில் சொல்லிவிடுகிறேன். Explanation, மறைமுகத் தேர்தல் இரண்டுக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களையும் பேசச் சொல்லிவிடுகிறேன். பின்னர், நீங்கள் இரண்டுக்கும் சேர்த்தே பதில் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) இல்லை, திருமதி எஸ். விஜயதரணி, அடுத்த Bill-க்கு சென்றாகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, அவர்கள் பேசுவது வித்தியாசமாக இருக்கிறது. அதனால் திரும்பவும் அதையும் பேசி விடட்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலை ஒன்றாகச் சொல்லிவிடட்டும். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் சொல்ல வேண்டியதை சொல்லிவிடுங்கள், அவ்வளவுதான்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Special officer extension அடுத்த Bill-ஆக வருகிறது. அந்த Bill-ஐப் பொறுத்தவரைக்கும், Special officer extension-ஐத் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கின்றோம். அந்த Bill-ஐப் பொறுத்தவரைக்கும், தொடர்ந்து extension 6 மாதம் என்றால்,

வரக்கூடிய நகராட்சி, மாநகராட்சி தேர்தல்கள், 9 மாவட்ட தேர்தல்கள் இன்னும் 6 மாத காலம் தள்ளிக்கொண்டே போகும்போது, அந்தக் கால இடைவெளி ஐந்தாண்டு என்பது ஐந்தரை ஆண்டுகள் என தள்ளிக்கொண்டே போகும். பலமுறை தேர்தல் கட்டமைப்பை இப்போது நாம் உருவாக்குவதை, தொடர்ந்து வருங்காலங்களில் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு வரும். இதற்கு ஏதாவதொரு நடுநிலையான வழியைக் கண்டுபிடித்து, ஒன்று, சீக்கிரமாக தேர்தலை நடத்த வேண்டும் அல்லது ஒரே நேரத்தில் அனைத்து தேர்தல்களும் ஐந்தாண்டில், இத்தனை ஆண்டுகளில் முடிவடையும் என்கின்ற ஏதாவது ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். இதற்கான ஏற்பாட்டை செய்ய அரசு, உள்ளாட்சித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Special officer extension–ஐ காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் ஆரம்ப நிலையிலும், நிறைவேறும் நிலையிலும் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் மறைமுகத் தேர்தல் சம்பந்தமாகவும், தனி அலுவலர் பதவி நீட்டிப்பு சம்பந்தமாகவும் வந்திருப்பதால், இரண்டையும் சேர்த்தே சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இன்றைக்கு நடைபெறவிருக்கின்ற பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களில் தமிழகத்தைச் சேர்ந்த நகர மக்கள், மாநகர மக்கள், பேரூராட்சி மக்கள் மத்தியில் நமக்கு ஒரு ஓட்டு இருக்கிறதா, இரண்டு ஓட்டு இருக்கிறதா என்கின்ற குழப்பம் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், 2011–ல் நேரடியான தேர்தலை அ.இ.அ.தி.மு.க. ஆட்சிதான் நடத்தியது. 2016 ஆம் ஆண்டு தேர்தல் வருகின்றபோது, மறைமுகத் தேர்தல் என்று சொன்னார்கள். சொல்வதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்றால், ஒரு கட்சியைச் சேர்ந்த மேயர் வரும்போது அந்த மன்றத்தில் வேறு கட்சியைச் சேர்ந்த மன்ற உறுப்பினர்கள் கூடுதலாக இருந்தால், மேயரின் நடவடிக்கைகளுக்கு அது உகந்ததாக இருக்காது. ஆக, மேயரால் சரியாகச் செயல்பட முடியாது. அதனால் இதனை மாற்றி, மறைமுகத் தேர்தல் என்று சொன்னார்கள்.

2020 ஜனவரி 9] [திரு. மா. சுப்பிரமணியன்]

இரண்டாவது, மறைமுகத் தேர்தல் என்று எடுத்துக்கொண்டு வரும்போது, அதற்கு என்ன காரணம் சொன்னார்கள் என்று சொன்னால், ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் மேயரானால், அவர் மேயர் பொறுப்பை சரியாகப் பார்க்க மாட்டார். ஒட்டுமொத்த நகராட்சியையோ, மாநகராட்சியையோ, பேரூராட்சியையோ சரியாகப் பார்க்க மாட்டார். அந்த வார்டை மட்டும்தான் அவர் பார்த்துக்கொள்வார். அதனால் இது சரியில்லை என்று சொன்னார்கள். இப்போது, ஒரு மாதத்திற்கு, ஒன்றரை மாதத்திற்கு முன்பு தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்பு மாண்புமிகு தமிழக முதல்வர் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் நேரடித் தேர்தல் நடைபெறும் என அறிவித்தார்கள். மிகவும் சந்தோஷமாக இருந்தது. அந்த வகையில்தான், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறான கருத்து. அப்பொழுது சட்டம் வரவில்லை. அப்பொழுது நேரடித் தேர்தல்தான் இருந்தது, அதனால் அப்படிச் சொன்னேன். சட்டம் நிறைவேற்றிய பின்னர்தானே அது மாறும். அதுவரைக்கும் அப்படித்தானே இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தவறான கருத்தை பதிய வைக்கக் கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு. 2019 நவம்பர் மாதம் 19 ஆம் தேதி இந்தச் சட்டம் வந்தது. அதற்கு முன்பு, ஒரு வாரத்திற்கு முன்புதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் தேர்தல் என அறிவித்தார்கள். தேர்தல் என அறிவித்த பின்புதான், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. உள்ளிட்ட எல்லா கட்சிகளும் அந்தந்த கட்சிகளின் சார்பில் நேரடி மேயருக்கான விண்ணப்பமனுக்களை,விருப்பமனுக்களைபெறத்தொடங்கினோம். நீங்களும் வாங்கினீர்கள், நாங்களும் வாங்கினோம். இது நடந்து முடிந்தது. அதற்குப் பின்னர் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் என்ன முடிவெடுத்தீர்கள் என்பது யாருக்கும் தெரியாது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை பத்திரிகையாளர்களும், ஊடகவியலாளர்களும்

சந்திக்கிறார்கள். சந்தித்து அவரைக் கேட்கிறார்கள். நேரடித் தேர்தலை மாற்றி மறைமுகத் தேர்தல் என்று சொல்கிறார்களே அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், அப்படியா, எனக்கு எதுவும் தெரியாது. தெரிந்தால் உங்களுக்குச் சொல்வேன் என்று சொன்னார். சொல்லி முடித்து அரை மணிநேரம் கழித்து, மறைமுகத் தேர்தல் என்று செய்தி வெளிவருகிறது. இப்போது பேரூராட்சியில் இருக்கின்ற, நகராட்சியில் இருக்கின்ற, மாநகராட்சியில் இருக்கின்றவர்களுக்கு எந்தத் தேர்தல் நடக்கப் போகிறது? அதில் நமக்கு ஒரு ஓட்டா, இரண்டு ஓட்டுகளா எனத் தெரியாத நிலையில் மக்கள் குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று, இந்தப் பதவி நீட்டிப்புக்கு நீங்கள் சொல்லியிருக்கின்ற காரணங்கள், எத்தனை காரணங்களைச் சொன்னாலும் அது ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதுவரைக்கும், மரியாதைக்குரிய திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னமாதிரி, 7 தடவை இந்தச் சட்டமுன்வடிவில், தனி அலுவலர் பதவி நீட்டிப்பு வந்துகொண்டே இருக்கிறது. ஒவ்வொரு முறையும் நாங்கள் அதை எதிர்த்து கருத்தை சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், போதும் உரையை முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: இரண்டே இரண்டு நிமிடங்கள் தாருங்கள். நீங்கள் சென்னை மாநகராட்சியில் பார்த்தீர்களென்றால், வார்டு பிரித்ததில் நிறைய குழப்பங்கள் இருக்கின்றன. 137–வது வட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை 54,801.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2–05

திரு. மா. சுப்பிரமணியன்: இன்னும் ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். சென்னை மாநகராட்சியில் 200 வார்டுகள் இருக்கின்றன. ஒரு வார்டில் வாக்காளர்களின் எண்ணிக்கை, 54,801. 159–வது வட்டத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை, 2,921. 2,921–ம் ஒரு மாநகராட்சி வார்டு; 54,801–ம் ஒரு மாநகராட்சி வார்டு. இது சரியான, நியாயமான விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்பட்டதா என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். இன்னொன்று,

மகளிருக்கான 50 சதவிகித இட ஒதுக்கீட்டை அறிவித்திருக்கிறார்கள். சந்தோஷம்; அதை தி.மு.க. வரவேற்கிறது. ஆனால், இராயபுரத்திலே 48-லிருந்து 53 வரையில் 6 வார்டுகள். அந்த 6 வார்டுகளுமே பெண்களுக்குரியது. அதில் ஒன்றுகூட ஆண்களுக்கு இல்லை. அறிவிப்பு வந்திருக்கிறது, நீங்கள் பார்க்கவில்லை. இதுசம்பந்தமாக கருத்துகளை நாங்கள் ஏற்கெனவே மாநகராட்சியின் சார்பில் நடத்தப்பட்ட கருத்து கேட்புக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறோம். ஆனால், எந்தக் கருத்தும் பரிசீலிக்கப்படவில்லை. எனவே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பிரமணியன், போதும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து 6 வார்டுகள் பெண்களுக்குப் போய்விட்டதாக சொல்கிறார். ஏற்கெனவே நீங்கள்தான் சரியான முறையிலே வார்டுகள் பிரிக்க வேண்டும்; சரியான முறையிலே இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சொன்னீர்கள். அதைத்தான் நடைமுறைக்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இந்த வார்டு, அந்த வார்டு என்றில்லை. சரியான முறையிலே எந்தெந்த வார்டிலே பெண்கள் இருக்க வேண்டும்; எந்தெந்த வார்டிலே ஆதி திராவிடர்கள் இருக்க வேண்டும்; எந்தெந்த வார்டிலே மலைவாழ் மக்கள் இருக்க வேண்டும்; அந்த அடிப்படையில்தான் அங்கிருக்கும் மக்கள் தொகைக்கேற்ப, இந்த வார்டுகள் எல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், 2016-ல் இதே அவையிலே இந்த மாதிரி சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரும்போது பேசினார். அப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற அதே இடத்திலே இருந்தார்கள். இதே மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாகத்தான் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது நான் பதில் சொல்லும்போது, இப்போது முதலமைச்சர் அவர்கள் எப்படி எழுந்து பதில் சொன்னார்களோ, அதேபோல அன்றைக்கு அம்மா அவர்கள் எழுந்து பதில் சொன்னார்கள். அதாவது,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2020 ஜனவரி 9

அரசுகள் பல்வேறு விதங்களில் கொள்கை முடிவுகளை அப்போதைக்கப்போதுமாற்றிக்கொள்வார்கள்.நீங்களும்அதேமாதிரி மாற்றியிருக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு உதாரணங்களை கொடுத்திருக்கிறார்கள். அப்போதிருக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி மாறுதல்கள் வருகின்றன.

இரண்டு சட்டமுன்வடிவுகளில் தனி அலுவலர்களைப் பொறுத்தவரையில், ஊரகப் பகுதிகளில் நாம் தேர்தலை நடத்தி முடித்துவிட்டோம். உள்ளாட்சி வார்டுகளை 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் மறுவரையறை செய்த பின்னர், தேர்தல் நடத்தக் கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தீர்கள். அதன் பிறகு இத்தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடும் செய்யப்பட்டது. 24–10–2016–ல் உள்ளாட்சிப் பகுதிகளில் பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவடைய இருப்பதால், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிப்பினை 26–9–2017–ல் வெளியிட்டது. உள்ளாட்சி அமைப்புகளில் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு முறையாக செய்யப்படவில்லை என்று ஆட்சேபணை தெரிவித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு பதிவானது. 2016 ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெறவிருந்த தமிழ்நாடு உள்ளாட்சிமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பினை சென்னை உயர் நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் இரத்து செய்யப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளை நிருவாகம் செய்திட உள்ளாட்சி அமைப்புகளில் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். 11–12–2019 ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை உரிமையியல் மனு எண் 1443/2019 உடனிருந்த 6–12–2019 தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 5467 மற்றும் 5469/2017–ல் இடைக்கால மனு எண் 182868/2019–ன்படி உச்ச நீதிமன்ற ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது கிராமப்புற உள்ளாட்சி அமைப்புக்களுக்கான சாதாரண தேர்தல்களை புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 27 மாவட்டங்களுக்கு அறிவித்தது. அதன்படி, தேர்தல் டிசம்பர் 27 மற்றும் 30 ஆகிய தேதிகளில் நடைபெற்று, வாக்கு எண்ணிக்கை 2020, ஜனவரி 2 ஆம் தேதியன்று நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் ஊராட்சிமன்ற வார்டுகளின் அடிப்படையிலே ஜனவரி 6 ஆம் தேதியன்று பதவியேற்றுக் கொண்டனர்.

2020 ஜனவரி 9] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஊரக உள்ளாட்சிகளுக்கான மறைமுகத் தேர்தல் ஜனவரி 11 ஆம் தேதி நடைபெறவுள்ளது. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் வார்டு மறுவரையறைமுடிந்தபின்னர்,அனைத்துமூன்றடுக்குஊராட்சிகளின் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான இட ஒதுக்கீடு அறிவிப்பு செய்யப்பட வேண்டும். அதன் பிறகு, உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி, கிராம உள்ளாட்சி அமைப்புகளில் சாதாரணத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதற்கிடையில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 31–12–2019 அன்று முடிவடைவதன் காரணத்தால், தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 30–6–2020 வரை மேலும் 6 மாதங்களுக்கு அல்லது சாதாரண தேர்தலுக்குப் பின்பு மன்றத்தின் முதலாம் கூட்டம் நடைபெறும் வரையில், இதில் எது முந்தையதோ அதுவரை நீட்டிப்பதற்கு வழி வகுக்கும் வகையில் ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்தது.

பிற்பகல் 2–10

அதன்படி தமிழக ஆளுநர் அவர்கள் 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் 5 ஆம் திருத்த அவசரச் சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு மற்றும் தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் 6 ஆம் திருத்த அவசரச் சட்டம் 31–12–2019 அன்று மேதகு ஆளுநர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டன. எனவே, இந்த நிலையில், தேர்தல் முடிந்ததும், முதல் கூட்டம் முடிந்தவுடன் சரியாகிவிடும். ஆகவே, இந்த அவசரச் சட்டத்தை மாற்றுவதற்கு ஏதுவாக தொடர்ந்து வருவதால் அதனை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இந்தக் காலகட்டத்தில் எந்தப் பணிகளுமே தொய்வு அடையவில்லை. அனைத்துப் பணிகளும் சிறப்பான முறையில் நடந்திருக்கின்றன. அவற்றில் சிறு உதாரணத்தை மட்டும் நான் சொல்கின்றேன். இந்த Special Officer *இருக்கும்போது நகராட்சி நிருவாகத் துறையில் மட்டும் 24 ஆயிரத்து 211 கோடி ரூபாய் மதிப்பில் 41,546 பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாரின் உத்தரவிற்கிணங்க அறிவிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட பணிகளில், 33,442 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல் எஞ்சிய 8104 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்ற நிலையில் உள்ளன.*

இன்றைக்கு சென்னை மாநகராட்சி, பேரூராட்சி, நகராட்சி இப்படி எல்லாவற்றிலுமே பணிகள் தொய்வின்றி நடந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, இன்னொரு Bill–ஐப் பொறுத்தவரையில், இன்றைக்கு மறைமுகத் தேர்தல். தமிழ்நாட்டில் சென்னை உட்பட 15 மாநகராட்சிகள், 171 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள். மாநகராட்சி மேயருக்கான தேர்தல், நகராட்சி மற்றும் பேரூராட்சி தலைவருக்கான தேர்தல், மாமன்றம், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மன்ற உறுப்பினர் தேர்தல் நடைபெறும் அதே நேரத்தில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளுக்கான தேர்தல், கட்சிகளின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. சில மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மாமன்றம் மற்றும் மன்ற உறுப்பினர்களின் ஆதரவு, மாநகராட்சி மேயருக்கு, நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவருக்கான ஆதரவு முழுமையாகக் கிடைக்காத காரணத்தினால் மாமன்றங்கள் முறையாகச் செயல்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மாமன்றம் மற்றும் மன்ற உறுப்பினர்களின் ஆதரவு மாநகர மேயருக்கும், நகராட்சி மற்றும் பேரூராட்சித்தலைவருக்கும் கிடைக்கும்பட்சத்தில் மாமன்றம் மற்றும் மன்றங்கள் சிறந்த முறையில் செயல்படும் என்று அரசு கருதுகிறது. அதனால் மாமன்றம் மற்றும் மன்ற உறுப்பினர்களால் மறைமுகமாக மாநகர மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பது மிகவும் நன்மை பயக்கும் என்று அரசு கருதுகிறது. மாநகராட்சி மேயர், நகராட்சி மற்றும் பேரூராட்சித் தலைவர் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டில் மறைமுகத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நேரடித் தேர்தல் மூலமாக மேயர்கள் மற்றும் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையில் பல்வேறு சிரமங்களை அனுபவரீதியாகச் சந்திக்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. மிகப் பெரிய பரப்பளவும், மக்கள் தொகையும் கொண்டுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகளில் நேரடியாக மேயர்கள், தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது வார்டு உறுப்பினர்களைக் காட்டிலும் மேயர்கள், தலைவர்கள் உயர்ந்தவர்களாகப் பார்க்கப்படுகின்றனர். இதன் காரணமாக இரு வகையான அதிகார அமைப்பு மற்றும் சமச்சீரற்ற அதிகாரப் பரவல் ஏற்படுகிறது. எனவே ஜனநாயகத்தின் உயிர் மூச்சாக விளங்கும் சம நிலையில் உள்ளவர்கள் முதல்வர் என்ற அடிப்படைத் தத்துவம் செயலிழந்து போகிறது. பல்வேறு பொது மக்களுடைய, பல்வேறு குடியிருப்பு சங்கங்களுடைய

2020 ஜனவரி 9] [திரு. எஸ்.பி. வேலுமணி]

கோரிக்கைகள் எல்லாம் வந்ததன் அடிப்படையில்,—நான் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லிவிடுகின்றேன். 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி திருத்தச் சட்டமுன்வடிவு 31–8–2006 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றியபோது அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலம் வரை மறைமுகத் தேர்தல்களாகத்தான் நடைபெற்றுள்ளன என்று தெரிவித்துள்ளார். மேலும், மேயர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும் அதேபோல் majority ஆக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் வருகின்ற காரணத்தினால் மக்களுடைய அடிப்படை பிரச்சினைகளை மக்கள் மன்றக் கூட்டத்தில் வைத்து நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையக்கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மறைமுகத் தேர்தலை நிறைவேற்றித் தர வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டதை இங்கே நான் நினைவு கூர்கின்றேன். அதேபோன்று, தற்போது பல்வேறு மாநிலங்களில் மறைமுகத் தேர்தல் முறையில்தான் மாநகராட்சி மேயர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மேற்கு வங்காளம், மஹாராஷ்டிரா, அஸ்ஸாம், பீகார், கோவா, ஹரியானா, ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், சண்டிகர், டில்லி, கேரளா, மத்திய பிரதேசம், அருணாச்சல பிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற 18 மாநிலங்களில் மேயர்கள் மறைமுகத் தேர்தல் மூலம்தான் தேர்வு செய்யப்படுகின்றனர். மாமன்றம் மற்றும் மன்ற உறுப்பினர்களில் ஒருவர் மேயராகவும், தலைவராகவும் தேர்வு செய்யப்படும்போது அவர் உறுப்பினரின் பேராதரவுடன் சிறந்த முறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும் என்பதால் மேற்கூறிய காரணங்களுக்காக மக்கள் பணி என்கின்ற மகத்தான சேவை எள்ளளவும் பாதிக்கப்படாமல் தொடர்ந்து நடைபெற்று மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் இந்தச் சட்டத் திருத்தம் மிகவும் அவசியம் என்பதால் இச்சட்டமுன்வடிவினை அனைவரும் நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2020 ஜனவரி 9

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 30 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 30 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2–15

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7 /2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் வியாபாரிகளுக்கு சிறிதளவு நல்ல விஷயங்களும் இருக்கின்றன. வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய விஷயங்களும் இருக்கின்றன. வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கக்கூடிய விஷயங்களைத் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். என்னவென்று பார்த்தால், ரூ.49/- payment of tax இருக்கிறது. அதை ஒத்துக்கொள்கிறேன். Interest போடுகிறார்கள். வியாபாரிகள் தொழிலில் முதலீடு செய்து, அதற்கான பணம் அவர்களுக்கு திரும்ப வருவதற்கு 60 நாட்களிலிருந்து 150 நாட்கள் வரை ஆகின்றன.

பிற்பகல் 3-00

ஒரு மாதத்தின் முடிவிலேயே அந்த interest-ஐ final audit-ல் போட ஆரம்பித்துவிடுவீர்கள். உதாரணத்திற்கு, ரூ.100/-க்கு வியாபாரம் செய்கிறார் என்றால், 28% GST விதிக்கப்பட்டால், மூன்று மாதங்களுக்கு சுமார் ரூ.90/- என்று கணக்கிடப்படும். அப்போது, அவரது மொத்த மூலதனமுமே அந்த GST-ல் போய்

@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்] [2020 ஜனவரி 9

அடங்கிவிடுகிறது. அதற்கு 18% வட்டி விதிக்கப்போவதாக தற்போது சொல்லியிருக்கிறார்கள். வங்கிகளிலேயே 12% வட்டிதான் விதிக்கப்படுகிறது. இருக்கின்ற மொத்த முதலீட்டையும் GST ஆக செலுத்திவிட்டு, தொழில் செய்வதற்கு பணம் இல்லாமல் நடுரோட்டில் நிற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

அதற்கடுத்ததாக, ஒவ்வொரு மாதமும் Furnishing of Returns–ல், "within such time as may be prescribed, subject to conditions" என்று கொடுக்கப்பட்டுள்ளது.Withinsuchtimeஎன்றால்ஒவ்வொருமாதமும் 10 ஆம் தேதிக்குள் GSTR–1 தாக்கல் செய்யவில்லையென்றால், ஒரு நாளைக்கு ரூ.200/– fine என்று இப்போது notification வந்திருக்கிறது. GSTR–3B தாக்கல் செய்யவில்லையென்றால், ஒரு நாளைக்கு ரூ.50/– fine என்றும் notification வந்திருக்கிறது. மேலும், அவர்கள் அந்த மாதத்திற்குள் சரியாகச் செலுத்தவில்லையென்றால், e–way bill–ஐ முடக்கம் செய்வோம்; அவ்வாறில்லாமல் 2, 3 மாதங்களாகிவிட்டால் Best Judgement Assessment முறையில் recovery procedure மூலமாக அவர்களது வங்கிக் கணக்கையே முடக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் GST Council கூட்டம் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. GST Council–ல் நமது அரசாங்கத்தின் சார்பாக நீங்கள் சென்று பங்கேற்கிறீர்கள். எங்கள் தலைவர் அவர்கள் VAT–ஐ அமல்படுத்தியபோது, நிறைய முறை வியாபாரிகளைச் சந்தித்து அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். என்னென்ன குறைகள் என்பதை நேரடியாகச் சந்தித்துக் கேட்டார். அதேமாதிரி நீங்களும் வியாபாரிகளைக் கேளுங்கள். அவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் இருக்கிறார்கள். உலகப் பொருளாதாரமும், இந்தியப் பொருளாதாரமும் மிகவும் சீரழிந்து போய், கீழ்மட்ட அளவிலே இருக்கிறது என்று ஆளுங்கட்சி உறுப்பினர்களேகூட சொன்னீர்கள். இப்படியிருக்கக்கூடிய சூழ்நிலையில் GST விதித்து, ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டுமென்று சொல்கிறீர்கள். வியாபாரிகள் அனைவரும் படித்தவர்கள் கிடையாது; எல்லோரிடமும் Computer கிடையாது. ஒரு கணக்காயரை நியமித்துக்கொள்ள வேண்டுமென்றால்கூட 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் தர வேண்டும். அவர்கள், 10 ஆம் தேதி, 20 ஆம் தேதி என்று timing–க்குள் வரி செலுத்துவது என்பது நடைமுறைக்கு ஒவ்வாத விஷயம். வியாபாரிகள் அனைவரும் மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவினை திராவிட முன்னேற்றக் கழகம் மிகவும் கடுமையாக எதிர்க்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

2020 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திலே எடுக்கக்கூடிய முடிவுகள். இது வணிகர்களுடைய கோரிக்கைக்கேற்ப அவ்வப்போது மாற்றம் செய்யப்படுகிறது. 'ஒரே நாடு, ஒரே வரி' என்கின்ற அடிப்படையிலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆகவே, இந்த காலகட்டங்களில், ஏதாவது நெருக்கடிகள் வணிகர்களுக்கு ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் வந்தால், அவ்வாறு பாதிப்புகள் ஏற்படும்பட்சத்திலே, மீண்டும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திலே (GST Council) மாநில அரசின் சார்பாக நாங்கள் தொடர்ந்து வற்புறுத்தி, அவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வணிகர்களுக்கு உறுதுணையாக இருக்கும். இது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தினால் இயற்றப்பட்ட முடிவு. அந்த மன்றத்தை அங்கீகரித்து, நம் மாநில அரசும் அதைப் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நடைமுறைப்படுத்துகின்றது. இது GST Council-ல் எடுக்கப்பட்ட முடிவு. ஆகவே, கிட்டத்தட்ட நீங்கள் சொன்னதுபோல், கடந்த காலங்களில் வணிகர்களுடைய கோரிக்கைகளை மாநில அரசு, மத்திய அரசினுடைய GST Council-க்கு எடுத்துச் சென்று பல்வேறு மாற்றங்களை நாங்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். வணிகர்களுடைய சிரமங்களையெல்லாம் போக்குவதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதுணையாக இருந்திருக்கின்றது. ஆகவே, எதிர்வரும் காலங்களில்கூட, சிரமங்கள் ஏற்படாமல் வணிகர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று சொல்லி, இந்தச் சட்டத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 23 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 23 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2020 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஇ) தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 14/2020*), மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 *ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்* 14/2020*)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 3-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், சொல்லுங்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கக்கூடியதில்* 1976 *ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்*

@ 9—1—2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 5 (3)-ன்கீழ் எந்தவொரு பல்கலைக்கழகமும், எந்தவொரு தனியார் கல்லூரியும் அவை நிறுவப்படுவதற்கு முன்பாக அரசின் அனுமதியைப் பெற்றுதான் செய்ய வேண்டும். அப்படி பெறவில்லை என்று சொன்னால், அந்த இணைப்பு வழங்கப்படாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகமானது அரசினுடைய முன்னனுமதி எதுவும் பெறாமலேயே 12 தனியார் கல்லூரிகள், கல்வி நிறுவனங்களுக்கு இணைப்புகளை வழங்கியுள்ளது. இது முழுவதுமாக சட்ட விரோதமானது, சட்டமீறலாகக் கருதப்படுகிறது. இச்செயலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முதலில் நான் கடுமையாக எதிர்க்கிறேன். இச்செயலுக்கு காரணமான துணைவேந்தர் அவர்கள், எப்படி இந்த இணைப்பினை வழங்கியிருக்கிறார், எந்த அனுமதியோடு வழங்கினார் என்ற சந்தேகம் எழுகிறது. அரசின் அனுமதி பெறாமலேயே இணைப்புகள் வழங்குவது என்பது ஒருவேளை அமைச்சரின் ஒத்திசைவோடு நடைபெற்றதா என்ற ஐயமும் ஏற்படுகிறது. இல்லையென்று சொன்னால், அவ்வாறு செயல்பட்டிருக்கக்கூடியவர்களின்மீது உரிய நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்று மக்களின் சார்பாக நான் கேட்க விரும்புகிறேன். இனிவருங்காலங்களில், இதுபோன்ற சட்டமீறல் செயல்களில் ஈடுபடக்கூடிய அரசுத் துறையைச் சார்ந்தவர்கள் எவர்மீதும், துணை வேந்தர்களாக இருந்தாலும், அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேநேரத்தில், இனிவருங்காலங்களில் இதுபோன்ற சட்டமீறல்கள் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்து, மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, இது சட்டமீறிய செயல், இதற்குத் துணைபோக திராவிட முன்னேற்றக் கழகத்தால் முடியாது என்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த சட்டமீறலும் இதில் இல்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு தமிழகம் எல்லா கலை வடிவங்களிலும் முதலிடத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக

2020 ஜனவரி 9] [திரு. க. பாண்டியராஜன்]

இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் உருவாக்கிய விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தை வடிவமாகக் கொண்டு, உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் இந்த இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம். அதற்குண்டான தனித்துவத்தை மதித்து, affiliation norms*-ஐ அவர்கள் அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு போட்டிருக்கிறார்கள். அந்த* affiliation norms *ஆனது* unique *ஆக, தனித்துவமிக்க* affiliation norms *ஆக இருந்ததினால், அந்தப் பல்கலைக்கழகமே ஒரு குழுவை அமைத்து, என்ன* norms*-ஐ ஒரு* Collegiate Education*-லிருந்து வந்து செய்வார்களோ, அவை எல்லாவற்றையும் அவர்கள்* adhere *செய்திருக்கிறார்கள். இதுவரைக்கும் 9 அரசுக் கல்லூரிகள் மற்றும் 2 அரசு உதவிபெறும் கல்லூரிகள்-*Aided Colleges, *அதைத்தவிர, 14 தனியார் கல்லூரிகள்* affiliation *வாங்கியிருக்கிறார்கள். இதற்கு* Provisional affiliation *கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு இதுதான்* status*. இன்றைக்கு 860 மாணவர்கள் அதில்* graduation *பெறப்போகிறார்கள். மிக, மிக அதிகமான* demand *உள்ள கல்லூரிகளாக இந்தக் கல்லூரிகள் ஒவ்வொன்றும் இருக்கின்றன. மிக அழகாக இந்தப் பல்கலைக்கழகத்தில் எல்லாப் பாடங்களும் வடிவமைக்கப்பட்டு, நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன் தரத்தையும், தனித்துவத்தையும் உத்தேசித்துதான் இந்தச் சட்டமுன்வடிவை அவைக்கு சமர்ப்பித்திருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில்* MGR Film and Television Institute*-ஐ இணைத்திருக்கிறார்கள். அது, இதில் இரண்டாவது ஷரத்து. மூன்றாவது ஷரத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரை, அவர்கள் மனதுக்கு மிகவும் உகந்த, இந்த தமிழ்நாட்டிலே இளைய பல்கலைக்கழகமான இந்த இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்திற்கு சூட்டுவதும் இதில் மூன்றாவது அம்சம். இந்த மூன்றுதான் இதனுடைய அம்சங்கள். எந்த சட்டமீறலும் கிடையாது. இந்தியாவிலேயே முதன்மையான இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகமாக இது எழுந்து வந்துகொண்டிருக்கிறது. அதற்காக, இந்த அவையின் முன்னால் இந்தச் சட்டமுன்வடிவை வைத்திருக்கிறோம். நன்றி.*

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் தலைவர்] [2020 ஜனவரி 9

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2020 ஜனவரி 9] [திரு. க. பாண்டியராஜன்]

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

9. அரசினர் தனித் தீர்மானம்

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்து ஆறாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின் காப்புரை (d) பகுதியின் வரம்பெல்லைக்குள் வரும் திருத்தங்களுக்கு ஒப்பளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்து ஆறாவது திருத்தச்) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2) ஆம் பகுதியின், காப்புரை (d) பகுதியின் வரம்பெல்லைக்குள் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தின்மீது பேசுகிற வாய்ப்பைப் பெற்றதிலே நான் பெருமைப்படுகிறேன். I am proud to take part in this discussion. காரணம், இந்த நாட்டிலே, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சலுகைகளை வழங்குகின்ற ஒரு தீர்மானம் இது. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 332–ல் the Constitution lays down the provision relating to reservation of seats for Scheduled Castes and Scheduled Tribes. இன்றைக்கு சட்டமன்றத்தில், பாராளுமன்றத்தில் தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட SC & ST வகுப்பினர் அமர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்கு அரசமைப்புச் சட்டம் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. அதேபோல், இன்னொன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாவிட்டால், ஆங்கிலோ–இந்தியர்களுக்கு ஒரு nomination கொடுத்து, அவர்களை உட்கார வைக்க வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால், இந்தச் சட்டத்தின்மூலம், இப்போது 10 வருடங்களுக்கு ஒரு தடவை, 10 வருடங்களுக்கு ஒரு தடவை இந்த வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு இப்போது பார்த்தீர்களென்றால், shall cease to have effect on the expiration of a period of seventy years from the commencement of the Constitution. In other words, it shall cease to have effect on 26th January, if not extended. இதற்கு நாம் மறுபடியும் கொடுக்கவில்லை என்றால் போய்விடும் என்று சொல்கின்றனர். ஆகையினால், பாராளுமன்றத்தில், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், SC & ST–களுக்கு மீண்டும் ஒரு பத்தாண்டுக் காலத்திற்கு அவர்கள் பாராளுமன்றத்திலே, சட்டமன்றத்திலே அந்த reservation இருப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால், அங்கே ஒரு சிறிய திருத்தம். SC, ST வகுப்பினர் மட்டும் continue ஆக இன்னொரு பத்தாண்டு காலம் இருப்பதற்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கு நம்மிடம் ஓர் ஒப்புதல் வாங்குவதற்காக இங்கே வந்திருக்கிறது.

பிற்பகல் 3–15

ஆனாலும், ஆங்கிலோ–இந்தியர்களுக்கு nomination கொடுத்து உட்கார வைத்திருக்கிறார்கள். இங்கேகூட, உறுப்பினராக ஓர் அம்மா உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால், அதை இனிமேல் அவர்களுக்குத் தரத்

2020 ஜனவரி 9] [திரு. துரைமுருகன்]

தேவையில்லை என்று இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில், நாங்கள் மாறுபடுகிறோம். காரணம், தேசிய குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டுவந்தார்கள். அதில் முஸ்லிம்களை cut *செய்துவிட்டார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள், இதில்* Anglo Indian*-ஐ* cut *செய்துவிட்டார்கள். ஆக இங்கே கிறிஸ்தவர்கள், அங்கே முஸ்லிம்கள். ஒருமாதிரி செய்திருக்கிறார்கள். ஆகையால் அதையும் சேர்க்க வேண்டும் என்பதை நாம் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால்,* Statement of Objects and Reasons*-ல் மத்திய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்று சொல்கிறார்,* "Although the Scheduled Castes and Scheduled Tribes have made considerable progress in the last 70 years" *கடந்த 70 ஆண்டுகளில்* SC/ST *எப்படி இருக்கிறார்கள் என்றால்* considerable progress, *அடைந்திருக்கிறார்களாம். எங்கே வளர்ந்திருக்கிறார்கள், அரசியல் சட்டம்* reservation *கொடுக்கவில்லையென்றால் 10, 15, 20 பேர்கூட உட்காரமாட்டார்கள். யாருக்கும் கொடுக்கமாட்டார்கள். அரசியல் சட்டம்* reservation *கொடுத்த காரணத்தினால்தான் இன்றைக்கு இங்கே பலபேர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆனால், மத்திய சட்ட அமைச்சர்* considerable progress *என்று சொல்கிறார். எங்கே வளர்ந்திருக்கிறார்கள்? தமிழ்நாட்டில், இந்தியாவில்* SC/ST*-ல் இருப்பவர்கள் எத்தனைபேர்* High Court*-ல்* Judge *ஆக உட்கார்ந்திருக்கிறார்கள்? வேறுபல உத்தியோகங்களில் எத்தனைபேர் உட்கார்ந்திருக்கிறார்கள்? இன்றைக்கு ஒன்று சொல்கிறேன். இன்றைக்கு நீங்கள் இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அதற்காக நான் அம்மையாருக்கு பாராட்டு சொல்ல, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத்தான் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், உங்களுடன் சண்டை போட்டுக்கொண்டு சென்றவுடன், நம்முடைய இயக்கத்தின் முதல் கொள்கை என்ன என்று கேட்பார். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் சமநிலை அந்தஸ்தில் வந்து உட்கார வேண்டும். அதில் அவர் உட்கார்ந்திருக்கிறார். அதிலும் முன்னேறியவர்கள் இடத்தில் உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் அவரோடு தகராறு செய்யக் கூடாது என்று சொல்வார். அதேபோன்றுதான்* High Court *வந்து 120 வருடங்கள் ஆகிவிட்டன. ஒரு தாழ்த்தப்பட்டவர் நீதிபதியாக வந்ததில்லை. கலைஞர், திரு. வரதராஜன் அவர்களைக் கொண்டுவந்து உட்காரவைத்து* Supreme Court*-க்கு கொண்டுபோனார். (குறுக்கீடுகள்) இப்பொழுது நிறையபேர் வந்திருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. இதேபோன்று* Chief Justice, Chief Secretaries*-ஐ கொண்டுவந்து உட்காரவைத்தோம்.*

DGP ஆக ஒருவரைக் கொண்டுவந்து உட்காரவைத்தோம். கொஞ்சம் கொஞ்சமாக, அவ்வளவுதான் முடியும். ஆனால் இவர்கள் considerable என்ற அளவுக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்லத் தேவையில்லை. அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இரண்டாவதாக, இன்னொன்றை நான் பார்த்தேன். ஏன் இதற்கு 10 வருடம், 10 வருடம் கொடுக்கிறார்கள். 25 வருடங்களுக்கு இதை நீட்டிக்கக்கூடாதா என்று கேட்டால், அதைக் கொடுத்திருப்பார்கள். அதற்கு நான் சொல்லவில்லை, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், In the Constituent Assembly on 25th August 1947, when the Article 295A was amended, Dr. Ambedkar said, "For the Scheduled Tribes, I prepared to give far long time." இவர்களுக்கெல்லாம் நீண்ட நாட்கள், 10 வருடங்கள் இல்லை, 25 வருடங்கள், 30 வருடங்கள் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், அவர் ஒரு தாழ்த்தப்பட்டவர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலிருந்து வந்தவர். "I prepared to give far long time. But all those who have spoken for reservation to SC and ST have been so meticulous, that the thing should end by 10 years." நான் நீண்டகாலம் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட வர்களுக்கெல்லாம் சலுகை அளிக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால், இந்த மசோதா amendment-ல் பேசினார்களே, அவர்கள் எப்படிப் பேசினார்கள் என்று சொல்கிறார், "Those who have spoken for reservation to SC and ST have been so meticulous." Meticulous means, showing extreme care. It is a minute point. உள்ளே ஒன்று வைத்து வெளியே ஒன்று பேசுவது. அவர்கள் எல்லாம் பேசிவிட்டார்கள் that the thing should end by 10 years. அதனால்தான் 10 வருடம் என்று கொடுத்தேன் என்று சொல்கிறார். All I want to say to them is that-நான் அவர்களுக்கெல்லாம் என்ன சொல்ல விரும்புகிறேன் தெரியுமா? நான் பதில் சொல்லவில்லை.

பிற்பகல் 3-20

In the words of Edmund Burke-லிருந்து சொல்கிறேன். நான் Edmund Burke சொன்னதை வைத்து சொல்கிறேன். யார், யார் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசினார்களோ, அவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. Edmund Burke சொன்னதை வைத்து சொல்கிறேன். Edmund Burke என்ன சொன்னாரென்றால், He said, "A great empire and little minds go ill together." Large empire, பெரிய சாம்ராஜ்யம், but small minds.

அண்ணா சொல்வாரே, "உயர்ந்த மனிதர்கள், தாழ்ந்த உள்ளங்கள்" என்று. அதைப்போன்றுதான். Edmund Burke அப்படித்தான் பேசுவார். Edmund Burke-ன் Impeachment of Warren Hastings-ஐ மூன்று முறை படித்திருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், அவருடைய English இருக்கிறதே, குற்றாலத்தில் சாரலில் நடக்கிற மாதிரி இருக்கும். அதுபோன்ற English-ல் அவர் பேசுவார். அவர், "A great empire and little minds go ill together. That is what I could see in the restriction of ten years" என்று சொல்கிறார். அந்த "உயர்ந்த மனிதர்கள் தாழ்ந்த உள்ளங்கள்" இருக்கிற காரணத்தால்தான், நான் 10 வருடங்களுக்குள் முடிக்கிறேன். Anyway, I welcome this Bill என்று சொல்லியிருக்கிறார். ஆக, இந்த Bill-ல் ஏன் 25 வருடங்கள், 10 வருடங்கள் கொடுக்கவில்லை என்பதற்குக் காரணம், இப்படிப்பட்ட குறுகிய உள்ளம் படைத்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதுதான். எனவே, அவர்கள் யார், யார் என்பது தெரியும். யார், யார் Constituent Assembly-ல் அப்பொழுது இருந்தார்கள், யார், யார் Drafting Committee-க்கு வந்தார்கள் என்பதையெல்லாம் நான் இங்கே சொல்லத் தேவையில்லை. எனவே, எப்படியிருந்தாலும், இப்பொழுது பாராளுமன்றத்தில் 10 வருடங்கள் கால நீட்டிப்பு என்பதை 25 வருடங்கள் எனக் கொடுத்திருந்தால் நான் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

அதேபோன்று, ஆங்கிலோ-இந்தியர்களைப் பொறுத்தவரையில், பாராளுமன்றத்தில் ஓர் உறுப்பினர், "This Community is an ethnic minority. It has historically contributed a lot to the growth of this country. You can check from the records of Railways, for example, about the number of employees who have worked in the initial stage, right from the Independence times and how much contribution this Community has given to this country" என்று பேசியிருக்கிறார். மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் அவர்கள், "நாங்கள் கைவிடவில்லை, மறுபடியும் சிந்திக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார். எனவே, நம்முடைய மத்திய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மறுபடியும் சிந்தித்து, ஆங்கிலோ-இந்தியன் Community-க்கும் ஒரு nomination தர வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். இந்தத் தீர்மானத்தின்மீது கருத்தைச் சொல்லும்போது, என்னுடைய நெஞ்சில் அலை மோதுகிறது. எவ்வளவு பெரிய படிப்பு படித்தவர், எவ்வளவு பெரிய Constituent Assembly-ல் இருந்தவர் அம்பேத்கர். (குறுக்கீடு) அவருடைய உள்ளம் எவ்வளவு துன்பப்பட்டிருந்தால், அந்த வார்த்தையை, meticulous என்ற வார்த்தையை use பண்ணியிருப்பார் என்பதை

எண்ணிப் பார்க்கிறேன். அவ்வளவு பெரிய மனிதரே, அவ்வளவு பெரிய Constitution-ஐ எழுதியவரே, 10 ஆண்டுகளுக்குமேல் செய்ய முடியாவிட்டால், இன்றைக்கு இருக்கிற சமுதாயம் செய்யுமா என்பது தெரியவில்லை. இன்னும் ஓர் அம்பேத்கர் இந்தச் சமுதாயத்தில் தோன்றப்போவதில்லை, இன்னொரு சூழ்நிலை வரப்போவதில்லை. ஆனால், ஒவ்வொருவரும் அம்பேத்கராக அதற்கு குரல் கொடுத்தால்தான் இந்தச் சமுதாயம் மேம்பாடடையும் என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்காக தங்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, சொல்லுங்கள்.

பிற்பகல் 3–25

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அரசினர் தனித் தீர்மானத்தின்மீது பேசுவதில் ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், இன்னொருபுறம்வருத்தப்படுகிறேன்என்பதைநான்பதிவுசெய்கிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 334-வது பிரிவு, sub–clause (a)–ல், ஆதி திராவிட பழங்குடியின மக்களுக்கு சட்டப் பேரவைகளில் இட ஒதுக்கீடு, அவர்களுக்கென்று பங்களிப்பு, அதற்குண்டான காலநீட்டிப்பு என்பதை 10 ஆண்டுகள் எனச் செய்திருக்கிறார்கள். 25 ஜனவரி, 2030 வரை அந்தக் கால நீட்டிப்பைச் செய்திருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள், பழங்குடியின மக்கள் நல்ல முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள் என்று அதில் கூறப்பட்டிருக்கிறது. ஓரளவுக்கு ஆதி திராவிட மக்கள் 70 ஆண்டுக் காலத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அதனால்தான் நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் போன்றவர்கள் கூட, நம்மையெல்லாம் வழிநடத்தக்கூடிய இடத்தில் இருப்பதிலிருந்து, இன்றைக்கு நாம் அந்த வளர்ச்சியை ஓரளவுக்குப் பார்க்கிறோம். அதே நேரம், பழங்குடியின மக்களைப் பொறுத்தவரையில், அதுபோன்ற வளர்ச்சி இல்லை என்பது பார்க்கப்பட வேண்டிய ஒன்று. அந்த sub clause (a)–ல் ஒரு பிரிவு ஒருவிதமாக இருந்தாலும், இன்னொரு பிரிவு வேறு விதமாக இருக்கிறது. Extension 10 ஆண்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதேபோன்று, SC மக்களுக்கு இன்னமும் Community Certificate கிடைப்பதிலெல்லாம் சிரமங்கள் இருக்கின்றன. இதுபோன்ற பிரச்சினைகள் களத்தில் இருந்துகொண்டுதான் இருக்கின்றன.

2020 ஜனவரி 9] [திருமதி எஸ். விஜயதரணி]

சட்டப் பேரவையிலே இடம் பெறுவதிலே ஓரளவுக்கு வளர்ச்சி இருக்கிறது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஏனென்றால் Compulsory Reservation Policy-இருப்பதனால். ஆனால், பழங்குடியின மக்களுக்கு இன்னமும் சிரமங்கள் இருக்கின்றன. அவர்களுடைய பங்களிப்பு இன்னும் அதிகமாக வேண்டும் என்பது காங்கிரஸ் தரப்பின் கருத்து.

அதேமாதிரி Article 334, sub clause (b)-ல், குறிப்பாக, Anglo-Indian Community, 70 ஆண்டுக் காலமாக அவர்களுக்குத் தரப்பட்ட nomination, சட்டப் பேரவையில் nominated post என்பது ஒன்றுதான். அந்த ஒரு post தான் வருகிறது. இன்றைக்கு கிறிஸ்தவ சமுதாயம் என்று பார்த்தால், அது சிறுபான்மையின சமுதாயம். அந்த சமுதாயத்திலே இருக்கக்கூடிய இவர்கள் இன்னும் சிறுபான்மைப்பட்டவர்கள். அதிலேயே அவர்கள் இன்னும் சிறுபான்மையினர். Micro minority என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி சொல்லும்போது, அவர்களுக்கு ஒரே ஒரு representation-ஐ நாம் கொடுப்பதில் பெருமைப்படுகிறோம். இந்த அவையில், Anglo-Indian சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் தொடர்ந்து இத்தனை ஆண்டுக்காலம் மரபு தவறாமல், நடைமுறை தவறாமல், சட்டம் மீறாமல், இடம்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் Clause (b)-ல் வரக்கூடிய அந்தத் தீர்மானத்தை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி விஜயதரணி, கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: அந்தத் தீர்மானத்துக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் கொடுத்து ஏற்கிற இடத்தில் அந்தத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது. அந்த Sub-clause (b)-க்கு நீங்கள் ஒப்புதலளிக்கக் கூடாது. அதற்கு காங்கிரஸ் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கிறோம். மத்திய சட்டம் என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால், ஒப்புதலளிக்கும் இடத்தில் நமக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. மாநில அரசுக்கு ஒரு அதிகாரம் இருக்கிறது. அதனால்தான் அது மாநிலச் சட்டமன்றத்தில் வருகிறது. ஆகையால், அந்த sub-clause (b)-க்கு (குறுக்கீடு) அதிகாரமே இல்லையா? அதிகாரம் இருக்கிறதென்று நான் நம்புகிறேன். அதனால்தான் இங்கே தீர்மானம் வருகிறது. Sub-clause (a)-க்கு நீங்கள் ஒப்புதல் கொடுங்கள். தவறே கிடையாது. ஆனால், Sub-clause (b)-ஐப் பொறுத்தவரைக்கும் அதற்கு ஒப்புதல் அளித்து இந்த அவை ஏற்கக் கூடாது என்பதை காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் முன்மொழிகிறோம். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

[2020 ஜனவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், என்ன சொல்லுங்கள்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்தினுடைய தீர்மானம் குறித்து இந்திய அரசமைப்புச் சட்டம், Article 334–ல் தாழ்த்தப்பட்ட மக்கள், அதேபோன்று சிறுபான்மையினராக இருக்கக்கூடிய Anglo Indian Community மக்களுடைய பிரதிநிதித்துவத்தைப் பற்றிய தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

தேசப்பிதா மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை நம் இந்தியத் திருநாடு. ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பல்வேறு மொழிகளைப் பேசக்கூடியவர்கள், பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு இன மக்கள் இந்தியத் திருநாட்டிலே இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் சமூக நீதியோடு, சம அந்தஸ்தோடு வாழ வேண்டுமென்பதுதான் இந்திய நாட்டினுடைய பெருமையாக இருக்கின்றது.ஒருகாலத்திலே,தமிழகத்தில்கல்விமான்களாக,பல்வேறு கல்விக்கூடங்களையெல்லாம் நடத்தக்கூடிய ஒரு சமுதாயமாக Anglo Indian சமுதாயம் இருந்தது. அது காலப்போக்கிலே, Micro minorities என்று சொல்லக்கூடிய அளவிலே, இன்று ஒருசிலர்தான் இங்கு இருந்துகொண்டிருக்கின்றார்கள். பல்வேறு இடங்களிலே Anglo Indian சமூகத்தால் நடத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்கள் இன்றும் இருந்துவருகின்றன. அந்த அடிப்படையிலே, அவர்கள் தமிழகத்திற்கு செய்திருக்கக்கூடிய அந்தக் கல்விப் பணியையும் கருத்தில் கொண்டு, அந்தச் சமூகமும் நம் நாட்டிலே வாழ்கின்றார்கள் என்பதை அடையாளப்படுத்தக்கூடிய வகையிலே தொடர்ந்து Anglo Indian பிரதிநிதிகள்தமிழகசட்டப்பேரவையிலேஇடம்பெறக்கூடியவகையில் மத்திய அரசாங்கம் தீர்மானத்தை நிறைவேற்றினாலும், தமிழகத்திலே அதைத் தொடர்வதற்குண்டான வழிமுறைகள் இருந்தால், அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.

***Dr. (Tmt.) Nancy Ann Cynthia Francis:** Hon'ble Speaker, Hon'ble Chief Minister and Hon'ble Deputy Chief Minister, I thank you for this opportunity to speak. I think my colleagues have spoken at large. But, what I wish to say is, this community, the Anglo Indian community, which I stand here and represent is a minority community—linguistic, religion and numbers. In fact, you can call it as micro-minority community. We have been given this privilege of enjoying a representation for 70 years and all of a sudden, if we are going to be deprived of this representation, it is really heartbreaking. This community has contributed, at large, to the development of this country of which we are proud and we will continue to be proud of. In Educational Institutions, in Railways, in Post and Telegraphs, name it, there were the Anglo Indians who were in the forefront. I know that this Government, Amma's Government, will definitely uphold this cause of our representation and see that this reservation for this micro-minority community both in the Parliament as well as in the State Legislatures would still continue. This is my humble request. I know, I can always rely on this Government, which was steered by my late beloved Amma that this will meet with the good result. I thank you all for hearing my speech patiently. With this, I end my speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, இந்த அரசினர் தீர்மானத்தை இங்கே கொண்டு வருவதற்கு, ஒரு நல்ல வாய்ப்பை என் வாழ்நாளில் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன். அதற்காக இந்த அவைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற மக்களவையிலும், சட்டமன்றப் பேரவைகளிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ள இட ஒதுக்கீட்டை மேலும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வகை செய்யும் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு 126-வது திருத்தச் சட்டமுன்வடிவு குறித்து, இந்தத் தீர்மானத்தில் பேசிய நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும்,

மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், எங்களுடைய இந்த மாபெரும் இயக்கத்தைத் தோற்றுவித்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் ஆதி திராவிட பெருமக்கள்மீது எந்தளவிற்கு பற்றும், பாசமும் வைத்திருந்தார்கள் என்பதை, அவர்களுடைய 47 ஆண்டு கால அரசினுடைய அனைத்து நடவடிக்கைகளையும் வைத்து மக்கள் நன்றாகவே அறிவார்கள் என்பதனை நான் இந்த நல்ல நேரத்திலே எடுத்துக் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகவே, ஆதி திராவிடர்களுக்கென்று தனி இட ஒதுக்கீடு இருந்தாலும், ஒரு பொது தொகுதியில் ஆதி திராவிடர் பெருமகனாரை நிறுத்தி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவரை வெற்றி பெறச் செய்த மிகப் பெரிய பெருமைக்குரியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதனை இந்த மாமன்றத்திற்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–35

எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய மதிப்பும், மரியாதையும் மிக்க இந்தச் சட்டப் பேரவைக்கு சட்டப் பேரவைத் தலைவரை மாண்புமிகு அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்திற்கு தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் சட்டப் பேரவைத்தலைவராகக்கொண்டுவந்தபெருமையும்மாண்புமிகுஇதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்திற்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், பாபா சாகிப் அம்பேத்கர் பெயரிலே மணிமண்டபம், அன்னாருக்கு சென்னையிலே திருவுருவச் சிலை, மரியாதைக்குரிய இரட்டைமலை சீனிவாசன் பெருமகனாருக்கு நினைவு மண்டபம், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு நினைவு மண்டபம், பண்டிதமணி அயோத்திதாசர் நூல்களை

2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நாட்டுடைமையாக்கல் என ஆதி திராவிடர்/பழங்குடியின மக்களுடைய மேம்பாட்டுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அறிவித்து,செயல்படுத்தி,இந்தியாவிலேயே அனைத்துமாநிலங்களைக் காட்டிலும், அனைத்து துறைகளிலும் தமிழகம் முன்னிலை பெற்று வருவதைப்போல, சாதி, மத, பேதமின்றி அனைவரையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்திப் பார்க்கிற சமத்துவத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்றென்றைக்கும் ஆதி திராவிடர்/பழங்குடியின மக்களுக்கு அரணாக, சிறுபான்மையின பெருமக்களுக்கு அரணாக, அன்போடு அரவணைத்துச் செல்கின்ற அரசாக தொடர்ந்து திகழும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நிரூபிக்கின்ற வகையிலே, இந்தத் தீர்மானத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒருமனதாக தனது ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறது.

அதோடு, Anglo Indians. அவர்களுடைய பிரதிநிதித்துவம் சட்டமன்றத்திலே இருக்க வேண்டுமென்ற கோரிக்கையையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய நிலைப்பாட்டையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைப்பாட்டையும் மாநிலங்களவையில்debateநடைபெறுகின்றபோது,பல்வேறுகட்சிகள், 'Samajwadi Party, BSP, Biju Janata Dal, Janata Dal (U), AIADMK, DMK, AAP, JD (S), YSRCP, RJD and Left parties demanded that the Government consider extending reservation to Anglo-Indians under the Bill' என்று அங்கே வலியுறுத்தி பேசியிருக்கின்றார்கள். நேரடியாகவும் மாண்புமிகு மத்திய அமைச்சரை சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அவர்களும் consider செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். ஆக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், ஆதி திராவிட பெருமக்களுக்கு 18 சதவிகிதம் என்றிருந்த நிலையில் இருந்தாலும், அதைக் காட்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தச் சமுதாய மக்களுடைய அனைத்து பொருளாதார மேம்பாட்டுக்காக, பல்வேறு சலுகைகளை, உயர்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 ஜனவரி 9

சலுகைகளை அளித்திருக்கிறார்கள் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக நீதிக்காகப் போராடிய மாண்புமிகு அம்மா அவர்கள், சமூக நலத் திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார்கள். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலமாக ஏழை, எளிய மக்கள், தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் தரமான கல்வியை அவர்கள் ஏழ்மை நிலையில் இருந்தாலும், அவர்கள் பெற முடியாத சலுகைகள், பெற முடியாத கல்வி உபகரணங்களை அந்த மாணவச் செல்வங்களின் கையிலே தர வேண்டுமென்று, அரசின் மூலமாகத் தர வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் 16 வகையான கல்வி உபகரணங்களை அந்த மாணவச் செல்வங்களின் கையிலே தந்து, படிக்க வைத்ததன் காரணமாக இன்றைக்கு மாணவச் செல்வங்களுடைய, பள்ளியிலிருந்து கல்லூரி வரை (மேசையைத் தட்டும் ஒலி) சேர்க்கை கூடியிருக்கிறது. பட்டம் பெற்ற மாணவர்களுடைய சேர்க்கை கூடியிருக்கிறது. படித்த பட்டதாரிகளின் எண்ணிக்கை கூடியிருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த 16 வகையான கல்வி உபகரணங்களை வழங்கினார்கள்.

இலவச சைக்கிள் திட்டம். இலவச சைக்கிள் திட்டத்தை முதன்முதலில் மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு, ஆதி திராவிடர் பெண்களுக்காக மட்டும்தான் முதலில் அறிமுகப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னால்தான் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும், மற்ற மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தினார்கள்.

அதேபோல, கிராமப்புற ஏழை, எளிய மக்களுடைய, கிராமப்புறத்தினுடைய மேம்பாடு, பொருளாதார மேம்பாடு உயர வேண்டுமென்று, மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் தருகின்ற திட்டத்தை அறிவிக்கின்றபோது, 4 வெள்ளாடுகளை வழங்குகின்ற நேரத்தில், 30 சதவிகித வெள்ளாடுகள் ஆதி திராவிட பெருமக்களுக்கு

2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதி திராவிட பெருமக்களின் நலனிலும், அக்கறையிலும், எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது தெரிகிறது. மேல்தட்டிலிருக்கிற சமுதாய மக்களுக்கு இணையாக அவர்களுடைய வாழ்க்கை நடைமுறையைக் கொண்டு வந்து நிலைநிறுத்த வேண்டுமென்று எந்த அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணினார்கள் என்பதனை நாடு நன்றாகவே அறிந்திருக்கிறது.

பிற்பகல் 3-40

லோக் சபாவில் ஆதிதிராவிட மக்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கிறது; மாநிலங்களவையில் இல்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், பார்த்து, பார்த்து மாநிலங்களவையிலும் ஆதி திராவிட மக்களுக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்தார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் அரசு, ஓராண்டுக்கு முன்னர் நடந்த ராஜ்ய சபா தேர்தலில்கூட ஆதி திராவிட பெருமக்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை பெற்றுத் தந்தது என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, நாங்கள் சிறுபான்மையின பெருமக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அன்றும், இன்றும், என்றும், எந்த நேரத்திலும் உறுதுணையாக இருப்போம் என்று நேற்று இந்தச் சட்டமன்றத்திலே நம்முடைய அருமை சகோதரர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்களால் முழங்கப்பட்டது. இன்றும் நாங்கள் உறுதியாகச் சொல்கிறோம், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் சிறுபான்மையின பெருமக்களுக்கு அன்றும், இன்றும், என்றும் நாங்கள் உறுதுணையாக இருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு சிறு இடர்பாடு வந்தாலும், அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கின்ற முதல் குரலாக, எங்களுடைய குரல்தான் இருக்கும் என்பதனை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகக் கேட்டு, அமைகிறேன்.

[2020 ஜனவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகுதுணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'புத்தாண்டு பிறந்து, புதுமைகள் தொடரட்டும்; மகிழ்வோடு வரவேற்போம்.' அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். 'சந்தோஷமும், செல்வமும் நம் வாழ்வில் பொங்கிவர, ஜாதி, மத பேதமின்றி, சங்கடங்கள் ஏதுமின்றி, கைகூப்பி வரவேற்போம் 'தை' திருநாளை! இந்த நல்ல நேரத்திலே இந்த அவையிலே இருக்கிற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியினுடைய மற்ற தலைவர்கள் அனைவருக்கும், மற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், வந்திருக்கும் அத்தனை பேருக்கும், இந்த அவையிலே வீற்றிருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களையும், பொங்கல் வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அனைவருக்கும் மீண்டும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(இ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.*

2020 ஜனவரி 9]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகுதுணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக

நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. அனைவருக்கும் மீண்டும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-44 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2019 ஆம் ஆண்டு மாவட்ட குழு விதிகளை இயற்றியது குறித்து9-9-2019 ஆம் நாளிட்ட சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறையின் அரசாணை (நிலை) எண் 124-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.].

31. 1997 *ஆம் தமிழ்நாடு மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து* 3–10–2019 *ஆம் நாளிட்ட எரிசக்தி (டி2)த்துறையின் அரசாணை (நிலை) எண் 74–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை.* [1997 *ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்* 35/1997) 23 *(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*].

32. 2014–2015 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் அவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய அறிக்கை.* [1993 *ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம்* 10/1994) 28 *(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*]

33. 2017 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆண்டறிக்கை.* [2005 *ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம்* 22/2005) 25 *(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*]

34. 2017–2018 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நாற்பத்து ஆறாவது ஆண்டறிக்கை.* [1956 *ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம்* 1/1956) 619–*ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ்–ஆங்கிலம்)*]

35. 2018–2019 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை.* [1989 *ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்* 42/1989) 51 *(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*]

36. 2018–2019 *ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை.* [1989 *ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்* 42/1989) 35 *(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ்–ஆங்கிலம்)*]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

12. 2019–2020 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

13. 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான செய்தி குறித்து மாநிலங்களவை இணைச் செயலாளர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 20–12–2019 ஆம் நாளிட்ட RS.I*/69/2019–*B *எண்ணுள்ள கடிதத்தின் நகல்.*

14. 2019ஆம்ஆண்டுஅரசமைப்பு(நூற்றுஇருபத்தாறாவதுதிருத்த) சட்டமுன்வடிவு (மக்களவையில் அறிமுகப்படுத்தப்பெற்றவாறு).

15. 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு (பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்றவாறு).

16. 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு மீதான மக்களவை நடவடிக்கை குறிப்பு.

17. 2019 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்று இருபத்தாறாவது திருத்த) சட்டமுன்வடிவு மீதான மாநிலங்களவை நடவடிக்கை குறிப்பு.

18. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்றொன்றாவது அறிக்கை. (2018–2020)

19. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2018–2020)

20. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2018–2020)

21. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2018–2020)

22. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2018–2020)

23. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2018–2020)

24. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2018–2020)

25. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2018–2020)

26. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

27. பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. (2018–2020)

28. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

29. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2018–2020)

30. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2018–2020)

31. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நான்காவது அறிக்கை. (2018–2020)

32. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2018–2020)

33. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2018–2020)

34. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2018–2020)

35. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2018–2020)

36. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. (2018–2020)

37. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

2020 ஜனவரி 9]

38. பொது நிறுவனங்கள் குழுவின் நூறாவது அறிக்கை. (2018–2020)

39. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை. (2018–2020)

40. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை. (2018–2020)

41. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று மூன்றாவது அறிக்கை. (2018–2020)

42. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2018–2020)

43. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தைந்தாவது அறிக்கை. (2018–2020)

44. அரசு உறுதிமொழிக் குழுவின் எழுபத்தாறாவது அறிக்கை. (2018–2020)

45. மனுக்கள் குழுவின் ஏழாவது அறிக்கை. (2018–2020)

46. மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. (2018–2020)

47. மனுக்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. (2018–2020)

48. மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2018–2020)

49. மனுக்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2018–2020)

50. மனுக்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2018–2020)

51. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (முதலாவது பட்டியல்) (2020) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

52. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (2020) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

53. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (2020) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)
